Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 279 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 16, ஞாயிறு 01.09.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

நவிப்பிள்ளையின்
செய்தியாளர் மாநாட்டு
முழு விவரம்
சூரியகாந்தி 3, 19 ஆம்
பக்கங்களில்

# சர்வாதிகாரப் பாதையில் பயணிக்கிறது இலங்கை

## நவநீதம்பிள்ளை கவலை

"போரின் முடிவு கொடுத்த சந்தர்ப்பத் தைப் பயன் படுத்தி இலங்கையை புதிய அதிர்வுடனான எல் லோரையும் அரவணைத்துச் செல்லும் நாடா கக் கட்டியெழுப்புவதற்குப்பதிலாக சர்வாதிகா ரப் போக்கை நோக்கிய திசையில் இட்டுச் செல் வது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது."

இவ்வாறு அரசைச் சாடினார் ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் ஆணையாளர் நவ நீதம்பிள்ளை.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பில் ஆராய்ந்து ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிப் பதற்குத் தேவையான தகவல்க ளைத் திரட்டுவதற்காக இலங்கை வந்த நவிப்பிள்ளை, பய ணத்தின் இறுதி நாளான நேற்று கொழும்பில் நடத்திய ஊடக வியலாளர் மாநாட்டி லேயே இதைத் தெரி வித்தார்.

"சிவிலியன் கொலைகள் சம் பந்தமாக இராணுவத்தால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றங்கள் மேற் கொண்ட



நடவடிக்கைகள் பற்றிய விவ ரங்களையும் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். இராணு வம் இழைத்த குற்றத்துக்கு இராணுவ நீதிமன்றம் அமைக்கப்படுவது பொருத்த மானதாக எனக்குத் தெரிய வில்லை. அதன் மூலம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற் படுத்த முடியாது. போர்க் குற் றங்கள் தொடர்பில் நம்பக மான உள்ளூர் விசாரணை நடத்தப்படாவிட்டால் சர்வதேச மட்டத்திலான விசாரணை யைத் தவிர்க்க முடியாது என் றும் அவர் தெரிவித்தார். (த-சி)

## 'உதயன்' குறித்தும் கரிசனை

கொழும்பு, செப். 1
இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்ந்தும் அச் சுறுத்தலாகவே உள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்தி ரிகை பல தடவைகள் தாக் கப்பட்டுள்ள சம்பவமும் வருத்தமளிக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை.

நேற்று கொழும்பில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரி

தொடர்ச்சி: பக்கம் 25

## நவநீதம்பிள்ளைக்கே சவால் விட்ட கோத்தா

கொழும்பு, செப்.1
வடக்கிலுள்ளவர்கள் காணா மற் போயுள்ளனர் என பாது காப்புத்தரப்பு மீது குற்றஞ் சுமத்துபவர்கள், காணாமற் போனோர் என எவரும் இருந்தால் அவர்களது பெயர்ப் பட்டியலைத் தம்மிடம் தர லாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம், பாது காப்புச் செயலாளர் கோத்தபாய

தொடர்ச்சி: பக்கம் 25

## மரணித்தோருக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலிக்க நவிக்குத் தடை

கொழும்பு, செப். 1
இறுதிக்கட்டப் போரில் முள்ளி வாய்க்காலில் மரணித்தவர் களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை மேற்கொண்ட முயற்சி அரசின் கடும் எதிர்ப் பைய டுத்து கைவிடப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள்

தொடர்ச்சி: பக்கம் 25

## வடக்கு, கிழக்கிலிருந்து படைகளை அகற்றுக

### அரசிடம் நவிப்பிள்ளை வலியுறுத்து

கொழும்பு,செப் 01
போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை அகற்றும் பணியை இலங்கை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள் ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர்மேலும்தெரிவிக்கையில், இராணுவத்துக்கு ஒரு சில முகாம்கள் தேவைப்படும் என்பதை நான் மறுக்க வில்லை. ஆனால், போர் முடி வடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் சிவில் நிர் வாகத்தில் இராணுவத்தின் தலையீடு எனக்கு அதிருப்தியைத் தருகிறது.

தொடர்ச்சி: பக்கம் 25

## பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் போது இலங்கை அரசு கலவரப்படக் கூடாது

### மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, செப். 1
தமிழ் மக்கள் தொடர்பில் அர சின் பொறுப்புக் கூறலை வலி யுறுத்தும் போது, மண்எண் ணெயில் விழுந்த சாரைப் பாம்பு போல் இலங்கை அரசு கலவரப்படக்கூடாது என ஜன நாயக மக்கள் முன்னணி யின் தலைவர் மனோகணே சன் தெரிவித்துள்ளார்.

அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் உரிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை நாம் இராஜதந்திர போராட் டங்களைக் கைவிட முடியாது என்றும் அவர் கூறி யுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவ நீதம்பிள்ளை புலிகளின் பயங் கரவாதத்தையும் கண்டித்

தொடர்ச்சி: பக்கம் 25

## மேர்வினின் திருமணப் பேச்சால் கடும் கோபத்தில் நவிப்பிள்ளை

### மன்னிப்புக் கோரியது இலங்கை அரசு

கொழும்பு.செப் 01
தன்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக, அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக வெளியிட்ட கருத்துக் குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை அரசிடம் கடும் எதிர்ப்பை வெளிப்படுத் தியுள்ளார்.

நவநீதம்பிள்ளையைத் திரும ணம் செய்து கொள்ள விரும் புவதாக.அமைச்சர் மேர்வின் சில்வா கூறியது தொடர்பான வீடியோ ஐ.நா அதிகாரிகளால் நவநீதம்பிள்ளையின் கவ னத்துக்குக் கொண்டு வரப்பட் டது.அதைப் பார்த்த அவர் கடும் கோபம் அடைந்தார்.

இது தொடர்பாக, இலங்கை அரசிடம் அவர் கடும் அதிருப் தியை வெளியிட்ட நிலையில், மேர்வின் சில்வாவின் கருத் துக்காக இலங்கை அரசு வருத்தம் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை ஹில்டன் விடுதியில் நடந்த வரவேற்பு நிகழ்வில், மேர்வின் சில்வாவின் கருத்துக்காக இலங்கை அரசின் சார்பாக மூத்த அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வா, வருத்தம் தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளையைத் திரு மணம் செய்யத் தயார் என்று அமைச்சர் மேர்வின் சில்வா வெளியிட்ட கருத்து, இலங் கையில் கடும் விமர்சனங் களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஓமந்தையில் சோதனை நேற்று முதல் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 1
ஓமந்தைச் சோதனைச் சாவடி யில் பயணிகளின் பொதிகள் நேற்று நண்பகல் முதல் சோத னையிடப்படுவது நிறுத்தப் பட்டுள்ளது. அத்துடன் வாகனங் களின் பதிவும் அடையாள அட் டைப் பரிசோதனையும் மாத் திரம் தொடர்ந்து மேற்கொள் ளப்படும் என்று வன்னிக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கிலிருந்து தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற விளை பொருள்கள், உண வுப் பொருள்கள் என்பன சந் தேகத்துக்குரியதாக இருந் தால் மட்டுமே சோதனையி டப்படும். ஆனால் பழைய இரும்புப் பொருள்கள், கழிவு இரும்புகள் என்பன சோதனை யிடுவது நிறுத்தப்படமாட்டாது.

இத்தகைய கழிவுப் பொருள் களுடன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கொண்டு செல்லப்படுவது இந்தச் சோத னைச் சாவடியில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதனால் அந்த நடவடிக்கையில் தளர்வு ஏதும் ஏற்படுத்தப்படவில்லை - என்றார். (த-5)

## நீதியாக நடக்காது வடக்குத் தேர்தல்

### 'கபே' அமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 1
நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியாக நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது என சுதந்திரமானதும் நீதியானது மான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே'யின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ். நகர் விடுதி ஒன்றில் நேற்றுப் பிற்பகல் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:
இங்கு சட்டம் நீதி நிலை நாட் டப்படவில்லை. சாவகச்சேரி யில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அதில் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்ட இராமநாதன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறி யல் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ள போதும் அவர் நீதிமன்

தொடர்ச்சி: பக்கம் 25

## மேற்குலக அரசியல்வாதிகளுக்கு புலி வலையமைப்புகள் இலஞ்சம்

### ஜனாதிபதி மஹிந்த குற்றச்சாட்டு

கான்பரா, செப். 1
தமிழீழ விடுதலைப் புலிகளு டன் தொடர்புடைய வலைய மைப்புகள் பிரதான மேற்கு லக நாடுகளின் அரசியல் வாதி களுக்கு இலஞ்சம் கொடுத்து இலங்கைக்கு எதிரான செயற் பாடுகளில் அவர்களை ஈடு படத் தூண்டுகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு போரில் தீர்க்கமாகத் தோற்கடிக்கப் பட்ட புலிப் பயங்கரவாதிக ளுக்குச் சார்பான சர்வதேச வலையமைப்புகள் ஆஸ்திரே லியாவுக்கு ஆள்களைக் கள வாக அனுப்பும் தொழிலில் முக்கிய பாத்திரத்தை வகிக் கின்றன என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

'த ஒஸ்ரேலியன்' பத்திகைக்கு அளித்த விசேட செவ்வியி லேயே அவர் மேற் கண் டவாறு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கொள்கை எமக்குப் பிடித்திருக்கின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்

தொடர்ச்சி: பக்கம் 25

முளாய் காயத்திரி அம்மன் ஆலயத்தின்
சப்ட வளர்ச்சி நிதிக்காக சுடர் ஒளி
பத்திரிகையின் அனுசரணையில்
பொன்னாலையில் இன்று
மாபெரும் மாட்டுவண்டி
சவாரிப்போட்டி
காணத்தவறாதீர்கள்!!
மேலதிக விபரம் 16 ஆம் பக்கத்தில்



ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியபோது....

# இளையோர் நாடக விழா இன்று யாழ். நகரத்தில்

## தேவானந்தின் 3 நாடகங்கள் மேடையேறுகின்றன

செயல்திறன் அரங்க இயக்கத்தின் இளையோர் நாடக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. வார்த்தைகளை நறுக்காகப் பேசி பிர மாண்டமான படிபங்களுடாக கதைபேசும் நாட கங்கள் இந்த விழாவில் மேடையேற்றப் படவுள்ளன.

விழாவில் மூன்று நாடகங்கள் மேடையேற்றப் படுகின்றன. கலைப் படைப்பாக்கத்தை மழுங் கடிக்கும் சூழலை ஊடறுத்து வெளிக்கிளம்பும் இந்தப் படைப்பாக்கங்கள் இளையோருக்கு ஊக்கத்தையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத் துபவை என்று செயல்திறன் அரங்க இயக்கம் தெரிவித்தது.

இளையோருடன் நடத்தப்பட்ட நாடகக் களப் பயிற்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்ற கதைகளின் தொகுப்பாக இந்த நாடகங்கள் உருவாக்கப்பட் டுள்ளன என்று தெரிவித்தார் செயல்திறன் அரங்க இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் தே.தேவானந்த். "வார்த்தைகளை நறுக்காக பேசி பிரமாண்ட மான படிமங்களை ஒலி, ஒளி மற்றும் இசைவி ளைவுகளுடன் மேடைவெளியை இந்த நாடகங் கள் நிரப்புகின்றன. நாடக மாணவர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் இந்த விழா பெருவிருந்தாகவும் புதிய அனுபவமாகவும் அமையும்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழத்தின் நவீன நாடக உலகில் முக்கியமான நெறியாளராக இனம் காணப்படுகின்ற தே. தேவானந்தே இந்த நாடகங்களை எழுதி நெறிப் படுத்தியுள்ளார். இசையமைப்பை த.றொபேட்டும் ஜோசப் மேரியும் சத்திய சீலனும் வழங்கியிருக் கிறார்கள்.

மேடையேற்றப்படுகின்ற *கருப்பைத் தறுக்கணிப்பு* என்ற நாடகம் தாய் நிலம் மலடாகுதல் பற்றி பேசுகிறது. *வீடு பேறு* என்ற நாடகம் வீடுகளைத் தொலைத்து அலையும் மக்கள் தமது நினை வுகளில் சுமக்கின்ற வீடுகளைப் பற்றிப் பேசுகிறது. *வெப்பக் குடுவை* நாடகம் தாயைத் தொலைத்த பின்னர் தேடும் பிள்ளைகள் பற்றியும் அவர்களின் துயரம் பற்றியும் பேசுகிறது. இதனை தேவானந்தின் *அக்கினிப்பெருமூச்சு* நாடகத்தின் தொடரச்சியா கப் பார்க்க முடியும் என் கிறார்கள் விமர்சகர்கள்.

"திறந்த 'வி' வடிவத்தில் அமைந்த மூன்று வட்ட அரங்குகளில் மேடையேற்றப்படுவதற்காக தயா ரிக்கப்பட்ட இந்த நாடகங்களை வீரசிங்கம் மண்டபத்தில் இந்தத் தடவை படச்சட்ட மேடை யில் அரங்கேற்றப் போகிறோம்" என்று செயல் திறன் அரங்க இயக்கம் தெரிவித்துள்ளது. அதே சமயம் திறந்த வெளியில் மூன்று வட்ட அரங்குகளில் எதிர்வரும் 7ஆம் திகதி இந்த நாட கங்கள் மீண்டும் சங்கானையில் போடப்படவு ள்ளன. இதே நாடகங்கள் மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனையில் எதிர்வரும் 10ஆம் 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. சர்வதேச மேம் பாட்டுக்கான அமெரிக்க நிறுவனம் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருக்கிறது. (உ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னுதாரணமாகத் திகழும்

## நம்பிக்கை உள்ளது என்கிறார் டியூ

கொழும்பு.செப்.01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை இருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ.குண சேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், நல்ல முன்னுதார ணத்தை ஏனைய மாகாணங் களுக்கு வழங்குவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதி யரசர் உள்ளிட்ட வலுவான வேட் பாளர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் களமிறக் கியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தேர்தலில் வெற்றியீட்டி, மாகாணசபை ஆட்சியை நடத் தினால் ஏனைய மாகாணங்க ளுக்கும் முன்னுதாரணமாக திக ழும்.



குறிப்பாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால், பிரிவினைவாதக் கொள்கைகளைக் கைவிட்டு ஜன நாயகக் கொள்கைகளில் கூடுதல் ஆர்வம் காட்ட அந்தக் கட்சி முன் வரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை பணத்திற்காக ஆசைப்பட்டு பலர் தேர்தலில் போட்டியிடுவதாகவும் புத்திசாதூரியமானவர்கள் அர சியலை விட்டு விலகியிருப்பதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 100 கிலோ ஹெரோயின் சிக்கியது

கொழும்பு.செப்.01

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்து சுமார் 100 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை சுங்கத் திணைக்களத் தினர் நேற்றுமுன்தினம் கைப் பற்றியுள்ளனர்.

இதேவேளை ஹெரோயின் போதைப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பியதாக சந் தேகிக்கப்படும் பாகிஸ் தான் பிரஜையொரு வரும்- இலங்கை யில் கொள்கலனைப் பொறுப்பேற்க வந்த இரண்டு இலங்கை யரும் கைது செய்யப் பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக் களத்தின் பணிப்பாள ரும்- சுங்க திணைக் களத்தின் இறைவரி செயலணிக் குழு வின் பணிப்பாளரு மான மாலி பியசேன தெரிவித்தார். (ஐ)

# பால் உற்பத்திக்கு நியூசிலாந்துஉதவும்

கொழும்பு.செப்.01

இலங்கையில் பசும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற் கும் பால் உற்பத்தி கைத் தொழிலை விரிவாக்குவதற் கும் நியூசிலாந்து துரித ஒத்துழைப் புக்களை வழங்கத் தயாராக வுள்ளதாக நியூசி லாந்து வெளிவிவ கார அமைச்சர் முரே மெக்கலி உறுதிய ளித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் முரே மெக்கலி, நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே இலங்கையில் பால் உற்பத்தித் துறையை மேலும் அபிவிருத்தி செய்வ தற்கு நியூசிலாந்து தயாராக வுள்ளதாக அவர் தெரிவித் தார். (ஐ)

## புலிச் சந்தேகநபர்கள் இருவர் சென்னையில் கைது

சென்னை.செப்.01

கடலூரில், வெடிகுண்டுச் சோதனை நடத்திய வழக்கில் தேடப்பட்டு வந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் நேற்றுமுன் தினம் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகப்பொலிஸார் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் கள் என்று சந்தேகிக்கப்படும் சிவனேசன் மற்றும் மகேஸ்வரன்(கோபி)ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும், இலங்கையின் முக்கிய பகுதிகளில் குண்டு வைக்கத் திட்டமிட்டனர் என்றும், இத்திட்டத்தை செயற்படுத்த, முன் சோதனை செய்வதற்காக, தமிழகத்திற்கு தப்பிச் சென்று தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தின் முந்திரிக்காட்டில், மேலும் நால்வருடன் தங்கியிருந்நதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து, கியூ பிரிவு பொலிஸார் விசா ரணை மேற் கொண்டு ஏற்கனவேநால்வரைக் கைது செய்துள் ளனர். இதன்போது தப்பி ஒடிய சிவனேசன், கோபி ஆகிய இருவரும் தற்போது கைதாகியு ள்ளனர். (ஐ)

49 வருட காலமாக
வடக்கின் மூத்த அச்சு ஊடக வழங்குநர்
கந்தசாமி அண்ணன்
பல்வேறு இடர்களையும் தாண்டி
இன்று
நவீன உலகின் அச்சு ஊடக வளர்ச்சிப் படி
ARC PRINTING SOLUTIONS
எனும் நிறுவனத்தைப் புதுப்பொலிவுடன்
(இல. 16 1/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
புதிய முகவரியில் ஆரம்பிப்பதை இட்டு
பெருமகிழ்வு கொள்ளும் நாம்
என்றும் நன்றியுடன்
வாழ்த்துகின்றோம்...
"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."
HARIKANAN
Printers of the North

ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை
பகுதிநேரமாக இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்
ஐரோப்பிய நாடான சைப்பிரஸில்
படிக்க, உழைக்க O/L மட்டும் இருந்தால்
21 வயது ஏனையோருக்கு A/L சித்தி முக்கியம்
(எல்லா நாள்களும் காலை 8.30,
மாலை 6.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

ரிக்கெற் இலவசம், இருப்பிடம் இலவசம்
மாதம் 65000/= சம்பாதிக்கலாம்
வெறும் 3 இலட்சம் மட்டும் செலுத்தி
மலேசியாவில் படிக்க உழைக்க
அரிய வாய்ப்பு
(எல்லா நாள்களும் காலை 8.30,
மாலை 6.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

# 2 மோட்டார் சைக்கிள்களை களவாடிய 3 சிறுவர்கள்

## நீதிமன்றால் பிணையில் விடுவிப்பு

கிளிநொச்சி, செப்.1

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களைக் களவாடிய மூன்று சிறுவர்களும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் இயங்கும் தனியார் தொலைபேசிமுகவர் நிலையம் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் மாவட்டச் செயலக முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் என்பன களவாடப்பட்டமை தொடர்பாக அதன் உரிமையாளர்களால் கடந்த செவ்வாய்க் கிழமை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த முறைப்பாட்டையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது களவாடப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டதுடன் அதனைக் களவாடிய குற்றச்சாட்டில் மூன்று சிறுவர்களும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து மூன்று சிறுவர்களையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தின் முன்னிலையில் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

குறித்த மூன்று சிறுவர்களும் 16 வயதுக்கும் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர். களவாடப்பட்ட பொருள்களையும் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு சிறுவர்கள் ஒப்புக் கொண்டனர்.

> " குறித்த மூன்று சிறுவர் களும் 16 வயதுக்குக் குறைந்த வர்களாகக் காணப் பட்டனர். களவாடப் பட்ட பொருள் களையும் உரிய வர்களிடம் ஒப்படைப் பதற்கு சிறுவர்கள் ஒப்புக் கொண்டனர்.

குறித்த சிறுவர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி சி.சிவபாலசுப்பிரமணியம் குறித்த சிறுவர்கள் இவ்வாண்டு நடைபெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதுடன் அவர்கள் 16 வயதை அடையாத சிறுவர்கள் என்றும் அவர்கள் குற்றத்தின் தார்ப்பரியத்தை அறியாமலேயே இந்தச் செயலைச் செய்துள்ளனர் என்றும்,

ஆகவே அவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பொருத்தமான நிபந்தனைகளுடன்கூடிய பிணையில் அவர்களை அவர்களின் பெற் றோரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதனை நன்கு கவனத்தில் எடுத்த நீதிவான் சிறுவர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் இருந்து அவர்கள் தமது கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுரை கூறி குறித்த மூன்று சிறுவர்களையும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணைகளில் பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் வாரத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் 3 மணிமுதல் 4 மணிக்குள் மாவட்ட சிறுவர் நன்ன டத்தை அலுவலகத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

(கு-6)

வட மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இம்மானுவல் ஆனல்ட்
[B.A (Phil) Hons, MSS Limra International (USA)
AMTC Limra International (USA)



அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியையும் அதிகாரத்தையும் செலுத்தும் விவகாரம் அல்ல. மாறாக மக்களின் நல்வாழ்வுக்காக சேவை செய்யும் ஒரு உன்னதமான பணி

X 5

(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர், முன்னாள் யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவரும்,விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
www.emmanuvelarnold.blogsport.com
(c11205)(10.3)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்



X
15

அமரர்.வி.தர்மலிங்கம்
(மானிப்பாய்/உடுவில் தொகுதி முன்னாள் பா. உறுப்பினர்)

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்" எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழி தேடி விதி இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.....
(மகாகவி பாரதியார்)



தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 (X) | 16 | 17 | 18 | 19 | |

(C/11205)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# அரசுக்கு வாக்களிக்குமாறு மிரட்டும் உத்தியோகத்தர்கள்

## உதவித்தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு

வவுனியா.செப்.01

புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சிலர் அரசுக்கு வாக்களிக்குமாறு மக்களை மிரட்டுகின்றனர். இதன் காரணமாக மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்படுகின்றது. அதனைத் தடுத்து நிறுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கைவிடுத்துள்ளார். இது தொடர்பாக அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஒருவர் வன்னி மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் எதிர்வரும் வடமாகாண சபைத்தேர்தலில் அரச கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு வற்புறுத்தி உள்ளதுடன் அவர்கள் கடமைபுரியும் கிராமங்களைச் சேர்ந்த மக்களையும் ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கூடிய வகையில் பிரசாரம் செய்யுமாறு வற்புறுத்தியுள்ளார்.

அவரின் வற்புறுத்தலுக்கு அமைவாக அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற சில சமுர்தி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்து வருவதுடன் எந்தக்கட்சிக்கு வாக்களிக்க போகின்றீர்கள் என்ற விவரத்தையும் திரட்டுவதுடன் ஆளுங்கட்சிக்கு வாக்களிக்காதவர்களின் சமுர்த்தி நிவாரணங்கள் வெட்டப்படும் எனவும் அச்சுறுத்துகின்றனர்.

இவ்வாறு மக்களைப் பயமுறுத்தும் அரசியல் பிரசாரங்கள் மேற்கொள்பவர்களுக்கு எதிராக தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே உதவித்தேர்தல் ஆணையாளரிடமும் கபே அமைப்பிடமும் முறையிட்டோம். ஆனாலும் இன்று வரை அச் செயற்பாடு தொடர்ந்த வண் ணமே உள்ளது. எனவே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்புக்கும் தெரியப்படுத்தி உள்ளோம்- என்றுள்ளார்.

(து-400)

## 500 க்கும் மேற்பட்டோர் பயன் நடமாடும் சேவையில்



வலி. வடக்கு, செப்.1

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளார்கள்.

உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத பல முதியவர்கள் உட் பட மற்றும் பலர் தமது அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை கையளித்துள்ளதுடன், திருமணப் பதிவுகள் மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ்கள் பெறல், காலம் கடந்த பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொள்ளுதல் என பல்வேறு நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

கபே அமைப்பின ஆதரவுடன் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையினால் பலரும் பயன் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ந-86)

## தேர்தல் விதிகளை மீறி வடக்கில் சமுர்த்தி மாநாடு

யாழ்ப்பாணம், செப்.1

தேர்தல் விதிமுறைகளை மீறி சமுர்த்தி அதிகார சபையினால் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் சமுர்த்தி அதிகார சபையினாலேயே இந்த மாவட்ட மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வட மாகாண சபைக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான மாநாடுகள் நடத்தப்படக் கூடாது எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆயினும் அதனை மீறி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் சமுர்த்தி அதிகார சபை இதனை ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வவுனியாவிலும், 7ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 9 ஆம் திகதி கிளிநொச்சியிலும், 10 ஆம் திகதி முல்லைத்தீவிலும், 12 ஆம் திகதி மன்னாரிலும், இந்த மாவட்ட மாநாடுகள் இடம் பெறவுள்ளன.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நடைபெறும் இந்த மாவட்ட மாநாட்டுக்கு, அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் என்பனவே ஒழுங்குகளை முன்னெடுத்துள்ளன.

(து-5)

## வடமராட்சி வடக்கு அபிவிருத்திக்கு 32 லட்சம் ரூபா எம்.பிக்களால் ஒதுக்கீடு

வடமராட்சி, செப்.1

இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி வேலைகளுக்கென 31 லட்சத்து 95 ஆயிரத்து 200 ரூபாவை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

கல்வி அபிவிருத்திக்கென வடமராட்சி கல்வி வலயத்துக்கு 13 லட்சத்து 30 ஆயிரத்து 200 ரூபாவும், பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கு 9 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேச சபை அபிவிருத்திக்கென பருத்தித்துறை பிரதேச சபைக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், நகர அபிவிருத்திகளுக்கென பருத்தித்துறை நகரசபைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வல்வெட்டித்துறை நகர சபைக்கு ஒரு லட்சம் ரூபாவும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(ஓ-8)


## மரண அறிவித்தல்

### சின்னவி மனோகரன்

(ஆசிரியர், யா/ சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)



கோட்டைக்காடு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னவி மனோகரன் (ஆசிரியர், யாழ் சராசாலை, சரஸ்வதி வித்தியாலயம்) நேற்றுமுன்தினம் (30.08.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னவி-நாகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அனனியாஸ் மேரி ஜோசவ், வரோனிக்கா தம்பதியரின் மருமகனும், இராசாத்தி, மனோராணி, பொன்மணி ஆகியோரின் சகோதரனும், மகாதேவன்(இளைப்பாறிய அதிபர்) அலோசியஸ், மேரிறோசலி, யேசுரட்ணம், சாந்தினி காலஞ்சென்றவர்களான விமலநாதன், சிவராசா, கெய்சர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்காக மகாதேவன் இல்லத்தில் இருந்து இன்று(01.09.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணி யளவில் எடுத்துச்செல்லப்பட்டு இளவாலை சென்ஜேன்ஸ் புனித யாகப்பர் ஆலயத்தில் வழிபாடுகள் செய்யப்பட்டு யாகப்பர் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காடு,
சுன்னாகம்.

தகவல்;
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கந்தையா இராசையா (நல்லூர் பழக்கடை)



51, சிவன்புது வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா நேற்று (31.08.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் பவளத்தின் அன்புக் கணவரும் லலிதாதேவி, காலஞ்சென்ற சுசீலாதேவி, ஜெயபாலசிங்கம், பஞ்சலிங்கம் (பண்டாரிக்குளம், பிள்ளையார் கோயில், அண்ணாமலை இசை மன்றம், வெற்றிலையாதகம்), நிர்மலாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான சிவா, ஜெயஸ்ரீ (ஜெயஉதயகுமார்), இராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசதுரை, செபஸ்ரியாம்பிள்ளை, விஜயா, மரியராணி, மாக்கிறேட், ஜெயக்குமார், ஜெயம், மேனகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.ப. 12 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

51, சிவன்புது வீதி,
நல்லூர். 0775302627

(39385)
(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சபாநாயகம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சபாநாயகம் கடந்த 29.08.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை சபாநாயகத்தின் அன்பு மனைவியும் புஷ்பராணி, பிரேமராணி, குணரட்ணம் (பிரா ன்ஸ்), ராசரத்தினம் (பிரான்ஸ்), தவரத்தினம் (சுவிஸ்), பாலராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் நாகேஸ்வரி, காலஞ் சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சௌந்தரம்மா, சரஸ்வதியம்மா, சபாபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் கணேசானந்தன், இமானுவேல் ஜெயராசா, கோமதி (பிரான்ஸ்), விமலாதேவி (நந்தினி - பிரான்ஸ்), அருணந்திதேவி (வசந்தா- சுவிஸ்), ஜெகன் மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் உதயகுமார்-ஹம்சா, தினேஷ்- ஷாலினி, சோபனா- மதிவதனன், தனுஷா, தீபன், நிருஷன், நிமல், தீபிகா, அஜித், தாருஷன், குருஷரண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ருத்ரேஷ், ஈதன், சகீனா, திஷானிகா ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''ராசா சபா''
சூராவத்தை, சுன்னாகம்.
021 205 9422

(39384)
(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா, கோயில்குளம், தெற்கிலுப்பைக்குளம், சமளங்குளம் மற்றும் எல்லப்பர் மருதங்குளம் ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டபோது.. (ஐ)

# பொலிஸார் தவறாக நடக்கின்றனர்




யாழ்ப்பாணம், செப்.1

சாவகச்சேரியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக பொலிஸார் பக்கச்சார்பாக செயற்பட்டு வருகின்றனர் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமாகிய அங்கஜன் இராமநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கிடையில் கடந்த 27 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றது.

இது தொடர்பாக அங்கஜன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் சாவகச்சேரி பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் என் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதை தடுக்க வந்த எனது பொலிஸ் மெய்ப்பாதுகாவலர் திஸாநாயக்க துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் நாம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் குமார் சர்வானந்தன் என்பவரே என உறுதிப்படுத்தி பொலிஸில் பலர் சாட்சியமளித்துள்ளனர். இருந்தபோதிலும் குறித்த நபரை பொலிஸார் கைது செய்யாமல் ஒரு பக்கச் சார்பாக எங்கள் மீது மட்டும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கையானது கண்டனத்துக்குரியதாகும்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளேன். எனவே சம்பவத்துடன் தொடர்புடைய சர்வானந்தன் கைது செய்யப்படாமையானது எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஆகவே உடனடியாக சர்வானந்தனை கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ-400)

# கோஷ்டி மோதலைத் தவிருங்கள்

## சகபாடிகளுக்கு தவராசா அறிவுரை

வட மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வெற்றிலை சின்னத்தில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளர்களான அங்கஜன், சர்வானந்தன் ஆகியோரின் குழுக்களுக்கிடையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல் ஓர் அநாகரிக செயல். இதனை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளார் அதே கட்சியில் போட்டியிடும் தவராசா. இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல கட்சிகளை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பல வருடங்களாக வெற்றிகரமாக ஆட்சி செய்து வருவது அனைவரும் அறிந்ததே. இத்தகைய சூழலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இடையே வன்முறை மோதல் இடம்பெறுவது சகிப்புக்குரியதல்ல.

வன்முறைக் கலாசாரம் ஒழிந்து ஜனநாயக சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் ஒரு சிலர் மீண்டும் வன்முறை கலாசாரத்தில் ஈடுபடுகின்றனர். இதை நான் சார்ந்த ஈ.பி.டி.பி கட்சி கண்டிப்பதோடு தேர்தலில் இப்படிபட்டவர்களை மக்கள் இனம் கண்டு தமது வாக்குகளை செலுத்த வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி.தவராசா கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)













# வாக்களிக்கும் உரிமையை இளையோர் வடக்கில் சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## அம்பாறை மாவட்ட இளைஞர் அணித் தலைவர் வேண்டுகோள்

அம்பாறை, செப்.01

"வட மாகாணத் தமிழ் இளைஞர்கள், ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை உரியமுறையில் பயன்படுத்தச் செய்வதற்கு ஊக்குவிப்பதுடன் தமிழ்த் தேசிய உணர்வை வலுப்படுத்தவும் இளைஞர் அணிகள் செயற்பட வேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட இளைஞர் அணித் தலைவரும்,கல்முனைமாநகர சபை உறுப்பினருமான எஸ். ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வட மாகாண சபைத் தேர்தல் இன்று தேசிய ரீதியாக மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

எனவே வடக்கு தமிழ் மக்களுக்கு தமது தனித்துவத்தையும் தமிழ்த் தேசியத்தின் மீதான அசைக்க முடியாத பற்றுதலையும் வெளிப்படுத்துவதற்கான முக்கிய தேர்தலாகவும், சந்தர்ப்பமாகவும் இந்தத் தேர்தல் அமைந் துள்ளது.

கிழக்கில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்து தமிழ்த் தேசியத்தின் பால்தாம் கொண்டுள்ள பற்றுதலை மீண்டும் வெளிப்படுத்தினர்.

ஆனாலும் மாகாண சபைத் தேர்தலில் அந்த நிலை மாற்றப்பட்டுவிட்டது.

இந்த நிலை வடக்குக்கு ஒரு போதும் ஏற்படாது. தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய உணர்வின்பால் நின்று மாகாண சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோகவெற்றிபெறச்செய்வாரென்பது திண்ணம்.

இதற்கு வடக்கிலுள்ள தமிழ் இளைஞர்களின் ஒன்றுபட்ட செயற்பாடுகள் மிகவும் அவசியமானவை.

வாக்களிக்கும் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதில் சலித்துப் போகாதவாறும், அசமந்த நிலையிலிருக்காதவாறும் இளைஞர்கள் ஊக்கம் பெறவேண்டும்.

மக்களைத் திசைதிருப்பி தம்வசப்படுத்தும் பல்வேறு முயற்சிகள் அரச தரப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருவதை வடக்கில் அவதானிக்க முடிகிறது.

ஆனால் எத்தகைய நிலை இருப்பினும், எமது மக்கள் சோரம் போகமாட்டார்கள் என்பதையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும். இது எமது கடந்த கால வரலாறாகும்- என்றார். (ஐ-30)

# தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் 202

| | |
|---|---|
| குருநாகல் - | 68 |
| கண்டி - | 42 |
| நுவரெலியா - | 34 |
| மாத்தளை - | 32 |
| யாழ்ப்பாணம் - | 24 |
| வவுனியா - | 02 |

மூன்று மாகாண சபை களுக்கான தேர்தல் தொடர்பில் இதுவரை 202 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலக தேர்தல் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் 26 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் தேர்தல் சட்டங்களை மீறிய 176 சம்பவங்களும் முறைப்பாடாக கிடைக்கப்பெற்றுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதிகளவான முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

அடுத்தபடியாக கண்டியில் 42, நுவரெலியாவில் 34, மாத்தளையில் 32 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 24 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் வவுனியா மாவட்டத்தில் 2 முறைப்பாடுகள் மாத்திரமே பதிவாகியுள்ளதென தேர்தல்கள் செயலக தேர்தல் கண்காணிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# எதிர்ப்பு அரசியல் அல்லர் இது உரிமைக்கான போராட்டமே

## வடமாகாணசபைத் தேர்தல் வேட்பாளர் கஜதீபன்



எங்களது மூதாதையர்கள் ஆண்டாண்டு காலமாக ஆண்டு அனுபவித்து மகிழ்வுடன் வாழ்ந்த மண் இது. இந்த மண்ணை நாம் ஆள நினைப்பது எதிர்ப்பு அரசியலாகாது.எமது மக்கள் தன்மானமுள்ளவர்கள். அவர்கள் எப்போதும் தமது சுயகௌரவத்தை இழக்க விரும்பமாட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் இளைஞா அணித் தலைவரும் வட மாகாணசபைத் தேர்தல் வேட்பாளருமாகியபா.கஜதீபன்.

வட்டுக்கோட்டை, நவாலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல்பரப்புரைக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து தொவித்தவை வருமாறு:

9 மாகாணங்களில் ஒரேஒரு மாகாணத்தைக்கூட நாம் கைப்பற்றிவிடக்கூடாது என்று அரசு கடும் பிரயத்தனம் செய்கின்றது. உ நாடுகளின் அழுத்தத் காரணமாகத்தான் இந்தத் தேர்தல் அறிவிப்பு இடம்பெற்றுள்ளது. இந்தத் தேர்தல் எவ்வாறு நடைபெறும் என்பதில் இப்போதும் எமக்கு சந்தேகங்கள் உள்ளன.

இந்தத்தேர்தல்எமதுஇருப்பை நிர்ணயிக்கும் தேர்தல். தமிழர்களாகிய நாம் இந்தத் தேர்தலைச் சரியான முறை யில் பயன்படுத்த வேண்டும்.

எமது ஒற்றுமையை நாம் சர்வதேசத்துக்குப் பறைசாற்றவேண்டும். மூன்றில் இரண்டுபெரும்பான்மையை நாம் பெற்று ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். எமது மக்கள் எமக்கு ஒருமித்து வாக்களித்து அதனைப் பெற்றுத்தருவார்கள் என்பது உறுதி.

அவர்கள் என்றைக்கும் சலுகைகளுக்கும் பசப்பு வார்த்தைகளுக்கும் விலை போக மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை - என்றார். (ஐ)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழர் தாயகத்தில் சமஸ்டி அடிப்படையிலான
பூரண சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவோம்!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
[முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்]
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |




பல்லாயிரக்காணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
8
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
19
(த/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு





வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
வடமாகாண சபையில்
பெண்கள் மீதான அனைத்து
அடக்குமுறைகளுக்கு
எதிராகவும், வாழ்க்கைத்தரம்
உள்ளிட்ட அரசியல்
தலைமைத்துவ
மேம்பாட்டுக்காகவும் எனது குரல்
ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும்.
X 4
கே. வினுபானந்தகுமாரி
(ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
எங்களதும், உங்களதும்
காணாமல் போன
உறவுகளுக்காக....
விடுதலையின்றி
சிறைகளில் அடைத்து
வைக்கப்பட்டிருக்கும்
அரசியல் கைதிகளுக்காக
குரல் எழுப்பி வரும்
திருமதி அனந்தி
சசிதரனை ஆதரியுங்கள்.
1
திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)



# பட்டப் பகலில் இறைச்சிக்காக கொல்லப்படும் மாடுகள்

## முறையிட்டும் பயனேதுமில்லை

தென்மராட்சி, செப்.1
மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் பட்டப் பகலில் மாடுகள் கொல்லப்பட்டு இறைச்சிக்காக ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையம், சாவகச்சேரி பிரதேச சபை, பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் கூறப்படுகிறது.
சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் மாட்டிறைச்சிக் கடையைக் குத்தகை எடுத்தவர் வாரத்தில் மூன்று தினங்கள் கடை திறக்கப்படுமென அறிவித்துள்ள போதிலும் கடை திறக்கப்படுவதில்லையெனவும் கொடிகாமத்தில் உள்ள கொல்களத்தில் அனுமதிபெற்றே மாடுகள் வெட்ட வேண்டுமென தெரிவிக்கப்பட்டும், அங்கு மாடுகளை வெட்டாமல் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டபகுதியில் வைத்து வெட்டி இறைச்சியை ஓட்டோவில் ஏற்றி வேறு இடத்துக்கு கொண்டு செல்வ தாகவும்



மக்கள் தெரிவித்தனர்.
அப் பகுதியில் உள்ள வளர்ப்பு மாடுகளையும், கட்டாக்காலி மாடுகளையும் சிலர் பிடித்து இறைச்சிக்காக வெட்டி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட் டுள்ளது.
அப்பகுதியில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படும் போது பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டாலும் அவர்கள் அங்கு வருவதில்லையென மக்கள் தெரிவித்தனர். குடியிருப்புகள் உள்ள பகுதியில் மாடுகளை வெட்டுவதைத் தடுக்க உரிய அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-9)

## மாணவியை காணவில்லை

வலி.வடக்கு, செப். 1
ஏழாலை மேற்கு கோட்டைக்காட்டைச் சேர்ந்த 16 வயதான மாணவி ஒருவர் பாடசாலைக்குச் சென்று கடந்து நான்கு நாள்களாக வீடு திரும்பவில்லையென சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களினால் முறையிடப்பட்டுள்ளது.
சுன்னாகம் மயிலணி வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கல்வி கற்று வரும் நகுலேஸ்வரன் நளீர்வனா என்ற மாணவி கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நடைபெறும் மேலதிக வகுப்பில் கலந்து கொள்ளச் சென்றதாகவும், அதன் பின்னர் வீடு திரும்பவில்லை எனவும் முறையிடப்பட்டுள்ளது.
இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த-86)

## நாகதம்பிரான் ஆலயத் திருவிழா குறித்த கூட்டம்

வடமராட்சி, செப். 1
சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் வருடாந்தத் திருவிழா தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் கோவில் மண்டபத்தில் இன்று முதலாம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் திருவிழா உபயகாரர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.
அத்துடன் இந்தக் கோவில் திருவிழாக்களில் ஒன்றான கப்பல் திருவிழா உபயகாரர்களின் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோவில் மண்டபத்தில் இடம் பெறும். கப்பல் திருவிழாவை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்படும். (த-8)

## கிராம அலுவலர்கள் நியமன நேர்முக தேர்வு அடுத்த வாரம்

வடமராட்சி, செப். 1
தேசிய மட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம சேவையாளர் பதவிக்கு 4 ஆயிரம் பேரை நியமிக்க அடுத்த வாரம் முதல் பிரதேச செயலக மட்டத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்கென நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை மூலம் 8 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருந்து 4 ஆயிரம் பேரைத் தெரிவு செய்வதற்கு அடுத்த வாரம் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இந்தப் பரீட்சைக்குத் 96 ஆயிரம் பேர் தோற்றியிருந்தார்கள்.
நேர்முகப் பரீட்சையில் வழங்கும் புள்ளிகளுடன் திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளும் இணைக்கப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

## வியாபாரிகள் போராட்டம்

வவுனியா, செப்.1
வவுனியா சந்தையில் வைக்கப்பட்ட பொருள்களை எடுத்துச் சென்ற நகர சபை நிர்வாகத்துக்கெதிராக வியாபாரிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சந்தையில் வைக்கப்பட்டிருந்த பலகை, மரப்பெட்டிகள் மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றை வியாபாரிகளின் அனுமதி இன்றி நகர சபையினர் நேற்று முன்தினம் காலை எடுத்துச் சென்றனர்.
இதனை அடுத்து நகரசபையின் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்தும், தமது பொருள்களை மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தியும் சந்தை வியாபாரிகள் சில மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தமது பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு போதிய இடவசதி செய்து தரப்படாமையால் அவற்றைச் சந்தையின் உட்புறமாகவுள்ள கடைகளில் தாம் வைத்துச்செல்வது வழமை. இத்தகைய சூழ்நிலையில் அனுமதி இன்றி பொருள்களை எடுத்துச் சென்றமை கண்டனத்துக்குரிய செயல் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.
இதனை அடுத்து அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் இரு பகுதியினருக்கு மிடையில் சமரசத்தை ஏற்படுத்தி எடுத்துச் சென்ற பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைத்தனர். இதனை அடுத்து வியாபாரிகள் தமது ஆர்ப்பாட்டத்தை நிறுத்தி தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
(த-400-402)

## கால்நடைகளைக் கடிக்கும் கட்டாக்காலி நாய்கள்

வலி வடக்கு, செப் 1
வலி.வடக்கில் அண்மையில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களால் கால்நடைகள் கடித்துக் குதறப்படுவதுடன் கொல்லப்படும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
குறிப்பாக மாவிட்டபுரம் கிழக்கு, மேற்கு கொல்லங்கலட்டி, பன்னாலை, வித்தகபுரம் எனப் பல இடங்களிலும் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசத்தினால் கால்நடைகளை வளர்க்க முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.
இதனைக் கட்டுப்படுத்த யாரும் முன்வராத நிலையில் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-86)

## விசமிகள் இட்ட தீயால் தென்னம்பிள்ளைகள் நாசம்

தென்மராட்சி, செப் 1
தென்மராட்சி தெற்கு அறுகுவெளி பகுதியில் நேற்றுமுன்தினம் விஷமிகளால் வைக்கப்பட்ட தீயினால் மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் நடப்பட்ட நூற்றுக்கணக்கான தென்னம்பிள்ளைகள் எரிந்து நாசமாகியுள்ளன.
கடந்த 2010 ஆம் ஆண்டு அப் பகுதியில் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் 2011 ஆம் ஆண்டு பல காணிகளில் மீள்நடுகை திட்டத்தின் கீழ் நடப்பட்ட தென்னம் பிள்ளைகளே எரிந்து நாசமாகியதாக தெரிவிக்கப்பட்டது.

> "2011 ஆம் ஆண்டு பல காணிகளில் மீள்நடுகை திட்டத்தின் கீழ் நடப்பட்ட தென்னம் பிள்ளைகளே எரிந்து நாசமாகின

அந்தப் பகுதியில் உள்ள பற்றைக் காடுகளுக்கு விறகுத் தேவைக்கு வருவோரால் தீயிடப்பட்ட போது அது அருகில் உள்ள காணிகளுக்குப் பரவி தென்னம்பிள்ளைகளையும் எரித்து நாசமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக கிராம அலுவலர், சாவகச்சேரி பொலிஸ் நிலையம், கைதடி கமநல சேவை நிலையம் போன்றவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



நேற்றைய இருபதாம் திருவிழாவின்போது நல்லைக்கந்தன் கைலாயவாகனத்தில் வள்ளி-தெய்வானை சமேதரராக வெளி வீதியுலா வந்து காட்சிதந்த வேளை....

## நேராதென்றும் தொல்லை

ஈசனவன் இளைய மகன்
இன்பமவன் எல்லை!
நேசமிகு நெஞ்சினர்க்கு
நேரா தென்றும் தொல்லை!
வாசமிகு வள மிளிரும்
வண்ணத் தகு முல்லை!
தோச வடு வினைய கற்றும்
தெள்ளிய யாழ் நல்லை!

மானியூர் ரட்ணேஸ்.

## எம்மை அர்ப்பணிப்போம்

அருளின் உறைவிடமாம் நல்லூர்க் கந்தனவன்
ஆனந்த ஜோதியாம் நல்லூர்க் கந்தனவன்
இன்பத்தின் ஊற்றாம் நல்லூர்க் கந்தனவன்
ஈழத்தின் காவல் தெய்வம் நல்லூர்க் கந்தனவன்
உழவர்கள் தோழனாம் நல்லூர்க் கந்தனவன் .

ஊழியம் செய்வானாம் நல்லூர்க் கந்தனவன்
எல்லோரும் அடிபணிவர் நல்லூர்க் கந்தனிடம்
ஏழைகளை வாழவைப்பான் நல்லூர்க் கந்தனவன்
ஒளிமயமான வாழ்வழிப்பான் நல்லூர்க் கந்தனவன்
ஓம் எனும் பிரணவமாம் நல்லூர்க் கந்தனவன்
ஒளவையாரை பணிய வைத்தான் நல்லூர்க் கந்தனவன்
எல்லாம் செய்தவன் நல்லூர்க் கந்தன்
எம்மை அர்ப்பணிப்போம் அவனது திருவடியில்

க.கஜிக்காந், மட்டுவில் தெற்கு.

## நல்லருள் தருவாய் நீ

வேலவனே வல்வினைகள் தீர்ப்பவனே!
தேவர் குலம் காத்த தண்டாயுதனே!
பாலகனே பார்போற்றும் நாயகனே!
நல்லூர் பெருங்கோயில் அமர்ந்தவனே!
தேவயானை வள்ளிதனை மணந்தவனே!
கார் முகில் வண்ணனின் மருமகனே!
சேவற் கொடியோனே மாமயில் வாகனனே!
தேடி நல்லருள் தருவாய் வடிவேலனே!

செ.பரத்கிருஷ்ணா, அரியாலையூர்

## நல்வரம் நீ தருவாயே!

நாடி நிதம் நல்லைக்கு நான் வருவேனே
ஞானம் அளித்திடும் சண்முகவேலவா
பாடிப் பரவசம் நானடைவேனே
பூரணப் பொலிவுடை வேல் முருகோனே
ஆடிடக் காவடி நானெடுப்பேனே
ஆடிநின் கோயில் வலம் வருவேனே
கூடிடும் பக்தருள் நானிருப்பேனே
கூப்பிட்டு நல்வரம் நீ தருவாயே!

அரியாலையூர் சி.சிவதாசன்



முதன் முறையாக யாழ் நகரில்

**PROFESSIONAL DIPLOMA PLUS**

(தொழில்வாய்ப்பு / உயர்கல்வி கற்பதற்கான அடிப்படைக் கற்கைநெறி)

பின்வருவோருக்கான கற்கைநெறிகள்
- G.C.E (A/L) பரீட்சைக்கு தோற்றியவர்கள்
- School Leavers
- விஷேடமாக தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துக்காத்திருப்போர்

கற்கைநெறிகள் உள்ளடக்கம்
- IT and Computer skills
- English language skills
- Marketing and customer care
- Insurance and stock market / exchange
- Office secretarial skills
- Finance and Accounting

✓ சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்
✓ கற்கைநெறியின் பின்னர் விசேட பயிற்சித்திட்டங்கள்
✓ வேலைவாய்ப்புக்கள்
✓ வெளிநாடுகளில் உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள்

மேலதிக விவரங்களுக்கு:

International Knowledge Pool
168, A9 Road, Ananthapuram West, Kilinochchi.
T.P: 077 857 5406

No: 116, Palaly Road, Kantharmadam, Jaffna.
Vathiri Road, Uduppiddy Junction, Uduppiddy. Near the American Mission College.

(C/11711)(10)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 11.06.1951
மறைவு 02.08.2013

அமரர் ஆறுமுகம் இராசேந்திரம் (ராசா)

திதி; ஏகாதசி



மாதமொன்று ஆனாலும் அகலாது
உம் நினைவு
நீ ராசாவாக வாழ்ந்த காலம்
மர்மமாகப் போனதுவோ?
உம் அன்பு முகம் இனி
எப்போது காண்போம்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 02.08.2013 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதி நிகழ்வில் நேரிலும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் வீட்டுக்கிரித்திய நிகழ்வுகள் இன்று 01.09.2013 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குமரக்கோட்டம் திருவள்ளுவர் வீதி,
வேலணை மேற்கு, வேலணை-06

குடும்பத்தினர்.

**After A/L...**

யாழ் மற்றும் நெல்லியடி நகரங்களில்

BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்

**Seminar & Counseling 2013**

போட்டி நிறைந்த நவீன உலகின் சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் GCE A/L இன் பின்னர் உங்கள் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றை எவ்வாறு திட்டமிடலாம் என்பது பற்றிய பொறுமதிமிக்க நேரடி ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்கள் உங்கள் நகரங்களிலேயே உங்களைச் சந்திக்கின்றார்கள். உயர்கல்வித் துறையில் 14 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சர்வதேச அங்கீகாரம் பெற்ற இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனமான BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



- A/L பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையான காலப்பகுதியை உயர்கல்வி வெற்றிக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது?
- நவீன உலகளாவிய தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய புதிய தொழில்வாய்ப்புகள் எவை?
- உங்களது தனிப்பட்ட திறன் மற்றும் ஆர்வம் என்பவற்றுக் கேற்ப எதிர்கால தொழில் இலட்சியங்களை எவ்வாறு வரையறை செய்வது?
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழக வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் உயர்கல்வி துறையினைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் என்ன?
- உலகளாவிய தொழிற்சந்தைகளில் உயர்வருமானம் பெறும் தொழில்வாய்ப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளும் அதற்காக வேண்டப்படும் திறன்களும் எவை?
- நீங்கள் உயர்கல்வியைத் தொடர்கின்ற போது அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கற்றல் நுட்பங்கள் யாவை? அதற்கேற்ப உங்கள் நினைவாற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?
- உயர்கல்வி மற்றும் எதிர்கால தொழில் வெற்றிகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் உங்கள் ஆங்கில மொழித்திறனையும் ஏனைய மென் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த வழிகள் என்ன?
- நீங்கள் பல்கலைக் கழகமொன்றில் உயர் கல்வியைத் தொடர்கின்ற காலப்பகுதியில் ஏனைய தொழில்சார் (Professional Qualification) கல்வித் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் என்ன?

(C11713)

யாழ்ப்பாணத்தில்...

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி
வீரசிங்கம் மண்டபம்
மு.ப.09.00 - பி.ப 01.00

நெல்லியடியில்...

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி
நெல்லை முருகன், திருமணமண்டபம்
பி.ப. 02.00 - 05.00

இக் கருத்தரங்கில் எமது அனுபவமிக்க உயர்கல்வி ஆலோசகர்களை மாணவர்களும் பெற்றோர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அனுமதி முற்றிலும் இலவசம்

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

அழையுங்கள்: 0777 102131

## ஒக். 1 ஆம் திகதியே முதியோர் வார நிகழ்வுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.01

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வழமை போல் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை முதியோர் வார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

"உள மேம்பாட்டுடன் சுமையில்லாத முதுமை" என்பது இவ் வருடத்துக்கான முதியோர்வாரத்தின் தொனிப் பொருள். முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் இன்றைய சூழலில் எதிர்கொள்வதற்கு முதியோர்களை தயார்ப்படுத்தும் நோக்கில் பல்வேறு கலை நிகழ்வுகளும் விளையாட்டுப் போட்டிகளும் இவ் வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார். இதேவேளை இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக நேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தவறாகும். (ஓ-400-51)

## மோதிவிட்டு தப்பியது வான் காயமுற்றவர் சாவு

யாழ்ப்பாணம், செப்.01

வீதியால் சென்றவரை மோதிவிட்டு தப்பிச் சென்று விட்டது வாகனம். படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மருதனார் மடத்தில் வியாழக்கிழமை இரவு 7 மணியவில் இடம் பெற்றது.

விபத்தில் இணுவில் மேற்கு செட்டி ஒழுங்கையைச் சேர்ந்த கணபதி கிருஷ்ணன் (வயது-71) என்பவரே உயிரிழந்தார்.

இணுவிலில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் இரவுக் காவலாளியாகப் பணிபுரியும் இவர் வழமை போன்று சைக்கிளில் பணிக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே சென்ற வாகனம் அவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. ஒரு மணி நேரத்தின் பின்னரே அவ் வழியே சென்றவர்கள் வீதியில் காயங்களுடன் கிடந்த அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். (த-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 131

# சிறுநீரக நோய்களை

## தவிர்ப்பதற்கான சில தகவல்கள்

நீரின்றி அமையாது உலகு. நமது உடலில் உள்ள ஒவ்வொரு உயிரணுவும் ஆரோக்கிய மாக இருக்க நீர் மிக அவசியம். எனினும் எமது உடலில் எந்த அளவுக்கு நீர் தங்கலாம் என்பதை தீர்மானிப்பதிலும் சிறுநீரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. சிறுநீரகமானது எமது உடலில் ஒரு முறம் (சுளகு) போலச் செயற்படுகிறது.

அதாவது உடலுக்கு வேண்டிய சத்துக்களை வெளியேற்றாமல், வேண்டாதவற்றை மட்டும் வெளியேற்றுகிறது. எனினும் சிறுநீரகத்தில் பல்வேறு விதமான நோய் நிலைகள்.
உதாரணம்:- (சிறுநீரக தொற்று, சிறுநீரக அழற்சி, சிறுநீரகக் கற்கள், சிறு நீரக செயலிழப்பு) ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் குறைந்தபட்சம் முற்றிப் போகாது பாதுகாப்பதற்கும் சிறுநீரக பாதிப்புக் களை குறைப்பதற்கு மான ஒரு சில ஆலோ சனைகள்:-
புதிய சிறுநீரக நோயாளிகள் மனத்தளர்ச்சி அடைய வேண்டியதில்லை. இன்று உள்ள மருத்துவ முறைகளால் உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி போன்ற காரணிகளால் சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்களை குணப்படுத்த முடியும் அல்லது கட்டுப்படுத்த முடியும்.
உயர் குருதி அழுத்தம் ஆனது சிறுநீரக பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. இது மௌன மான உயிர் கொல்லி எனவும் அழைக்கப்படும். இதற்கு இரத்த அழுத்தத்தை சீரான கட்டுப்பாட்டில் வைப்பதன் மூலம் சிறுநீரக பாதிப்புக் களை குணப்படுத்த முடியும்.






கட்டுப்பாடில்லாத நீரிழிவினாலும், சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. இதற்கு சிறுநீருடன் அல்பியு மின் (Albumin) எனப்படும் புரதம் வெளி யேறுதல் காரணமாகின்றது. நீரிழிவைக் கட்டுப் பாட்டில் வைப்பதன் மூலம் குணப்படுத்த முடியும்.
12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு ஸ்ட் ரொடோ கொக்கஸ் இனால் சிறுநீரகப் பாதிப் புக்கள் ஏற்படுன்கிறன. சிறுவர்களின் மண் விளையாட்டினால் ஏற்படும் சிரங்கின் தாக்கம் காரண மாக ஸ்ட்ரெடோகொக்கஸ் தொற்று ஏற்படுகின் றது. விளையாடிய பின்பு உடற்சுத்தம் பேணப் படல் வேண்டும்.
சிறுநீரகக் கற்கள், சிறுநீரகத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினையாகும். இது ஏற்படாமல் தடுக்க போதியளவு தண்ணீர் குடியுங்கள். அத்துடன் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்படுவதற்கு ஆதார மான உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

உதாரணம்:- கல்சியக் கற்களாயின் நெத்தலிக் கரு வாடு, முருங்கக்காய். யூரிட்டிக் கற்களாயின் இறைச்சி வகைகள் போன்றவற்றைத் தவிர்க்கலாம்.
உங்கள் பரம்பரையில் பலர் சிறுநீரகப் பாதிப்புக்கு உட்பட்டு இருப்பின் (சிறுநீரக நோய் களுக்கு மரபணுக்களும் ஒரு காரணம்.) தொடர் உறவு வழித் திருமணங்களைத் தவிருங்கள் அல்லது குறையுங்கள். அதீத உடல் பருமன் கொண்ட வர்கள், பக்கவாதம், பார்க்கின் சன் போன்ற நரம்பியல் நோய்களுக்கு ஆளானவர்களும் சிறுநீரக சோதனை செய்வதன் மூலம் நோயின் ஆரம்ப நிலையைக் கண்டறிய உதவும்.
சிறுநீர் கழிக்கும் தேவை வந்துவிடக் கூடாது. என்பதற்காக சிலர் நீராகாரம் எடுப்பதைத் தவிர்க் கின்றார்கள். இதனால் பின் சிறுநீர் கழிக்கும் போது சிறுநீர் அடர்த்தி கொண்டதாகவும் நமைச்சல் அல்லது கடுக்கும் உணர்வு. கிருமித் தொற்றுக் கும் வழிவகுக்கின்றது.

இந்த நிலை வராமல் தடுப்பதற்கு:-
பொது இடங்கள், பாடசாலைகள் போதியளவு சுத்தமான நீர் வசதியுடன் சலம் கழிப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்தல்.
நீண்ட தூர பயணங்களின் போதும் பயணி களுக்கு நீர் வசதியுடன், சலம் கழிப்பதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்துதல்.

எஸ். சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# கர்ப்ப காலத்தில் உண்பது எவ்வாறு?

நாம் கர்ப்பகாலத்தில் உண்ண வேண்டிய உணவானது, எமது உடற்திணிவுச் சுட்டிக்கும் எமது உடற்தொழிற்பாட்டின் அளவுக்கும் ஏற்ப மாறுபடும். முதல் மூன்று மாதங்களில் போசணைப் பொருள் களின் தேவையானது மிகச் சிறியளவிலேயே அதிகரிக்கின்றது. பின்பு சீராக அதிகரித்து 6 மாதங்களின் பின்னர் இத்தேவை உச்ச நிலையை அடையும்.



**உண்பது எவற்றை?**
* எமக்கு ஏற்ற நிறை அதிகரிப்பு எவ்வளவு என் பதற்கு அமைவாக ஆறு வகை உணவுப் பொருள் களிலிருந்தும் தெரிவு செய்து உண்ண வேண்டும்.
பெட்டி - 03
**உண்ணக் கூடிய 6 வகை உணவுகளுக்கான சில பரிந்துரைகள்:-**
பாண், ஏனைய தானியங்கள், கிழங்குகள், சோறு- 7-11 பரிமாறல்கள்
பழங்கள்- 3-4 பரிமாறல்கள்
மரக்கறிகள் - 4-5 பரிமாறல்கள்
பால்/ மற்றும் பாற்பொருள்கள்- 1-2 பரிமாறல்கள்
மீன், இறைச்சி, முட்டை, அவரையினங்கள் - 2-3 பரிமாறல்கள்
கடலை, எண்ணெய் வகைகள்- 2-4 பரிமாறல்கள்

*நீர்ப்பானங்கள் தேவையான அளவு- குறைந்த பட்சம் 8-10 கப் தினமும் அருந்த வேண்டும்.
*மலச்சிக்கலை தவிர்க்க நார்ப் பொருள் நிறைந்த உணவைப் போதியளவு எடுக்க வேண்டும்.
*போசணைக் கூறுகள் நிறைந்த உணவு வகைகளை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும். (அதற்குச் சமமான பாற் பொருள்கள்)
*ஆகக் குறைந்தது ஒரு கப் பால் தினமும் அருந்த வேண்டும்.
*மது வகைகள் மற்றும் புகைப்பிடிப்பதை, (புகைப்பிடிப்பவர் எதிரே அமர்வது உட்பட) தவிர்க்க வேண்டும்.

**கர்ப்ப காலத்தில் தேவைப்படும் நுண் போச ணைக் கூறுகள் எவை?**
இவை எமக்கு சிறியளவில் தேவைப்படும் போச ணைக் கூறுகளாகும். போலிக் அமிலம், இரும்பு, கல்சியம், விற்றமின் சி, அயடின் என்பவை இவற்றுள் சில. இவற்றின் குறைபாடானது எமது கர்ப்பத்தையும், பிறக்கப் போகும் குழந்தையின் ஆரோக்கியத்தையும் மோசமாகப் பாதிக்கும்.
போலிக் அமிலம்- முள்ளந்தண்டின் விருத்தியில் ஏற்படும் குறைபாட்டைத் தவிர்க்கும். எனவே இதனைக் கர்ப்பமாவதற்கு முன்பிருந்த கர்ப்ப காலம் முழுமையாகவும் பாவிக்க வேண்டும்.
இரும்புச் சத்து- இதன் தேவை 3 மாதங்களின் பின்னர் அதிகரிக்கத் தொடங்கி பிந்திய கர்ப்ப காலத்தில் உச்ச அளவை அடையும். அத்துடன் பாலூட்டும் காலத்திலும் இதன் தேவை அதிக மாகவே காணப்படுகின்றது.
இரும்புச் சத்து நிறைந்த உணவுகளான இறைச்சி, ஈரல், சிறுநீரகம் போன்ற பகுதிகள் மீன், கருவாடு, முட்டை, கரும் பச்சை இலை வகைகள், மரக்கறிகள், சோயாமீற், உழுந்து, கடலை, கௌபி, பருப்பு போன்றவற்றை இக்காலப் பகுதியில் உள்ளெடுக்க வேண்டும்.
விலங்குணவுகளில் உள்ள இரும்பே நன்கு அகத்துறிஞ்சப்படுவதால் அவற்றை உள்ளெடுப் பது சிறந்தது. முளைக்க வைத்த விதைகளும், பருப்பு வகைகளும் (Pulse) இரும்புச் சத்து உடலினுள் சேர்வதை அதிகரிக்கின்றது.

பெட்டி 1 :-

| உடற்திணிவுச் சுட்டி ($Kg/m^2$) | எதிர்பார்க்கப்படும் நிறை அதிகரிப்பு (Kg) |
|---|---|
| < 18.5 (நிறை குறைந்தவர்) | - 12.5 - 18 |
| 18.5 - 24.9 (சாதாரண நிறை) | - 11.5 -16 |
| 25 - 29.9 (அதி கூடிய நிறை) | - 7 - 11.5 |
| ≥ 30 (மித மிஞ்சிய நிறை) | - < 6.8 |

$$\text{உடற் திணிவுச்சுட்டி} = \frac{\text{உடல் நிறை (Kg)}}{\text{உயரம் x உயரம் } (m^2)}$$

பெட்டி 2 :-
(Serving) பரிமாறல் அளவுகள்
1 கப் - 200 ml அளவிலான தேநீர் கோப்பை.
தானியங்கள் மற்றும் மாப்பொருள் உணவுகள்
சோறு- 1 கப்
பாண்- 1 துண்டு

**மரக்கறிகள்:-**
அவித்த மரக்கறிகள் - 3 மே.கரண்டி அல்லது ½ கப்
பச்சை சலட் - 1 கப்
**பழங்கள்:-**
வாழைப்பழம்/ தோடம்பழம்- 01
வெட்டிய பழக் கலவை- ½ கப்
உலர் பழங்கள்- 2 மேசைக் கரண்டி
**மீன், அவரை, முட்டை, கோழி இறைச்சி:-**
சமைத்த மீன்/ இறைச்சி - 30 g
சமைத்த அவரைகள் - 3 மேசைக் கரண்டி
முட்டை- 01
உலர் மீன் - 15 g
**பால் உணவுகள்**
பால் - 1 கப்
யோகட் - 1 கப்
பால் மா - 2 மேசைக் கரண்டி
கடலை/ எண்ணெய்- 1 மேசைக் கரண்டி

இலங்கையில் இரும்புச் சத்து நிறைந்த உணவுப் பழக்கம் குறைவாக உள்ளதால் கர்ப்ப காலத் திலும், பாலூட்டும் காலத்திலும் இரும்புச் சத்து வில்லைகளை உள்ளெடுப்பது அவசியம். மேலும் இவற்றுடன் தேநீர், கோப்பி மற்றும் கல்சியம் மாத்திரைகளைச் சேர்த்து உட்கொள் ளக் கூடாது. இரும்புச் சத்து குளிகைகளை வெறும் வயிற்றில் எடுப்பது நல்லது.
இக்குளிகைகளுக்கு வாந்தி வருவது போல உள்ளவர்கள் சாப்பிட்ட உடனே உள்ளெடுக்கலாம். இவ்வகையானவர்கள் படுக்கைக்கு செல்லும் போதோ அல்லது பழச்சாற்றையோ உள்ளெடுப் பது பக்க விளைவுகளைக் குறைக் கும். இரும்புச் சத்துக் குளிகைகளை குழந்தை பிறந்த பின் 6 மாதங்கள் வரை உள்ளெடுக்க வேண்டும்.
**கல்சியம்:-**
கல்சியத்தின் தேவை கர்ப்பகாலத்திலும், பாலூட் டும் போதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்காக மீன், இறைச்சி, முட்டை, வித்து வகைகள், பால், சீஸ், தயிர், யோகட், இலை வகைகள், மரக்கறிகள், விளாம்பழம், எள் போன்ற உணவுப் பொருள்களை உள்ளெடுக்க வேண்டும். மேலும் கர்ப்பவதிகள் கிளினிக்கு களில் வழங்கப்படும் கல்சியம் வில்லைகளை யும் எடுக்க வேண்டும்.
**அயடின்-** அயடின் சேர்க்கப்பட்ட உப்பை உணவில் சேர்ப்பதால் இதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.



வைத்தியர். பிரதீபனா செல்வகரன்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

## திறப்பு விழா

உடுப்பிட்டி நாவலடி சி.க.கூ.சங்க காரியாலய திறப்பு விழாவும் பெயர்ப் பலகை திரைநீக்கமும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தலைவர் இல்லத்தில் நடைபெறும். (ந)

**DUTCH(Netherlands)**
☑ GERMAN ☑ FRENCH ☑ ENGLISH

மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும் அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio,Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது

Netherland அரசாங்கத்தினால் April - 2012 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள M.V.V வீசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன ஏற்கனவே Netherland தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும்,கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு

மாணவர்கள் கவனத்திற்கு : இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும் Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது எனவே உங்களது ஆசிரியரை தெரிவுசெய்ய முன் நெதர்லாந்திலிருந்து உங்களை Sponser செய்பவர் மூலம் நீங்கள் தெரிவுசெய்யும் ஆசிரியருடன் Dutch மொழியில் பேசி அவர் உத்தரவாதம் மிக்கவரா ? என்பதை உறுதிப்படுத்திய பின்னர் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள்.இதனால் உங்கள் பணம்,நேரத்தை மிச்சப்படுத்தலாம்.........

**Dutch Lanka Academy**
#69 -2/1,Galle Road,Dehiwala.
Tel : 0777251332,011 271 8811

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100 % உத்தரவாதம் அளிக்கப்படும். **Condition Apply

டோஹா - கட்டாரில் உள்ள இஞ்சினியரிங் கம்பனியில்

**உடனடி வேலைவாய்ப்பு**

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| எலெக்ரீசியன் | 25 | 1200 | 43,200/= |
| ப்ளம்பர் | 08 | 1200 | 43,200/= |

1 QRS = Rs. 36.00

- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- உணவுக் கொடுப்பனவு 150 QRS வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம்,
- விமான சீட்டு வழங்கப்படும். • 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

நேர்முகப் பரீட்சை செப்டெம்பர் 6 ம் திகதி வெளிநாட்டு பிரதிநிதிகள் மூலம் நடைபெறும்

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வரவும்
இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் 35000 அறவிடப்படும்.

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY LL.No.: 2427
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 287-1/2, ஹெவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)
E-mail : rodneyagency@hotmail.com | web : www.rodneyrec.com
Tel : 0112552598 | 0773074744 | 0718126094

**வீடு காணி வாடகைக்கு அல்லது விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள 2½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு. (சி/11819)(3.5.6)
தொடர்பு: 077 919 4115/ 077 712 0385

**தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு தரமான ஊர்க்கோழி முட்டைகள் மொத்தமாகவோ சில்லறையாகவோ உடன் தேவை. சந்தை விலையிலும் கூடுதல் விலைக்கு வாங்கப்படும்.
தொடர்பு: 021 720 0616, 071 867 6424
(C/11818) (7.6.3)

**கட்டட வேலைகள் செய்து தரப்படும்**

உங்கள் வீடுகள், கடைகள், அலுவலகங்கள் போன்றவற்றுக்கு (அற்றாச் பாத்றூம், கொமட் பிற்றிங், குழாய் இணைப்புக்கள், அலுமினிய சீலிங் பிற்றிங், வயறிங், பெயின்றிங்) சிறந்த முறையிலும், குறைந்த விலையிலும் வேலைகள் செய்து தரப்படும்.
தொடர்பு: (37515) (7.6.3)
077 959 7231, 077 808 7967, 077 439 7667

**மணமகள் தேவை**

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

**மணமகன் தேவை**

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திதிற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

**sms ஊடாக வரன் தேடல்**

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com
Call : 011 4380900 0114344230

**SB TRAVELS & TOURS** SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,800/- | LONDON | 96,000/- |
| TRICHI | 16,500/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 15,800/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 158,500/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 118,500/- |
| KOCHI | 17,500/- | MELBOURNE | 105,000/- |
| DELHI | 41,400/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 31,600/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,600/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 29,500/- | | |

*Condition Apply
VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 23,800/-, DUBAI -23,800/-, DOHA - 26,500/-
விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கட்டார், டுபாய்க்கு பியுறோ அரேஞ்மென்ற் செய்து தரப்படும்.
E-mail: sbtravels99@yahoo.com
(C/11831)
Hotline: 077 1083481
No: 132 Sri Kathiresan Street, Colomb13.
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

**தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

**மலேசியா**



மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
பணிப் பெண்கள் தேவை (வயது 25 - 45)

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 34,000

- கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிட வசதி (Accommodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்

2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும். முற்றும் இலவசம்

Labour Licence No. 1785
**Rizviya Travels & Tours**
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo - 10.
(C/11828) Tel : 011 3091521, Hotline : 077 3179592.

edexcel Assured



பாடநெறிகள் தொடர்பாக மேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
077 309 9 308

**After A/Levels...**
**BTEC HND**
FAST and ECONOMICAL path to a UK DEGREE

Join **ESOFT** The Fastest Growing EDEXCEL Centre

*HND in Computing & Systems Development*
*HND in Business Management*

இறுதியாண்டினை ESOFT யாழ் கிளையிலேயே பிரித்தானிய பல்கலைக்கழக தகைமையை பெறமுடியும்...!

புதிய பிரிவுகள்
2013.09.14 காலை
2013.09.23 9 மணி

ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna
ESOFT Shaping Lives, Creating Futures.

TEL: 021 222 4142 HOTLINE: 077 309 9 308 www.esoft.lk

**தொழில் வாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் 70இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்த வலையமைப்பினையும் 120 வருடத்திற்கு மேலாக அனுபவத்தினையும் கொண்டு தற்போது இலங்கையிலும் தனது சேவையை ஆரம்பித்து மிகவேகமாக வளர்ச்சியடைந்துவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணக் கிளைக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

பதவி நிலை — வெற்றிடம்

1) Business Distribution Manager — 01
Payments - Vehicle Allowance - 30,000/=
- Travelling Allowance - 28,000/=
- Other Allowance - 5,000/=

2) Associate Agency Manager — 02
Payments - Transport Allowance - 25,000/=
- Travelling Allowance - 30,000/=

3) Agency Leader — 03
Payments - Transport Allowance - 20,000/=
- Travelling Allowance - 30,000/=
தகைமை : காப்புறுதித் துறையில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

4) Operational supporting staff Ladies — 02
Salary - 10,000/=
தகைமை : க.பொ.த உயர்தரம், ஆங்கில அறிவு முக்கியம்

5) Insurance sales Associate — 20
Payments - Allowance, commission
தகைமை : க.பொ.த உயர்தரம்
ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உங்களது சுயவிவரக் கோவையைத் தொலைபேசி இலக்கத்துடன் நீங்கள் விரும்பும் பதவியினையும் குறிப்பிட்டு வருகின்ற 10.09.2013 இற்கு முன்பாக கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 4469
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(39343) (7.6.3)

# ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் செயலமர்வுகள் யாழ்ப்பாணத்தில்

"இந்த நிகழ்ச்சித்திட்டம் எமக்குக் கிடைக்கப்பெற்றது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். நாம் பல்வேறு விடயங்களைக் கற்று எதிர்காலத்தில் சிறந்த முறையில் தொழில் புரிய வேண்டும் என்ற ஊக்குவிப்பை இது எமக்கு அளித்துள்ளது" என்று 2013 மார்ச் 13 முதல் 15 வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அதன் தொழில்வாழ்க்கை வழிகாட்டல் பிரிவுடன் இணைந்து ஜோன் கீல்ஸ் அந்த நிறுவனத்தால் நடத்தப்பட்டிருந்த மென்திறமைகள் செயலமர்வுகளில் கலந்துகொண்ட கலைப்பீடத்தின் நான்காவது வருட மாணவியான ஏ.ஜீன்கார்த்திகா குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மத்தியில் தொடர்ந்து எட்டாவது தடவையாகவும் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம் "இறுதிப்படி" என்ற தலைப்பில் உள்நாட்டிலுள்ள பட்டதாரிகள் மத்தியில் தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்தி. இலங்கையில் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதில் முன்னிலை வகிக்கும் தனியார் துறையினர் தொழில் தொடர்பில் அவர்கள் மத்தியில் எதிர்பார்க்கும் அம்சங்களுக்கு அவர்கள் சிறந்த முறையில் தம்மைத் தயார்படுத்தி வெற்றிகரமாக முகங்கொடுக்கும் வகையில் ஊக்குவிப்பளிக்கின்றது. 'தொழில்தருநரின் எதிர்பார்ப்புக்கள்', 'அணிக் கட்டமைப்பு மற்றும் தலைமைத்துவ ஆற்றல்கள், 'வர்த்தகச் சூழலுக்கு தம்மை இசைவாக்கிக் கொள்ளுதல்', 'ஆளுமை அபிவிருத்தி மற்றும் தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல்', 'சுயவிருத்தி' மற்றும் 'வர்த்தக உபசரிப்புப் பண்புகள்' அடங்கலாக பல்வேறு வகையான தலைப்புக்களை இச்செயலமர்வுகள் உள்ளடக்கியுள்ளன.

"இலங்கை தேசம் புதிய சிகரங்களை எட்டுவதற்கு அதனை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வதற்குத் தேவையான அறிவு, திறமைகள் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்" என்று ஆரம்ப தினத்தன்று இதில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சீ நிறுவனத்தின் வர்த்தக சமூக நலன்புரித் தொழிற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான நதீஜா தம்பையா அவர்கள் குறிப்பிட்டார்.

"பணி புரியும் சூழலுக்கு ஏற்ப நீங்கள் உங்களை இசைவாக்கிக்கொள்ளுதல், உங்களுடைய தலைமைத்துவம், தொடர்பாடல் திறமைகள், ஆளுமைமற்றும் தன்னம் பிக்கையை மேம்படுத்திக் கொள்ளல் மூலமாக நீங்கள் பணிபுரியும சூழல்ல வெறறிகரமாகச செயற் படுத்துவதற்கு உங்களை வளர்த்தெடுத்து உரிய முறையில் தயார்படுத்திக் கொள்ளும் வகையில் இறுதிப்படி என்ற இந்த நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இது உங்களது விருப்பத்திற் கேற்றவாறு வெற்றிகரமான தொழில் ஒன்றில் கால்பதிப்பதற்கு உதவுவது மட்டுமன்றி வாழ்க்கை முழுவதும் பல்வேறு வழிகளில் உங்க ளுக்கு உதவியாகவும் அமைகின்றது" என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

மாணவர்களை ஆசிரியத் தொழில் மற்றும் விரிவுரையாளர் பணி போன்ற பாரம்பரியமான பணிகளை விடுத்து ஏராளமான வாய்ப்புக்கள் காணப்படுகின்ற தனியார் துறையில் அவர்கள் கால்பதிப்பதற்குத் தேவையான சிந்தனை மாற்றங்களை அவர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இத்தகைய செயலமர் வுகள் அவசியம் என்பதை இந்த நிகழ்வில் உரை யாற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான வசந்தி அரசரட்ணம் குறிப்பிட்டார். பட்டதாரிகளின் திறமைகளை புடம்போட்டு அவர்கள் தொழிற்துறையில் காலடியெடுத்து வைக்கும் சம யத்தில் தம்மை சிறந்த முறையில் வெளிக்காண் பிப்பதற்குத் தேவையான ஆற்றல்கள் வளர்த்தெடுப் பதற்கு இத்தகைய வர்த்தக சமூக நலன்புரி முன் னெடுப்புக்கள் அவசியம் என்ற கருத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். தொழில் ஸ்திரம் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயமே அவர்கள் கடந்த காலங்களிலும் தற்போதைய நிலைமையிலும் தனியார் துறையில் கால்பதிப்பதை அவ்வளவாக ஊக்குவிக்காமைக்கான காரணமாக அமைந் தது என்று தொழில்வாழ்க்கை வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளரான கலாநிதி கே.சுதாகர் அவர்கள் குறிப்பிட்டார்.

# பல புதிய அம்சங்களுடன் SLIIT இன் Robofest 2013



இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிலையமான SLIIT ஆனது தொடர்ச்சியாக 4ஆவது ஆண்டாக "Robofest 2013' போட்டியினை முன்னெடுக்கவுள்ளது. பல போட்டியாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ள இப் போட்டியானது செப்ரெம்பர் மாதம் 12, 13 ஆம் திகதிகளில் SLIIT மாலபே கம்பஸ் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றுநர்கள் மத்தியில் குழு வேலை மற்றும் தொடர்பாடல் திறனை அதிகரிக்கும் வகையில் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நாடுமுழுவதும் உள்ள மாணவர்கள் தங்கள் ரோபோ வடிவமைப்பு திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்கும் வகையில் இந் நிகழ்வினை மின் மற்றும் கணினி பொறியியல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

இப் போட்டியில் நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் இளநிலை பட்டதாரிகள் பங்கேற்க முடியும். இப் போட்டிகளில் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கீழ் தனியாகவோ அல்லது ஐந்து பேர் கொண்ட குழுவாகவோ கூட பங்குபற்ற முடியும்.

பாடசாலை மட்ட போட்டியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட விதிகளுக்கு அமைய மொபைல் ரோபோ ஒன்றினை உருவாக்குதல் வேண்டும்.

இப் போட்டியின் ஆரம்ப போட்டியிலிருந்து 10 இறுதிப் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இறுதிச்சுற்றின் வெற்றியாளர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களுடன், முறையே ரூ.50,000, ரூ.25,000 மற்றும் ரூ.10,000 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேலதிக போட்டியாளர்களுக்கு தலா ரூ.5,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக போட்டியில் அனைத்து பல்கலைக்கழக அல்லது பல்கலைக்கழக மட்டத்திலான பட்டதாரி கற்கைகளை வழங்கும் நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்ற முடியும். தனிநபர்கள் அல்லது குழுக்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பாதை வழியே படிக்கட்டுகளில் ஏறிச் செல்லக்கூடிய வகையிலான திறன் கொண்ட ரோபோவினை வடிவமைத்து உருவாக்குதல் வேண்டும்.

ஆரம்ப போட்டியிலிருந்து 10 இறுதிப் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வெற்றியாளர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் முதற் பரிசாக ரூ.65.000 மும், இரண்டாவது பரிசாக ரூ.40.000 மும், மூன்றாவது பரிசாக ரூ.20,000 மும் வழங்கப்படவுள்ளன.(து)

## மெக்லாரன்ஸ் லுப்ரிகன்ட்ஸ் மற்றுமொரு மைல்கல்லில்



டாடா பயணிகள் வாகனங்களுக்கு மொபில் எண்ணெய் வகைகள் மொபில் லுப்ரிகன்ட்ஸ் வகைகளை இலங்கையில் விநியோகிக்கும் மெக்லாரன்ஸ் லுப்ரிகன்ட்ஸ் நிறுவனம், வாகன துறையில் மற்றுமொரு மைல்கல்லை எட்டியுள்ளது. இலங்கையில் அனைத்து டாடா ரக பயணிகள் வாகனங்களுக்கும் பரிந்துரைக்கப்படும் லுப்ரிகன்ட் பங்காளராக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

DIMO நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படும் உலகப்புகழ்பெற்ற வாகனங்களான மேர்சடீஸ் பென்ஸ், கிரைஸ்லர் மற்றும் ஜீப் போன்றவற்றுக்கு 15 ஆண்டுகளுக்கு மேலாக அதி களவு பரிந்துரைக்கப்படும் லுப்ரிகன்ட் பங்காளராக மொபில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கை குறித்து மேர்சடீஸ் பென்ஸ்-டாடா விற்பனைகளுக்கான தலைமை அதிகாரி ரஜீவ் பண்டிதகே கருத்து தெரிவிக்கையில்,

உலகின் தலைசிறந்த பொறியியல் நயத்தில் அமைந்த வர்த்தக நாமங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் DIMO பெருமையடைகிறது. இந்த உடன்படிக்கையில் மூலம் டாடா பயணிகள் வாகனங்களின் வினைத்திறன் மற்றும் செயற்பாடுகள் மேலும் உறுதியடையும் என நாம் நம்புகிறோம்.

உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற வர்த்தக நாமமான மொபில் உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம் என்றார்.

மேக்லாரன்ஸ் லுபிரிகன்ட்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் டிலான் செனவிரட்ன கருத்து தெரிவிக்கையில், கடந்த பல ஆண்டுகளாக DIMO நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த புதிய பங்காண்மையின் மூலம் எமது செயற்பாடுகள் மேலும் வலுவடையும் என்பதுடன், எமது வர்த்தக உறவுகள் மேலும் உறுதியடையும் என எதிர்பார்க்கிறோம் என்றார். .

## நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனத்தின் வெளிநாட்டு புலமைப் பரிசில்கள்

இலங்கையின் முதற்தர மூலிகை உற்பத்தி வர்த்தக நாமமான நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் உற்பத்திகளை தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அப்பால் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை ளுக்கு பங்களிப்பு வழங்குகின்றது.

அத்தகைய சமூக திட்டத்தின் ஓர் அங்கமாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அழகுக்கலை ஆலோசகர்களின் திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான புலைமைப் பரிசில்களுக்கு அனுசரணை வழங்க நேச்சர்ஸ்சீக்ரெட்ஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.

2013 முதல் 2018 வரையான காலகட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இந்த வெளி நாட்டு பயிற்சி புலைமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 56 அழகுக் கலை ஆலோச கர்களுக்கு தாய்லாந்தின் பிரபல உயர் அழகுக் கலை பயிற்சி பாடசாலையான Chetawan Health School இல் தங்கும் வசதி உட்பட 7 நாள்களுக்கு பயற்சிகளுக்கான முழுமையான அனுசரணையை வழங்க நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் முதற் கட்டமாக 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடைசிப் பகுதியில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 10 அழகுக்கலை ஆலோ சகர்களும் ஓர் அதிகாரியும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு செல்லவுள்ளனர்.

இந்த அனுசரணைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (2013.08.27) கொழும்பு நாராஹேன்பிட்டிய விலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் வைத்து கைச் சாத்திடப்பட்டது.

(து)



சம்பத் வங்கியின் யாழ்.கிளையின் 4 ஆவது வருட நிறைவை முன்னிட்டு சம்பத் வங்கியும், கெயர் நிறுவனமும் இணைந்து இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாமை கடந்த சனிக்கிழமை நடத்தியது. அதன் போது ஒருவருக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.(ரு-23)

## வீடு வாடகைக்கு

பலாலி ரோட், திருநெல்வேலி சந்திக்கு மிக அருகில் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக உபயோகத்திற்கும் உகந்தது.
தொடர்பு: 077 763 2211, 075 977 8855
(11809)(11.3.6)

## வீடு விற்பனை

வெள்ளவத்தையில் இன்னும் 3 மாதங்களில் முடிவுறும் நிலையில் 1600, 2200 Sqft, 3 Bed room, Pent House Apartments விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 778 6440 (c/11820) (11.3.6)

## காணி விற்பனைக்குண்டு

கட்டுடைச் சந்தியில் பொன்னாலை வீதியின் வடக்குப் பக்கமாகவும் வாய்க்காலிற்கு மேற்குப் புறமாகவும் பிரதான வீதியில் இருந்து நேரடிப் பாதையுடன் கூடிய இரண்டாவது காணி 5 பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 732 1853 (39361) (7.6.3)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், லண்டனில் வசிக்கும் 1985 அத்தம் முதலாம் பாதம், 2இல் செவ்வாய், கிரகபாவம் 51, பட்டதாரி மணமகளுக்கு லண்டனில் PR உள்ள தகுந்த படித்த மணமகன் தேவை.
தொடர்பு: 077 874 1790

## எழுதுவினைஞர் தேவை

க.பொ.த(சா/த), க.பொ.த (உ/த) பரீட்சை சித்தியுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
தொடர்பு: 077 510 7173 (29510) (7.6.3)

## கடைத் தொகுதியுடன் உள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு

சாவகச்சேரி வர்த்தக மையப் பகுதியில் கண்டி வீதியில் புதிய வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகில் டச்சு வீதி டிறிபேக் கல்லூரிக்கு முன் பாகவும் (நகரசபை கடைத் தொகுதிக்கு முன்பாக) உள்ள மூன்று கடைத் தொகுதியும் மற்றும் மேல் வீட்டுடன் உள்ளடங்கிய இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 173 8050 (39294) (7.6.3)

## வீடு வாடகைக்கு உண்டு

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார் நிறுவனங்கள் விரும் பத்தக்கது.
தொடர்பு:
075 671 5762, 077 868 0790
(39291)(11.6.3)

## உடனடியாகத் தேவை

வவுனியாவில் உள்ள எமது தனியார் காரியாலயத்திற்கு சிங்கள மொழி பேசக்கூடிய தமிழ் பெண்கள் தேவை. 19 -28 வயது. சம்பளம் 12,000/= பயிற்சிகள் (21 நாள்கள்) வழங்கப்படும். வவுனியாவை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 556 1883,
Sakya (Pvt) Ltd
103/1, Station Road, Vavuniya.

## VACANCIES

கனேடிய பல்தேசிய கம்பனி யாழில் தனது ஒன்பதாவது கிளையினை ஆரம்பிக்கின்றது. இந்தக் கிளைக்கு 20 பேர் இணைக்கப்பட உள்ளனர்.



we Provide, Full Training
No Experience Necessary
- Customer service,
- Administration
- Marketing Trainee
- Management Trainee

You Can Earn - 18000/= -25000 per month
Call on - 077 445 5888, 021 499 3166

## விநியோகஸ்தர்கள் தேவை!

பிரபல CIC நிறுவனத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் CIC yogurd விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. வாகனம், களஞ்சிய வசதி மற்றும் வங்கி உத்தரவாதம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும். (39294) (7.6.3)
ரமேஸ்: 077 641 6243, 077 382 4649

## காணி விற்பனை

வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதியில் மதவடி ஒழுங்கையில் உள்ள இளையதம்பி கலவன் பாடசாலைக்குப் பக்கத்தில் ஒரு பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 970 2541 (39333) (7.6.3)

## விற்பனைக்கு



Dozer D4E
CAT Company
தொடர்பு: (35239) (7.6.3)
077 106 8822, 077 106 8821

## Soft View Computer Center

யாழ். மண்ணில் Animation மற்றும் Visual effects ஐ வளர்ப்பதற்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்

*Advanced Diploma in*
*3D max 2013 - 4000/=*
*Maya 2013 - 5000/=*
*Vissual Effects 6000/=*
*Fast track* மற்றும் உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பயிற்சி நெறிகள்.

A/L மாணவர்களுக்கு விசேட சலுகைகள்

102, Main Street, (A9) Jaffna. E:C Colin
T.P.021 222 4885, 077 905 3545
யாழ். திருமறைக் கலாமன்றம் அருகில்
(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)

# ASSEMBLY OF GOD

No.14, Rasavinthoddam, Jaffna.



Sunday Evening English Services at 6.00 pm

Everyone is invited to participate.
Come and be blessed every Sunday

Jesus answered, "I am the way and the truth and the life. No one comes to the Father except through me." – John 14:6

For further Details: Pastor.Sam Rajasuriar. 077 72 38 300

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை முகாமைத்துவத்துக்கும் நிதிக்குமான உதவியாளர்

**மேற்கண்ட பதவிக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன.**

**தகைமைகள்:**

01. க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறையில் சித்தியுடன் டபிள் ஏரி அல்லது எச்.என்.டி.ஏ படித்தவர்.
02. கணக்கீடு சார்ந்த முன் அனுபவம் உடையவர் (விரும்பத்தக்கது)
03. கணினியில் ஆகக்குறைந்தது எம்.எஸ்.ஒவ்பிஸ் இல் அனுபவம் உள்ளவர்.
04. ஆவணப் பேணலில் முன் அனுபவம் (விரும்பத்தக்கது)
05. ஆங்கிலம்,தமிழ் ஆகிய மொழிகளில் கணினியில் வேலை செய்யும் திறன் உடையவர்.
06. சொந்தமாக ஆங்கிலம், தமிழ் மொழிகளில் கடிதம் வரையும் ஆற்றல் உடையவர்.
07. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் எழுதவும் வாசிக்கவும் அறிவு உடையவர்.
08. ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் உடையவர் (விரும்பத்தக்கது)
09. 25 வயதிற்கும் 40வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்றவராயின்,மேற்கூறிய முதலாவது தகைமைக்கு சமமான தகைமையுடன் ஏனைய இரண்டாவது தொடக்கம் எட்டாவது வரை கட்டாயத்தகைமைகளாகக் கொள்ளப்படும்.
10. விண்ணப்பங்கள் யாவும் 12 செப்ரெம்பர் 2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு

**செயலாளர்**
**சி.ஏ.சி.எம், ஆசிய இல்லம்**
**மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**✱சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.** (39233) (4.6.3)

ஆசிய இல்லம்,சுன்னாகம். **செயலாளர்-சி.ஏ.சி.எம்**

# J.D.C.S.I CENTRE FOR HOLISTIC HEALING

Dr.Ms.Thayalini Thiagarajah
Director

Diocesan Office
Vaddukoddai, Sri Lanka.

## CENTRE FOR HOLISTIC HEALING DIPLOMA IN COUNSELLING

Applications are invited to join the third batch of students for One Year Diploma in Counselling (Week-end classes) conducted by the Centre for Holistic Healing of the Jaffna Diocese of the Church of South India.

Applicants should possess a minimum qualification of 3 Passes in G.C.E A/L with Ordinary Pass in English in the G.C.E O/L.

***Apply to the undersigned before 15.09.2013***
***with Curriculum Viate (CV)***

**The Director**
**Centre for Holistic Healing**
**Diocesan Office,Vaddukoddai.**

(C/11675) (11.3.6)

# JAFFNA COLLEGE VADDUKODDAI
## ADMISSION-2014 FOR GRADE 1,4,6&10
## மாணவர் அனுமதி - 2014 தரம் 1,4,6 &10

1. (அ) விண்ணப்பப் படிவங்கள் 04.09.2013 முதல் 03.10.2013 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   (ஆ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
   (இ) 03.10.2013 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் விநியோகிக்கப்பட மாட்டா.
   (ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 03.10.2013. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களை நிராகரிக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப் படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.
3. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்பிரதி (Photostat Copy) இணைக்கப்பட வேண்டும்.
4. விண்ணப்பப் படிவங்கள் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=
6. வயதெல்லைகள்:
   (1) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2008 இற்கும் 31.01.2009 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (2) தரம் 4 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   (3) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   (4) தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. பிரவேச/நேர்முகப் பரீட்சை:
   தரம் 1இற்கான நேர்முகப் பரீட்சையும், தரம் 4,6,10 இற்கான தேர்வுப் பரீட்சையும் 05.10.2013 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். தேர்வுப் பரீட்சை முடிவானது இரு வாரங்களில் வெளியாகும்.
8. (1) தரம் 6 இற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்கும் தனித்தனி விடுதி வசதிகள் உண்டு.
   (2) பொது நூலகம், ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம், சிற்றுண்டிச் சாலை வசதிகள் வளாகத்திலே உண்டு.

(C/11194)(3.5.6) **அதிபர்.**

# விஷ்ணு மெடிக் கிளினிக்



விஷ்ணு மெடிக் கிளினிக்
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை
(ஆனைக்கோட்டை சந்திக்கு அருகில்)
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பொது வைத்திய நிபுணர்**
நோயாளர்களைப் பார்வையிடும் நேரம்
மாலை - 6.00 மணி தொடக்கம்
இரவு - 9.00 மணி வரை
ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்கள்
தொடர்பு : 021 221 3104

(39269)(5.6.3)

## தவறவிட்ட பொருள்களை 15 ஆம் திகதிக்கு முன் பெறுக

வடமராட்சி, செப்.1
தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந் திருவிழாவின்போது தவறவிடப்பட்ட பொருள்களை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (ஓ-8)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batches : Wednesday, Friday (04th and 06th September) 9.00 am
Weekend batch : Saturday(07th September) 9.00 am

**After A/L ... get a golden Oppotunity! with *IDM Jaffna***

September 15ம் திகதிக்கு முன்னதாக IHD / HND கற்கைநெறிகளுக்கு தமது பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் 50% கட்டண சலுகையினை Semester 1 இல் பெற்றுக்கொள்ளலாம்.

- International Diploma in Computing
- International Diploma in Business Management
- Inter. Dip. in Building Construction & Managt.
- Diploma in Hardware & Networking
- Diploma in Web Engineering
- Diploma in Computerized Accounting Package
- Certificate in Programming Languages (Java, C, C++, C#.Net, VB.Net, ASP.Net, PHP & MySQL)
- 2D & 3D Auto CAD
- Advanced Diploma in Computer Network
- CCNA(Cisco Certified Network Associate)

**IHD / HND in**
* Software Development
* Business Management
* Computer Networks
* Quantity Surveying



UGC Recognized Universities
Wolverhampton, bucks new university, Charles Sturt University
Bsc.(Hons) / BA(Hons)

Register On or before 30th of September — OFFER * 10 %

எமது ONE DAY Workshop பயிற்சிப் பட்டறையானது எதிர்வரும் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதனால் பங்கு பற்ற விரும்புவோர் உங்கள் பதிவுகளை முற்கூட்டியே உறுதிப்படுத்துங்கள்

UNIVERSITY UGC RECOGNIZED AWARDED DEGREE

**IDM Nations Campus**
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
Hotline : 021 222 9901
Mobile : 077 5632056
#216, Navalar Road, Jaffna, Srilanka.
(C/11668)(3.6)

## HDFC BANK

HDFCவங்கி கொழும்பு பங்குச்சந்தை பரிவர்த்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவு பெற்ற ஒரு விசேட வங்கியாகும். எமது வங்கியில் வெற்றிடமாக காணப்படும் பின்வரும் பதவி களுக்கு தகுதி, திறமை, சுறுசுறுப்பு ஆகியவற்றுடன் நிரூபிக்கப்பட்ட நல்ல ஆற்றல் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வங்கி - உதவியாளர்கள் பதவி**
(வவுனியா,யாழ்ப்பாணம்,திருகோணமலை,மட்டக்களப்பு,மற்றும் நுவரெலியா மாவட்ட காரியாலயங்களுக்கு)

**தேவைப்படும் குறைந்தளவு கல்வித் தகைமைகள்**
- க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணிதம், சிங்களம் அல்லது தமிழ் அடங்கலாக 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பது அவசியம்.
- க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- கணினி MS office திறமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**வயது எல்லை :-** 28 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு -** தகுதிகாண் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்.

**தொழிலின் தன்மை:-** இரண்டு வருடங்களுக்கான நிலையான ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்படுவதுடன் திருப்திகரமான செயற்பாடு அடிப்படையில் ஒரு வருடகால தகுதிகாண் நிலைக்கு உட்படுத்தப்படுவர்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப் பங்களை இந்த விளம்பர தினத்தில் இருந்து 7 நாள்களுக்குள் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**பிரதான முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிர்வாகம்**
**HDFC வங்கி,**
**த.பெ.இல. 2085,**
**கொழும்பு 02.**
(C/11669)(5.6.3)

## அறைகள் வாடகைக்கு (ஆண்கள் மட்டும்)

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் இந்திய தூதரகத்துக்கு மிகஅருகில் அமைந்துள்ள வீட்டில் சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்கு உள்ளன. வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனப் பணியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 402 8994

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
### யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்

**விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது. பதிவிலக்கம். TVEC p 25/0026

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும், சுயதொழில் வாய்ப்புகளைப் பெறவும் ஏற்ற புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி நெறி தொடங்கவுள்ளோம். இது க.பொ.த (A/L, O/L) தரம் கற்ற 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவசப் பயிற்சி நெறி. பயிற்சி பெறும் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 09.09.2013 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு - பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.
குறிப்பு- வேலை செய்பவர்களுக்கான விசேட பயிற்சிநெறி கட்டணத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு-
அதிபர் யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி இல. 021 321 4571
(39312) (6.4.3)

## விநியோகஸ்தர்கள் தேவை
### வடக்கு, கிழக்கு மாகாணம்

ரசோதா — IMAGE OF FRESH DAIRY

ஐஸ்கிறீம், ஐஸ் பக்கற், யோகட், ஜெலி யோகட், யோகட் பானம், மற்றும் தயிர் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விநியோகஸ்தர்கள் தேவை.
- Cooler வாகன வசதியுடையவர்கள்
- குளிர்சாதன களஞ்சிய வசதியுடையவர்கள்
- Bank / Cash Guarantee வழங்கக் கூடியவர்கள்

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்**
**Rasoda Dairies (Pvt) Ltd,**
Beddegama, Bamunakotuwa, Kurunegala
Tel: 037 – 7200560 Fax: 037 - 7206306
K.Vignesh - 0777 – 877804 R.Prashanth 0774-777815
Email: ccare@rasodairy.com web:www.rasodairy.com
(39318)(5.6.3)

## மீண்டும் பழைய இடத்தில் புதியதோர் உதயம்......
## முக்கிய அறிவித்தல்
### அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்து உற்பத்திசாலை

அநேகரின் வேண்டுகோளுக்கு அமைய எமது புதியதோர் கிளையை 260/3, மூத்த விநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் **இன்று 01.09.2013** தொடக்கம் ஆரம்பிக்க உள்ளோம் என்பதை மிக மகிழ்வன்புடன் அறியத்தருகின்றோம்.

**தலைமைக் காரியாலயம்:** அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்து உற்பத்திசாலை, 35/3, செங்குத்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர், யாழ்ப்பாணம்.
**கிளைக் காரியாலயம்:** அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம் பலாலி வீதி, ஊரெழு மேற்கு, ஊரெழு, சுன்னாகம்.
தொடர்பு:077 844 9356, 077 353 5516
(39327)(3.6.11)

## விநியோகஸ்தர்கள் தேவை

ReeBonn இலங்கையில் வேகமாக வளர்ந்து வரும் அழகு சாதனங்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும். எங்களின் துரித வளர்ச்சிப்பாதைக்கும், விரிவான தொழில் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் விற்பனையையும் இலாபத்தையும் அதிகரிக்கக்கூடிய திறமைவாய்ந்த விநியோகஸ்தர்கள் கீழ் கண்ட பிரதேசங்களுக்கு தேவைப்படுகின்றனர்.

- யாழ்பாணம் • வவுனியா / மன்னார்
- திருகோணமலை • மட்டக்களப்பு • அம்பாறை
- மொனராகலை • பதுளை • கொழும்பு

தேவைப்படும் தகுதிகள்
- 1 Million பெறுமதியான வங்கி உத்தரவாதம்
- பலமான நிதி நிலைமையை கொண்டிருத்தல்
- மீள் விநியோகத்திற்காக சிறிய ரக வாகனம் ஒன்றை கொண்டிருத்தல்
- போதுமான களஞ்சிய வசதி, தொலைபேசி, தொலைநகல் வசதியை கொண்டிருத்தல்

நீங்கள் மேற்குறிப்பிட்ட தகுதிகளை கொண்டிருப்பின் உங்களின் முழு விபரங்களையும் குறிப்பிட்டு விண்ணப்படிவத்தை கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**The Sales Manager,**
ReeBonn Cosmetics (Pvt.) Ltd., ReeBonn House,
No. 17 A, Minuwangoda Road, Ekala, Ja-Ela.
**Tel:** 011 53 444 22 **Fax:** 011 48 192 46
**Mobile:** 0773 540 430 .
(39356)(3.6)
ReeBonn Naturally Cosmetics

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொலிஸார்–பொதுமக்கள் உறவு முன்னர் போல் மீள்துளிர்க்க....

பொலிஸ் திணைக்களம் இராணுவ மயப்படுத்தப்படமாட்டாது. ஜனாதிபதியால் திடுதிப்பென உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற புதிய அமைச்சின் செயலாளர் மல்லவராச்சி (இளைப்பாறிய இராணுவ மேஜர் ஜெனரல்). இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

வெலிவேரியாவில், மக்களின் குடிதண்ணீர் விவகாரம் தொடர்பில் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்குபற்றியோர் மீது, இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, ஜனாதிபதி இந்தப் புதிய அமைச்சை -சட்டம் ஒழுங்கைப் பேணும் அமைச்சை (Ministry of Law and Order) உருவாக்கினார் என்று மேலோட்டமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் அது அவ்வாறன்று.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு. சுமார் ஒன்றே முக்கால் வருடங்களுக்கு முன்னர் தெரிவித்த பரிந்துரைக்கு இசையவே, சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற புதிய அமைச்சு ஜனாதிபதியால் நிறுவப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இருந்து பொலிஸ் திணைக்களம் பிரித்தெடுக்கப்பட வேண்டும். (Detach) என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை வழங்கியிருந்தது.

கடந்த (ஓகஸ்ட்) மாதம், வெலிவேரியாவில் மக்கள் போராட்டத்தை அடக்குவதற்கு இராணுவத்தினரின் உதவியைப் பொலிஸார் கோரியிருந்தனர் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

சட்டம் ஒழுங்கை பொலிஸாரால் நிலைநாட்ட முடியாத கட்டத்தில், இராணுவத்தினர் அழைக்கப்படும் நிலையைத் தடுப்பதற்குப் புதிய சட்டம் ஒழுங்கு அமைச்சு அவசியம் என உணரப்பட்டதால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை திடுதிப்பென நடைமுறைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒத்திசைவு (Coincidence) ஆகிவிட்டது. காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதை போலானது எனவும் இதனைக் கொள்ளலாம்.

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு இன்னும் இரண்டு நாள்களில் 137 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை அண்டியதாக பொலிஸ் திணைக்களத்தை உள்வாங்கும் வகையில் சட்டம் ஒழுங்கு அமைச்சு புதிதாக உருவாக்கப்பட்டிருப்பது, ஒரு தனித்துவ நிலையைத் தோற்றுவிக்கும் என்று நம்பலாம்; எதிர்பார்க்கலாம்.

அதனை மனதில் கொண்டே, புதிய அமைச்சின் செயலாளர் இப்பத்தியின் ஆரம்ப வரிகளை உச்சரித்தார் என்றும் கொள்ளலாம். பொலிஸாருடன் மக்கள் சுமுகமாகப் பழகும் வண்ணம், மக்களுடன் நட்புணர்வு கொண்டதாக பொலிஸ் சேவை இருக்க வேண்டும் என்றும் அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

இதேவேளை, வடபகுதியில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் மிக விரிந்த இடைவெளி நிலவுவது தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

பொது மக்களுக்குத் தம்மீது நம்பிக்கை உண்டாகக்கூடிய வண்ணமே பொலிஸார் செயற்பட வேண்டும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அவ்வாறு செயற்படுவதில்லை என்ற கருத்து நிலவுகிறது. இது குறித்து கோப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பொலிஸார்- பொதுமக்கள் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதனை ஓர் உதாரணமாகவும் கொள்ளலாம்.

இந்தநிலை, பொது மக்களின் பிரச்சினைகளை பொலிஸார் உள்வாங்கிச் செயற்படுவதில் மந்தநிலை காணப்படுகிறது என்பதனையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இங்கே இன்னொரு விடயத்தையும், அது சார்ந்த பலவீனத்தையும் சுட்டிக் காட்டுவது பொருத்தம். சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் சமூகத்துக்கு உதவுவதில் தமக்குள்ள கடமையையும் பொறுப்பையும், பொலிஸ் தரப்பினர் தமிழ்ப் பிரதேசங்களில் தட்டிக் கழிக்கும் போக்கு மேலெழுந்து வருகிறது.

ஒரு காலத்தில், பொலிஸ் துறையில் பணியாற்றியவர்கள் தாம் கடமை செய்யும் பகுதிகளில் குற்றச் செயல்கள் நடைபெற இடம் கொடுக்கலாகாது என்ற உணர்வோடு உழைத்தார்கள். 'அப்பே ஆண்டுவ' , 'சகாப்தம்' முளைத்த பின்னர் நிலைமை தலை கீழாகியது இப்போது தமிழ்ப் பிரதேசங்களில் அது கொடிகட்டிப் பறக்கிறது என்று கொள்ளவும் இடமுண்டு.

முன்னரெல்லாம் கண்ணியமும் கடமையுணர்வும் நிறைந்த ஒரு அரச அலகாக விளங்கிய பொலிஸ்துறை, இப்போது அதனை இழந்து நிற்பது மக்களுக்கான சாபக்கேடுகளில் ஒன்றாகிவிட்டது.

யாழ்.மாவட்டத்தில் அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 1979 ஆம் ஆண்டில் இருந்து பொலிஸாரின் கெடுபிடிகள் மலிந்திருந்தமையும், இளைஞர்கள் எண்ணிக்கை இன்றிக் கைது செய்யப்பட்டதும், பலர் கடத்திக் கொல்லப்பட்டதும் இப்போது வரலாற்றுப் பதிவுகளாகிவிட்டன.

அதன் பின்னர் பொலிஸார்-பொதுமக்கள் உறவு இங்கு தேய்ந்து நொய்ந்து போயிற்று.

அந்த இருண்ட சகாப்தத்தில் இருந்து, மக்கள் நலன் நாடிச் செயற்பட வேண்டிய காலம் இப்போது பிறந்துள்ளது. இதனைப் புதிய சவாலாகக் கொண்டு பொலிஸ்தரப்பு, தமிழர் பிரதேசங்களில் மக்கள் நலன் நாடி உழைக்க வேண்டும். உத்தியோகபூர்வமாக மட்டுமன்றி உள்ளத்தாலும், உரிய செயற்பாடுகளாலும் அது வெளிப்படுத்தப்பட வேண்டும். எதிர்பார்க்கலாமா?

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் கற்றுத் தந்த படிப்பினைகள்

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. அரச தரப்பினர் எதனைத்தான் சொன்னாலும், அனைத்துலக அழுத்தத்தின் காரணமாகவே இத்தேர்தலை நடத்த வேண்டிய ஒரு கட்டாய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்குத் தமிழ் மக்கள் அரசு தரப்பினரின் தேர்தல் ஜாலங்கள் பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஆளுங் கட்சி தனக்கிருக்கும் சகல வகையான பலத்தையும் பயன்படுத்தித் தேர்தலில் வெற்றியைத் தனதாக்க முயற்சிக்கும்.

கடந்த ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பல்வேறு சம்பவங்கள் அரங்கேறின. வன்முறைகள், அச்சுறுத்தல்கள், வாக்காளரை திசை திருப்புதல் போன்ற விடயங்கள் திட்டமிட்ட ஒழுங்கில் நடைபெற்றன. கிழக்கின் வாகரை போன்ற சில பிரதேசங்களில் த.தே.கூட்டமைப்பினரின் பரப்புரை நடவடிக்கைகள் தடுக்கப்பட்டன. வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. வாக்காளர்களைக் குழப்பமடைய வைத்து அவர்களது தேர்தல் நோக்குகளை திசை திருப்புகின்ற விடயங்கள் நடந்தேறின. இவ்விடயத்தில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

### கிழக்குத் தேர்தலில் நடைபெற்ற ஒரு சம்பவம்

திருகோணமலைத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த குச்சவெளி பிரதேசத்திலே தேர்தல் தினத்துக்கு ஒரு நாள் முன்ன தாக அதிகாலை வேளையில் பிரதான வீதி எங்கும் அச்சடிக்கப்பட்ட பிரசுரங் கள் வீசப்பட்டிருந்தன. புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் பிரதம மந்திரி .வி.உருத்திரகுமாரின் அவசர வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்கு கொள்ளாது விலகிக் கொள்வதாக த.தே.கூட்டமைப்பின் அதி உயர்பீடம் முடிவெடுத்துள்ளதாகவும், ஆயினும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்காது, வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்காது வேறொரு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்றும் த.தே.கூட்டமைப்பின் தலைவர். இரா. சம்பந்தனின் போலியான கையெழுத்துடனும் அவரது படத்துடனும் இப்பிரசுரம் வெளியாகியிருந்தது. இப்போலியான பிரசுரம் பற்றி அதனைக் கண்டெடுத்தவர்கள் எமக்குத் தகவல் தந்ததன்பேரில் உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்தினோம். இத்தகைய போலிப் பிரசுரங்களை யார் வெளியிட்டார்கள் என்பது எல்லோருக்கும் வெளிப்படையானது. ஆயினும் சாதாரண பாமர மக்களை இத்தகைய பொய்யான செய்திகளைக் கொண்ட பிரசுரங்கள் குழப்பக்கூடியன. அவகாசமில்லாத இறுதி நேரங்களிலேயே இத்தகைய போலிப்பிரசுரங்கள் வெளியாகும். ஆகவே இது பற்றி தமிழ் மக்களும், தேர்தல் செயற்பாட்டாளர்களும் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

### நிராகரிக்கப்படும் வாக்குகள்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 2012 ஆம் ஆண்டின் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் காரணமாக த.தே.கூட்டமைப்பிற்கு சேர வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை குறைந்து போனமை அவதானிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் 11324 வாக்குகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 17224 வாக்குகளும், அம்பாறை மாவட் டத்தில் 16774 வாக்குகளுமாக கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 45291 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பான்மையான வாக்குகள் த.தே.கூட்டமைப்புக்கு அதாவது வீட்டுச் சின்னத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகளாக இருந்தன என்று வாக்கெண்ணும் பணிகளைக் கண்காணித்த முகவர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பெருமளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை வாக்களிப்பு முறை பற்றிய அறிவூட்டல் வாக்காளர்களுக்கு போதாது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

தேர்தலுக்கான பரப்புரைகள், கொள்கை விளக்கம் என்பவற்றுக்கப்பால் வாக்காளர்களுக்கு, குறிப்பாக கல்வி அறிவு குறைந்த வாக்காளர்களுக்கு எவ்வாறு வாக்களிப்பது என்ற விளக்கம் தெளிவாக அளிக்கப்படவேண்டியது அவசியமாகும். வாக்குகளைத் திரட்டிக் கொள்வது தொடர்பாக கவனிக்க வேண்டிய ஒரு தொழில்நுட்ப விடயம் என்பதை தேர்தல் செயற்பாட்டாளர்கள் மறந்து விடக்கூடாது. ஆகவே வாக்க ளிப்பு முறை பற்றியும், வாக்குச் சீட்டு அமைப்பு பற்றியும் குறிப்பாக கிராமப்புற வாக்காளர்களுக்கு தெளிவூட்ட வேண்டிய அவசியத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். மாதிரி வாக்குச் சீட்டுகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.

தேர்தல் வாக்குச் சீட்டுகளில் கட்சிகளின் பெயர்கள் முதலிலும் அதன் பின்னராக சுயேச்சைக்குழு - 1, சுயேச்சைக்குழு - 2 என அடுத்தடுத்த வரிசையில் தொடர்ச்சியாகக் காணப்படும். இத்தேர்தலில் சுயேச்சைக்குழுக்கள் அதிகளவில் போட்டியிடுவதால் சுயேச்சைக்குழு - 1, 2, 3, 4 என தொடர்ச்சியாக அச்சிடப்பட்டிருக்கும்.

வாக்காளர்கள் தமது வாக்கை விரும்பும் கட்சியின் சின்னத்திற்கு எதிரே அளித்து விட்டு தனது மூன்று விருப்புரிமையை அளிப்பதற்கு வாக்குச்சீட்டின் அடியில் அச்சிடப்பட்டிருக்கும் இலக்கங்களின் மீது அளிப்பதற்கு பதிலாக தவறுதலாக அல்லது தெரியாத்தனத்தினால் சுயேட்சைக்குழு இலக்கங்களுக்கு புள்ளடிகளை அளித்து விடுகின்றனர்:. இவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குகள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளாக கருதப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 16 சுயேச்சைக்குழுக்கள் போட்டியிட்டன. இது வாக்காளர்களுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. ஆயினும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில், போட்டியிடும் சுயேச்சைக் குழுக்கள்ஒப்பீட்டளவில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை விட குறைவாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே இந்த விடயம் தொடர்பாக தேர்தலை எதிர்நோக்கும் கட்சியின் வேட்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த விளக்கத்தை மாதிரி வாக்குச் சீட்டுகளை கையாண்டு செய்து காட்டல் மூலமாக வாக்காளர்களுக்கு, குறிப்பாக கல்வியறிவு குறைந்தவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இந்த விளக்கம் கிராமப்புறங்களில் அளிக்கப்பட்டிருந்தாலும் கூட, போதுமான அளவுக்கு இது மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மையாகும். ஆகவே வட மாகாண சபை தேர்தலில் இந்த விளக்கத்தை அளிப்பதில் உன்னிப்பான கவனத் தைச் செலுத்த வேண்டும்.

### வாக்களிப்பு வீதம்

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் 65.6 ஆகவிருந்தது. இவ்வாக்களிப்பு வீதத்தை மாவட்ட ரீதியாக நோக்கினால் திருகோணமலை மாவட்டத்தில் 66.8 ஆகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 64.3 ஆகவும், அம்பாறை மாவட்டத்தில் 66.1ஆகவும் காணப்பட்டது. மூவின வாக்காளர்களும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சம்பந்தப்பட்டுள்ளார்கள். இன ரீதியான வாக்களிப்பு வீதம் பற்றிய கணிப்புக்கள் உத்தியோக பூர்வமாக செய்யப்படுவதில்லை. ஆயினும் தமிழ் வாக்காளரது வாக்களிக்கின்ற வீதம் ஏறத்தாழ 60 வீதமாக இருந்திருக்கலாம். வீட்டுச் சின்னத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குகளையும், நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும்கொண்டு இதனை ஊகிக்கமுடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டவாறு தமிழ் மக்களின் வாக்களிப்பு 75 வீதமாக அல்லது அதற்கதிகமாகவோ அமையவில்லை. 70 வீதமாக அமைந்திருந்தாலும் கூட கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் த.தே.கூட்டமைப்பு வசம் வந்திருக்கும்.

இந்த அனுபவம் வடக்கின் தேர்தல் நடவடிக்கைகளில் மிகவும் கவனமாக உள்வாங்கப்பட வேண்டும். வாக்களிப்பு வீதத்தை எந்தளவுக்கு உயர்த்த முடியுமோ அந்தளவுக்கு த.தே.கூட்டமைப்பின் வெற்றி பலப்படுத்தப்படும். அதாவது அதிகளவு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

வட மாகாண சபைத் தேர்தலில் த.தே. கூட்டமைப்பு வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றும் என்பது சந்தேகத்திற்கிடமற்ற ஒரு விடயம் என்றாலும் கூட கூட்டமைப்பின் வெற்றியை முடியுமான அளவிற்கு உச்சப்படுத்துவதில் தேர்தல் செயற்பாட்டாளர்கள் கவனம் கொள்ள வேண்டும். வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டங்களும், பரப்புரைக் கூட்டங்களும் மாத்திரம் வாக்களிப்பு வீதத்தை உயர்த்தி விடமாட்டாது. தேர்தல் தினத்தன்று மக்கள் வாக்குச் சாடிகளை நோக்கி ஆர்வத்துடன் திரண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராம மட்டத்திலான தேர்தல் பணிக்குழுக்கள் நிறுவப்பட்டு, வாக்களிப்பு தொடர்பான வேலைகளை கண்காணிப்பதற்கு இக்குழுக்களுக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

இடம் பெயர்ந்துள்ளவர்கள், தொழில் மற்றும் வேறு தேவைகள் காரணமாக வேறு ஊர்களில் வதிபவர்கள், அடையாள அட்டை இல்லாதவர்கள், அங்கவீனர்கள், வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் எனப் பல்வேறு பிரச்சனைகள் வாக்களிப்பு வீதத்தைப் பாதிக்கக் கூடியவை. ஆகவே கிராமமட்ட தேர்தல் பணிக்குழுக்கள் இந்த விடயம் பற்றிய முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டும்.

### விருப்புரிமை வாக்குகள்

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையிலுள்ள விருப் புரிமை வாக்குகள் என்ற ஒழுங்கு முறை ஒரே கட்சியின் வேட்பாளர்களுக்கிடையேயான ஒருங்கிணைந்த செயற்பாடுகளைப் பாதிக்கின்ற விடயமாக அமைந்துள்ளதை பல அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் சகல பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்கள் தனித்தனியே செயற்பட்டதையே பெரிதும் அவதானிக்க முடிந்தது. த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தேர்தலில் ஆரம்ப கூட்டத்தில் ஒன்று சேர்ந்து இயங்கினார்கள். தேர்தல் ஒழுங்குகள், பரப்புரைகள், வாக்களிப்பு நிலைமையை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தினார்கள். ஆனால் பின்னர் வேட்பாளர்கள் ஒன்றிணைந்து செயற்படுவது குறைந்து போய்விட்டது.

மாற்றமுடியாதென கருதி கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பிரபலமானதும் குறிப்பாக குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கியதுமான மேற்படி வைத்தியசாலை இம்மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இயங்காது. 7ஆம் திகதி சனிக்கிழமை முதல் வழமையான நேரப்படி இயங்கும்.

வழமையான சிகிச்சை நேரம் (39372) டாக்டர் ஜெ.ஜெயலன்
காலை 07-12 - மாலை 03-05 (23-16-14) டாக்டர் ச.ஜெயலன்
வெள்ளிக்கிழமை விடுமுறை 0775594147 டாக்டர் K.O இராஜரட்ணம்.

## யாழ் நகரில் கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் அடுக்கு மாடிக் கடையும், அதனுடன் சேர்ந்த களஞ்சியமும் (வாகனத் தரிப்பிட வசதி உள்ளது) 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ளது.

தொடர்பு:
077 772 5258, 077 559 0069 (C/11705) (7.6.3)

## JOB VACANCY/ பதவி வெற்றிடம்

BCHS

யாழ். நகரினிலே இயங்கும் எமது கல்லூரிக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் தேவைப்படுகின்றனர். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற சம்பளம் உத்தரவாதத்துடன் வழங்கப்படும்.

1. Post of English Lecturer - Full Time
2. Office Boy/ Cleaner – Full time
(அலுவலக உதவியாளர், சுத்திகரிப்பாளர்)

தொடர்புகளுக்கு:
**British College of Higher Studies**
**No.15, Sirambiyady Lane**
**(Off Stanley Road),**
**Jaffna. Tel : 021 222 4550**
**Mobile : 077 758 5913 or 077 773 0074**
(C/11696)(3.6.11)

## U.S.A, U.K, Wedding service மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம் 1978, அத்தம் 2ஆம் பாதம் லண்டன் PR சிவில் எஞ்சினியருக்கு, எஞ்சினியர், டொக்டர், எக்கவுண்டன் ஓரளவு படித்த குடும்பப் பாங்கான மணமகள் தேவை. மணமகன் யாழ். வந்துள்ளார் சீதனம் எதிர்பார்க்கப் படமாட்டாது.

தொடர்பு: 077 147 9416 (35243) (7.6.3)

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தகசாலை ஒன்றுக்கு ஆண்/ பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் அனுபவம் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படும்.

(39373) (23-16-14)
தொடர்பு
0778730114 - 0772701209
0787005674

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் - R.C- மதத்தைச் சேர்ந்த 34 வயதுடைய அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 210 5286

## காணி விற்பனைக்கு

கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் பலாலி வீதியில் இருந்து 150 யார் தூரத்தில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சிறுதுண்டுகளாகவும் பிரித்துக்கொடுக்கப்படும் .

தொடர்பு: 075 042 2158

## கார் விற்பனைக்கு

தனிப் பாவனையிலிருந்த
Toyata Corolla 121Car
விற்பனைக்குண்டு.

(39345) (3.5.6) தொடர்பு: 077 717 3414

## விற்பனைக்கு

அரிசி ஆலைக்குரிய பொருள்கள் சைனா கெட் 4 பெட்டியுடனும், மோட்டார் 10,8 கோஸ், ஜெட்பொலிசர், செப்பி ரெட்டர், 70 பொலிசர், No.-I, No.-7 ஸ்ராட்டர் என்பன.
பிள்ளையார் அரிசி ஆலை
மானிப்பாய் வீதி, தாவடி.
(39334) (3.5.6) 075 965 6965

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஐஸ்கிறீம் கடைக்கு வேலை அனுபவமுள்ள ஆள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

தொடர்பு: 077 661 5973

## சேவைநலன் பாராட்டு

திருமதி பவுஸ்டாதேவி அரசரத்தினம் (SLTS I)
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - மனையியல்)



எமது கல்வி வலயத்தில் மனையியல் பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகக் கடமை உணர்வுடன் தமது பணியைச் செவ்வனே செய்து மொத்த சேவைக் காலம் 35 வருடங்களை நிறைவு செய்து அகவை அறுபதில் 31.08.2013 அன்று ஓய்வுபெற்ற திருமதி பவுஸ்டாதேவி அரசரத்தினம் அவர்களை ஓய்வு காலத்தில் தனது குடும்பத்துடன் குதூகலமாகவும் சுகபலத்துடனும் வாழ இறைவனைப் பிராா்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்
வலயக்கல்வி அலுவலகம் தீவகம், வேலணை.
(C/11707) (7.6.3)

## பணியாளர் தேவை

TILKO

1. House Keeping Room Boy
(Hotel அறை பராமரிப்பாளர்)

தகைமை:
நன்கு தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்

2. Front Office Staff (Hotel Reception)

தகைமை:
ஆங்கிலம் சரளமாக உரையாட கூடியவராக இருக்க வேண்டும். மூன்று மொழிகளிலும் சரளமாக உரையாடக் கூடியவர் விரும்பத்தக்கது.

மேற்படி வெற்றிடங்களுக்கு தகைமையானவர்களுக்கும் அனுபவமிக்கவர்களுக்கும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மேலும் உணவு வசதிகளும், தேவைப்படின் தங்குமிட வசதிகளும் வழங்கப்படும்.

Hotel அறை பராமரிப்பாளர் Hotel Reception இற்கான பூரணமான பயிற்சிகளும் வழங்கப்படும்.

உடனடியாகத் தொடர்புகொள்ளவும்:
**Tilko Jaffna City Hotel.**
70/6, K.K.S. Road. Jaffna.
T.P: 077 248 7215 / 021 720 0704 E.Mail: gm@cityhoteljaffna.com
(39371)(10.6)

# உங்களின் உயர்கல்விக் கனவுகளை நனவாக்கிக்கொள்ளுங்கள்

# CIMA CLASSES

# @ SPECTRA SKILLS

சிறந்த தொழிலதிபர்களையும் தலைவர்களையும் உருவாக்குகிறோம்.

வளமான எதிர்காலத்திற்கு நம்பிக்கையான முதலீடு

No, 19, Stanley Road, Jaffna.

### எமது விரிவுரையாளர்கள்



**Dr. S. Vijayakumar**
- B.A(Hons), MA.Econ. MPhil., PhD
- Senior Lecturer,
- Department of Economics University of Jaffna



**K. Sivagar**
- BSc (Hons) in Accountancy & Business Finance - Special - Wayamba University of Sri Lanka
- CIMA Passed Finalist



**M. Jude Dinesh**
- LLM (Reading), Attorney-at-law,
- Dip in International Relations,
- Practicing lawyer at the Supreme Court



**R. Manivannan**
- CIMA - Final
- Business Consultant
- Lecturer CIMA 2yrs Experience
- General Manager

### வருகைதரு விரிவுரையாளர்கள்



**D. Sam**
- 25 yrs Experience in Accountancy Field
- Chairman - DMI



**Rajaram purusothamakuru**
- Lecturer for CIMA in Colombo with two years experience
- Undergraduate University of Sri Jayewardenepura Department of Accounting [ B.sc accounting ]
- District first 2010 A'LEVEL in commerce stream

Experience
Responsibility
Flexibility
Job Opportunity
Growth
Free Leadership Training

DISCOUNT RATES UP TO 100%

தொடர்புகளுக்கு
021 222 1422
021 222 1423

STARTS ON
14.09.2013
அனுமதிக்கு முந்துங்கள்

# தமிழர்களின் வாக்கு தமிழர்களுக்கே!

## கூட்டமைப்பு வேட்பாளர் ஆனல்ட் முழக்கம்

நேர்காணல்: இராதிகா

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்து அரசியல் விபசாரம் செய்பவர்களை இனங்கண்டு ஓரம் கட்ட வேண்டும். தமிழனின் வாக்கு தமிழனுக்கே என்பதை உறுதிப்படுத்தும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வதன் மூலம் நாம் இழந்த உரிமைகளையும் மறுக்கப்பட்ட உரிமைகளையும் மீண்டும் பெற முடியும் என உரிமையுடன் கோரிக்கை விடுக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் வேட்பாளரான இம்மானுவல் ஆனல்ட் 'உதயனு'க்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஒரே தமிழ்க் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். எந்த ஒரு தமிழ் கட்சியும் தமது சொந்தச் சின்னத்தில் தமது கட்சியின் பெயரில் வாக்குக் கேட்கவில்லை. அந்தத் துணிவும் அவர்களுக்கு இல்லை. தமது சொந்த மண்ணில் மாற்றத்துக்கு அதாவது சிங்களக் கட்சிகளுக்கும் சிங்களவரின் சின்னத்துக்கும் வாக்குக் கேட்டு சோரம் போகின்றனர்.

இன்னும் ஒரு குழுவினர் பெரும்பான்மைக் கட்சிகளின் கையூட்டங்களைப் பெற்றுக் கொண்டு சுயேச்சை அணிகள் என்ற பெயரில் வாக்குக் கேட்கின்றனர். இவர்கள் வெற்றி பெறமாட்டார்கள் என்பது இவர்களுக்கே நன்றாகத் தெரியும். என்றாலும் தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவதை எப்படியாவது தடுக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு களம் இறங்கி உள்ளனர் இந்தக் கைக்கூலிகள். இவர்களைத் தமது தமிழ் மக்கள் நன்றாக இனங்கண்டு வைத்துள்ளனர். அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டத் தயாராகி விட்டனர்.

இராணுவக் கெடுபிடிகள் அரசின் அடக்கு முறைகள் என்ற இக்கட்டான சூழ்நிலையிலும் மிகவும் துணிச்சலாக மாணவர்களின் பக்கபலத்துடன் முதன் முறையாக "பொங்கு தமிழ்" நிகழ்வினை பல்கலைக் கழகத்தலில் வெற்றிகரமாக நடத்திய அனுபவம் எனக்குண்டு.

எனவே அரசியலுக்காக மட்டுமே தேசியம் பேசுபவன் நானல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே போட்டியிடுவதில்லை. காரணம் தமிழ்த் தேசிய உணர்வுடன் செயற்படும் ஒரு தனித் தமிழ்க் கட்சி. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழர்களின் சின்னங்களான "வீடு" மற்றும் "உதய சூரியன்" சின்னங்களில் போட்டியிட்டால் எந்த ஒரு சிங்களவராவது வாக்களிப்பார்களா?

தமிழர்களுக்கே உரித்தான தமிழர் தாயகமாக இருக்கும் ஒரே ஒரு பிரதேசம் வடக்கு, கிழக்கு. ஆனால் நம்மவர்கள் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளின் சின்னத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு வாக்குச் சேகரித்து தமிழர் தாயகத்தை சிங்களவர்களுக்கு தாரை வார்க்க முனைகின்றனர். எந்த ஒரு தன்மானமுள்ள தமிழனும் சிங்களவர்களின் சின்னங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

முதலமைச்சர் வேட்பாளராக களம் இறக்கப்பட்டுள்ள முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் தொடர்பாக மாறுபட்ட விமர்சனங்கள் வெளிப் பட்டுள்ளன. எனினும் தமிழர்களின் அதி உயர் தலைவராக அன்றும் இன்றும் என்றும் மதிக்கப்படும் தந்தை செல்வநாயகம். அப்போது கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்". "தலைமைகள் மாறலாம். ஆனால் தமிழர்களின் உணர் வுகள் என்றும் மாறாது" என்றார் தந்தை செல்வா.

தமிழ் மக்களின் வர லாற்றில் ஒருவருட சாத்வீகப் போராட்டம் 30 வருட போரியல் வாழ்க்கை என அறுபது வருடங்களுக்கு மேல் இழக்க எதுவும் இல்லை எனப் பல இழப்புகளை சந்தித்த பின்னரும் நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின் போதும் தமிழ்த் தேசியத்துக்காகவே வாக்களித்தனர். எம் மக்களின் தமிழ்த் தேசிய உணர்வு இன்னும் மாறவில்லை. நாம் நமக்கு வாக்கு கேட்கவில்லை. தமிழர் தாயகத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் வாக்கு கேட்கின்றோம்- என்றார்.

ஆரம்பம் முதல் மாகாண சபைகளால் எந்தப் பயனும் இல்லை, 13 ஆவது திருத்தம் உப்புச் சப்பற்றவை என்று விமர்சித்து விட்டு இப்போது மாகாண சபைத் தேர்தலில் போட்டி யிடுவது ஏன் என்று கேட்டோம்.

இதற்கு "அன்றைய போரியல் சூழ்நிலையில் அப்படிச் சிந்திக்க வைத்து 13 ஆவது திருத்தத்தை எழுத்துக்கு எழுத்து அப்படியே நிறைவேற்றி இருந்தால்கூட கடுகளவாவது மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எந்த ஒரு அரசும் அதனை நடைமுறைப்படுத்த விரும்பவில்லை.

இப்போதும் கூட 13 ஆவது திருத்தத்துக்கு நேர் விரோதமாகவே வடக்கையும் , கிழக்கையும் பிரித்து தேர்தலை நடத்தினார்கள். 25 வருடங்களின் பின் இன்று வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த முன்வந்தனர். இதனை ராஜபக்ஷ அரசு விருப்பத்துடன் நடத்தவில்லை. சர்வதேச அழுத்தம், நடைபெறவுள்ள பொது நலவாய மாநாடு உட்பட ஐ.நா.வரை கொடுத்த வாக்குறுதிகள் என்பனவற்றின் காரணமாகவே வடமாகாண சபைத் தேர்தலை நடத்துகின்றனர்.

இதனை நாம் புறக்கணித்தால் வடமாகாண சபையின் ஆட்சி அதிகாரம் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளின் கைக்குப் போய்விடும். சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு எந்த விதமான பிரச்சினையுமே இல்லை. வடபகுதி மக்களும் எங்களுடன்தான் இருக்கின்றனர் என்று தம்பட்டம் அடிக்க வாய்ப்பாகிவிடும். இவ்வளவு காலம் நாம் நடத்திய போராட்டமும் அர்த்தமற்ற தாகிவிடும்" என்றார்.

தேர்தல் வெற்றியின் பின் நீங்கள் முன்னுரிமை கொடுத்து செயற்படும் திட்டம் என்ன? என்று வினாவினோம்

"வேலை இல்லாப் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கப் படும். நாம் யாரிடமும் யாசகம் கேட்கவில்லை. எமது பிரதேசம் மூலவளங்கள் நிறைந்தது. இன்று பாருங்கள் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை முதல் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் மீண்டும் இயக்கப்பட வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது பிரதேசத்தில் பல புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அவைமூலம் எமது இளைஞர் யுவதிகள் தமது கல்வித் தகைமைகளுக்கு அமைவாக தொழில் வாய்ப்புக்களும் பெற முடியும். இதற்கான அழுத்தங்களைக் கொடுப்பேன்" என உறுதியளித்தார் ஆனல்ட்.

இறுதியாக அவர் ஒன்றை சுட்டிக்காட்டினார். இப்போதும் கூட அரசு வடமாகாண சபைத் தேர்தலை தனியே நடத்தவில்லை. தாம் வெற்றி பெறுவோம் என கருதப்படும் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் கூடவே நடத்துகின்றனர். ஏனெனில் செப்ரெம்பர் 21 இல் நடைபெற்ற தேர்தலில் மூன்றில் இரண்டு மாகாணங்களைக் கைப்பற்றி விட்டோம் என்று கூறும் குள்ளநரித்தனம்தான் இதற்கு காரணம் என்றும் கூறினார்.
























# வடக்கில் சிவில் நடைமுறை இல்லாத நிலையில் தேர்தல்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், செப்.1

போரின் பின்னர் வடக்கில் சிவில் நடைமுறை இல்லாத நிலையிலேயே மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகிறது. இங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் அதிகளவில் காணப்படுகின்றனர். சிவில் விடயங்களில் பொலிஸாரின் பங்களிப்பே இருக்க வேண்டும். இராணுவத்தினர் சிவில் விடயங்களிலோ, தேர்தல் விடயங்களிலோ தலையிடக்கூடாது - தலையிடவும் முடியாது.

இவ்வாறு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் தமது விருப்பின்படி செயற்பட மக்களுக்கு உரிமையுண்டு. மக்கள் தமக்குள்ள வாக்களிக்கும் முக்கிய பொறுப்பைத் தவறவிடக்கூடாது.

**சமாதான சூழ்நிலையை துப்பாக்கி மாற்றிவிட்டது**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுபவர்களின் ஆதரவாளர்களுக்கு இடையிலான விருப்பு வாக்குப்போட்டி பெரும் வன்முறையாக மாறியுள்ளது. சந்தேகநபரான இராமநாதன் தொடர்பான விடயத்தில் முன்னரே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். யாழ். ஸ்ரான்லி வீதியில் கூட்டமைப்பு வேட்பாளருடன் அவர் தகராறில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் சாவகச்சேரியில் இடம்பெற்ற தேர்தல் வன்செயலைத் தடுத்திருக்க முடியும்.

இங்கு சட்ட ரீதியாக, சட்ட விரோதமாக உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அப்போதுதான் தேர்தல் நீதி ; நியாயமாக நடைபெறும். தென் பகுதியில் கடந்த தேர்தலின் போது லக்ஸ்மன் பிரேமச்சந்திர சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும் - என்றார். (த-4)

# அரசைத் தோற்கடித்தால் தமிழரின் தலைவிதியைத் தீர்மானிக்கலாம்

## கிளிநொச்சியில் அரியநேத்திரன் எம்.பி.

அக்கராயன்,செப்.01

வடமாகாண சபைத் தேர்தலில் அரசு சார்ந்தவர்களைத் தோற்கடிப்பது தமிழர்களின் எதிர்கால இராஜதந்திர போருக்கு கட்டாயமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, கோணாவில் யூனியன் குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வடமாகாண சபைத் தேர் தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக வடமாகாணத் தேர்தல் நோக்கப்படுகிறது.

நாம் 66 ஆண்டுகளாக எமது உரிமைக்காகப் போராடி வந்திருக்கிறோம். தமிழர்களுக்கு தலையெழுத்துக்களாக அ, ஆ, இ, ஈ, உ. என்று எழுத்துக்கள் உள்ளன.

இந்த ஐந்து எழுத்துக்கள் தான் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் . அ -அகிம்சை, அகிம்சை வழியில் தந்தை செல்வா பல போராட்டங்களை முன்னெடுத்தார்.

அகிம்சை வழியில் தமிழர்கள் உரிமைகளை பெற முடியாது என்ற நிலையில், ஆ -ஆயுதத்தைக் கையில் எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது.

ஆயுதப் போராட்டத்தை தலைவர் பிரபாகரன் 30 ஆண்டுகளாக முன்னெடுத்தார். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட, இ-இராஜதந்திரத்தை கையில் எடுத்துள்ளோம்.

இராஜதந்திரப் போரை தலைவர் சம்பந்தன் வழிநடத்துகிறார்.



அடுத்தது ஈ-ஈழம். சுயாட்சி உரிமையுடன் கூடிய அரசியல் உரிமையை இராஜதந்திரப் போரினூடே பெறலாம். உ- உலகம். இராஜதந்திர வெற்றியைக் கண்டு உலகம் எங்களை உற்றுப் பார்க்கும். இதுதான் எமது தலைவிதி.

தேர்தலில் போட்டியிடுவதும் ஒரு விடுதலைக்கான போராட்டம்தான்.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபை மூலமாக, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத் தால் எந்த தீர்வும் கிடைக்காது என்பது எமக்குத் தெரியும். 1987 ஆம் ஆண்டு செய்து கொள் எப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் நாம் நிராகரித்திருந்தோம்.

2009 ஆண்டின் பின் தேர்தலில் நாம் பங்குகொள்வது மக்களை அணிதிரட்ட வேண்டும் என்பதற்காகவே.

அடுத்த கட்ட நகர்வுக்கு வடக்குத் தேர்தல் முக்கியமானது என்கிறோம்.

எனவே இந்த உண்மையை உலகறியச்செய்ய மக்களாகிய நீங்கள் முன் வர வேண்டும்-என்றார். (ஐ-18)









# சர்வதேச விசாரணையில் உறுதியாக இருப்பார் நவி

## அஞ்சுகிறது தேசப்பற்று இயக்கம்

கொழும்பு, செப்.1
இலங்கைமீது அனைத்துலக விசாரணையை நடத்தியே ஆக வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நிச்சயம் முன்வைப்பார். இதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை என்று அடித்துக் கூறுகின்றது சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம்.

இலங்கையின் நிலவரங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவாக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க வுள்ள அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர இதனை தெரி வித்தார்.

"இலங்கைப் பயணத்தின் போது நான் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இதன் போது ஒவ்வொரு தரப்பும் வெவ்வேறான கருத்துகளை முன்வைத்தன. இதனால் உண்மை எது என்ன வென்பதைச் சரியாக ஊகிக்க முடியாமல் உள்ளது.

எனவே, போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் உட்பட இலங்கையில் இடம் பெற்ற அனைத்து விதமான சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து உண்மை என்ன வென்பதை அறிவதற்கு இலங்கை மீது சர்வதேச சுயாதீன விசாரணையே ஒரே வழி. இந்த கோரிக்கையை நாம் முன்மொழிகின்றேன்" என்று மனித உரிமைகள் பேரவையில் அவர் கோரிக்கை விடுப்பார் என்றும் குண தாச அமரசேகர சுட்டிக்காட்டினார்.

"இலங்கைக்கு நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட்டப் பின்னர் அவர் இவ்வாறு முன்வைக்கும் சிபாரிசை மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளால் எதிர்க்கமுடியாத நிலை ஏற்படும். நவநீதம்பிள்ளையை நாட்டுக்குள் அனுமதிப்பதால் ஏற்படப்போகும் பாதிப்புகளை நாம் ஏற்கனவே பட்டிய லிட்டுக் காட்டினோம்.

ஆனால், சம்பந்தப்பட்ட தரப்பு அலட்சியப்படுத்திவிட்டது. ஆகவே, நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் தொடர்பிலான அறிக்கை வெளியாகிய பின்னர்தான் அதன் பாரதூரம் என்னவென்று அழைப்புவிடுத்த தரப்புக்கு தெரியவரும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நவிப்பிள்ளையின் அறிக்கையில் நான்கு பிரதான விடயங்கள்

கொழும்பு,செப் 01
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தனது இலங்கை பயணத்தின் பின்னர் தயாரிக்க உள்ள அறிக்கையானது, நான்கு பிரதான விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள், ஊடக சுதந்திரம், காணாமல் போனவர்கள் தொடர்பான விடயம், மீள்குடியேற்றம் ஆகிய நான்கு விடயங்களை பிரதானமாகக் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்படும் எனக் கூறப்படுகிறது.

நவநீதம்பிள்ளை, வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மக்களையும், அரச சார்பற்ற நிறுவனங்க ளையும், மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகளையும் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்படும்.

அத்தோடு ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்புகளின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடுநிலையான தன்மையைக் கடைப்பிடிக்க மனித உரிமை ஆணையாளர் தீர்மானித்துள்ளார் என்றும் அறியக் கிடைத்துள்ளது.

ஆணையாளரின் இந்த அறிக்கை அடுத்த மாதம் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளது. (த)

# ஜெனிவா திரும்பினார் நவிப்பிள்ளை

ஏழு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம்மேற்கொண்டு இலங்கை வந்து தரவுகள் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றுப் பிற்பகல் ஜெனிவா புறப் பட்டார்.

இலங்கை அரசால் விடுக்கப்பட்ட அழைப்பின் போரில் கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இலங்கை வந்த நவநீதம்பிள்ளை அம்மையார், இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதி உட்பட வடக்கு, கிழக்கின் பலபிரதேசங்களுக்கு நேரில் சென்று போரால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்பினர், அரச அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தி தரவுகளைத் திரட்டியிருந்தார்.

அவர் நேற்றுக் காலை கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் செயலகத்தில் தனது இலங்கைப் பயணம் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திவிட்டு பிற்பகல் ஜெனிவா புறப் பட்டார். (து-சி)

# பொலிஸார் தேர்தல் பிரசாரம் அமைச்சர்கள் முறைப்பாடு

கொழும்பு,செப் 01
பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் கடமையாற்றி வரும்பிரதிப் பொலிஸ்மா அதிபரும், சில சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஆளும் கட்சியின் ஒரு சில வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமைச்சர்கள் இந்த முறைப்பாட்டைச்செய்துள்ளனர்.

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளாகளின் பிரசாரப் பணிகளில், பொலிஸ் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இவ்வாறு பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அமைச்சர்கள் அதிகாரிகளிடம் கோரியுள்ளனர். இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள், வேட்பாளர்களின் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு இவ்வாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கி வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

# வேம்படி 11 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.01
யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பிக்கப்படும் என அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ)

# வவுனியாவில் சுவரொட்டிகளுடன் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் கைது

## வேறு தரப்பினர் தாராளமாக ஒட்டுகின்றனர்

வவுனியா, செப்.1
வவுனியா சாந்த சோலையில் சுவரொட்டிகளுடன் காணப்பட்ட கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் நடராஜுக்கு ஆதரவு தெரிவிக்கும் சுவரொட்டிகளை வேட்பாளர்கள் ஒட்ட முற்பட்ட வேளையிலேயே அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் கூட்டமைப்பினரின் சுவரொட்டிகளை வைத்திருந்தமைக்காக கூட்டமைப்பு வேட்பாளர் எம். எம். ரதனின் சகாக்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் தண்டம் அறவிடப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை சுவரொட்டிகளை ஒட்டுகின்ற கூட்டமைப்பினரைக் கைது செய்யும் பொலிஸார் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சார்பான சுவரொட்டிகள் ஒட்டப்படுவதை வேடிக்கை பார்க்கின்றமை தொடர்பாக பொது மக்கள் தரப்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.(க-402)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## மேற்குலக அரசியல்வாதிகளுக்கு புலி வலையமைப்புகள் இலஞ்சம்

துள்ளார். ஆஸ்திரேலியாவுக்குப் போய் விட்டால் ஆஸ்திரேலிய அரசு உங்களைக் கவனித்துக் கொள்ளும், உதவிப்பணம் வழங்கும், இலவச மருத்துவ வசதிகள் கிடைக்கும் என்பதெல்லாம் கட்டுக்கதையாகும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

விடுதலைப்புலிகள் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டதால் சகலரும் நன்மை பெறும் வகையில் இலங்கையின் பொருளாதாரம் சமூக அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுவருகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

புலிகள் தோற்கடிக்கப்பட்டமையால் ஆஸ்திரேலியா உட்பட பல நாடுகளுக்குப் பாதுகாப்பு நன்மைகளும் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார். (த)

## மரணித்தோருக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலிக்க நவிக்குத் தடை

ஆணையாளரின் இலங்கை பயணம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் தாயாரித்திருந்த உத்தியோகபூர்வ நிகழ்ச்சிநிரலில் மலர் வளையம் வைக்கும் நிகழ்வு உள்ளடக்கப்படவில்லை.

இருப்பினும், முள்ளிவாய்க்காலுக்குச் செல்லும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இறுதிப்போரில் மரணித்தவர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார் என வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, கொழும்பிலுள்ள ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சூபினே நெண்டியுடன் தொடர்பு கொண்ட வெளிவிவகார அமைச்சு இது தொடர்பில் வினவிய போது மேற்படி தகவலை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து, அரச பாதுகாப்பு பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுகள் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுமாயின், கடும் மக்கள் எதிர்ப்புக் கிளம்பும். அதனால் இதற்கு அனுமதியளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கேள்விஎழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், போர் இடம்பெற்ற பல நாடுகளுக்கு நான் சென்றிருந்த போது போரில் மரணித் தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது வழமை. அவ்வாறானதொரு நடவடிக்கையை இங்கும் மேற்கொள்ள எண்ணியிருந்தேன். இருப்பினும் அது சாத்தியப்படவில்லை - எனத் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கிலிருந்து படைகளை அகற்றுக

கப்படுகின்றது. கணிசமாக அளவில் இருக்கும் இராணு வத்தினரை ஒரே நாளில் குறைத்து விட முடியாதென பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்.

எனினும் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த இரு மாகாணங்களிலும் இருந்து இராணுவத்தை அகற்றும் பணியை அரசு துரிதப்படுத்த வேண்டுமென நான் வலியுறுத்துகின்றேன். சிவில் சமூகத்தினரின் மத்தியில் இராணுவம் பெருமளவில் நடமாடுவதும் சிவில் நிர்வா கங்களில் தலையிடுவதும் முன்னாள் போராளிகள் என சந்தேகிக்கப்படுபவர்களின் மீதும் நாட்டுக்குத் திரும்பி வருபவர்கள் மீதும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும் அமைதி யான சூழ்நிலைக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்பது எனது அபிப்பிராயம். என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், போரின் முடிவு கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையை புதிய அதிர்வுடனான எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் நாடாகக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக சர்வாதிகாரப் போக்கை நோக்கிய திசையில் நாட்டை இட்டுச் செல்வது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது என்றும் நவநீதம்பிள்ளை தெரிவித்தார். (து-சி)

## நவநீதம்பிள்ளைக்கே சவால் விட்ட கோத்தா

ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

அவ்வாறானதொரு பெயர்ப் பட்டி யல் சமர்ப்பிக்கப்பட்டால் அதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்றும் பாதுகாப்புச் செயலா ளர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைப்புகள் கூறும் அளவுக்கு 40 ஆயிரம் பேர் காணாமற்போயுள்ளனர் என்பதை நிராகரித்துள்ள பாதுகாப்புச் செயலாளர், யுனெஸ்கோ, செஞ்சிலுவைச் சர்வதேச சங்கம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வுகளில் இதுபோன்ற தகவல்கள். வெளியாகவில்லை என்றும்தெரிவித்துள்ளார்.(து-சி)

## 'உதயன்' குறித்தும் கரிசனை

வித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் போன்ற சில பத்திரிகைகள் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளன. பயத்தினால் - அச்சத்தினால் - சுய தணிக்கை நடைமுறைக்கு வந்துள்ளது. சில கட்டுரைகளைப் பத்திரிகையாளர்கள் எழுதவில்லை. மற்றையவை ஆசிரியர்கள் பிரசுரிப்பதற்கு முன்வரவில்லை. கருத்துச் சுதந்திரம் தொடர்ந்தும் இலங்கையில் தாக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளான சார்க் நாடுகள் பலவற்றில் உள்ளதைப் போன்று இலங்கையிலும் கருத்துக்களை அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கிறேன் என்றார் நவநீதம்பிள்ளை. (ஐ-400)

## நீதியாக நடக்காது வடக்குத் தேர்தல்

றில் இருந்து கைவிலங்கிடப்படாத நிலையில் தனியார் வாகனத்திலேயே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

தேர்தல் நீதியாக, சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பு. ஆனால் இவ்வாறான வன்முறைகளால் அது நீதியாக நடக்கும் என்தனை எதிர்பார்க்க முடியாது.

தேர்தலைக் கண்காணித்து விதிமுறை மீறல் விடயங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிப்பதன் மூலமாகவே விதிமுறை மீறல்களை, வன்முறைகளைக் குறைக்க நாம் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (த-4)

## பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் போது இலங்கை அரசு கலவரப்படக் கூடாது

துள்ளார். அது மட்டுமல்ல, புலம்பெயர்ந்த தமிழர்கள் புலிகளைத் தொடர்ந்தும் போற்றி வாழ முனையக் கூடாது எனவும் அவர் இலங்கையிலிருந்து கூறியுள்ளார்.

சர்வதேச அங்கீகாரம் இல்லாத கொரில்லா இயக்கமான புலிகளை விட, ஐ.நாவில் உறுப்புரிமை கொண்ட நாடான இலங்கை அரசின் மீது பயங் கரவாதக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஐ.நா. ஆணையாளரின் பயணம், அவருக்குக் கிடைத்த தகவல்களை உறுதிப்படுத் துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.

நவிப்பிள்ளை தனது ஆய்வில் எதனைக் கண்டார் என் பது விரைவில் தெரியவரும். எது எப்படி இருந்தாலும் நமது மக்களுக்கு உரிமை மீறல் கள் தொடர்பிலும், அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் உரிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை நாம் எமது அரசியல், ராஜதந்திரப்போராட்டங்களை கைவிடமுடியாது-என்றார். (த-5)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தருக்கான பயிற்சி வகுப்புகள்



வலி.வடக்கு, செப்.1
யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றுபவர்களின் நன்மை கருதி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளை கொழும்பில் இருந்து வரவுள்ள இலங்கை வலைப்பந்தாட்ட சங்க உறுப்பினர்கள் நடத்தவுள்ளனர்.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பத்தவர்களைத் தவறாது பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத் தியஸ்தர் சங்கத்தின் தலைவர் திருமதி ஜே.எப்.ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (ற-86)

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பொற்பதி 'ஏ', 'பி' அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் பொற்பதி 'பி' அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி 'பி' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி 'ஏ' அணியும் அண்ணா சிலையடி இளைஞர் கழக அணியும் மோதின. அதில் 1:0 என்ற கோல் கணக்கில் பொற்பதி 'ஏ' அணி வெற்றி பெற்றது. (ற-422-400)

-------------------

யாழ்ப்பாணம், செப்.1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி வெற்றி பெற்றது.

யங்கம்பன்ஸ் 'ஏ' அணிக்கும் உதயதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் 'ஏ' அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23-422)

-------------------

யாழ்ப்பாணம், செப்.1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் க கம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் விண்மீன் 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகஅணி 4:0என்றகோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

-------------------

யாழ்ப்பாணம், செப்.1
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி, அராலி அண்ணா 'பி' அணி என்பன வெற்றி பெற்றுள்ளன.

பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் அராலி அண்ணா 'ஏ' அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி அண்ணா 'பி' அணிக்கும் விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 3 கோலை பெற்றதை அடுத்து, வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் அராலி அண்ணா 'பி' அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## 39 ஆவது தேசிய விளையாட்டு விழா ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப்.1
39ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை நாவலப்பிட்டியில் ஆரம்பமாகிறது.

இன்று ஆரம்பமாகும் தேசிய விளையாட்டு விழா 3ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்வதற்காக நேற்று வட மாகாண அணி கொழும்பு புறப்பட்டுச் சென்றுள்ளது.

மேற்படி தேசியமட்ட விளையாட்டு விழாவில் குழுநிலைப் போட்டிகளில் ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வட மாகாண ஆண்கள் அணி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

# ஆளுநர் செயலக சதுரங்கச் சுற்றில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், செப். 1
ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண சதுரங்க சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

ஆண்கள் பிரிவு (8 வயதின் கீழ்)
முதலாமிடம்-ஆரகன் ஜெயந்தன் (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
இரண்டாமிடம்-சிவசங்கர் ஆர்த்திகன் (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
மூன்றாமிடம்- யோகேந்திரன் ஆர்னிகன் நெல்லியடி மகா வித்தியாலயம்.

பெண்கள் பிரிவு (8 வயதின் கீழ்)
முதலாம் இடம்- ஆரபி சத்திய சீலன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)
இரண்டாம் இடம்- நிவேதா நந்தகுமாரன் (தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலயம்)
மூன்றாம் இடம்- நதுசா பிரதாப் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

ஆண்கள் பிரிவு (10 வயதின் கீழ்)
முதலாம் இடம் - பாஸ்கரன் மனோஜ் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
இரண்டாம் இடம் - முருகதாஸ் அனுதர்சன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
மூன்றாமிடம் - ஜெயகுமார் விஸ்ணுராஜ் (நெல்லியடி மகா வித்தியாலயம்)

பெண்கள் பிரிவு (10 வயதின் கீழ்)
முதலாம் இடம்-ரிலக்சனா குமார் (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி)
இரண்டாமிடம் - ஜெயநந்தன் துஸ்யந்தி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)
மூன்றாமிடம் - நத்திக்குமார் இந்துயா (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

ஆண்கள் பிரிவு (12 வயதின் கீழ்)
முதலாமிடம் - இராமச்சந்திரன் தனுசன் (ஹாட்லிக் கல்லூரி)
இரண்டாமிடம் - சுதாகரன் சுமன் (உடுவில் அமெரிக்கன் மிஷன் கல்லூரி)
மூன்றாமிடம் - அருந்தவராசா கஜராஜ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

பெண்கள் பிரிவு( 12 வயதின் கீழ்)
முதலாமிடம் - மிருதி சுரேஸ் குமார் (வேம்படி மகளிர் கல்லூரி)
இரண்டாமிடம் - கம்சாயினி பிரசாத் (வேம்படி மகளிர் கல்லூரி)
மூன்றாமிடம் - அஸ்காரிகா அசோக் (வேம்படி மகளிர் கல்லூரி)

ஆண்கள் பிரிவு (15 வயதின் கீழ்)
முதலாமிடம் - ராஜசூரி டினோஜன் (யாழ்.இந்துக் கல்லூரி)
இரண்டாமிடம் - தெய்வேந்திரராஜ் அபினேஷ் (ஹாட்லிக் கல்லூரி)
மூன்றாமிடம் - சபாபதிப் பிள்ளை கோபிதன் (ஹாட்லிக் கல்லூரி)

பெண்கள் பிரிவு (கீழ் பெண்கள்)
முதலாமிடம் - சன்சிகா சிவகாந்தன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)
இரண்டாமிடம் - உமையாள் சிவகுமாரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)
மூன்றாமிடம் - லாவன்யா யோகேஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி)

ஆண்கள் திறந்த சுற்றுக்கான ஆட்டங்கள்
முதலாமிடம் - சிறிகணேஷ் பவகணேஷ் (யாழ். பல்கலைக் கழகம்)
இரண்டாமிடம் - தர்மச்சந்திரன் பிரம்மன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)
மூன்றாமிடம் - அலோசியஸ் அன்றூ (யாழ்.இந்துக் கல்லூரி)

பெண்கள் பிரிவு-திறந்த சுற்றுப் போட்டிகள்
முதலாமிடம் - நிதர்சனா வேலாயுதம் (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை)
இரண்டாமிடம் - சுமித்திரா தேவ உலகநாதன் (யாழ். இந்து கல்லூரி)
மூன்றாமிடம் - தனுஷ்பிரியா நகரத்தினேஷ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி). (ற-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பொமர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப 4 மணி
றேஞ்சஸ் ஏ அணி எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

பி.ப 4.45 மணி
யங்கிலன்ஸ் பி அணி எதிர் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23-422)

-----------

யாழ்ப்பாணம், செப். 1
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப 3.30 மணி
சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

பி.ப 4 .36 மணி
ஊரெழு விளையாட்டுக்கழகம் எதிர் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-23)

-----------

யாழ்ப்பாணம், செப். 1
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

இரவு 7.15 மணி
புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

இரவு 8 மணி
பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழ கம். (ற-23)

-------------------

யாழ்ப்பாணம், செப்.1
யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல்நாள் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

காலை 8மணி
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்

காலை 11 மணி
ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்கந்தஸ்ரார் விளையாட்டுக்கழகம்

மதியம் 2 மணி
திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் எதிர் அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம்.(ற-23)



# கவுண்டி தொடரில் அசத்தும் கம்பீர்

இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டி ஆட்டத்தில் இந்திய அணி வீரர் கம்பீர் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

மோசமான ஆட்டம் காரணமாக தொடர்ந்து இந்திய அணியில் புறக்கணிக்கப்பட்டு வந்த கம்பீர் தற்போது இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் கவுண்டி தொடரில் விளையாடுகிறார்.

இதுவரை விளையாடிய நான்கு ஆட்டங்களில் (இரண்டு முதல் தர போட்டி + இரண்டு ஏ பிரிவு போட்டி) ஒருமுறை கூட அவர் அரைசதம் அடிக்கவில்லை.

அதிகபட்சமாக நார்தாம்ப்டன்ஷயர் அணிக்கெதிரான முதல் தர ஆட்டத்தில் 31 ஓட்டங்களும், டெர்பிஷயர் அணிக்கெதிரான 'ஏ' பிரிவு ஆட்டத்தில் 21 ஓட்டங்களும் எடுத்திருந்தார். அதேபோன்று அண்மையில் நடந்த லன்காஷயர் அணிக்கெதிரான 'ஏ' பிரிவு ஆட்டத்தில் வெறும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த கம்பீர், பிரிஸ்டோல் நகரில் நடக்கும் கிளவ்சஸ்டர்ஷயர் அணிக்கெதிரான முதல் தர ஆட்டத்தின் முதல் இன்னிங்சில் 'டக்-அவுட்' ஆனார்.

இந்தநிலையில் நேற்று நடந்த இரண்டாவது இன்னிங்சில் துடுப்பாட்டத்தில் எழுச்சி கண்ட கம்பீர், கவுன்டி ஆட்டத்தில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார்.

இது முதல் தர போட்டியில் அவரது 34ஆவது சதமாகும். பொறுப்பாக ஆடிய இவர் 149 பந்தில் 106 ஓட்டங்கள் (ஒரு சிக்சர், 12 பவுண்டரி) விளாசினார். (ற)

# பிற்போடப்பட்டது பயிற்சி முகாம்

மாங்குளம், செப்.1
வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவிருந்த வடமாகாண மெய்வன்மை வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று என்று வடமாகாண கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

பிற்போடப்பட்டுள்ள பயிற்சி முகாம் எதிர்வரும் 10, 11, 12, 13 ஆம் திகதிகளில் வதிவிடப் பயிற்சி முகாமாக வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் இம்முறை நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு இந்தப் பயிற்சி முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி முகாமில் கொழும்பில் இருந்து வரவுள்ள இலங்கை மெய்வல்லுநர் பயிற்சியாளர்கள் 10 பேர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ற-422)

# எர்ரானியை வீழ்த்தினார் பென்னட்டா



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் 2 ஆவது சுற்றில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையான பிளேவியா பென்னட்டாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார் இத்தாலியின் சாரா எர்ரானி. கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ்தொடரில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. 4ஆவது ஆட்டத்தில் மகளிர் ஒற்றையர் 2ஆவது ஆட்டத்தில் சாரா எர்ரானி 3:6, 1:6 என்ற நேர் செற்களில் தரவரிசையில் 83ஆவது இடத்தில் உள்ள சகநாட்டவரும், தோழியுமான பிளேவியா பென்னட்டாவிடம் தோல்வி கண்டார்.

சக நாட்டவரான சாரா எர்ரானியை வீழ்த்தியமை குறித்துக் கருத்துத் தெரிவித்த பிளேவியா பென்னட்டா, "நம்முடைய நண்பர்களுக்கு எதிராக விளையாடும்போது சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. எனினும் அப்படியொரு சூழல் வந்துவிட்டால், நிச்சயம் சிறப்பாக விளையாடுவோம்" என்றார்.

தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்த சாரா எர்ரானி, "பொதுவாக சவால் நிறைந்த ஆட்டங்களில் நான் சிறப்பாக விளையாடுவேன். ஆனால் இந்த ஆட்டத்தில் சரியாக விளையாடவில்லை. ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த தோல்விக்கு நெருக்கடி காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த ஆட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாமே எனக்கு கடினமானவையாக அமைந்தன" என்றார்.

சாரா எர்ரானி கடந்த அமெரிக்க பகிரங்க ரென்னிஸ்ஸில் அரையிறுதி வரை முன்னேறியிருந்தார்.

பென்னட்டா அடுத்த சுற்றில் ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்நெட்சோவாவை சந்திக்கிறார். அதுகுறித்துக் கூறிய அவர், "ஸ்வெட்லானாவை இதற்கு முன்பு நான் தோற்கடித்ததில்லை. உண்மையிலேயே அவர் மிகச் சிறந்த ஆற்றல்மிக்க வீராங்கனை" என்றார். (ற)

# சுப்பர் கிண்ணம் பார்சிலோனா வசம்




அத்லெட்டிகோ மாட்ரிட் அணியை வீழ்த்தி ஸ்பானிஷ் சுப்பர் கிண்ணத்தை வென்றது பார்சிலோனா உதைபந்து அணி.

'லா லிகா' தொடர் சம்பியனான பார்சிலோனா அணிக்கும் 'கோபா டெல் ரே' தொடரில் கிண்ணம் வென்ற அத்லெட்டிகோ மாட்ரிட் அணிக்கும் இடையே ஸ்பானிஷ் சுப்பர் கிண்ணத் தொடர் நடைபெற்றது.

இதன் முதல் லீக் ஆட்டம் 1:1 என்று சமநிலையில் முடிந்தது. இரண்டாவது ஆட்டம் பார்சிலோனாவில் நடந்தது. இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் வீணாகின. கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இருப்பினும் முன்னர் பெற்ற கோல் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்சிலோனா அணிக்கு சம்பியன் பட்டம் வழங்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பார்சிலோனா அணி வெல்லும் 4வது சுப்பர் கிண்ணம் இதுவாகும். சுப்பர் கிண்ண வரலாற்றில் 2 லீக் ஆட்டங்களிலும் வெற்றி பெறாத ஓர் அணி கிண்ணம் வெல்வது இது தான் முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# இலங்கை – சிம்பாப்வே தொடர் பிற்போடப்பட்டது

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் வேண்டுகோளின் பேரிலேயே அந்தத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது.

நிதி தொடர்பாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளின் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இது தொடர்பாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை தனது கருத்துக்களை இலங்கை கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்திருந்தது. அதனடிப்படையில் இத்தொடரை பிற்போடுவதற்கான முடிவை இருநாட்டுக் கிரிக்கெட் சபைகளும் எடுத்துள்ளன.

மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை இத்தொடர் பிற்போடப்பட்டுள்ளது. 2 டெஸ்ட் ஆட்டங்கள், 3 ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள், இரு '20/20' சர்வதேச ஆட்டங்கள் அடங்கிய இத்தொடர் ஒக்ரோபர் முதலாம் திகதி ஆரம்பிக்கவிருந்தது. (ற)








# சாதனை படைக்கும் பிரையன் சகோதரர்கள்

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரைக் கலக்கி வருகின்றனர் அமெரிக்காவைச் சேர்ந்த இரட்டையர்களான ரொபர்ட் சார்லஸ் பிரையன் (பொப்) மற்றும் மைக்கேல் கார்ல் பிரையன் (மைக்).

2012ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இரட்டையர் ஆட்டத்தில் பெற்ற தங்கப்பதக்கம் உட்பட பல ஆட்டங்கள், கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள இவர்கள் தொடர்ந்து 328 வாரங்களுக்கு இரட்டையர் ஆட்டத்தின் தரவரிசை பட்டியலில் முதல் நிலை இடத்தில் உள்ளனர். டென்னிஸ் வரலாற்றில் இதுவே மிக நீண்ட சாதனையாகும். தொடர்ச்சியாக நான்கு இரட்டையர் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைப் பெற்றுள்ள இவர்கள் இந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரிலும் முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

இரட்டையர் ஆட்டத்தின் முதல் நிலை வீரர்களான பிரையன் சகோதரர்கள், தங்களை எதிர்த்துப் போட்டியிட்ட பெடரிகோ டெல்போனிஸ், லியனார்டோ மேர் இணையை 7:6 (1), 6-2 என்ற நேர் செற்களில் தோற்கடித்தனர்.




ஆட்டத்தின் முடிவில் சென்ற வருடம் தாம் ஆடிய கடினமான ஆட்டங்கள் குறித்துப் பகிர்ந்தார் பொப்.

"ஆஸ்திரேலிய பகிரங்கத் தொடரில் இரண்டு ஆட்டங்களில் மூன்று ஆட்டங்களையும் விளையாட நேர்ந்தது. அதேபோல் பிரெஞ்ச் பகிரங்கத் தொடரின் இறுதியாட்டத்திலும் மூன்றாவது ஆட்டத்தின் டை பிரேக்கரில் 4-2 என்ற புள்ளிகளில் விளையாடிமை கடினமாக இருந்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் குறித்துக் கருத்து வெளியிட்ட மைக், "தற்போது அடுத்த கிராண்ட் ஸ்லாம் தொடக்கத்தில் உள்ளோம். அதில் வெற்றி பெறுவதன் மூலம் ஐந்தாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்வோம் என்ற நம்பிக்கையிருக்கின்றது" என்று தெரிவித்தார். (ற)

# சம்பியன்ஸ் லீக் தொடரில் சச்சின், டிராவிட்

சம்பியன்ஸ் லீக் '20/20' தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அந்தத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோர் விளையாடவுள்ளனர்.

இந்தத் தொடருக்கு ஐ.பி.எல் ஆட்டத்தில் முதல் 3 இடங்களை பிடித்த மும்பை இண்டியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

ஐ.பி.எல். ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த டெண்டுல்கரை சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாடுமாறு மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் கேட்டு இருந்தது. இந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணியில் டெண்டுல்கர் பெயர் இடம் பெற்றுள்ளது.

இதேபோல் இந்த சம்பியன்ஸ் லீக் தொடருடன் விடைபெறுவதாக தெரிவித்து இருந்த டிராவிட்டின் பெயர் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம் பிடித்து இருக்கிறது. அதனால் இருவரும் இந்த போட்டியில் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)



## THE SCIENCE CORNER A/L 2014,15

Clock Tower Lane, Jaffna.

TAMIL, ENGLISH MEDIUM CLASSES

| PHYSICS | CHEMISTRY | BIOLOGY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | வாசு | ஞானேந்திரன் ஜனா | சிவகரன் விமலநாதன் |

புதிய பிரிவு ஆரம்பம்

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## TATA 207DI Single Cap விற்பனைக்கு

PR-xxxx இலக்கம், பிற்பகுதி கொழும்பு அலுமினியம் பொடி (Body), 18000k.m, வெள்ளை நிறம் மிக நல்ல நிலையில் உள்ளது.
தொடர்பு: 077 630 6733, 021 225 0186 (39277) (7.6.3)

## Personal Class-கணினி TP:0779672038

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
*Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:KRC

## ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.

தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்

தொடர்புகளுக்கு - 077 3818799

பிரணவன் என்ரபிறைசஸ்
இல- 365, பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

## வெல்லுங்கள்

சர்வதேச நாடுகளுக்கான விமானப் பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்பவர்களுக்கு நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இச்சலுகை வழங்கப்படுகின்றது

I Phone, Printer, Mixy, Tv, Table Fan
இலவசம்

Nation Popular Travels & Tours
#128, Brown Road Jaffna
0214 920 920

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## துணைமுகவர்கள் தேவை

Teesside University UK
பல்கலைக்கழகத்திற்கு மேற்படிப்பை தொடர இருக்கும் மாணவர்களை சேர்க்கும் பொருட்டு துணை முகவர்கள் தேவை.
விபரங்களுக்கு

APSS International
0773867695

## வேலையாள்கள் தேவை

சங்கென் கென்ஸ்ரெக்ஷன் யாழ் கிளைக்கு

பரந்தன், பளை, கொடிகாமம், ஆனையிறவு போன்ற இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மாபிள் பதிக்கக் கூடியவர்கள் உடனடியாகத் தேவைப் படுகின்றார்கள்.
தங்குமிட வசதியுடன் தகுந்த வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

விவரங்களுக்கு:
(சி/11602) (10,8,3) 077 229 3922, 071 864 3645



## வெற்றிடங்கள்

Sanken வடமாகாண கிளைக்கு
கீழ்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| | |
|---|---|
| திட்ட முகாமையாளர் (கட்டடங்கள்-Site Manager) | முன் அனுபவங்களுடன் 40 வயதுக்குக் குறைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் |
| வேலைத்தள பொறியியலாளர்கள் (Site Engineer) | முன் அனுபவங்களுடன் 35 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் |
| உதவி பொறியியலாளர்கள் (Asst. Engineers Buildings) | முன் அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம் |
| அலுவலக உத்தியோகத்தர்கள் (Admin Officers) | Should be required -G.C.E (A/L) with some construction experience |
| களஞ்சிய உதவியாளர்கள் (Stores Assistant ) | Should be required- G.C.E (O/L) Qualification |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Safety Officers) | Should be familiar in ISO Safety regulations |

Apply to:
iayanthi@sankenconstruction.lk
Fax:021 222 4840
(சி/11662) (3,5,6)

Sanken Constructionf (Pvt) Ltd
No:31, wyman Road,
Nallur, Jaffna.

## SofTTech COMPUTER EDUCATION

குறைந்தகட்டணத்தில் தரமானகல்வியினை கற்பிக்கும் ஒரேஒரு கணினி கல்வி நிறுவனம்

epay Easy Payment
Rs. 800 Per Month

MS Office, DTP
Office Automation
Information Technology
Web Designing
Graphic Designing
Video production
Graphics and Animation
Computer Hardware
Computer Networking
Computer Programming

3 முதல் 6 மாதம் வரையான கற்கைநெறிகள்
தெரிவுசெய்யும் எந்தவொரு Computer Diplomaவையும் மாதாந்தம் 800 ரூபா மட்டும் செலுத்தி கற்றுக்கொள்ளலாம்

306, Kandy Road, Pungankulam Junction,
Ariyalai.Jaffna
T.P: 021-221-1220, 0779122997

## IIS வழங்கி வரும் UK உயர் கல்வி

A/L 2013 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!, மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்காக காத்திருக்கும் மாணவர்களே! உங்களுக்கான விஷேட பிரிவு ஆரம்பம்.



# HND

CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT

Leading to DEGREE From UK, US, NZ, Australian Universities

மேற்படி துறைகளில் பிரித்தானிய பட்டத் தகைமைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை IIS வழங்குகின்றது

மாணவர்களுக்கு இலகு கல்விக் கடன் வசதி செய்து தரப்படும்

புதிய பிரிவு ஆரம்பம் 14/09/2013 காலை 10.00மணி

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk



அ.அலன்ராஜ்

வவுனியாவை சேர்ந்த நான் கணனித்துறையில் Software Engineering பட்டக்கல்வியை மேற்கொள்வதற்காக IIS CITY CAMPUS ஐ தெரிவு செய்தேன். அவர்களின் தொழில் நுட்ப ரீதியானதும், நடை முறைக்கு ஏற்றதுமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை எனது இறுதிப் பயிற்சிக்காலத்தில் துல்லியமாக பிரயோகித்து முன்னணி நிறுவனம் ஒன்றில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.



கி.துவாரகன்

பொறியியல் துறையில் பெற்றோரின் ஆலோசனையின் பிரகாரம் எனது உயர் கல்விக்காக நான் IIS CITY CAMPUS ஐ தெரிவு செய்தேன். ஆற்றலும் அனுபவமும் மிக்க விரிவுரையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் வளங்கள் என்பன எனது உயர்கல்விக்கு உறுதுணையாக இருந்தது. அது மட்டுமல்லாது நிறுவனத்தின் சூழல் ஓர் முழுமையான உயர்கல்வி வளாகத்தில் கற்றுக் கொண்ட அனுபவத்தை எனக்கு அளிக்கின்றது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




# சர்வதேச தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன

சமபோஷ, எமது சிறந்த உற்பத்தி செயற்பாட்டு கட்டமைப்புக்காக சர்வதேச தரச்சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. முழு உலகுக்கும் நலச்செழுமையை வழங்கக்கூடிய ஆற்றலும், உறுதியும் வாய்ந்த தயாரிப்பாக வலுப்பெற்றுள்ளது.

200g - Rs. 55/-
80g - Rs. 28/-

Samaposha குடும்பத்தின் சமபல போசாக்கு

தேசத்தின் போசாக்குடன் ஒன்றிணைவோம்

CBL

# நிலவில் நீரின் மூலக்கூறு கண்டுபிடிப்பு

## நாசா விஞ்ஞானிகள் அறிவிப்பு



2009 ஆம் ஆண்டு நிலவில் நீர் மூலக்கூறுகள் இருப்பதாக நாசா கூறியது. எனினும் நீர் படிமங்களாக இருப்பதாகவும் சூரியப் புயல் ஏற்பட்டபோது நீர் மூலக்கூறுகள் உருவாகி பின் படிமங்களாக மாறியதாகவும் கூறியது.
இந்நிலையில் புதிய ஆராய்ச்சியின் படி சூரியப் புயலால் நீர் மூலக்கூறுகள் உருவாகியிருக்க வாய்ப்பு இல்லை என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். நிலாவின் சுற்று வட்டப்பாதை மற்றும் அதன் மேற்பரப்பில் மேற்கொண்ட ஆய்வில் நிலவிலிருந்து சில துகள்கள் சேகரிக்கப்பட்டன. அந்தத் துகள்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அதில் ஹைட்ராக்சில்' மூலக்கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டது. ஒரு ஒட்சிசன் அணுவும் ஒரு ஹைதரசன் அணுவும் இணைந்ததே ஹைட்ராக்சில் எனப்படுகிறது. இதன்மூலம் நிலவில் நீர் மூலக்கூறுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
நிலாவின் மேற்பரப்பை ஆழமாக ஆராய்ந்து, சந்திரயான் - 1, அனுப்பிய தகவல்களின் மூலம் ஒரு காலத்தில் நிலாவில் நீர் இருந்ததும் தற்போது படிம நிலையில் இருப்பதும் தெரிய வந்துள்ளது. சந்திரயான் அனுப்பிய தகவல்களின் மூலம், நிலாவில் நீர் மூலக்கூறுகள் இருப்பது உறுதிசெய்யப் பட்டுள்ளதை அடுத்து அங்கு நிலவும் தட்ப வெட்ப நிலைக்கான காரணங்கள் நிலா உருவான விதம் அதில் நிலவும் குறைந்த ஈர்ப்பு விசைக்கான காரணம் அதன் ஆயுள் காலம் போன்ற தகவல்களை அறியும் முயற்சியில் நாசா ஈடுபட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், இஸ்ரோ' அனுப்பிய, சந்திரயான் - 1' விண்கலம், நிலவைப் பற்றிய பல அரிய தகவல்களை அனுப்பியுள்ளது. இதன்மூலம் நிலவில் நீர் மூலக்கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் நாசா உறுதி செய்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் 'இஸ்ரோ' நிலவைப்பற்றிய ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக சந்திரயான் - 1' விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. அது நிலவைப் பற்றிய பல அரிய தகவல்களை அனுப்பி வருகிறது. இதன் மூலம் நிலாவில் உள்ள பாறைகள், மலைகள் மற்றும் படிமங்கள் பற்றிய தகவல்களைப் பெற முடிகிறது.
இதனிடையே சந்திரயான் -1 அனுப்பும் தகவல்களை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நாசா தொடர்ந்து கவனித்து வருகிறது. இதற்கு முன்



# ரயில் என்ஜினை உடலில் கட்டி இழுத்து சாதனை படைத்த மனிதர்கள்

லத்வியாவைச் சேர்ந்த அறுவர், 254 தொன் எடையுள்ள ரயில் என்ஜினைத் தமது உடலில் கட்டி இழுத்துச் சாதனை படைத்துள்ளனர். ஐரோப்பாவின் மிகப் பல சாலி மனிதர்கள் என்ற சாதனையைப் படைப்பதற்காக, லத்வியாவின் ரிகா சிட்டி நகரில் அண்மையில் இவர்கள் ரயில் என்ஜினை உடலில் கட்டி இழுத்தனர். 1972 ஆம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த ரயில் என்ஜின் 120 கார்களுக்கு அல்லது 50 யானை களின் எடைக்குச் சமமானதாகும். அவர்கள் ஏற்கெனவே லத்வியாவின் அதி பலசாலி மனிதர்கள் என்ற சாதனையாளராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சாதனையை யொட்டி அன்றைய தினம் முழுவதும் லத்விய ரயில் வரலாற்று நூதனசாலையில் விசேட கண்காட்சிகளும் இடம்பெற்றன.

தலைசிறந்த மருத்துவர்கள், உயர் தாதியாளர் சேவைகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன்

## தேசத்தின் முன்னோடி தனியார் மருத்துவமனை

**இதுவரையில் 10,000 ற்கும் மேற்பட்ட இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்துள்ளது.**

NAWALOKA HOSPITALS PLC



| தடுப்பு பெக்கேஜ் Prevention Package | Rs. ரு. |
|---|---|
| இதயநோய் பரிசோதனை பெக்கேஜ் Cardiac Screening package | 11,000 |
| சிகிச்சை பெக்கேஜ் Treatment Package | Rs. ரு. |
| அஞ்சியோகிராம் Angiogram | 38,500 |
| P.T.M.C. | 100,000 |
| ASD - டிவைஸ் ASD-Device | 112,000* |
| P.T.C.A - ஸ்டென்டிங் P.T.C.A - (Stenting) | 150,000** |

*மருந்துகள் கட்டணங்கள் இங்கு உள்ளடக்கப்படவில்லை

| பெக்கேஜ் Package | Rs. ரு. |
|---|---|
| வென்றிகியூலர் செப்டல் டிபெக்ற்(VSD) Ventricular Septal Defect (VSD) | 460,000 |
| பல்மோனரி வெலுவோப்பிளாஸ்டி (1 பலூன் உபயோகித்து) Pulmonary Valvuloplasty (If 1 balloon used) | 132,000 |
| பல்மோனரி வெல்வுலோப்பிளாஸ்டி (2 பலூன் உபயோகித்து) Pulmonary Valvuloplasty (If 2 balloons used) | 200,000 |
| ஏட்ரியல் செப்டல் டிபெக்ற் Atrial Septal Defect (ASD) | 375,000 |
| CABG (மாற்றுவழி அறுவை சிகிச்சை) CABG (Bypass surgery) | 495,000 |
| PDA (பெரியோர்) PDA (Adult) | 210,000 |
| PDA (சிறுவர்) PDA (Child) | 180,000 |

இதய அறுவைச் சிகிச்சைக்கு இலங்கையில் தலைசிறந்த மருத்துவமனை, நவலோக்கா மருத்துவமனை என்பதனை நமது மக்கள் நிரூபித்துள்ளனர். இதுவரையும் வெற்றிகரமாக 10,000 ற்கும் மேற்பட்ட இதய அறுவைச் சிகிச்சைகளை நாம் செய்துள்ளோம். அறுவைச் சிகிச்சை எதுவாயினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு தேவையற்ற கட்டணங்களைக் காண்பித்து உங்களை அந்தரத்தில் விடும் மனப்பாங்கு நவலோக்கா மருத்துவமனைக்கு இல்லை. நாம் வழங்கியுள்ள பெக்கேஜிகளில் சிகிச்சைகளுக்கான செலவுகளை தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். செலவுகளை அறிந்துகொண்ட பின்பே நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறீர்கள்.

இதயத்தைக் காப்பாற்றிட வரும் உங்கள் மனதில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த நாம் தயார் இல்லை. இதய அறுவைச் சிகிச்சைக்காக நவலோக்கா மருத்துவமனையை தெரிவு செய்யும் உங்கள் தீர்மானம் சரியானது என்பதற்கு எமது வெளிப்படைத்தன்மையே முக்கிய காரணமாகும்.

தனியார் மருத்துவத் துறையில் முன்னோடியாக திகழும் நவலோக்கா மருத்துவமனை, நவீன தொழில்நுட்பத்தில் பரிபூரணமானதாகும். பல விருதுகள் வென்ற தலைசிறந்த மருத்துவமனையாகும். திறமையான மருத்துவ நிபுணர்களும் ஊழியர் படையணியும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நவலோக்கா மருத்துவமனை உங்கள் நம்பிக்கையை வென்றுள்ள மருத்துவமனையாகும். அத்தோடு ISO 9001-2008 தரச்சான்றிதழைப் பெற்றுள்ள இலங்கையின் ஒரேயொரு தனியார் மருத்துவமனையும் இதுவாகும்.

Google play

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 0112 335 825 / 0773 815 832

www.nawaloka.com

# செங்குத்தாக அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய பசுமைத்தோட்டம்





10 ஆயிரத்துக்கும் அதிகமான தாவரங்களைக் கொண்டு பிரிட்டனின் மத்திய லண்டனில் 68 அடி உயரமான சுவரில் செங்குத்தான தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செங்குத்தான பசுமைத் தோட்டமுள்ள சுவர் விக்டோரியா நிலையத்துக்கு அண்மையில் உள்ளது. கண்கவரும் வகையில் அமைந்துள்ள செங்குத்து தோட்டத்தால் கடும் மழைக் காலத்தில் மத்திய லண்டனில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 10 ஆயிரம் தாவரங்களில் பட்டர்கப்ஸ், ஸ்டோபரி என 20 பருவகால தாவரங்களும் உள்ளனவாம்.

இத்திட்டமானது லண்டன் முதல்வர் பொரிஸ் ஜோன்ஸனால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தலைநகரின் சூழல் சவால்களை எதிர்கொள்ளும் நோக்கிலேயே இத் தோட்டம் வடிவமைக் கப்பட்டுள்ளது. கெரி க்ரேன் ஒப் க்ரீன் ரூப் கொன்ஸல்டிங் என்ற நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட இச்சுவரை ட்ரீபொக்ஸ் என்ற நிறுவனம் பாராமரிக்கின்றது. இதுகுறித்து ட்ரீபொக்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் ஆர்மன்டோ கூறுகையில், வருடம் முழுவதும் இந்தச்சுவர் பூத்துக்குலுங்கும். பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், வண்டுகள் என உயிரின் பல்வகைமையும் விக்டோரியாவில் பேணப்படும்.

உயிர்ப்பல்வகைமையை இது ஊக்குவிக்க உதவும். அத்துடன் சுற்றுச்சூழலும் இயற்கையாக மாறும் எனத் தெரி வித்துள்ளார். இதற்கு முன்னரும் இதேபோன்ற தொரு செங்குத்துத் தோட்டம் 2005ஆம் ஆண்டு லிங்டன் நகரில் உருவாக்கப்பட்டது. ஆனால் நீர் வழங்கல் முறைகள் திருப்தியளிக்காமல் தாவரங்கள் அழிவுற்றமையால் அத்திட்டம் முடிவுக்கு வந்தது.






## வாத்துக்களை விரட்டும் கனடா டிரோன்கள்

உலக நாடுகள் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தவும், உளவு பார்ப்பதற்குமே ஆளில்லா விமானங்களைப் (டிரோன்) பயன்படுத்துகின்றன. ஆனால் கனடாவிலோ ஆளில்லா விமாணங்கள் வாத்துக்களை விரட்டுவதற்கே பயன்படுத்தப்படுகின்றது என்பது வேடிக்கையான விடயம். கனடா தலைநகர் ஒட்டாவாவில் ஜீஸ் எணப்படும் வாத்து போன்ற பெரிய வடிவிலான பறவைகள் பெரிய அளவில் உள்ளன.

அவை கூட்டம் கூட்டமாக ஒட்டாவாவில் உள்ள ஆற்றில் இறங்கி ஆற்றையே ஆக்கிரத்துக் கொள்கின்றன.

அதனால் ஆற்று நீர் மாசுபடுவதுடன், சுற்றுலாப் பயணிகளும் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர். இவற்றைவிரட்டுவதற்கு ஆளில்லா விமாணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆளில்லா விமாணங்கள் தாழ்வாகப் பறந்து ஆற்றை ஆக்கிரமிக்கும் வாத் துக்களை நீரில் இருந்து விரட்டி யடிக்கின்றன. நாள் முழுவதும் அந்த விமானங்களுக்கு இது தான் வேலையாம். (ற)



# சிறந்த சேவையை வழங்கும் 'புளூ ஓஷன்' என்ஜினியரிங்

இன்று பலம் வாய்ந்த நிறுவனமாகத் திகழும் புளூ ஓஷன் குழுமம் ஒரு பல்துறைக் கட்டமைப்பாக வளர்ச்சியடைவதற்கு அந்த நிறுவனம் கடந்த காலங்களில் முன்னெடுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளே காரணமாகும். முன்னேற்றத்தையும் இலாபத்தையும் தனது வியாபாரத்தின் தார்மீக நோக்கமாகக் கொண்டு புளூ ஓஷன் குழுமம் செயற்பட்டு வருகின்றது. தனது பிரதான வர்த்தக இலச்சினையாக புளூ ஓஷன் இல்லங்களைக் கொண்டுள்ள இந்தக் குழுமம் அதன் சீரிய நெறியாள்கை, புத்தாக்கம், புதிய சிந்தனைகள் போன்றவற்றை ஆக்கபூர்வமாகவும் துணிவுடனும் முன்னெடுத்து வந்ததன் மூலம் இலங்கையில் மட்டுமன்றி, ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலும் தனது காலடிகளை வெற்றிகரமாகப் பதித்துள்ளது.

இந்தக் குழுமத்தின் தலைவரான எஸ்.துமிலன் தனக்கே உரித்தான , தெளிவான தொலைநோக்குடன் கல்வி, பொறியியல், காணி வர்த்தகம் (ரியல் எஸ்டேட்), கட்டுமானம், கூட்டுறவு, ஆலோசனை, பொது வணிகம், மின்னியல் மற்றும் பொறியியல் ஆலோசனை உட்பட பல்வேறு துறைகளில் தனது நிறுவனத்தை ஈடுபடுத்தியுள்ளார். புளூ ஓஷன் நிறுவனம் பல்வேறு துறைகளில் வெற்றிகரமாகப் பிரகாசிப்பதற்கு அந்த நிறுவனத்தின் "மிகவும் மதிக்கப்படுகின்ற யதார்த்தமான, உறுதிமிக்க சமூகப் பொறுப்புணர்வு கொண்ட நிறுவனம்" என்ற அடிப்படைச் சித்தாந்தமே மூலகாரணமென துமிலன் சுட்டிக் காட்டுகிறார். "அபிவிருத்தியின் உருவாக்கம் , புதுமைகளின் பிரயோகம் ஆகிய வற்றின் மூலம் சிருஷ்டிக்கப்பட்டதும், போட்டியிட முடியாத துமான சூழ் நிலையில் இலாபமீட்டுதல்" என்பதே இந்த நிறுவனத்தின் வர்த்தகக் கோட்பாடாகும்.




இந்த ஆணித்தரமான கோட்பாட்டின் அடிப்படையில் ஆசிய, பசுபிக், ஐரோப்பிய, மத்திய கிழக்கு மற்றும் கிழக்காசியப் பிராந் தியங்களின் பிரதான சந்தைகளில் புளூ ஓஷன் தனது காலடிகளை ஸ்திரமாகப் பதித்துள்ளது. கட்டட நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் பொறியியல் துறையில் நிபுணத்துவம் கொண்டதும், இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத் தைப் பெற்றதுமான 'புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ்' எனும் பிரதான வர்த்தக இலச்சினையின் கீழ் இந்தக் குழுமம் பல்வேறு துறைகளில் பிரகாசித்து வருகின்றது. புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் கட்டட அமைப்பு, கட்டட மாதிரி , வரைபாக்கம், காணிச் சீரமைப்பு, வசதிகள் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட கட்டட நிர்மாணத்தின் பல்வேறு பரிணாமங்களில் விசேட நிபுணத்துவத்துடன் செயலாற்றுகின்றது. புளூ ஓஷன் ரெஸி டென்ஸின் தனித்துவமானதும், நிபுணத்துவம் மிக்கதுமான சேவையின் மூலம் கட்டட குத்தகையாளர்களும், வாடிக்கை யாளர்களும் தங்களது பிரச்சினைகளை சுலபமாகத் தீர்த்துக் கொள்கிறார்கள். தனியார் இல்லங்கள் உட்பட பல தரப்பட்ட கட்டட நிர்மாணப் பணிகளில் புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் தனதுபங்களிப்பைசிறப்பாகச்செய்துவருகின்றது.

புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் நிறுவனத்துக்கு மேலதிகமாக இந்தக் குழுமம் பல்வேறு இணை நிறுவனங்களையும் உரு வாக்கியுள்ளது.

குழுமத்தின் பரந்த ஆதிக்கத்துக்கு உதாரணமாக அறிவு சார் வர்த்தகக் கல்வி, வர்த்தகத் துறையில் வெற்றிகர மாகக் கால் பதிக்கக்கூடிய இளம் தலைவர்களை உருவாக்குகிறது. அறிவு சார் இணைப்பமைப்பு (எஸோசி யேட்ஸ்) உறுதிப்பாடு, வரி மற்றும் நிதி சார் ஆலோசனை சேவைகளை வழங்கும் முன் னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது.

புளூ ஓஷன் புரொப்பட்டீஸ் ஆதனங்களை வாங்கும், விற்கும் வியாபாரத்தைப் பிரதானமாகக் கொண்டுள்ளது. புளூ ஓஷன் இன்வெஸ்ட்மென்ட் ரியல் எஸ்டேட் சந்தைகளில் வாடிக்கையாளர்கள் முதலீடு செய்ய வழி வகுக்கிறது. குளோபல் எரீனா தரமான, தலை நுணுக்கமுள்ள தளபாடங்களை மலேசியா, சீனா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

öí>Â z¿}Ý]| KBBS (Knowledge Base) ACCA, CIMA, CA ஸ்ரீலங்கா ICAEW போன்ற அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் வகுப்புக்களை நடத்துவதற்காக நிறுவப்பட்ட முன்னோடிக் கல்வியகமாகும். இந்தக் கல்வியகம் மூலமாக கணக்கியல் வரலாற்றில் பல்வேறு சாதனையாளர்கள் உருவாக் கப்பட்டுள்ளதுடன் சிறந்த செயற்பாட்டுக்காக ஏராளமான பரிசுகளும் பெறப்பட்டுள்ளன. KBBS இன் ஆரம்ப காலம் தொடக்கம் ஏராளமான வெற்றியாளர்கள் உருவாக்கியுள்ளதுடன் ACCA மற்றும் CA இல் 16 பாட விருதுகளை யும் பெற்றுத் தந்துள்ளது. தொழில் தருநர் களால் பெரிதும் வரவேற்கப்படும் தகுதி பெற்ற கணக்காளர்களையும் ஏனைய கணக்கு வல்லுநர்களையும் KBBS உருவாக்கி சாதனை புரிந்துள்ளது.

# நிர்மாணப் புரட்சியில் சினைடர் இலக்ட்ரிக்

இலங்கை தற்போது நிர்மாணத்துறை புரட்சியில் வெற்றிகண்டு வருகிறது. நாட்டை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் பல்வேறு பகுதிகளில் சர்வதேச தரங்களுக்கமைய பெரும் நிர்மாண செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்ட வண்ணமுள்ளன.

இதற்கமைவாக, இலங்கையில் அனைத்து தரப்பினராலும் பரவலாக வரவேற்கப்படும் நிர்மாணத்துறை சார்ந்த கண்காட்சியான "Construction & 2013' அண்மையில்கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொடர்ச்சியாக 13ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த கண்காட்சி நிர்மாணத்துறையில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் வகையில் அமைந்துள்ளதுடன், நிர்மாணத்துறை, பொஷியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச இந்தக் கண்காட்சியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தார்.

வலு முகாமைத்துவ தீர்வுகளை வழங்குவதில் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற நிறுவனமான சினைடர் இலக்ட்ரிக் நிறுவனம், இலங்கை தேசிய நிர்மாண சங்கத்துடன் öçǒ Í m "Construction & 2013' கண்காட்சிக்கு பிரதான அனுசரணையை வழங்கியிருந்தது.

2001 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் சினைடர் இலக்ட்ரிக் நிறுவனம், நிர்மாணத் துறையில் அவசியமான வலு முகாமைத்துவம் தொடர்பான தீர்வுகளை வழங்கி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையில் தனது வர்த்தகத்தை மூன்று மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளதுடன், தனது வாடிக்கையாளர்களுடன் உறுதியான பங்காண்மையையும் பேணி வருகிறது. இலங்கையர்களின் நம்பிக்கையை வென்ற வர்த்தக நாமங்களான இலெக்ட்ரோ சேர்வ், பியான்கோ, மெட்ரோபொலிடன் மற்றும் ஏசிஎல் கேபிள்ஸ் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து தயாரிப்புகளையும் சேவைகளையும் வாடிக்கையாளர்களின் வாசற்படிக்கே கொண்டு வருவதற்கான முழுமையான வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

## பான் ஏசியா வங்கியின் 'சம்மான' கடன் திட்டம்

யாழ்ப்பாணம் பான் ஏசியா வங்கி யினர் 12 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஓய்வூதியம் பெறுவோருக்கு'சம்மான' என்னும் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தி அது தொடர்பான கடி தங்களை ஓய்வூதியர்களுக்கு அனுப்பியுள்ளனர்.

கடன்கள் சிறப்பு அம்சமாக பொறுப் புகளோ பிணைகளோ எதுவுமின்றி குறைந்த ஆவணங்களுடன் இலகு வாகப் பெற்றுக்கொள்ள முடியும். 5 லட்சம் ரூபா வரை வழங்கப்படும் கடனை 70 வயது வரை செலுத்த முடியும். கடனாளிகளுக்கு மரணம் சம்பவித்தால் அவரது குடும்பத் தினருக்கு கடன் சுமையை வழங் காமல் காப்புறுதியினால் கடன் தொகை விலக்கப்படுமெனவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். யாழ்ப்பா ணம், இல.570 ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வங்கியுடன்தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (த-9)

நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறிகள்.
After A/L
Medical Laboratory Technology Assistant
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி
நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக
க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.
6 மாத நிறுவனத்தின் மூலமான பயிற்சியின் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.

O/L பின் School of Nursing IVA
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

உள்ளூர் , வெளியூர் தாதியர் தொழில் வாய்ப்புக்கள் பெருமளவிலே பெற்றுக் கொடுத்திருக்கின்ற ஒரே தாதியர் பாடசாலையில் பாடநெறிகளுக்கு தற்போது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.
பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.
நுழைவுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்
க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்
இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும் , தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு.
மருந்தாளர் டிப்ளோமா பாடநெறி
அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.
தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.
நடத்துபவர் : வைத்தியர் ராஜவேலாயுதம்
ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

| மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | வவுனியா | அனுராதபுரம் | பதுளை |
|---|---|---|---|---|
| இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352, 0718-722 353 | இல 323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353 | இல. 109, மன்னார் வீதி, சாந்தி க்ளினிக், வவுனியா. தொ.பே. 0718-722 351, 0718-722 353 | இல 396/3, கவசெவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதொரஹ அனுராதபுரம். தொ.பே. 0718-722 355 | இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354 |
| **கண்டி** | **கம்பஹா** | **பாணந்துறை** | **தங்காலை** | **இரத்தினபுரி** |
| சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980, 0710-336 329 | 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775 | இல 36, சுவமெதுர வைத்தியசாலை, சுசந்த மாவத்தை, பாணந்துறை தொ.பே. 0710-336 332 | ஆரோக்யா வைத்தியசாலை, முஹுது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்காலை தொ.பே. 0710-336 334 | இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980 |

இத்தாலி, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து உட்பட மேற்கத்திய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள், இந்தியாவிலும் வைத்தியத் துறையிலே வைத்தியசாலைகளில் பயிற்சி பெற்ற தாதியர்களுக்கு வேலைவாய்புகளும், வைத்தியத்துறையுடன் தொடர்புடைய இன்னும் பல துறைகளில் பெருமளவிலான வெற்றிடங்கள் நிலவுகின்றன.
Registered Education Institute in the republic of Sri Lanka
பிரதான காரியாலயம்
அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் சுற்று வீதி, பிரடி கட்டடம், இரத்தினபுரி.
NTS
P.V. 91973
ரூ 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com
விண்ணப்பப்படிவ பிரதிகளை எமது இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். Web : schoolofnursingiva.laknet.lk
(C/11674)(6.3)

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01 09 2013


# நீதி தேவதை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் நவி பிள்ளையின் வடக்கு வருகையின் போது அவரைத் தமிழ் மக்கள் நீதி தேவதையின் மறு அவதாரமாகப் பார்த்தார்கள். அவரிடம் தங்கள் குறைகளைச் சொன்னது மனப் பாரம் குறைந்தது போன்று இருந்ததாக அவர்கள் கூறினார்கள். இத்தனை வருடங்களாக நெஞ்க்குள்ளேயே அடக்கி வைத்திருந்தவற்றைக் கொட்டித் தீர்த்த நிம்மதி அது. அந்தளவுக்கு மக்களுக்கு நவி பிள்ளை மீது நம்பிக்கை. இனி அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை. அதை அவர் காப்பாற்றுவாரா என்பது அடுத்து வரும் மாதங்களில் தெரிந்து விடும்.



## போய்வா மகனே

மழையில் நனைந்த கோழிக்குஞ்சுபோல அவன் பதுங்கிப் பதுங்கி நடந்துகொண்டிருந்தான். தாயைப் பற்றியிருந்த கை நடுங்கிக்கொண்டிருந்தது. விழிகளில் சாவு பற்றிய பயம் அப்பட்டமாகத் தெரிந்தது. கால்களில் தடுமாற்றம். பக்கத்தில் வந்துகொண்டிருந்த ஒருவரின் உடலில் காயம் பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறிய குருதியின் வெடுக்கு எல்லா இடமும் பரவியபடியிருந்தது. தாய் அடிக்கடி உலகத்திலுள்ள எல்லாத் தெய்வங்களையும் மத வேறுபாடின்றி மனதுக்குள் வேண்டிக்கொண்டே அவனை நடத்திக் கொண்டு சென்றாள். அவனுக்கு இல்லாத நம்பிக்கை அவளுக்கிருந்தது. பாதர் தானே கூட்டிக்கொண்டு போறார். அதால அவங்கள் ஒண்டும் செய்யமாட்டாங்கள் அடிக்கடி இந்த வார்த்தைகளை மந்திரம் போல சொல்லிக்கொண்டாள். அந்த மந்திரம் வேலை செய்யவும் தவறவில்லை. அவள் சொல்லச்சொல்ல தடுமாறிக்கொண்டிருந்த அவனது கால்களில் நிதானம் பிறக்கத் தொடங்கியது. சுற்றிலும் பார்த்தான். எல்லாமே பெரிய தலைகள். நேற்றுவரைக்கும் விடுதலையை மட்டுமே உயிர் மூச்சாக வரித்திருந்தவர்கள். தமக்கெனக் காத்திருந்த குடும்பத்தவர்களை மறந்து மக்களைக் காக்கவென களத்தில் நின்றவர்கள். ஆயுதங்களின் மௌனிப்போடு அவர்களின் நிலை வெள்ளைக்கொடியில் ஊசலாடிக்கொண்டிருந்தது. அவர்களும் இப்போது கிறிஸ்தவ மதகுருவையே மலையாக நம்பினார்கள். அவர் மூலம் தமக்கான சிலுவை அறைதலில் இருந்து ஏதேனும் விடிவு கிடைக்கலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு. இத்தனை நாளும் பிரிந்திருந்த குடும்பத்தாரோடு சேர்ந்து யாரை எதிர்த்துப் போராடினார்களோ அவர்களின் காவலரண்களை நோக்கி கைகளில் வெள்ளைக் கொடிகளோடு நடக்கத் தொடங்கினார்கள். எஞ்சியிருந்த போராளிகளை காக்க அவர்களும் உயிரோடு வெள்ளைக் கொடி ஏந்தி வரவேண்டும் என்ற நிபந்தனை அவர்களின் சயனைட் குப்பிகளை மறக்கச் செய்திருந்தது. இன்னும் கொஞ்சத் தூரம்தான் வட்டுவாகல் பாலம் வந்துவிடும்.

அவன் அப்பாவி. குண்டுச் சத்தம் கேட்டாலே நாலைந்து முறை ஒண்டுக்கு போய்விடும். அவ்வளவு பயம். அவன் அண்ணா கண்முன்னே விமானக் குண்டுத் தாக்குதலில் சிதறியதிலிருந்து அவனுக்கு அப்படித்தான். கடைசியாய் தனக்கு கொள்ளிபோட மிஞ்சியிருந்த பிள்ளையையும் போராட்டத்துக்கு அனுப்ப தாய்க்கு மனமில்லை. இயக்கத்துக்கு ஆள் சேர்ப்பவர்களின் கண்களிலிருந்து தப்பிக்க அவள் ஒவ்வொரு நாளும் போராடவேண்டியிருந்தது. தங்கியிருந்த கூடாரத்துக்குக் கீழே கிடங்குவெட்டி, பரல் தாட்டு அதற்குள் பகல் முழுதும் அவனை ஒளித்து வைக்கவேண்டிய நிலை. இல்லாவிட்டால் அவனும் குறுங்காலப் பயிற்சியோடு எல்லைக்கு அனுப்பப்பட்டு விடுவான். பருந்திடமிருந்து குஞ்சுகளைக் காக்கும் கோழி போல எப்போதும் விழிகளில் கலவரத்தைப் பூசியபடி அடிவயிற்றில் எரியும் நெருப்போடு மகனுக்காக அவள் காவல்காத்தபடியிருந்தாள். ஒருநாள் அவளையும் மீறி அவன் போராட்டத்துக்குள் கொண்டு செல்லப்பட்டான். கைகளில் ஆயுதங்களோடு நின்ற மகனைப் பார்த்து அவள் குளறி அழத்தான் முடிந்தது. ஆனால் நல்ல வேளையாக கடைசிவரை அவனுக்கு எதுவுமே நடக்கவில்லை.

இப்போது சண்டை முடிந்து விட்டது. இயக்கத்தின் ஆயுதங்கள் மௌனித்துப் போயிருந்தன. வாகனங்கள் புகையாகின. மதகுருவின் தலைமையில் சரணடையச் செல்லும் குழுவில் தன் மகனோடு அவளும் சேர்ந்துகொண்டாள். தனியப் போவதிலும் பார்க்க இப்படி ஒரு மதகுரு தலைமையில் செல்வது பாதுகாப்பானது என அவள் எண்ணினாள். குழந்தை குட்டியளோட சரணடையிற ஆக்கள அவங்கள் ஒண்டும் செய்யமாட்டாங்கள் மனதுக்குள் தோன்றிய நம்பிக்கைகளை உரத்தகுரலில் உச்சாடனம் செய்யத் தொடங்கினாள். காவலரண்களைக் கால்கள் தொட்டிருந்தன. முகப்பில் கரி பூசிய முகத்தோடும் சட்டித் தொப்பியோடும் பயமுறுத்தும் சாதாரண சிப்பாய்கள் இருக்கவில்லை. சீருடையில் நீலம், பச்சை, மஞ்சள் என் வெவ்வேறு விதமான பட்டிகளும் பதக்கங்களும் தொங்க சிரித்தமுகத்தோடு வரவேற்றவர்கள் அதிகாரிகள் தான்.

பிறகென்ன பெரியவங்களே வந்து கூட்டிக்கொண்டு போறதால எந்தப் பயமும் இல்லை இதுவும் அந்தத் தாயின் நம்பிக்கைதான். எல்லோரது பெயர்களையும் பதிந்து தனியாக பிரித்தெடுத்தார்கள். தாயின் கரத்தை அவன் கைவிட நேர்ந்தது.

பயப்பிடாதையப்பு. ஒண்டும் நடக்காது. உண்மையை ஒளிக்காமல் சொல்லு. விசாரிச்சுப் போட்டு விட்டுடு வினம். கண்களில் சுரந்த நீரை மறைத்துக் கொண்டு வாகனத் தில் ஏற்றப்பட்டுச் செல்லும் மகனுக்கு நம்பிக்கை ததும்பும் வார்த்தைகளோடு கையசைத்து விடை கொடுத்தாள் தாய்.



# பெருருக் கொள்ளும் கண்ணீர்

ஔண்யன்

## தேடலின் முடிவிலி...

பெருங்காடு. திக்குத் திசையெதுவும் கண்டுபிடிக்கமுடியாது. திரும்பிய பக்கமெல்லாம் விஷ ஜந்துக்கள். கால்களில் முட்கள் ஏறிக்கொண்டேயிருந்தன. நடந்த பாதையெங்கும் குருதி கோலமிட தன் மகனை தேடத் தொடங்கினாள் சந்திரமதி. இந்தக் காட்டுக்குள் தான் அவனெங்கோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் எங்கு வைக்கப்பட்டிருக்கிறான் என்பது மட்டும் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. மனம் போன போக்கில் காட்டின் இடையே நெளிந்து சென்ற பாதைகளில் பயணித்துக்கொண்டிருந்தாள். எல்லாப் பாதைகளும் சொல்லாமல் கொள்ளாமல் முடிந்துபோக மீண்டும்பழைய புள்ளிக்கே அவள் திரும்பவேண்டியிருந்தது. ஆயினும் எல்லாப் பாதைகளிலும் இன்னும் நிறையச் சந்திரமதிகள் தங்கள் லோகிதாசன்களை இவளைப் போலவே தேடித்தேடிக் களைத்தபடி இருந்தார்கள்.

மகனே லோகிதாசா! எல்லாச் சந்திரமதி களின் உதடுகளிலிருந்தும் பிறந்த கூவல் காட்டை அதிரச் செய்துக்கொண்டிருந்தது. ஆனாலும் பச்சை மரங்கள் எந்த சலனத்தையும் காட்டவில்லை. எங்கே லோகிதாசனை ஒளித்து வைத்திருக்கின்றோம் என்று கூட அந்த மரங்கள் சின்னக் குறிப்புத் தானும் தர வில்லை. மரங்களுக்கு தாய்களின் கண்ணீ ரும், கதறலும் புரியுமா என்பதும் சந்தேகம் தான். இருளும் பச்சையும் போர்த்திக்கொண்டு காட்டை ஒரு ஒளித்து விளையாடும் இடமாக மரங்கள் மாற்றியிருந்தன. இந்த விளையாட் டில் சிக்கிக் கொண்ட ஆயிரக் கணக்கான லோகிதாசன்களை மீட்கவழிதெரியாமல், இழக்க வும் மனமில்லாமல் மந்திரித்து விட்டவர்கள் போல சந்திரமதி கள் அந்தக் காட்டையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள். கானல்நீர் போல காட்டினிடையே எழும் சில விம்பங்கள் லோகிதாசனாகவே அவ[illegible]ருக்குத் தெரிய அந்தத் திசை நோக்கி ஓடுவார்கள். ஓ[illegible]வர்கள் அதே வேகத்தில் குறுக்கே நிற்கும் மரம் ஒன்றோடு மோதி குருதி வழிய விழவேண்டி இருந்தது. இன்னும் சில கணங்களில் மீட்பர்களாக தமது தலையின் பின்னே ஒளி வட்டங்களைச் சூடிக்கொண்டவர்களின் வருகை காட்டினிடையே நிகழ்ந்தபோதெல்லாம் லோகிதாசனின் படங்களை கையிலேந் திக் கொண்டு கண்ணீர் விட்டுக் கதஷி னார்கள். மரங்களால் சூழப்பட்ட காட்டின் இருண்மைக்குள் ஒளிவட்டங்களின் துணை கொண்டு லோகிதாசனை கண் டறியுங்கள் என்பதே சந்திரமதிகளின் புலம்பலாக இருந்தது. ஆனாலும் மரங் களின் இருண்மையைக் கலைப்பதென் பது ஒளி வட்டங்களுக்கு இயலாத காரியம் தோல்வியோடு ஒவ்வொரு மீட்பர்களும் சந்திரமதிகளுக்கு மௌனத் தையே பதிலாகக் கொடுத்து விட்டு நாணிக் கொண்டிருந்த ஒளி வட்டங்களை முக் காடிட்டு மறைத்த படி நழுவிக் கொண்டி ருந்தனர். கடைசி யில் பெருமாட்டியின் வருகையின் போது அதே கண்ணீரும் அதே கதறலும் அதே புகைப் படமும் சுமந்தவர்களாக தரையில் புரண்டனர் சந்திரமதிகள். அவர்களின் தேடல் தொடங்கிய காலத்தில் உகுக்கப்பட்ட கண்ணீரின் துளிகளெல்லாம் பேருருக் கொண்டு என்றோ ஒருநாள் காட்டை அடித் துச் செல்லும் என்று நம்பிக்கொண்டே இன்னமும் விழி நீரைச் சொரிந்தபடியே இருக்கிறார்கள்.



## அட்சய பாத்திரமும் அறிக்கையும்

கறையான்களுக்கு சுக்கிரதிசை. இருந்த இடத்திலேயே நேரம் தவறாமல் கிடைக்கிறது உணவு. அதுவும் தேவைக்கு அதிகமாக. எத்தனையோ நல்ல இடங்கள் கிடைத்தபோதும் இந்தக் கூடையை விட்டு அகல்வதற்கு கறையான்களுக்கு மனமிருக்கவில்லை. அட்சயபாத்திரம் பற்றிய கதைகளையெல்லாம் தாங்கள் அரித்துத் தின்னும் காகிதங்களில் அந்தக் கறையான்கள் கண்டதுண்டு. ஆனாலும் நேரில் பார்த்ததில்லை. அவற்றுக்கென்னவோ தாம் குடியிருக்கும் இந்தக் கூடைதான் அட்சய பாத்திரமாக இருக்குமோ என்ற சந்தேகம் நெடுநாளாகவே உண்டு. எத்தனையோ தசாப்தங்களாக இந்தக் கூடைக்குள் கட்டுக் கட்டாகக் காகிதங்கள் கறையான்களுக்காகவே போடப்படுகின்றன.

நாட்டில் எப்போதெல்லாம் கோபமும் குருதியும் பெருக்கெடுக்கிறதோ அதன் பின்னரான காலங்களில் காகிதக் குவியல் இந்தக் கூடைக்குள் வந்துசேர்ந்துவிடும். அதனால் எப்போதும் நாட்டில் குருதி கொப்பளித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதே கறையான்களின் வேண்டுதல். நிறைய ஒப்பந்தங்கள் மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான பக்கங்களோடு வந்துவிழும் அறிக்கைகளையே கறையான்கள் அதிகம் விரும்பின. வருடக் கணக்கில் வைத்திருந்து உண்ணலாம் அல்லவா. ஒவ்வொரு அறிக்கையும் ஒவ்வொரு சுவை. நாடாளுமன்றிலும், சர்வதேசத்திலும் உப்புச்சப்பற்ற அறிக்கைகள் என்று சொல்லப்பட்டவை கூட கறையான்களுக்கு தேவாமிர்தமாகச் சுவைத்தன. இப்போது ஒரே பெயரோடு நிறைய அறிக்கைகள். எல்லா அறிக்கைகளின் தொடக்கத்திலும் பிள்ளையார் சுழி போல காணாமல்போனோர் என்ற சொல் இருப்பதை கறையான்கள் கண்டிருக்கின்றன. இந்தச் சொல்லுக்குரியவர்கள் எங்கிருந்தாலும் நூறாண்டு வாழ்க என்று கறையான்கள் வாழ்த்தாத நாளில்லை. அதைவிடவும் காணாமல் போகடித்த புண்ணியவான்களையும் கறையான்கள் வாழ்த்தத் தவறுவதில்லை.

கடைசியாக கறையான்களுக்கு விருந்தானது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைதான். எல்லாப் பக்கங்களுமே மிக ருசியாக இருந்தன. [illegible]றினும் சில பக்கங்கள் ஜீரணிக்கக் கஷ்டப்பட்டன. அப்படியிருந்தும் எப்படியோ கறையான்கள் சாப்பிட்டுவிட்டன. இதைவிடவும் இன்னும் நிறைய அறிக்கைகள் காணாமல் போனோரின் பெயர் தாங்கிக் கொண்டு வரப்போவது கறையான்களுக்கு ஆனந்தமே.

திடீரென கூடைக்குள் கறையான்களின் விருந்துமேசையில் இருந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஒரு அவசரத்தனத்தோடு எடுத்து தூசு தட்டப்பட்டது. அதிலும் குறிப்பாக கறையான்கள் அரித்திருந்த காணாமல் போனோரின் பக்கங்கள் வெகுசிரத்தையோடு செப்பனிடப்பட்டன. தூசு முழுதும் துடைக்கப் பட்டது. வெளிப்பக்கத்துக்கு பளபளக்கும் உறை போடப்பட்டது. நறுமணம் வீசும் துகள்கள் பக்கத்துக்குப் பக்கம் தூவப்பட்டது. தூரப் பார்வைக்கு அந்த அறிக்கை புத்தம் புதுசாக ஜொலித்தது. கட்டியங்களின் ஓய்தலோடு நடை பயின்றார் நவிப்பிள்ளை. புத்தகப் பராமரிப்பு அவருக்குப் பிடித்திருந்தது. உள்ளே செல்லரித்துப் போயிருந்த பக்கங்கள் அவருக்கு தெரியவே இல்லை. அவசரப் பயணத்தில் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க அவருக்கு ஏது நேரம். அவரின் காலடியோசை தேய்ந்துகொண்டே செல்ல மறுநொடியே மீண்டும் கறையான்களின் விருந்து மேசையில் வந்து வீழ்கிறது ஆணைக்குழு அறிக்கை. இனியும் யாரேனும் வந்தால் எடுக்கக்பட்டு மீண்டும் அது விருந்துக்கே வந்து சேரும் என்பது கறையான்களுக்கு நன்கு தெரியும்

# சர்வாதிகார பாதையில் இலங்கை

## நவநீதம்பிள்ளை கவலை



இலங்கை அரசு அழைப்பு விடுத்து சுமார் இரண்டு வருடங்களுக்கு பின்னர், கடந்த 25 ஆம் திகதி ஒருவார கால பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று மாலை ஜெனிவா நோக்கிப் புறப்பட்டார்.

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் நேரில் ஆராய்ந்து - சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி, அது தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான தகவல்களை திரட்டுவதே அவரது பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன்படி வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மும்முனைகளிலும் அவர் முக்கிய சந்திப்புகளை நடத்தியிருந்தார். அரச தரப்பு, எதிரணி, சிவில் அமைப்புகள் ஆகியவற்றுடனான சந்திப்பும் இவற்றுள் முக்கியமானவையாகும்.

இந்நிலையில், பயணத்தின் கடைசி நிகழ்ச்சி நிரலுக்கமைய அவர் நேற்றுக் காலை கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். தனது இலங்கைப் பயணத்தின் நோக்கம், யார் யாரை சந்தித்துப் பேச்சு நடத்தினார், எதிர்காலத்தில் தான் மேற் கொள்ளவுள்ள நடவடிக்கை உட்பட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், அமைச்சர்கள் சிலரும் இலங்கையின் அமைப்புகள் பலவும் தனக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்துள்ள அவர், இலங்கை அரசு செய்ய வேண்டியுள்ள நடவடிக்கைகளையும் மீள நினைவுப்படுத்தியுள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர் மாநாட்டில் நவநீதம்பிள்ளை நேற்று ஆற்றிய உரையில் முக்கிய விடயங்களை ஆணித்தரமாக முன்வைத்திருந்தார். அதன் விவரம் வருமாறு -

### கருத்து

இதுபோன்ற உத்தியோகபூர்வ பயணங்களின் இறுதியில் வழக்கமாகச் செய்வதுபோன்றே, இலங்கையில் மனித உரிமைகளின் நிலை குறித்த அவதானங்களையும் கவலைக ளையும் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

என்னுடைய 7 நாள் பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசின் மூத்த அமைச்சர்களைச் சந்தித்தேன். வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர், பொருளாதாரத்துறை அமைச்சர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர், இளைஞர் விவகார மற்றும் தோட்டத் தொழிற்துறை அமைச்சர் (அவரே, மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்), பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் நான் சந்தித்தவர்களில் உள்ளடங்குவர். பிரதம நீதியரசர், சட்ட மா அதிபர், நாடாளுமன்ற சபாநாயகர், ஜனாதிபதியின் நிரந்தரச் செயலாளர் (அவரே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதைக் கண்காணிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவராகவும் இருப்பவர்) ஆகியோரையும்கூடச் சந்தித்துப் பேசினேன்.

தற்போதைய அரசில் அங்கம் வகிக்காத அரசியல்வாதிகளுடனும் நான் கலந்துரையாடினேன். எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஆகியோருக்கு மேலதிகமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் அடங்கிய வெவ்வேறான 8 குழுக்களின் பிரதிநிதிகள், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேசினேன். யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் அந்தந்த மாகாணங்களின் ஆளுநர்களிடம் இருந்தும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அதிகாரிகளிடம் இருந்தும் நான் கருத்துகளைப் பெற்றிருந்தேன்.

### அரசுக்கு நன்றி

இலங்கை வர எனக்கு அழைப்பு விடுத்தமைக்கும் எனது பயணத்தைத் திட்டமிட்டபோதும் மேற்கொண்ட போதும் மிகச் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியமைக்கும் அரசுக்கு நன்றி கூறுகின்றேன். நான் விரும்பிய எதையும் எங்கு வேண்டுமானாலும் சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவேன் என்று எனக்குக் கூறப்பட்டிருந்தது. இடைஞ்சல் தரும் சில சம்பவங்களைத் (அவை பற்றி பின்னர் குறிப்பிடுகின்றேன்) தவிர எனது பயணம் முழுவதும் அந்த வாக்குறுதிக்கு மதிப்பளிக்கப்பட்டது.

எந்த ஒரு நாட்டிலும் நான் மேற்கொண்ட பயணத்திலும் பார்க்க இது நீண்டதாக இருந்தபோதும் என்னைச் சந்திக்க விரும்பிய எல்லோரையும் என்னால் சந்திக்க முடியவில்லை என்பதை நான் மனதில் இருத்தியிருக்கிறேன். அதேபோன்று இலங்கை மக்களும் அரசும் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் அனைத்தையும் என்னால் கவனம் செலுத்த முடிந்ததா என்பது குறித்தும் மனதில் கொண்டிருக்கிறேன்.

### அறிக்கை சமர்ப்பிப்பேன்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மனித உரிமைகள் சபையிலே வாய்மூல அறிக்கை ஒன்றையும் அடுத்த வருடம் மார்ச் மாதம் முழுமையான எழுத்துமூல அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கும் வரையில், எனது இந்தப் பயணத்துக்குக் காரணம் என மிகத் தெளிவாகத் தெரியும் சில முக்கிய விடயங்களில் இன்று முதல் நான் தொடர்ந்தும் கவனம் செலுத்துவேன்.

இந்த மனித உரிமைகள் பிரச்சினைகளை நான் இரண்டு பிரிவுகளாக வகுக்கிறேன். முதலாவது, விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் 27 வருடங்கள் நீண்ட போருடன் தொடர்புபட்டவையும் அதற்குப் பின்னரானவையும். இரண்டாவது, முழு நாட்டுடனும் தொடர்புபட்டவை.

### ஐ.நா. தமிழ்ப் புலி முத்திரை

சில ஊடகங்கள், அமைச்சர்கள், மற்றும் இலங்கையில் உள்ள பல பரப்புரையாளிகள் என்னை விடுதலைப் புலிகளின் கருவி என்று வர்ணிக்கிறார்கள். என்னுடைய இந்தியத் தமிழ்ப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு பல ஆண்டுகளாக இந்த விமர்சனம் நீடிக்கிறது. புலிகள் எனக்குப் பணம் கொடுக்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். "ஐ.நாவில் இருக்கும் தமிழ்ப் புலி" என்று சொல்கிறார்கள். இது முற்றுமுழுதாகத் தவறானது மட்டுமல்ல இது முற்றிலும் எனக்கு எதிரானது. இந்த வகையிலான முறையற்ற பரப்புரைகள் கடந்த வாரங்களில் எல்லை தாண்டியிருந்தன. குறைந்தது 3 அமைச்சர்கள் இதனுடன் தொடர்புபட்டிருந்தார்கள்.

முதலில், நான் ஒரு தென்னாபிரிக்க குடிமகன். அது குறித்து நான் பெருமைப்படுகின்றேன்.

### புலிகள் கொலைகார அமைப்பு

அடுத்து, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு கொலைகார அமைப்பு. அது எண்ணற்ற குற்றங்களைப் புரிந்துள்ளதுடன் பல உயிர்களை அழித்துள்ளது. இதற்கு முன்னர் நான் இலங்கைக்கு வந்தது விடுதலைப் புலிகளால் 1999இல் தற்கொலைத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் நினைவு தினத்திற்காகத் தான் என்பதைக் குறிப்பிட்டுக்கூற விரும்புகின்றேன். விடுதலைப் புலிகளின் நினைவுகளை புலம்பெயர் நாடுகளில் தொடர்ந்தும் பூஜித்து வருபவர்கள் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். புலிகள் போன்ற இரக்கமற்ற அமைப்பைக் கொண்டா டுவதற்கு இடமேயில்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### வருத்தம் தெரிவிப்பு

முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்த போரின்போது நாடு முழுவதும் கொல்லப்பட்ட இலங்கையர்களுக்கு எனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர்களின் குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அனைவரும் (அது யாராக இருந்தாலும்) ஒரே விடயத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அது, ஈடுசெய்ய முடியாத இழப்பை அவர்கள் சந்தித்திருக்கிறார்கள் என்பதுதான். கொல்லப் பட்டவர்களினதும் காணாமற் போனவர்களினதும் இறந்து போயிருக்கக்கூடியவர்களதும் (பொதுமக்கள் மற்றும் படையினர்) உறவினர்கள் மற்றும் துணைவர்கள் பலரை இந்தப் பயணத்தின்போது நான் சந்தித்தேன். போர் முடிந்துவிட்டாலும் துன்பங்கள் ஓய்ந்துவிடவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

நான் பயணம் செய்த அனைத்து இடங்களிலும் காணாமற்போனவர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவினர்கள் மத்தியிலும் போரில் உயிர் தப்பியவர்களிடமும் ஏற்கனவே மன நெருக்கீடுகள் உருவாகி இருந்ததை அவதானித்தேன். அவற்றிலிருந்து அவர்கள் மீண்டும் வருகையிலும் மன நெருக்கீடுகளை எதிர்கொள்கிறார்கள். இறுதிப்போர் நடந்த முல்லைத்தீவின் நந்திக்கடல் ஓரங்களில் இடிபாடுகள், எரிந்த மீதிகள், ஷெல் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மரங்களின் கீழ் வாழ்பவர்களின் மத்தியில் குறிப்பாக இந்த நெருக்கீடுகளை அதிகம் அவதானிக்க முடிந்தது.

### மனைவியின் கதை மனதை உறுத்துகிறது

தடுப்பிலே, வீதிகளிலே, பஸ்களிலே, சண்டைக் களத்திலே தங்கள் வாழ் நாள்களுக்கு முன்னரே மடிந்துபோன - இறந்து போன - ஆயிரக்கணக்கான தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்களின் நினைவுகள் போற்றப் படுவதையும் துக்கத்தைக் கடைப்பிடிப்பதையும் மதிக்காத வரையில் காயங்கள் ஆறப்போவதுமில்லை நல்லிணக்கம் உருவாகப்போவதுமில்லை. காணாமல்போன ஒருவருடைய மனைவியின் கதை மனதை உறுத்துகிறது. "நாங்கள் உணவருந்தும்போது அதில் ஒரு பங்கை அவருக்கும் (கணவன்) எடுத்து வைத்து விடுகிறோம்" என்கிறார் அவர்.

நான் சென்ற அனைத்து இடங்களிலும் அதிகாரிகளின் எல்லா மட்டத்திலும் ஒரு விடயத்தை எனக்குக் காண்பிப்பதற்கு அதிக முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததன் பின்னரான குறுகிய காலத்தில் மறுவாழ்வு, மறுசீரமைப்பு, மறுகுடியமர்வு போன்ற விடயங்களில் எவ்வளவு தூரம் அடைவுகள் எட்டப்பட்டுள்ளன என்று என்னிடம் காண்பிப்பதற்கு அவர்கள் முற்பட்டார்கள். உதவி வழங்கும் நாடுகள், ஐ.நா. முகவரமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அர்த்தமுள்ளவை, கவரக்கூடியவை.

### அபிவிருத்திகள் அற்புதம்

கிழக்கு மற்றும் வடக்கு மாகா ணங்களில் பெரும் எண்ணிக் கையான புதிய வீதிகள், பாலங்கள், வீடுகள், மருத்துவ வசதிகள், சீரமைக்கப்பட்ட அல்லது புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலைகள், மின்சார மற்றும் குடிதண்ணீர் வசதிகள் என்பன அற்புதமாக மேம்பட்டுள்ளன. அனேகமான கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. போரின்போது இடம்பெயர்ந்த 4 இலட்சத்து 50 ஆயிரம் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் அதன் பயனாகத் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள்.

### நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

இவையெல்லாம் முக்கியமான அடைவுகள் - சாதனைகள் - இவையெல்லாம் போதியளவில் அங்கீகரிக்கப்படவில்லை என அரசு கொண்டுள்ள கவலையை நான் புரிந்து கொள்கிறேன். அதேசமயத்தில் பௌதீக மறுசீரமைப்பு மட்டும் நல்லிணக்கத்தை, மதிப்பை, நீடித்த அமைதியைக் கொண்டு வந்துவிடாது. உண்மையைச் சொல்வதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும் நியாயபூர்வமான அணுகுமுறை உருவாக்கப்பட வேண்டும். இவற்றை அடைவதற்கான உதவிகளை வழங்குவதாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நான் ஏற்கனவே வாக்குறுதியை நான் மீண்டும் தெரிவிக்கின்றேன்.

இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய குறிப்பிடத்தகுந்த பல விடயங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அவை உடனடியாக சரிப்படுத்த முடியாதவை என்றபோதும் அவற்றுக்கான விதைகள் இப்போதே ஊன்றப்படவேண்டும். தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் என்பன குறித்து அதிகளவில் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

சட்டம் ஒழுங்கின் தோல்வி குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடப்படும் போக்கு என்பன குறித்தும் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

யுத்தத்தின் பின்னர் இலங்கை உண்மையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடையும் என்று ஆரம்ப காலத்திலிருந்தே நான் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தேன். இரு தரப்பினரும் யுத்த காலத்தில் பல்வேறு யுத்தக் குற்றங்களையும் ஏனைய அத்துமீறல்களையும் செய்திருப்பது கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருந்த போதும் அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்த திசையில் சென்று கொண்டிருந்த ஒரு முக்கியமான படியாக நான் வரவேற்றேன்.

### மிகுந்த கரிசனை

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டவற்றை அமுல்படுத்துவதிலும் விடுபட்டுப் போன சம்பவங்கள் பற்றிய பூரண விசாரணையை நடத்துவதிலும் மனித உரிமைகள் பேரவை மிகுந்த கரிசனை காட்டியிருந்தது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் மனித உரிமைகள் சம்பந்தமான உறுதியான முன்னேற்றங்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய உறுதியான - அருமையான பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பரிந்துரைகளில் ஒரு சிலவற்றை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைப் பற்றிய சுருக்கமான விளக்கமொன்றை ஜனாதிபதியின் நிரந்தரச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதில் நான் சிரத்தை காட்டினேன்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எந்த அளவுக்கு நடை முறைப் படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி எனது அலுவலகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும். நியாயமான எந்த முன்னேற்றத் தையும் பற்றி நான் நிச்சயமாக மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவிப் பேன்.

### வடக்குத் தேர்தல் வரவேற்பு

எனது விஜயத்தின்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை நான் இப்போது விளக்க விரும்புகின்றேன். இவ்வாறு எனக்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள் பற்றி பல்வேறு அமைச்சர்களி

(19 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
01 09 2013 ஞாயிற்றுக்கிழமை



● அதிரன்

# மௌனம் காக்கும் இந்தியா

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கான அழைப்பிதழை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கையளித்துவிட்டுத் திரும்பியுள்ளார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ். அழைப்பிதழை இந்தியப் பிரதமரிடம் கையளிக்கும் சாட்டில் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளுமா என்பதைச் சாடைமாடையாக அறிந்துகொள்வதற்காகவே ஜி.எல்.பீரிஸை புதுடில்லிக்கு அனுப்பியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆயினும் மஹிந்தவின் இந்த மறைமுகத் திட்டம் வெற்றியளிக்கவில்லை.

அழைப்பிதழைப் பெற்றுக் கொண்ட பிரதமர் மன்மோகன், மாநாட்டுக்கு அழைப்பு விடுத்ததற்கு நன்றி என்று மட்டுமே கூறிப் பீரிஸைத் திருப்பி அனுப்பிவிட்டார். மாநாட்டில் கலந்து கொள்வேன் என்றோ அல்லது கலந்துகொள்ள மாட்டேன் என்றோ எந்த வாக்குறுதியையும் மன்மோகன் கொடுக்கவில்லை. இதனால் ஜனாதிபதி மஹிந்தவின் இந்த முயற்சி தவிடுபொடியானது.

பொதுநலவாய மாநாடு குறித்து புதுடில்லி என்ன நோக்கத்தில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்கு இலங்கை அரசு கடும் பிரயத்தனம் மேற்கொள்கிறது. ஆயினும் இந்தியாவோ இந்த விடயத்தில் தொடர்ச்சியாக மௌனம் காக்கிறது. இப்போதைக்கு இது குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடுவதில்லை என்ற எண்ணத்திலேயே புதுடில்லி உள்ளது என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் மாநாடு குறித்தும் அதில் பங்கேற்கும் நிலை குறித்தும் முடிவுகளை எடுக்கும் விவகாரத்தில் இந்தியாவுக்கு வெளிவிவகார கொள்கைகளுக்கு அப்பாலும் சில அழுத்தங்கள் இருக்கின்றன. குறிப்பாக தமிழ் நாட்டில் பொதுநலவாய மாநாட்டுக்கு எதிராக் வலுத்து வரும் எதிர்ப்புகளைப் புதுடில்லியினால் இலகுவில் புறக்கணித்துவிட முடியாது. பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தி.மு.க., அ.தி.மு.க. உட்பட தமிழக அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை ஒரே நிலைப்பாட்டில் இருக்கின்றன. இந்தக் கருத்தைப் புறக்கணித்துக் கொண்டு முடிவை எடுக்கும் நோக்கம் இந்திய மத்திய அரசுக்கு இல்லை. இந்த விடயத்தில் இந்திய அரசுக்குப் பெரும் சிக்கல் காத்திருக்கிறது.

இந்தியாவின் கருத்தையும் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை அரசு மதிக்கவோ நிறைவேற்றவோ இல்லை என்ற பொதுவான அபிப்பிராயம் இந்திய அரசிடம் உள்ளது. அத்துடன் இந்திய அரசின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு இலங்கை அரச தரப்பு மேற்கொண்டு வரும் முயற்சிகள் புதுடில்லியை கடும் விசனத்துக்கு உள்ளாக்கியுள்ளன. 13 ஆவது திருத்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு பல தடவைகள் தெரியப்படுத்திவிட்டது. 13 ஆவது திருத்தத்தை நீக்காமல் அதற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகள் விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்றே புதுடில்லி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆயினும் இந்த விடயத்தில் இலங்கை அரசு மெத்தனப் போக்கை கொண்டுள்ளமை இந்தியாவை தொடர்ந்தும் விசனத்துக்குள்ளாக்கி வருகிறது. அதே வேளை இலங்கையில் சீனாவின் தலையீடு என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது. சீன நிறுவனங்கள் இலங்கையின் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதுடன் அதற்கு ஒத்தாசை அளித்தும் வருகிறது.

இந்தியாவின் கருத்தையும் இந்தி யாவுக்குக் கொடுத்த வாக்குறுதி களையும் இலங்கை அரசு மதிக் கவோ நிறைவேற்றவோ இல்லை என்ற பொதுவான அபிப்பிராயம் இந்திய அரசிடம் உள்ளது.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்திக் கட்டுமானங்கள் சீன நிறுவனங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சீனாவுக்கு இலங்கை தனது கதவுகளை அகலத் திறந்துவிட்டிருப்பது இந்தியாவுக்கு கோபத்தை உண்டுபண்ணியுள்ளதுடன் இந்து சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கம் வலுவடைய இலங்கை ஒத்துழைக்கின்றது என்ற சினத்தை யும் தோற்றுவித்துள்ளது.

இதனால் பொதுநலவாய மாநாட்டு விடயத்தில் இந்தியா என்ன முடிவை எடுக்கப் போகிறது என்பதை முடிவு செய்ய முடியாத நிலை இப்போது உள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் 2004 ஆம் ஆண்டு பிரதமராகப் பதவியேற்றத்திலிருந்து அதற்குப் பின்னர் நடந்த எல்லா பொதுநல வாய மாநாட்டுக்கும் செல்ல வில்லை. 2005 இல் மால்டாவில் நடந்த மாநாட்டிலும், 2011 இல் நடந்த மாநாட்டிலும் அவர் பங்கேற் கவில்லை. 2007 இல் உகண்டா விலும், 2009 இல் ரினிட்டாட்டிலும் நடந்த மாநாடுகளிலேயே அவர் பங்கேற்றிருக்கிறார். எனவே ஏதேனும் காரணத்தைக் கூறி இம்முறை அவர் கொழும்பு மாநாட்டை தவிர்த்துக் கொள்ள முடியும். ஆயினும் இது தொடர் பான எந்த முடிவையும் இந்திய அரசினால் இப்போது எடுத்துவிட முடியாத நிலை உள்ளது. அவ் வாறு எடுத்தால் அது ஆபத்தான விளைவு களை ஏற்படுத்திவிடும். அதற்குக் காரணங்களும் உள்ளன. வடக்கில் நீதியான சுதந்திரமான மாகாண சபைத் தேர்தலை நடத்துதல், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுதல் போன்ற விடயங்கள் பொதுநலவாய மாநாட்டை வைத்து இந்தியா சில காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறது. இந்த நேரத்தில் மாநாட்டைப் புறக்கணிப்பதாக இந்தியா அறிவித்தால் அதன் திட்டங்கள் தோல்வியில் முடிந்துவிடும். அதேபோன்று மாநாட்டில் கலந்துகொள்வதாக அறிவித்தால் தமிழகத்தில் போராட்டங்கள் வெடிக்கவும் அரசியல் எதிர்ப்பலைகள் உச்சம் பெறவும் காரணமாகிவிடும். இதனால் இந்த விடயத்தில் இந்தியா இப்போதைக்கு தன்னால் முடிந்த வரை மௌனம் காக்கவே முற்படுகிறது. அதனால் தனது முடிவை கடைசி நேரம் வரை இழுத்தடிப்பதற்கும் அது முயற்சிக்கிறது.

ஆகவே பொதுநலவாய மாநாட்டு விடயத்தில் இப்போதைக்கு இந் திய அரசு வாய் திறக்காது என்பதே அரசியல் அவதானிகள் பலரும் கருத்து.

# நடுங்க வைக்கும் நவநீதம்பிள்ளை

ஞாயிறு காரம்




சந்திரசேகர ஆஷாத்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் உயர் ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் முன்னாள் தென்னாபிரிக்க உயர் நீதிமன்றப் பிரதம நீதியரசராகப் பதவி வகித்தவர். இந்திய வம்சாவழித் தமிழ் பெண்ணான இவர் பல்வேறு இராஜதந்திரப் பணிகளிலும் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்பன எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதே அவரது இலங்கைக்கான பயணத்தின் நோக்கம்.

அவர் வந்திறங்கியதுமே நான் இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வரவில்லை எனவும், இங்கு நிலவும் மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்ளவே வந்ததாகவும் தெளிவாகவே தெரிவித்துவிட்டார். எனினும் இலங்கையிலுள்ள பலருக்கு அவரது வருகை குலைப்பன் காய்ச்சலை ஏற்படுத்திவிட்டது. அந்த நடுக்கத்தில் பல்வேறு விதமாக 'வாய் பினாத்தவும்' ஆட்டம் போட வைக்கவுமான ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டது.

ஒரு சர்வதேச பிரமுகர் நாட்டுக்கு வருகை செய்யும் போது அவரை அந்த நாட்டின் தலைவர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்பது வழமையான நடைமுறை. ஆனால் நவநீதம்பிள்ளையின் வருகை முற்கூட்டியே தெரிந்திருந்த போதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர் வரும் வேளை பார்த்து பெலாரஸ் நாட்டுக்குப் பயணம் போய்விட்டார். இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க ஜனாதிபதி நவநீதம் பிள்ளைக்குப் பயந்து ஓடிவிட்டார் எனத் தெரிவித்திருந்தார். அவர் நவநீதம்பிள்ளைக்குப் பயந்தாரோ இல்லையோ, அவரை நவநீதம் பிள்ளையின் வருகை வேறு சில விடயங்களுக்காக நடுங்க வைத்துள்ளதாக நம்ப வேண்டியுள்ளது. நவநீதம் பிள்ளையின் வருகையை எதிர்த்து ராவணசேன என்ற இனவாத அமைப்பு கொழும்பில் ஐ.நா. தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டமொன்றை நடத் தியது. ஏறக்குறைய இரண்டு மணி நேரமாக அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதுடன், போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. பொலிஸார் பார்த்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் குடிதண்ணீர் கோரிப் போராடிய வெலிவேரியா மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு மூவர் கொல் லப்பட்டதையும் ஏராளமானோர் படுகாயமடைந்ததையும் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதாகத் தெரி வித்து நீதிமன்றத் தடையுத்தரவு பெற்றனவர் என்பதை நாம் மறந்து விட முடியாது. எல்லோருக்கும் பொதுவான சர்வதேச அமைப் பொன்றுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப் பொலிஸார் அனுமதிக்கின்றனர் என்றால் அதற்கு அரசு ஆத ரவு உண்டு என்று தானே அர்த்தம்.

அதிலும் இப்போது பொலிஸ் திணைக்களம் ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து நாம் இரு விடயங்களை ஊகித்துக் கொள்ள முடியும். ஒன்று நவநீதம் பிள்ளையின் வருகைக்கும் அவரது மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் இலங்கையில் எதிர்ப்பு உண்டு எனக் காட்டுவது. அடுத்தது நவநீதம்பிள்ளையை ஜனா திபதி நேரடியாக வரவேற்பதைத் தவிர்ப்பதன் மூலம்தான் எப்போதும் சிங்கள இனவாதிகளுடனே இணைந்து செயற்படத் தயார் என அவர்களுக்குத் தெரிவிப்பது. நவநீதம்பிள்ளையின் வருகை ஏற்படுத்திய நடுக்கம் சிங்கள இனவெறியர்களை ஒருபுறம் ஆர்ப்பாட்டத்தில் இறக்கிவிட, மறுபுறம் ஜனாதிபதியை பலூரஸ்சுக்கு ஓட வைத்துவிட்டது. எனினும் நவநீதம் பிள்ளை நாட்டைவிட்டு வெளியேறு முன்பு அவரை ஜனாதிபதி சந்தித்து பேச்சுக்களை நடத்தித் தனது நடுக்கத்தை மூடி மறைத்துவிடுவார் என எதிர்பார்க்கலாம்.

அதேவேளையில் முப்படைகளின் தலைமை அதிகாரியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெகத் ஜெயசூரியா தனது நடுக்கத்தை வேறு ஒரு விதமாக வெளிப்படுத்தியுள்ளார். அதாவது நவநீதம்பிள்ளை இங்கு வந்து நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டதும் இலங்கை பற்றிய தவறான அபிப்பிராயங்கள் எல்லாமே நீங்கிவிடும் எனத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து மனித உரிமை மீறல்கள் தொடர்பான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் விசாரணை செய்ய அவரால் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவம் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டதேயொழிய போர்க் குற்றங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை எனவும் எவரும் காணாமற் போகவில்லை எனவும் தெரிவித்திருந்தது. அவரும் அதை ஏற்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அந்த அறிக்கையைக் கையளித்தார். அவரும் ஒருபடி மேலே போய் யாராவது காணாமற் போயிருந்தால் செஞ்சிலுவைச் சங்கமும் இந்திய மருத்துவக் குழுவினருமே அதற்குக் காரணம் எனக் கூறிவிட்டார்.

அவர்கள் இருவரும் எவரும் காணாமற் போகவில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்த போது அமைதியாக இருந்த ஜனாதிபதி ஐ.நா. அம்மணியின் வருகையை முன்னிட்டு காணாமல் போனோர் தொடர்பாக விசாரிக்க ஒரு ஆணைக்குழு அமைத்துவிட்டார். போதாதற்கு காணாமற் போனோரின் உறவினர்களின் அமைப்பினர் மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்திக்கவும் இருந்தனர்.

இப்படியான நிலையில்தான் முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியா நவநீதம்பிள்ளையின் வருகையுடன் இலங்கை பற்றிய தவறான அபிப்பிராயங்கள் நீங்கிவிடும் எனத் தெரிவித்துள்ளார். கடன்காரனைக் கண்டுவிட்டுத் தகப்பன் குதிருக்குள் ஒழிக்க மகன் பயத்தில் கடன்காரனிடம் "எங்கப்பன் குதிருக்குள் ஒழிக்கவில்லை" எனச் சொன்ன கதை இங்கு மீண்டும் அரங்கேறுகிறது. மேற்படி வருகையின் மூலம் நடுக்கமெடுத்த இன்னொருவர் இலங்கையின் மனித உரிமை விவகாரங்களுக்கான அமைச்சர். வருடா வருடம் மனித உரிமைகள் பேரவையில் ஒரே வாய்ப்பாட்டைத் திருப்பித் திருப்பி ஒப்புவிப்பதும், கேள்விகளுக்குச் சம்பந்தப்படாத பதில்களை வழங்கி மூக்குடைபடுவதும் இவரது சாதனை. இவர் அங்கு முன்வைத்த பல பொய்களை ஏற்கனவே சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அம்பலப்படுத்திவிட்ட போதிலும் இப்போ மனித உரிமைகள் ஆணையாளர் அவற்றை நேரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக உதறலை மறைக்கப் போர்வை தேட ஆரம்பித்துவிட்டார். அதாவது மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நான்கு வருடங்களில் நிறைவேற்ற முடியாது எனவும் முடிந்தளவே செய்யலாம் எனவும் சற்று சண்டித்தனப் பாணியில் கருத்து வெளியிட்டுள்ளார். பல விடயங்களை நிறைவேற்றி விட்டதாகவும் குத்தி முறித்துள்ளார். அதேவேளையில் வடக்கில் கூட நவநீதம்பிள்ளையின் வருகையால் நடுங்கிப்போன சிலர் தமது நடுக்கத்துக்குப் போர்வைதேட நாக்குளற உளறிக் கொட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகளில் சில திரும்பக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐ.நா. சபையாலோ வெளிநாட்டுத் தலையீடுகளாலோ எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விட முடியாது எனவும், உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அவர் இந்திய நீதிமன்றத்தால் தேடப்படும் ஒரு குற்றவாளி என்ற வகையில் சர்வதேச தலையீடுகள், விசார ணைகள் என்பன அவருக்கு ஒருவித நடுக்கத்தை ஏற்படுத்துவது இயல்பு தான். அதைவிடக் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் கொலைகள், ஆட்கடத்தல் என்பன தொடர்பாகத் துணை இராணுவக் குழுக்கள் மேல் குற்றம் சுமத்தப்பட் டிருந்தது. அவை விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கை யில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக ஆராயும் போது துணை இராணுவக் குழுக்களின் அடாவடித்தனங்கள் அம்பலப் படும். அதுமட்டுமன்றி அவர்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக் கப் படாமையும், அவர்கள் இன்னும் அதேவிதமான அடாவடித் தனங்களில் ஈடுபடுவதும் வெளிவரும். அதனால் சில நெருக்கடிகள் கூட ஏற்படலாம். அரசு தன்னையும் இராணுவத்தையும் பாதுகாக்க இவர்களையே பலிக்கடாக்களாகவும் ஆக்கலாம். இப்படியான நிலையில் அம்மையாரின் வருகை குலைப்பன் காய்ச்சலை ஏற்படுத்தாமல் இருக்க முடியுமா?

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வடமாகாண முதன்மை வேட்பாளர் சின்னத்துரை தவராசாவுக்கும் கூட குலைப்பன் அடிக்கத் தொடங்கி விட்டது. அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட வேட்பாளர் ஆனந்தி சசிதரன் ஆகியோர் நவநீதம்பிள்ளையுடன் மேற்கொள்ளவுள்ள சந்திப்பை அவர்கள் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தி விடுவார்கள் எனவும், அதனால் அச்சந்திப்பைத் தடைசெய்ய வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளார்.

ஆனால் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் அப்படித் தடை செய்யத் தேர்தல் சட்டத்தில் விதிகள் ஏதும் இல்லை எனத் தெரிவித்து விட்டது. அடிப்படைப் பிரச்சினை ஐநா. மனித உரிமைகள் ஆணையாளரு டனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தி விடும் என்பதல்ல.

வடக்கில் அரச படையினருடன் இணைந்து துணை இராணுவக் குழுக்கள் மேற்கொள்ளும் மக்கள் விரோத நடவடிக்கைகளும் மனித உரிமை மீறல்களும் சர்வதேச அளவில் அம்பலப்பட்டுவிடும் என்பதே உண்மையான பிரச்சினையாகும். கழிவு ஒயில் கலாசாரம், ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள், பொது மக்களின் அமைதி வழிப் போராட்டங் களில் புகுந்து குழப்பங்களை விளை வித்தல் என ஒரு நீண்டபட்டியலே உண்டல்லவா? எனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வருகை பல தரப்பினரையும் நடுங்க வைத்துள்ளது. இந்த நடுக்கத்தின் வெளிப்பாடாகப் பல்வேறு உளறல்களும் சமாளிப்பு நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படுகின்றன. எப்படியிருந்த போதிலும் வெறும் அறிக்கைகளாலும் சவடால் பேச்சுக் களாலும் மேற்கொண்டு வரப்பட்ட ஏமாற்றுக்கள் நவநீதம்பிள்ளையின் வருகை மூலம் அம்பலப்படும் என எதிர்பார்க்க முடியும்.



# பாதாளம் வரை பாயும் 'பவர்'

விஜுசியன்

வடக்கு மாகாணசபைத் தேர்தல் மக்களிடையே பெரும் எடுப்பிலான பரபரப்பை ஏற்படுத்தவில்லை. தேர்தலுக்கு இன்னமும் 20 நாள்கள் இருக்கின்ற நிலையில் தேர்தல் நடக்கின்றதா என்பதே தெரியாத நிலையிலும், தேர்தலில் யார் எவர் போட்டியிடுகின்றார்கள் என்பதை அறியாத நிலையிலும் மக்கள் இருக்கின்றனர்.
ஆனாலும் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல்வாதிகள் மத்தியில் தேர்தல் வெற்றிக்கான மோதல்கள் தொடங்கியுள்ளன. இதுவரை காலமும் இந்திய அரசியலிலும் - இந்திய சினிமாக்களிலும் பார்த்த தேர்தல் மோதல்கள் வடபகுதியிலும் அரங்கேறத் தொடங்கியுள்ளன.
கடந்த மாதத்தில் ஒரு வாரத்தினுள் இரு வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டு சம்பவங்களில் மூன்று தரப்புக்கள் சம்பந்தப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசா மீதும், அவரது வாகனத்தின் மீதும் கடந்த 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் இவற்றில் முதலாவதாகும். அந்தச் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்படுபவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அங்கஜனது தந்தையார் இராமநாதன்.
இறுதியாக சாவகச்சேரியில் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம். அதில் இரண்டாவதாகும். இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் சர்வானந்தன் மற்றும் அங்கஜனது தந்தையார் இராமநாதன் மீதும் இரு தரப்பினரும் மாறி மாறிக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

### பின்னணி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஈ.பி.டி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகள் போட்டியிடுகின்றன. ஜனாதிபதியின் சகோதரரான பஸில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ இருவராலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர். அங்கஜன், செவ்வேள், சுபியான் ஆகியோர் பஸிலின் ஆதரவிலும் சர்வானந்தா, றெமிடியஸ், சிராஸ், அகிலதாஸ், பொன்னம்பலம் ஆகியோர் கோத்தபாயவினால் அதாவது இராணுவத்தினரின் தெரிவு என்று குறிப்பிடப்படுகின்றது.
இதனால் ஆரம்பம்முதலே ஈ.பி.டி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மோதலைத் தாண்டி கோத்தா அணிக்கும் பஸில் அணிக்கும் இடையில் மோதல் நடந்தேறிக் கொண்டிருந்தது. பனிப்போராக தொடர்ந்த இந்த மோதல் சக்கரமாக சுழன்றடித்து துப்பாக்கிச் சூடு வரையில் கொண்டு சென்றுள்ளது.

### மோதல்

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துக்கு பின்னணியாக கருதப்படுவது கச்சாயில் இடம்பெற்ற கருத்து முரண்பாடே என்று தெரிவிக்கப்படுகின்றது. கச்சாயில் வேட்பாளர் சர்வானந்தா பிரசாரத்துக்கு சென்ற வேளையில் அங்குள்ள மக்களுக்கு மின்சாரம் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.
இதற்கிடையில் அங்கஜன் குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று தாம் மின்சார வசதியை ஏற்படுத்தி தருவதாகத் தெரிவித்து, அதற்குரிய பதிவுகளையும் மேற்கொண்டுள்ளனர். இதனால் கோபமடைந்த சர்வானந்தா தரப்பினர் அங்கஜனின் ஆதரவாளராகக் கருதப்படும் விஸ்வரூபன் மீது கல்லெறி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் காயமடைந்த அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இதன் காரணமாகவே சர்வானந்தாவின் ஆதரவாளரான நந்தகுமார் மீது, அங்கஜனின் தந்தையாரான இராமநாதன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்களை சர்வானந்தாவே முன்வைக்கின்றார்.
இந்தச் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அங்கஜன், சர்வானந்தா தரப்பினரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும், இதில் தனது மெய்ப்பாதுகாவலர் காயமடைந்ததாகவும் குறிப்பிடுகின்றார். அத்துடன் தனது தந்தையாரின் அனுமதி பெற்ற துப்பாக்கி கொழும்பில் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அப்படியிருக்கையில் தன் தந்தையார் எவ்வாறு துப்பாக்கியால் சுட்டிருக்க முடியும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

### கைமாறிய ஆயுதங்கள்

இதுவரை காலமும் அரசின் ஆதரவுடன் துணைக்குழுக்களே ஆயுதங்களைப் பயன்படுத்தி வந்தன. இதனைப் பயன்படுத்தி தேர்தல் காலத்தில் எதிர்தரப்பினர் மீது தாக்குதலும் நடத்தியிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது 2001 ஆம் ஆண்டு நாரந்தனையில் தேர்தல் பிரசாரத்தின் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் ஒருவர் உயிரிழந்தும் இருந்தார். இதேவேளை 2002 ஆம் ஆண்டு சமாதான காலம் வரையில் ஈ.பி.டி.பியினர் அரசின் ஆதரவுடன் துப்பாக்கிகள் வைத்திருந்தனர்.
தற்போது அரச தரப்பினரே நேரடியாக ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அரச தரப்பு வேட்பாளர்களான சர்வானந்தா மற்றும் அங்கஜன் இரு தரப்பினருமே ஒருவரை ஒருவர் மாறிமாறி துப்பாக்கி பயன்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டுவது இதனைத் தெளிவாக உறுதி செய்கின்றது.

### விசாரணை

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் வேட்பாளர் அங்கஜனது தந்தையான இராமநாதனைக் கைது செய்தனர். அதுவும் ஒரு நாள் முழு வதும் விசாரணை மேற்கொண்டிருந்தனர். பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்ற அன்றைய தினம் கருத்துத் தெரிவித்த சர்வானந்தா தரப்பினர், பொலிஸார் எம்மை மரத்தின் கீழ் நிறுத்தி கேள்விகளைக் கேட்டனர். ஆனால் இராமநாதனை மரியாதையாக உள்ளே இருத்தி விசாரித்தனர் என்று குற்றஞ்சாட்டியதுடன் இராமநாதனைக் கைது செய்யாவிட்டால் தேர்தலிலிருந்து விலகப் போவதாக ஆளும் தரப்பை எச்சரித்து விசாரணைக்கு அழுத்தம் வழங்கினார்.

### தாமதித்த நீதி

இதேவேளை இராமநாதனால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான தம்பிராசா யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக உண்ணா விரதம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அவர் பொலிஸ் தரப்பை குற்றம் சாட்டினார்.
தன் மீதான தாக்குதலில் இராமநாதனே நேரடியாகத் தொடர்புடையவர் என்று ஒளிப்பட ஆதாரங்களுடன் பொலிஸாருக்கு முறையிட்டிருந்தார். இருப்பினும் அவர்கள் இராமநாதனை கைது செய்யாமல் விட்டமையே இந்த இரண்டாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெறக் காரணம். மேலும் தேர்தல்கள் ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் வைத்து, அனுமதி பெற்ற துப்பாக்கிகளாயினும் அவற்றைக் கைப்பற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். அதனைப் பொலிஸார் செயற்படுத்தியிருந்தால் இந்த நிலைமை தோன்றியிருக்காது என்று தெரிவித்திருந்தார்.
இருப்பினும் ஆளும் தரப்பினரிடையேயான மோதலால் பொலிஸார் கட்டாயமாக நடவடிக்கைஎடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பஸில், கோத்தா மோதலில் யார் பெரியவர் என்ற போட்டியும் இதில் பங்கெடுத்ததால் பொலிஸார் வேறு வழியின்றி இராமநாதனைக் கைது செய்தனர்.
பொலிஸ் காவலில் 24 மணிநேரத்துக்கும் அதிகமான நேரம் வைத்திருந்த பின்னரே பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் மீது கொலை முயற்சிக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது. இதனால் அவர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

### சினிமா அரசியல்

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய இராமநாதன் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட நெஞ்சு வலிக்கு வைத்தியம் செய்வதற்கே யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இதுவரை காலமும் இத்தகைய சாட்சிகளை தமிழ் மக்கள் இந்தியத்திரைப்படங்களிலேயே பார்த்திருப்பர். இப்போது கண்முன்னே அதுவும் யாழ்ப்பாணத்திலேயே அரங்கேறியிருக்கின்றது.
அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இராமநாதனின் இரத்த அழுத்தம், ஈ.சி.ஜி மற்றும் ஏனைய வைத்தியப் பரிசோதனை அறிக்கைகளும் அவருக்கு எதுவித நோய்களும் இல்லை என்று குறிப்பிட்ட போதும் அவரை வைத்தியசாலை நிர்வாகம் சிறைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை.
மாறாக நோயாளி (இராமநாதன்) வேண்டிக் கொண்டதற்கு அமைய அவரை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்க விடுவித்தது.

### அபிவிருத்தியின் இலட்சணம் ஆளும் கட்சியால் வெளுக்கின்றது

வடமாகாணத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் அரசால் அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகத் திறம்பட முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச அதிகாரிகளும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களும் வாய் கிழியச் சொல்லி வருகின்றனர். ஆனாலும் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட இராமநாதன், அரச வைத்தியசாலையான - யாழ். போதனா வைத்தியசாலையில் வசதிகள் இல்லையென்று சொல்லி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறு வதற்கு விருப்பம் தெரிவித்ததன் பேரில் அதற்கு வைத்தியசாலை நிர்வாகமும் அனுமதித்திருக்கின்றது.

### மற்றொரு கொலன்னாவையா?

கடந்த 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கொலன்னாவைப் பிரதேசத்தில் ஆளும் கட்சியின் இரண்டு முக்கிய பிரமுகர்களுக்கு இடையில் துப்பாக்கிப் பிரயோக சம்பவமொன்று இடம்பெற்றிருந்து. இதில் ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த பாரத லக்ஸ்மன், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
ஆளுங்கட்சியினருக்கிடையிலான இந்த மோதலில் அழுத்தம் காரணமாக பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். துமிந்த சில்வா சுட்டதனாலேயே பாரத லக்ஸ்மன் உயிரிழந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அத்துடன் துமிந்த தனது துப்பாக்கியால் தன்னைத் தானே கையில் சுட்டுக் கொண்டதாக பாரதவின் அமைச்சரவை பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்திருந்தார்.
ஆனால் இவ்வாறான ஆதாரங்கள் இருக்கத்தக்கதாக துமிந்தவின் மூளையில் துப்பாக்கிக் குண்டு துளைத்ததாக தெரிவித்து அவர் சிங்கப்பூருக்கு சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சுமார் ஒன்றரை வருட கால சிகிச்சையின் பின்னர் தலையில் சிகிச்சைக்கான எதுவித அடையாளங்களும் இல்லாமல் வந்த அவர் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றார்.
இதே போன்றே இங்கும் நடக்கலாம். ஆனாலும் ஆயுத கலாசாரத்துடன் அலையும் ஆளும் கட்சிக்கு வாக்களித்து மக்கள் அவல வாழ்வைச் சுமக்காமல் விட்டால் சரி.

# ரகசிய பூஜை !

ஒரு சமயம், விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயருடைய அவைக்கு, நீண்ட ஜடா முடிதரித்த,வாட்டட்டமான சந்நியாசி வந்தார்.

அவர் வரும்போதே அரசே! விஜயநகருக்குப் பெரிய ஆபத்து ஒன்று காத்திருக்கிறது. அதைக் கூறி எச்சரிப்பதற்காக, இமயத்திலிருந்து வருகிறேன் என்றார். அதைக் கேட்டதும், அரசர் சற்றுப்பதற்றம் அடைந்துவிட்டார். ஒரு தனியறையில், அரசருடன் ஆலோசனை நடத்தினார் சந்நியாசி. அரசே! தலைநகருக்கு வெகுதூரத்தில், காட்டில் ஒருபழைமையான பங்களா உள்ளது. அங்கு கெட்ட கிரகங்களைக் களைவதற்காக, ஏழு நாள்களுக்கு ஒரு பூஜை செய்யப் போகிறேன்.



ஏழாவது நாள் பூஜைக்கு நீங்கள் தனியாக அங்கு வாருங்கள். எல்லாம் நல்ல படியாக முடியும்... என்றார் சந்நியாசி. மறுநாள் முதலே, சந்நியாசியின் பூஜை தொடங்கி விட்டது. ஏழாம் நாள் அரசர் குதிரை மீதேறி அமர்ந்து தனியாக அந்தக் காட்டுப்பங்களாவை நோக்கிச் சென்றார்.

சந்நியாசி அரசரை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அரசரை வரவேற்ற அவர் அரசே! என்னுடைய காரிய சித்தியின் பெருமையைப் பாருங்கள். நான் உச்சரிக்கும் மந்திரத்தின் ஒலிவெகு தூரம் பரவித்திரும்பக் கேட்கும் என்றார். உண்மை என்ன வென்றால், சந்நியாசி, கூறிய ஏதோ ஒரு ரகசிய ஒலி, உரக்கத் திரும்பக் கூறப்பட்டுப் பரவியது. அரசர் திடுக்கிட்டார்... அதேசமயம், முண்டாசு அணிந்த உயரமான ஒரு மனிதன் உள்ளே வந்து, அரசருக்கு அருகில் அமர்ந்து கொண்டான். அறையில் ஒலித்த சத்தத்தைக் கேட்டு, உரத்த குரலில், அடேய்... இதெல்லாம் ரகசியம், பாதாள ரகசியம்.. என்றார். அவர் குரல் நின்றதுமே, மந்திரம் ஒலிப்பதும் நின்று விட்டது. சிலர் விரைந்து ஓடும் ஓசை கேட்டது. அரசரிடம் அதிர்ச்சி! சந்நியாசிக்கு வியர்த்து விட்டது. ஆனால், முண்டாசு மனிதர் மட்டும், அமைதியாக இருந்தார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, விஜயநகர வீரர்கள் மூன்று பேரைச் சிறைப்பிடித்து அழைத்து வந்தனர். அவர்கள் சந்நியாசி வேடத்தில் இருந்த எதிரிகளின் ஒற்றர்கள்! வீரர்களைப் பார்த்ததும், சந்நியாசி ஓடினார். ஆனால், அவரும் துரத்திப் பிடிக்கப்பட்டார். அப்போது முண்டாசு மனிதர் தனது முண்டாசைக் களைந்தார். அவரைக் கண்டு அரசர் திடுக்கிட்டார்... அருகில் தெனாலிராமன்! செல்லுங்கள் அரசே! விரைவில் இங்கிருந்து போய் விடுவோம். கீழே சுரங்கத்தில் வெடிவைக் கப்பட்டுள்ளது. அதை வெடிக்கச் செய்து இந்தப் பங்களாவைச் சிதறடிக்க வேண்டும் என்பது சந்நியாசியின் திட்டம். மறைந்து கொண்டு மந்திரத்தைச் திரும்பச் சொன்னவன், அவன் தான். எனக்கு ஆரம்பம் முதலே, சந்தேகம் தான். இப்போது பிடிபட்டு விட்டனர்... என்று தெனாலிராமன் சொன்னதும் தான், அரசருக்குத் தனது தவறு புரிந்தது. உண்மை தான் தெனாலிராமா! நீசரியான நேரத்தில் வந்தாய். இல்லா விட்டால், என்ன நடந்திருக்குமோ? நினைக்கவே நடுங்குகிறது... என்ற அரசர் தெனாலிராமனை வாரி அணைத்துக் கொண்டார்.

## அணில்



ஓரிடத்தில் நின்றிடாமல் ஓடித் திரிகிறாய்
ஊஞ்சல்போல தென்னங்கீற்றில் ஆடிக் களிக்கிறாய்
தூரிகையாம் வாலைக்காட்டி துள்ளிக் குதிக்கிறாய்
தொட்டுப்பார்க்க ஆசைகொண்டால் விலகிப் போகிறாய்

சோம்பல்தன்னை விரும்பிடாத சின்ன ஜீவனே
சொக்கவைத்தாய் என்னைநீயும் உந்தன் செய்கையால்
சாம்பல்வண்ண மேனிஅழகு எங்கு வாங்கினாய்?
ஜன்னல்வந்து மின்னல்போல தாவிச் செல்கிறாய்

கொறித்துத்தின்ன ஏதுமுண்டா என்றே தேடுவாய்
குதூகலமாய் இருக்கும் வேளை ஒலியெழுப்புவாய்
பறிப்பதற்கு தோட்டத்திலே பார்த்து வைத்திட்ட
பழங்களைநீ தின்றுவிட்டு பாய்ந்து பதுங்குவாய்

முன்னிரண்டு பல்லைக்காட்டி கேலி செய்கிறாய்
முதுகினிலே மூன்றுகோடு நீ சுமக்கிறாய்
என்னிரண்டு கைநிறைய பழம் கொடுக்கிறேன்
இன்பமாக உண்பதற்கு அருகில் வந்திடேன்!

ஒரு நத்தையின் நீளம் எவ்வளவு இருக்கும்? இந்தக் கேள்விக்கு 2 அங்குலம் அல்லது 3 அங்குலம் இருக்கலாம் என்று பதில் சொல்வீர்கள். ஆனால் ஓர் அடி நீளத்துக்கும் கூடுதலான நீளம் கொண்ட நத்தைகள்கூட இந்த உலகில் உண்டு. ஆபிரிக்காவில் காணப்படும் ராட்சத நத்தைகள் அதிகபட்ச்மாக 35 சென்டிமீட்டர் நீளம் வரை வளர்கின்றன. எடை ஒரு கிலோ வரை இருக்கும். இது சத்தமும் எழுப்பும். இந்த நத்தையை செல்லப் பிராணியாகக்கூட வளர்க்கிறார்கள்.

## நீளமான நத்தை!



## விடை தெரியுமா? 226

### உங்களுக்கும் பரிசுகள்

1.இலங்கையின் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
2. இலங்கையின் செய்மதி தகவல் தொடர்பு நிலையம் எங்கே அமைந்துள்ளது?
3. இலங்கையின் தேசிய மலர் எது?
4. புராதன காலத்தின் சக்கரவர்த்தி என்றழைக்கப்படும் நகரம் எது?
5. பூமிக்கு கவசமாக உள்ள படை மண்டலம் எது?

### வெற்றி பெற்றவர் விவரம் (223)

* ந.சஜீவன், தரம்-8டி, வ/ வ.த.ம.ம.வி.
* சி.தேனுஜான், தரம்-4, யா/பருத்தித்துறை சித்தி விநாயகர்
* றெ.பிரான்சிஸ் குரூஸ், தரம்-9எ, மன்/புனித ஆனாள் ம.ம.வி.
* சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### விடைகள் 224

1.மோனலிசா
2.தேவாங்கு
3.ஜோன் வோக்கர்
4. 1972 மே 22
5. திருகோணமலை

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 07.09.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியானதும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.



அ.ஆரானி, தரம்-2,



சங்கீதன், தரம்-7எ, யா/பற்றிக்ஸ் கல்லூரி



இ.கலைப்பருதி, தரம்-7,
யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை



ந.துசிராஜ், தரம்-3,
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை




வி.பாரதி, தரம்-7,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## மதவாத தேசியம்

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். ''தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில்தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்தி ருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.





### வகுப்புவாத தேசியம்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்த பஞ்சாப் மாநிலம் மிகப் பெரியதாக இருந்தது. இன்று பாகிஸ்தானில் உள்ள மேற்குப் பஞ்சாப், இந்தியாவிலுள்ள பஞ்சாப், அரியானா, இமாச்சலப்பிரதேசம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருந்தது. அதுபோல வங்காளை மாகாணம் என்பது இந்தியாவிலுள்ள மேற்குவங்காளம், வங்காளதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. ஐக்கிய மாகாணம் என்பது இன்றைய உத்தரப்பிரதேசம், உத்திராஞ்சல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

பஞ்சாப், வங்காளம், ஐக்கிய மாகாணம் ஆகிய மாநிலங்களிலும் முஸ்லிம்கள் கணிசமான அளவுக்கு வாழ்ந்தார்கள். அவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக தாழ்த்தப்பட்ட மக்களும் இருந்தார்கள். இந்த இரு சமூகத்தினரும் இணைந்து பெரும்பான்மையினராக விளங்கினார்கள். பார்ப்பனர்களும் இதர மேல் சாதி இந்துக்களும் சிறுபான்மை ஆனார்கள். தங்களின் அரசியல் முக்கித்துவத்தை மேல் சாதி இந்துக்கள் இழக்க விரும்பவில்லை. எனவே முஸ்லிம்களுக்கு எதிரான மதவாதத்தை உருவாக்கினார்கள்.

இந்து - முஸ்லிம் மதவாதப் பிரச்சினை என்பது மேற்கண்ட மூன்று மாநிலங்களில் மட்டுமே இருந்தது. இந்தியாவின் பிற மாகாணங்களில் இந்தப் பிரச்சினை அறவே இல்லை. ஆனால் இந்துக்களின் பெரும்பான்மையை நிலைநாட்ட வேண்டும், என்பதற்காக இது திட்டமிட்டு அகில இந்தியப் பிரச்சினையாக ஆக்கப்பட்டது.

கிலாபத் இயக்க காலத்தில் காந்தியடிகளுடன் தோளோடு தோள் நின்ற முஸ்லிம் தலைவரான செளகத்-அலி ஒத்துழையாமை இயக்கத்தின் போது விலகி இருந்தார்.

"ஒத்துழையாமை இயக்கத்தின் நோக்கம் இந்து இராச்சியத்தை அமைப்பதேயாகும்" என்று அவர் கூறினார்.

இந்தச் சூழ்நிலையில் 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றி பெற்றது. முஸ்லிம் லீக் பெரும் தோல்வியைச் சந்தித்தது. முஸ்லிம்களுக்குத் தனியான தொகுதி முறைஇருந்தபோதிலும்முஸ்லிம்மக்களி டையே 4.8 சதவீதம் வாக்குகளை மட்டுமே முஸ்லிம் லீக் பெற்றது.

இந்துக்கள்-முஸ்லிம்கள் உட்பட இந்திய மக்கள் அனைவருக்கும் தானே ஏகப்பிரதிநிதி எனக் காங்கிரஸ் கட்சி மார்தட்டிக் கொண்டது. முஸ்லிம் லீக்குடன் எத்தகைய சமரசமும் செய்து கொள்ளக் காங்கிரஸ் தயாராக இல்லை. காங்கிரஸ் கட்சியின் இந்தப் போக்கு முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்தது. எந்த மாகாணத்திலும் முஸ்லிம் லீக்கைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு அமைச்சரவை அமைக்க காங்கிரஸ் முன்வரவில்லை. முஸ்லிம் லீக் அப்போது பாகிஸ்தான் கோரிக்கையை எழுப்பவில்லை என்பதும் ஜின்னா தேசியவாதியாகத் திகழ்ந்தார் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கவையாகும்.

காங்கிரஸிலிருந்து விலகி ஒதுங்கியிருந்த ஜின்னாவை முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்தி அழைத்து வந்து தலைவராக்கினர். மத அடிப்படையில் முஸ்லிம்களை ஒன்று திரட்டியாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்த ஜின்னா "இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள். இருஇனத்தவரும்ஒருபோதுஇணைந்து வாழ முடியாது. எனவே முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் தனிநாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்" என்ற கோரிக்கையை 1940 ஆம் ஆண்டில் முன்வைத்தார்.

ஜின்னாவின் இந்தக் கோரிக்கைக்கு முஸ்லிம் மக்களிடையே போதுமான ஆதரவு திரளவில்லை. பஞ்சாப், சிந்து, வங்காளம் போன்ற மாநிலங்களில் காங்கிரஸ், முஸ்லிம் லீக் அல்லாத வேறு கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் தலைமையில் அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன.

சிந்து மாகாணத்தின் பிரதமராக ஐக்கியக் கட்சியின் தலைவர் அல்லாஹ் பக்ஷ் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது கட்சி முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகியோரின் பேராதரவைப் பெற்றிருந்தது. பாகிஸ்தான் தீர்மானத்தை இவர் மிகவும் கடுமையாக எதிர்த்தார். 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டில்லியில் "சுதந்திர முஸ்லிம்கள் மாநாடு" என்ற பெயரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். இந்த மாநாட்டில் திரளான முஸ்லிம்கள் கலந்துகொண்டார்கள்.

காங்கிரஸ் தலைவர்களான ஜவகர்லால் நேரு, அப்துல்கலாம், ஆசாத் போன்றவர்கள் "மிக வெற்றிகரமான மாநாடு" என்று இதைப் பாராட்டினார்கள். அந்நிய நாட்டில் இருந்த வண்ணம் இந்தியாவின் சுதந்திரத்துக்குப் போராடிய நேதாஜி, சுபாஷ் சந்திரபோஸ் வானொலி மூலம் அல்லாஹ் பக்ஷ் அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத்தைக் காங்கிரஸ் கட்சி தொடங்கிய போது பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் நாடாளுமன்றத்தில் அதை இழித்தும் பழித்தும் பேசினார் என்பதற்காக அல்லாஹ் பக்ஷ் கடும் கண்டனம் தெரிவித்ததோடு பிரிட்டிஷ் அரசு அவருக்கு வழங்கியிருந்த விருதுகளைத் திருப்பி அனுப்பினார். இதைக் கண்டு ஆத்திரமடைந்த இந்திய வைஸ்ராய் முதலமைச்சர் பதவியிலிருந்து அவரை நீக்கினார். அந்நிய ஆட்சியை எதிர்த்துச் சிந்தி மக்களை மதவேறுபாடு இல்லாமல் ஒன்று திரட்டிய அல்லாஹ் பக்ஷ் 1943 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

பஞ்சாப் மாகாணத்திலும் பிரதமராக இருந்த சிக்கந்தர் ஹையத்கான் பாகிஸ்தான் கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்தார். இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் ஆகிய அனைவரும் அவருக்குப் பெரும் ஆதரவு அளித்தனர். பஞ்சாப் சுதந்திர நாடாவதை ஆதரித்துப்பேசும் போது "பஞ்சாப் ஒரு போதும் பாகிஸ்தானாகாது. பஞ்ச நதிகள் பாயும் நாடாக இது இறுதிவரை திகழும். அதை யாராலும் கூறுபோட முடியாது" என்று அவர் முழங்கினார்.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கென்று தனிநாடு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நாளில் இருந்து அதில் வங்காளம் சேர்க்கப்பட்டதில்லை. 1911 ஆம் ஆண்டு வங்காள மாகாணத்தை வைஸ்ராயாக இருந்த கர்சான் பிரபு இரண்டாகப் பிரித்தார். வங்கமொழி பேசும் மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரிக்கவே கர்சான் சூழ்ச்சி செய்வதாக வங்க மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டுப் போராடினார்கள். இதன் விளைவாக வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது.

1946 ஆம் ஆண்டு வங்காளத்தின் பிரதமராக இருந்த பசூல் ஹக் இந்தியாவை இந்துஸ்தான், பாகிஸ்தான், வங்காளஸ்தான் என்று மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். 1940 ஆம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் பாகிஸ்தான் தீர்மானத்தை முன்மொழிந்தவர் இவரே என்பது நினைவு கூரத்தக்கது. இதைக் கண்டு ஆத்திரமடைந்த ஜின்னா அவர் ஆட்சியைக் கவிழ்த்தார்.

சிந்து, பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம் பிரதமர்களான அல்லாஹ் பக்ஷ், சிக்கந்தர், ஹையத் கான், பசூல் ஹக் போன்றவர்கள் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு தராமலும், மதவழி அரசியலை எதிர்த்தும் உறுதியாக நின்றனர். அவர்கள் மொழி வழித் தேசிய உணர்வோடு அனைத்து மதத்து மக்களையும் ஒன்று திரட்டினார்கள். முஸ்லிம் அடிப்படைவாதிகள் இவர்களைக் கடுமையாக எதிர்த்தார்கள். அதேவேளையில் காங்கிரஸ் கட்சியும் இவர்களுக்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை.

முஸ்லிம்கள் தனித்தேசிய இனம் என்ற வாதத்தை ஏற்க மறுத்த இந்தத் தலைவர்கள் தங்களைச் சிந்தியாகவும், பஞ்சாபியாகவும், வங்காளியாகவும், வெளிப்படுத்தியதைக் காங்கிரஸ் விரும்பவில்லை.

இந்தியத் தேசியத்துக்கு இந்தக் கருத்து எதிரானது எனக் காங்கிரஸ் இவர்களைப் புறக்கணித்தது. அந்தத் தவறைக் காங்கிரஸ் செய்யாமல் இவர்களை அரவணைத்துக் கொண்டிருக்குமானால் பாகிஸ்தான் உருவாகியே இருக்காது.



### பெரும்பான்மைப் பேரச்சம்

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானும் பாகிஸ்தானிலிருந்து வங்காளதேசமும் பிரிந்து சென்றுவிட்டன. ஒன்றுபட்ட இந்தியாவிலிருந்து முஸ்லிம்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்ட மேற்கண்ட இரு நாடுகளும் பிரிந்து சென்ற பின்னால் எஞ்சியுள்ள இன்றைய இந்தியாவில், இந்துக்கள் மிகப் பெருபான்மையாக உள்ளனர். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களை விட 6 மடங்கு அதிகமான அளவில் இந்துக்கள் உள்ளனர். ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஒன்றைத் தவிர இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அந்தந்த மாநில மக்கள் தொகையில் 25 சதவீதத்துக்கு குறைவாகவே முஸ்லிம்கள் உள்ளனர். இந்திய ராணுவம், கடற்படை, விமானப் படை, மத்தியக் காவல்படைகள், மாநில அரசுகளின் காவல்படைகள் ஆகியவற்றில் மிகப் பெரும்பான்மையினராக இந்துக்களே அங்கம் வகிக்கிறார்கள். இராணுவப் படைகளில் 2 வீதத்துக்கும் குறைவாகவும் காவல்துறைகளில் 7 வீதத்துக்கும் குறைவாகவும் மட்டுமே முஸ்லிம்கள் உள்ளனர். ஆனால் முஸ்லிம்களினால் இந்தியாவுக்கு பேரபாயம் இருப்பதாக இந்துத்வா சக்திகள் ஓயாது ஓலமிட்டு மதவெறியை வளர்க்கின்றன.

## மாற்றுத்திறனாளியின்

# நாட்குறிப்புகள்

ரன்யா வர்ணகுரசூரிய
தமிழில்: சந்திரசேகர்

**பின்வரும் கட்டுரைத் தொடரானது, மாற்றுத்திறன் படைத்த இளம் பெண் ஒருவர் தனது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான தொழில் ஒன்றை தேடும் உண்மைச் சம்பவத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. அத்துடன், மாற்றுத்திறன் படைத்தவர்கள் எவ்வாறு தமது திறமைகளை தொழில் நிலைகளில் வெளிக்காட்டுவார்கள், அவர்களுக்கும் தொழில்புரிய ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து தொழில் வழங்குநர் ஒருவன் மனநிலையை இந்த ஆக்கம் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. முதல் பகுதியில் அர்ச்சனா என்பவர், தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக தனது ஆளுமைகளை விருத்தி செய்து கொள்ளும் தீர்மானம் குறித்து பார்ப்போம்.**



அன்பார்ந்த வாசகரே....

இறுதியாக எனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கடந்த வாரம், எனக்கு இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்திடமிருந்து தகவல் தொழில்நுட்ப பயிற்சிநெறியை பின் தொடர்வதற்கான அழைப்பு கிடைத்திருந்தது. மாற்றுத்திறன் வாய்ந்தவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட தொழிற்பயிற்சியளிக்கும் வகையில் அமைந்த தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியாக இது அமைந்துள்ளது. என்போன்ற மாற்றுத்திறன் வாய்ந்தவர்களுக்கு தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான ஆளுமைகளை விருத்தி செய்யும் வகையில் இந்த பயிற்சிநெறி அமைந்துள்ளது.

நான் என் சிறுவயது முதல் தொழில் ஒன்றை புரிவது குறித்த கனவை எனக்குள்ளே கொண்டிருந்தேன். எனது பார்வையை இழக்கும் முன்னர், ஓர் ஆசிரியையாக வர வேண்டும் என்ற ஆசை எனக்குள் இருந்தது. எனது சமூகத்துக்கு பணிபுரிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் நான் கொண்டிருந்தேன். எனது பெற்றோருக்கு வயது முதிர்வடையும் போது அவர்களையும் பார்த்துக் கொள்ளும் வகையில் நான் சம்பளம் ஒன்றை பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில் நிலையில் இருக்க வேண்டும் என்பது என் கனவில் எப்போதும் இருந்த விடயமாக இருந்தது. எனது வகுப்பறையில் நான் பிள்ளைகளுடன் கருணை உள்ளம் படைத்தவராக பழகி, அவர்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு அவசியமான அனைத்து ஊக்குவிப்பையும் வழங்க ஆர்வமாக இருந்தேன். இதன் மூலம் அவர்களும் பெரியவர்களாகி, என்னைப்போல, ஏனையவர்களுக்கு உதவி செய்யக் கூடிய நிலைக்கு வர முடியும்.

ஆனாலும், என் கனவுகளை கலைத்திடும் வகையில், எனக்கு 10 வயது இருக்கும் போது, என் வாழ்க்கையில் இருள்மை சூழ ஆரம்பித்தது. ஆரம்பத்தில் நான்-என் பார்வை குறைபாட்டை பெருமளவில் உணரவில்லை. வானம் சற்று அதிகளவில் கருமையடைவதாக உணர்ந்தேன். பொருள்களை பார்ப்பதில் பெருமளவு சிக்கல் நிலையை எதிர்நோக்கினேன். சில சமயங்களில், பொருள்களின் மீது நான் விழுந்த சந்தர்ப்பங்களும் உண்டு. சிலர் எனக்கு பித்துப் பிடித்துவிட்டது என ஏளனம் செய்தனர். நான் எந்த விடயத்திலும் கவனம் செலுத்துவதில்லை என சிலர் நினைத்தனர். ஆனாலும், உண்மையில் எனக்கு எதையுமே பார்க்க முடியவில்லை. இருள்மை அதிகரித்தது. என் கண்கள், வெளிச்சத்தை ஏற்க மறுத்துவிட்டன. எனது பெற்றோர்கள் கவலைப்பட தொடங்கினர். எனக்கு மூக்குக் கண்ணாடி அணிந்தால் சரியாகி விடும் என அவர்கள் நினைத்தனர். ஆனாலும் வைத்திய பாசோதனைகளுக்கு உட்பட்ட பின்னர், நான் என் கண்பார்வையை முற்றாக இழக்கும் நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக வைத்தியர் கூறினார். நான் மிகவும் சிறுவயதில் இருந்த தால், அவர் என் சொன்னார் என்பது எனக்கு அப்போது புரியவில்லை. இந்த செய்தியை கேள்வியுள்ள என் அன்னையின் கண்களில் வடிந்த கண்ணீரும், அவர்கள் என்மீது செலுத்திய அன்பும், என் தந்தை அளித்த ஊக்கமும் எனக்கு இன்னமும் மனதில் நினைவிருக்கிறது.

எனவே 10 வயது முதல், நான் இருள்மையிலும், ஒளியிழந்த உலகில் வாழ பழகிக்கொண்டேன். பார்வையை இழந்தமைக்கு மேலாக, எனது இந்த நிலையின் காரணமாக, எனது பெற்றோருக்கும், குடும்பத்துக்கும் நான் ஏற்படுத்திய சுமை குறித்து நான் அதிகம் கவலையடைந்தேன். என்னை வித்தியாசமாக அவர்கள் கையாள்வதை நான் உணர்ந்தேன். என் சகோதரன் முன்னரைப் போல என்னுடன் சகஜமாக ஏளனம் செய்து விளையாடுவதில்லை. அவனை சீண்டும் வகையில் நான் ஏதும் செய்தால் கூட அவன் என் மீது கோபப்படுவதில்லை. என் பெற்றோரும் என்னை ஏசுவதில்லை. எனது வீட்டு ஒழுங்கையில் இருந்த எனது நண்பர்களுடன் விளையாடுவதை கூட என் பெற்றோர் தடுத்தனர். ஏனெனில் நான் விழுந்து என்னை காயப்படுத்திக் கொள்வேன் என அவர்கள் அஞ்சினார்கள். நான் ஒரு கவனமாக கையாளப்பட வேண்டிய பொருளாக என்னை உணர்ந்தேன். ஏனெனில், அனைவரிடத்திலிருந்தும் ஒதுக்கி வைக்கப்படுவதன் மூலம் எவ்வித சேதமும் ஏற்படாது எனும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்றமையாகும்.

இந்த அனைத்து செயற்பாடுகளும், என்மீது அவர்கள் கொண்டிருந்த அளவு கடந்த அன்பின் காரணமாக என்பதை நான் நன்கு உணர்ந்தேன். தற்போது நான் இதை மிகவும் உணர்கிறேன். சிறுமியாக இருக்கும் போது, இந்த செயற்பாடுகள் எனக்கு மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் தனிமைப்படுத்தப்பட்ட வளாக உணர்ந்தேன். எனது பார்வை குறைபாட்டின் காரணமாக என்னால் பல வேலைகளை செய்ய முடியாமல் போனாலும் கூட, என்னைச் சூழ்ந்திருந்தவர்களின் மனக் கவலை என்னை எந்த வேலையையும் செய்ய முடியாதவளாக்கியது. எனது வாழ்க்கையில் இருள்மை சூழத் தொடங்கியது முதல், நான் வாழ்க்கையிலிருந்து மெதுவாக விடுபட ஆரம்பித்தேன்.

என்னால் பார்க்க முடியாத விடயங்கள் குறித்து அவர்கள் பேசுவார்கள் என்பதால் சுற்றத்தாருடன் உரையாடுவதை கூட நான் குறைத்தேன். புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சி, மரமொன்றில் அமர்ந்திருக்கும் அழகிய பறவை, கடையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அழகிய ஆடை என எதையுமே என்னால் பார்க்க முடியவில்லை. எனவே அயலவர்கள் என்னை எந்தவிதமான கலந்துரையாடல்களிலும் உள்வாங்கவில்லை. நானும் கேட்பதற்கு வெட்கப்பட்டவளாகவே இருந்தேன். ஒரு முறை பாடசாலை வகுப்பறையில், மாணவன் ஒருவன் முகச்சைகை மூலம் ஏளனம் செய்தான். அயலில் இருந்த சக மாணவர்கள் சிரிப்பதை என்னால் கேட்க முடிந்தது. குறித்த மாணவன் என்ன செய்தான் என்பதை அறிந்து கொள்ள நான் ஆர்வமாக இருந் தேன். எனக்கும் அவர்களின் சந்தோஷத்தில் பங்குகொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. நான் அவர்களிடம் அவன் என்ன செய்தான் என்பதை கேட்க நினைத்த போதிலும், அமைதியாகவே இருந்தேன். (பிறகு...)

## நிர்வாணமாகின்ற

# நிஜங்கள்

உயிரோடை

தேவதைகளின் திருப்பாதங்கள்
பதிந்த பாதைகளில் பாதைகளில்
அலைந்து திரியும் பிசாசுகளின்
பிணவாடைப் பாதங்கள்

ஆயிரந்தான் சொன்னாலும்
அவர்தான் எனக் கைகாட்டினாலும்
தேவியின் புத்திரர்களும் - இப்போ
தெருத் தெருவாய் உருமாறி
பனை மரத்துக்குப் பதில்
கித்துல்மர ஓரத்தில்

யாரிங்கே யதார்த்தவாதி..??
கலிங்கத்துப் பரணி- இப்போ
களங்கத்துப் பரணியாகி
கனகாலமாகிவிட்டது

சேரப் பாட்டனின்
பேரக்குழந்தைகள்
விகாரமாதேவியின்
விசிறிகளாகிவிட்டார்கள்...

ஒடியற்கூழ்
கட்டைச் சம்பலிற்குள்
ஒளிந்துபோய்விட்டது...

புன்னகையோடு நீட்டும்
பொன்னகைப் பெட்டியை
பாய்ந்துபோய்
பற்றிக் கொள்கிறார்கள் பலர்
உள்ளேயிருப்பது மலைப்பாம்பு என்ற
உண்மை தெரியாமலேயே....

இதையெல்லாம் சொல்லி
மனமாறலாமென்று - நண்பனிடம்
இரண்டு வார்த்தை பகிரப் போனால்
அவன் கைபேசியும் பாடுகிறது
மகே ஆதரே..., மகே ஆதரே....



## செருப்பு பிஞ்சிடும்....



ஜம்புலிங்கத்துக்கும் காதலுக்கும் நீண்டதூரம். ஆனாலும் அவருடைய நண்பர்கள் எல்லோருமே காதலில் கரை கண்டவர்கள். அவர்களைப் பார்த்துப் பார்த்து ஜம்புவுக்கும் காதலிக்க வேண்டும் என்ற ஆசை ஊறிவிட்டது. நீண்ட நாள் தேடலின் பின்னர் அவருக்குப் பிடித்த பெண் ஒருத்தியை கண்டுபிடித்தார். அவள் ஒரு பல்கலைக்கழக மாணவி. அதற்குப் பின்னர் அல்லும் பகலும் அனவரதமும் அவள் பின்னாலேயே ஜம்பு திரியத் தொடங்கினார். ஆனால் அவளிடம் காதலைச் சொல்லப் பயம். ஒருநாள் ஆஞ்நேயர் கோயிலுக்குப் போய் நூல் கட்டிய தைரியத்தில் அந்தப் பெண்ணுக்கு முன்னால் போய் நின்றார்.

"ஐ லவ் யூ.... நானும் நீயும் ஓடிப் போகலாமா?" என்று ஒரே மூச்சில் கேட்டுவிட்டார். அதற்கு அவள் எரித்துவிடுவது போல ஜம்புவைப் பார்த்துவிட்டு, "செருப்பு பிய்ந்திடும்" என்று கூறினாள். உடனே ஜம்பு கூலாக " செருப்பு பிய்யும் என்றால் அதை யும் கையில் தூக்கிக் கொண்டு ஓடுவோம்" என் றாரே பார்க்கலாம்.

## ஜம்புவின் தடாலடி




விமலின் நடிப்பில் இன்னொரு நகைச்சுவைப் படமும் வந்தேவிட்டது. படத்தின் பெயர் தேசிங்குராஜா.

ஊர்ப்பகை, காதல், திருமணத்துக்குப் பின் கணவன் - மனைவி மோதல்... என வழக்கமான கிராமத்துக் கதை... ஆனால் பார்வையாளர்களை யோசிக்கவே விடக்கூடாது என கங்கணம் கட்டிக் கொண்டு நகைச்சுவையில் கபடி ஆடியிருக்கிறார் இயக்குநர் எழில். கிளியூர், புலியூர் என இரண்டு கிராமத்துப் பெரியவர்களுக்கும் இடையே தீராப் பகை. ஒரு கொட்டைப் பாக்கில் ஆரம்பித்த அந்தப் பகை, இரு குடும்பத்திலும் நான்கைந்து தலைகளைக் காவு வாங்குகிறது. இந்தச் சூழலில் இந்த இரு குடும்பத்தின் இப்போதைய தலைமுறையைச் சேர்ந்த இதயக்கனியும் (விமல்), தாமரை (பிந்து மாதவி)யும் காதலிக்கிறார்கள்.

இருவரும் திருமணம் செய்து கொண்டாலாவது 50 ஆண்டு கால பகை தீரும் என நினைத்து, காதலியின் தந்தையிடம் தனியாக வந்து திருமணத்துக்கு அனுமதி கேட்கிறான் இதயக்கனி. ஆனால் அவரோ இதயக்கனியைத் தீர்த்துக் கட்ட முயல்கிறார். அவர் கண்ணெதிரிலேயே தாமரைக்கு தாலி கட்டி, தன் நோக்கம் பகையை வளர்ப்பதல்ல, தீர்ப்பது தான் என நிரூபிக்க முயல்கிறான் இதயக்கனி. அந்த நேரம் பார்த்து இதயக்கனியின் ஊர்க்காரர்கள் தாமரையின் கண்ணெதிரிலேயே அவள் தந்தையைக் கொல்கிறார்கள். இதயக்கனிதான் திட்டமிட்டு தன் தந்தையைக் கொன்றதாக நம்பி விடுகிறாள் தாமரை. ஆனால் தாலி கட்டிய மனைவி தாமரையை தன்னோடு அனுப்புமாறு பஞ்சாயத்து வைக்கிறான் இதயக் கனி. தாமரையும் தன் தந்தையைக் கொன்ற கணவனைப் பழிவாங்க அவன் வீட்டுக்கு வருகிறாள். இதயக்கனியும் தாமரையும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு சேர்ந்தார்களா, இரண்டு ஊர் பகை தீர்ந்ததா என்பதே மீதிக்கதை.

இந்த மாதிரி கதையோடு வரும் நூத்தியோராவது படம் இது என்று ரசிகர்கள் முணுமுணுப்பது கேட்கிறது. ஆனால் காட்சிகள் ஒவ்வொன்றுக்கும் நாலு அங்குல சிரிப்புக்கு உத்தரவாதம் தருகிறார் இயக்குநர் எழில். மருதமலை மாமணியே... என்ற பாடலுடன் தொடங்குகிறது முதல் காட்சி. பாடல் முடிந்து நாயகன் அறிமுகமான சில நிமிடங்களில் நாயகியுடன் காதல். அடுத்த காட்சியில் திருமணம், முக்கிய பகையாளியும் செத்துப் போக.. இனி எப்படி நகரப் போகிறது கதை என்று பார்த்தால்... கணவனைப் பழிவாங்க மாமியார் வீட்டுக்கு கூடவே பாதுகாப்புக்காக பத்து அல்லக்கைகளோடு வருகிறார் பிந்து மாதவி. அப்போது ஆரம்பிக்கும் சிரிப்புவெடி இறுதிவரை அதகளம்தான்! முதலிரவைத் தடுக்க சூரி குழு ஒருபக்கம் திட்டம் போட, மாப்பிள்ளைக்குப் பாதுகாப்புக்காக என சிங்கம்புலி - சாம்ஸ் குழு அடிக்கும் அலப்பறைகள் வயிற்றைப் பதம் பார்க்கின்றன.

விமலுக்கு பழகிய வேடம். மிகவும் இயல்பாக நடித்திருக்கிறார். மனைவியிடம் பாவமாக கெஞ்சும்போது மௌனகீதங்கள் பாக்யராஜை நினைவுபடுத்துகிறார். சண்டைக் காட்சிகளிலும் சிறப்பாக நடித்திருக்கிறார்.

பிந்துமாதவி எல்லாக் காட்சிகளிலும் கிறக்கமாகப் பார்த்தபடி வந்து போகிறார். கவர்ச்சி கைகொடுத்த அளவுக்கு நகைச்சுவை இன்னும் அவருக்கு கைவரவில்லை. பரோட்டா சூரி, சிங்கம்புலி, சாம்ஸ், சிங்கமுத்து என அத்தனை பேரும் சிறப்பாக கிச்சுகிச்சு மூட்டுகிறார்கள். குறிப்பாக சிங்கம் புலி, விரசமில்லாத நகைச்சுவை, உச்சரிப்பில் இவர் இன்னொரு பாலையா! வினுச் சக்கரவர்த்தி, ஞானவேல், வனிதா ஆகியோரும் தங்கள் வேடங்களைச் சிறப்பாக செய்துள்ளனர். நகைச்சுவை வில்லன் என்ற பதத்துக்கு சரியான உதாரணம் ரவி மரியா. நல்ல நகைச்சுவை நடிகராக ஒரு வலம்வருவார்! சூரஜ் நல்லுசாமியின் ஒளிப்பதிவும், இமானின் இசையும் படத்திக்கு பலம். 'நிலா வட்டம்...' பாடலின் மெட்டு பழசு என்றாலும் கேட்க இனிமை.



**இந்த மாதிரி கதையோடு வரும் நூத்தியோராவது படம் இது என்று ரசிகர்கள் முணு முணுப்பது கேட்கிறது. ஆனால் காட்சிகள் ஒவ்வொன்றுக்கும் நாலு அங்குல சிரிப்புக்கு உத்தரவாதம் தருகிறார் இயக்குநர் எழில். நகைச்சுவையாக நல்ல விஷயங்களையும் சொல்ல முடியும் என்பதை . பார்த்துப் பழகிப் போன கதைக் களத்தில் அலுப்பில்லாமல் சொல்லியி ருக்கிறார்.**

வன்மமும் பகையும் நொடி நேரத்தில் பிறந்தாலும், தலை முறை தலைமுறையாகத் தொடர்கிறது. எப்படி உருவானதோ அதே வேகத்தில் அதற்கொரு முற்றுப் புள்ளியும் விழுந்தால்... இந்த சமூகம் எத்தனை சந்தோஷமாக இருக்கும் என யோசிக்க வைக்கும் சிரிப்புப் படம் தேசிங்கு ராஜா! இயக்குநர் எழில் நகைச்சுவையாக நல்ல விஷயங்களையும் சொல்ல முடியும் என்பதை . பார்த்துப் பழகிப் போன கதைக் களத்தில் அலுப்பில்லாமல் சொல்லியிருக்கிறார்.

# முதிர்கன்னிகள்

காரைக்கவி

சோகக்கடலில் வாழ்வு மீனுக்காய்
வாடியிருக்கும் வயதாக கொக்குகள்
வாலிப எல்லை கடந்த
வயதுப்பயங்கரவாத செயலால்
வனப்பழிந்த தேகதேசமெங்கும்
திரைக்காயங்கள் கேசவனத்தில்
நரை மூங்கில் நாற்றுப்பதிவுகள்

விழி வழிபார்த்து விளைந்த வலி
விழிவழியே வெளிவிழுந்து
கருவளையக்காவலரணாய்
கண்சுற்றி காட்சி மறைக்கும்

எறிகணைப் பார்வை இருந்த போது
எட்டாத மீன் இளமை மருந்துதிர்ந்த
வெறும் தோட்டாப் பார்வைக்கு
வீழுமோவென்ற ஏக்கம்
இதயப்பதுங்கு குழிக்குள் இருந்து
இடையிடையே தலைநீட்டும்

ஆழ ஊடுருவிய காதலணி
ஆழ்மனதில் அடிக்கடி வெடிப்பதால்
வெளிவரும் மூச்சுக்காற்றில்
வெப்ப வேதனை
கொத்துக்குண்டாய் குதறும்
வார்த்தைகளின் வலிந்த தாக்குதலால்
நரம்புமுடிவுவிடங்களில் எப்போதும்
ஏரிபொசுபரசின் எரிச்சல்
மிதிவெடி பட்ட காலாய்
மனசு வெடித்துச் சிதறும்

வந்துபோகும் சில மீனும்
வருவதுபோல குற்றியெழுந்து
வெற்றிடத்தில் குண்டுவீசும்
விமானம் போல் விலகி
இளவயது கொக்குகளுக்கு
இரையாகிப்போகும்

எரிகுண்டாய் எண்ணங்கள்
எரிந்து சாம்பராகும்
வலிந்துகட்டிய மன(ண)க் கோட்டை
வான்குண்டாய்ச் சிதறும்.
இருந்தும் மீனுக்காய்
இன்னும் கொக்கு காத்திருக்கும்



ரம்யன்

# மெட்ராஸ் கபேயும் மெட்ராஸ் எக்ஸ்பிரஸூம்



சென்னை நகரின் பெயரை முன்வைத்து இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள இரண்டு திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. ஒன்று 'மெட்ராஸ் கபே (Madras Cafe) என்ற பெயரில் சூஜித் சிர்கார் என்பவரால் தயாரிக்கப்பட்டு ஜோன் ஆபிரகாம் மற்றும் நர்கீஸ் பாக்ரி என்ப வர்களின் நடிப்பில் உருவானது. இலங்கையில் இப்போது கொழும்பு லிபேர்ட்டி லைட் (கொல்லுபிட்டி) திரையில் காண்பிக்கப்பட இருக்கிறது.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருப்பாதாகக் கூறப்படும் இப் படம் முழுக்கவும் தமிழ் ஈழப் புலிகளை அவதூறு செய்வதாகவும் புலிகளின் தலைவர் பிரபாகரனை மோசமாக சித்தரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

புலிகளுக்கு எதிரான படம் என்பதால் தென்னிலங்கையில் அப் படம் நல்ல வரவேற்பை பெறக்கூடும். ஆனால் யாழ்ப்பாணத்தில் அதனைத் திரையிட எவரும் முன்வருவார்கள் என்று கூறமுடியாது. ஏற்கனவே தமிழ் நாட்டிலும் மும்பை போன்ற இடங்களிலும் இப் படம் திரையிடப்படுவதற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. லண்டனிலும் இப் படம் திரையிடப்படுவதை ரசிகர்கள் எதிர்த்து தடுத்திருக்கிறார்கள்.

இப் படத்தில் இந்திய புலனாய்வுத் துறை முகவராக ஜோன் ஆபிரகாம் நடித்திருக்கிறார். வடஇந்தியாவில் நல்ல நடிகர்களில் ஒருவராக கருதப்படும் ஆபிரகாம் படத்துக்கு தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பைக் கண்டு ஏமாற்றம் அடைந்திருக்கிறார். இந்தியப் பிரதமர் ஒருவர் கொல்லப்பட்டதை இந்திய மக்கள் எந்த வகையிலும் ஜீரணித்துக்கொள்ள மாட்டார்கள் என்ற நினைப்பில் படம் வெற்றி பெறும் என்ற முறையில் இப் படத்தைத் தயாரித்தவர்கள் கருதியிருக்கலாம். ஆனால் அக் கொலைக்கு பரிகாரம் காணும் வகையில் சோனியாகாந்தி அம்மையாரின் காங்கிரஸ் அரசு இலங்கையில் நடந்த இறுதிப் போரின் போது கடைப்பிடித்த கொள்கையானது இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் இன்னமும் சீரணிக்கப்படவில்லை. இன்னும் பல தலைமுறைக்கு இந்நிலை நீடிக்க இடமுண்டு. ஆகவே தான் மட்ராஸ்கபே படத்துக்கு அங்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதாக கருதப்படுகின்றது.



ஆபிரகாமுக்கு இணை சோடியாக இப் படத்தில் நடித்துள்ள நர்கீஸ் பாக்ரி ஒளிப்படம் எடுக்கும் பத்திரிகையாளராக வருகின்றார். இவ்விருவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தரப்பாக சித்தரிக்கப் படும் விடுதலைப் புலிகளின் இரகசி யத் திட்டங்களை அம்பலப் படுத்த முனைவதாகத் தெரிகின்றது.

இப்படம் முதலில் யாழ்ப்பாணம் என்று பெயரிடப்படவிருந்ததாம். பின்னர் அது மாற்றப்பட்டது. இலங்கையில் அதற்கான எந்த ஒரு காட்சியும் எடுக்கப்படவில்லை. இந்திய கரையோரங்களிலும் வெளி நாடுகளிலும் காட்சிகள் படமாக்கப் பட்டிருக்கின்றன. இப் படத்தில் புரட்சிப் படையினராகக் காட்டப்படுபவர்கள் அணிந்திருக்கும் உடைகள் விடுதலைப் புலிகளின் உடைகளை ஒத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

'மெட்ராஸ்கபே' படமானது வெளிவந்திருப்பதை பார்க்கும்போது முன்னொரு சமயம் 'மெட் ராஸ் மெயில் என்றோர் படம் வந்து சக்கை போடுபோட்டதை நினைவூட்டுவதாக உள்ளது. பழைய சினிமா ரசிகர்களுக்கு அப்படம் நினைவிருக்கலாம்.

தமிழ்நாடு தலைநகரின் பெயரை தாங்கி வந்துள்ள இன்னொரு படம் சென்னை எக்ஸ்பிரஸ் என்பதாகும். (Chennai Express)

### சாதனைபுரிந்துள்ள சென்னை எக்ஸ்பிரஸ்

மெட்ராஸ் மெயில் என்றால் சென்னைக்குத் தபால் கொண்டு வரும் ரயிலைக் குறிப்பதாகும். ஆனால் சென்னைஎக்ஸ்பிரஸ்-சென்னைக்கு வரும் அல்லது சென்னையிலிருந்து புறப்படும் கடுகதி ரயிலைக் குறிக்கும். ரோகித் ஷெட்டியின் சென்னை எக்ஸ்பிரஸ் சமீப காலத்தில் வசூல் வகையில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. கடந்த வாரம் இறுதிவரை உள்ளூர் வசூலில் 200 கோடியை அது தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

பிரபல இந்திய நடிகர் ஷாருக்கான் முக்கிய பாத்திரம் ஏற்றுள்ள இப் படம் இந்தியா முழுவதும் இப்போது சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது. இப்படம் வெளியிடப்படுவ தற்கு முன்னதாக ஷாருக்கான் நேர்காணல் ஒன்றில் கருத்து வெளியிட்டார்.

சென்னை எக்ஸ்பிரஸ் படத்தை மக்கள் விரும்புவார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் அதில் விகடம் நிறைந்துள்ளது. ரோஷிட் செட்டியின் விகடமும் நகைச்சுவையும் இருக்கிறது. எனது பிள்ளைகள் அதை ரசித்தார்கள். அதில் ஒழுக்க சீர்கேடு எதுவும் இல்லை. அதில் வரும் நகைச்சுவை எவரையும் புண்படுத்துவதாக இல்லை" என்று கூறினார்.

சென்னை எக்ஸ்பிரஸின் சாதனைகள்.

★ முன் எப்போதையும் விட மிகக் கூடிய வசூல்
★ மிகப்பெரிய முதல்நாள் வசூல்
★ மிகப்பெரிய 2ஆம் நாள் வசூல்
★ மிகப்பெரிய 3ஆம் நாள் வசூல்
★ முன் எப்போதையும் விட வாரக் கடைசியில் மிகப்பெரிய வசூல்
★ மிக வேகமாக 100 கோடி வசூலை எட்டியமை
★ மிக அதிக முதல்வார வசூல்
★ 150 கோடியை மிக வேகமாக எட்டியமை
★ 2013இல் மிக உயர் வருமானம் பெற்றமை பதிலாக 'மெட்ராஸ் கபே' வெளியாவதற்கே திணறி வருகிறது.

**அசை போட ஒரு விடயம் 92**

**சென்னை எக்ஸ்பிரஸின் சாதனைகள்**

★ முன் எப்போதையும் விட மிகக் கூடிய வசூல்
★ மிகப்பெரிய முதல்நாள் வசூல்
★ மிகப்பெரிய 2ஆம் நாள் வசூல்
★ மிகப்பெரிய 3ஆம் நாள் வசூல்
★ முன் எப்போதையும் விட வாரக் கடைசியில் மிகப்பெரிய வசூல்
★ மிக வேகமாக 100 கோடி வசூலை எட்டியமை
★ மிக அதிக முதல்வார வசூல்
★ 150 கோடியை மிக வேகமாக எட்டியமை
★ 2013 இல் மிக உயர் வருமானம் பெற்றமை






## அனைவரையும்

# வசீகரிக்க

### வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

நிலாமகன்

### வசீகர ஆற்றல் என்பது என்ன?

"அந்தக் விடுதிக்குள் நீங்கள் நுழைந்த வினாடியே நீங்கள் ஒரு பிரபலமானவர் என்பதை என்னால் உணர முடிந்தது. நீங்கள் ஒரு பரோபகாரி" இவை ஷெர்லி பேஸ்ஸின் என்பவர் பாடிய மிகப் புகழ் பெற்ற பாடல் வரிகள். கண் சிமிட்டும் நேரத்தில் மக்கள் நம்மைத் தீர்மானிக்கிறார்கள் என்பதைச் சொல்லும் வரிகள். அந்தத் தீர்மானம் வசீகரத்திலிருந்து அல்லது வசீகரமின்மையிலிருந்து நேரடியாகக் கிளர்ந்து வருவதாகும். யதார்த்தத்துக்கும் அப்பாற்பட்ட நாயகர்களான காந்திஜி, அன்னை திரேசா போன்றோரிடம் காணப்படுவது பரிசுத்தமான உருவில் தோன்றும் வசீகரத்தன்மை.

இதற்கு நேர்மாறானவர்கள் நாம் ஒரேயடியாக ஒதுக்கிவிட முடியாது. ஹிட்லர், முசோலினி போன்றவர்கள் அந்த ஈர்ப்புத் தன்மையைப் பயன்படுத்திப் பேரழிவை, தாக்கத்தை மக்கள் வாழ்வில் ஏற்படுத்தினார்கள். வசீகரத்தன்மை உள்ளவர் நல்லவராகத்தான் இருப்பார் என்பது யதார்த்தமான உண்மையல்ல.

வசீகரம் என்ற இச்சொல் நமக்கு மிகவும் பழக்கமானது. இந்த வசீகரத்தின் அடிப்படையை நாம் புரிந்து கொள்வதில்லை அல்லது ஆழ்மனத்தில் உணர்வற்ற நிலையில் புரிந்து கொள்கிறோம். அதனால் நம் திறமையை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதை அது கட்டுப்படுத்துகிறது.

வெகு சிலரே, அதிசயிக்கத்தக்க வகையில் வசீகரிக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறார்கள் என்று காலங்காலமாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். வசீகரத்தன்மை என்பது மர்மமானது. மந்திர சக்தியுடையது என்றும் தோன்றுகிறது. இது பிறக்கும்போதே நம்முடன் வரும் குணம் என்று நினைத்துக் கொள்கிறோம். அப்படி இல்லையென்றால் நம்மிடம் வசீகரிக்கும் ஆற்றல் இல்லையென்று முடிவு செய்துகொள்கிறோம். இப்படி நினைப்பது மிகவும் தவறானதாகும். பிறக்கும்போதே எந்தக் குணமும் முழுமையாக உடன் வருவதில்லை. நாம் மற்றவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு முறையைச் சார்ந்தே நம்முடைய குணம் அமைகிறது.



வசீகரம் என்ற இச்சொல் நமக்கு மிகவும் பழக்கமானது. இந்த வசீகரத்தின் அடிப்படையை நாம் புரிந்து கொள்வதில்லை அல்லது ஆழ்மனத்தில் உணர் வற்ற நிலையில் புரிந்து கொள் கிறோம். அதனால் நம் திற மையை ஆக்கபூர்வமாகப் பயன் படுத்துவதை அது கட்டுப்படுத்து கிறது.

அதிகமாகப் பிறரை ஈர்க்கும் வல்லமை பெற்றவர் யார் என்று நினைத்தால் உடனே நம் நினைவுக்கு வருவது ஒரு சரித்திர நாயகர், ஒரு பிரபலம், வலிமை வாய்ந்த ஒரு தலைவர் போன்றவர்கள் தான். எது காரணம் , எது விளைவு என்பது தெளிவாக இல்லை.

பாராட்டலாம், பொறாமைப் படலாம், கண்டு பயப்படலாம் என்று நாம் கருதுகின்ற தனிச் சிறப்பு மிக்க ஒரு சிலருக்கு மட்டும் தான் இந்த வசீகரத் தன்மை வாய்த்திருக்கிறது என்று நாம் நினைத்துக் கொள்கிறோம். வசீகரத்தன்மை என்பது நம்மால் அடைய முடியாத ஒன்று என்று நினைத்துக் கொண்டு நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்வது நமக்கு சௌகரியமாக இருக்கிறது. அப்படியென்றால் சுற்றியுள்ள மனிதர்களிடம் மறக்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ,சிறப்புமிக்க குணமான வசீகரத்தன்மை என்பது நம்மிடம் இல்லை என்று அர்த்தமா? கண்டிப்பாக இல்லை! மற்றவரை ஈர்ப்பது என்பது நம்மால் முடியாத காரியம் என்று பொதுவாக நம்பிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திறமை நமக்கு இருக்கிறதா என்று அறிவதற்குக் கூட நாம் முயற்சிப்பதில்லை. வசீகரம் அல்லது மக்களைக் கவரும் ஆற்றல் பற்றி நம்மிடையே நிலவும் மற்றொரு கருத்து- வசீகரம் என்பது நிறைய மனிதர்கள் சம்பந்தப்பட்டது என்பதாகும். பிரபலமான கலைஞர்கள், மத, ஆன்மிகத் தலைவர்கள், செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகள், அதிபுத்தி சாலியான ராணுவ வீரர்கள் ஆகியோர் பெரும்பாலான மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்திய பெருங்கவர்ச்சி அல்லது வசீகரம் உடையவர்கள் என்பதற்கு உதாரண புருஷர்கள். மக்கள் திரளின் மீது இவர்கள் தமது வசீகரத்தால் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும் இவர்கள் சாதாரண மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் செயல்கள் எல்லோருடைய மனதிலும் பதிகின்றன. சில நேரங்களில் புதிராகவும் உள்ளன. ஆனால் அவற்றில் மாயமோ, மந்திரமோ இல்லை. மேலும் அடைய முடியாதவையும் அல்ல. ஓரளவுக்கு நம் எல்லோராலும் குறைந்த அளவுக்காவது கவர்ச்சி விளைவை ஏற்படுத்த முடியும்.

இந்த வசீகரிக்கும் ஆற்றல் அல்லது கவர்ச்சி விளைவு என்பது ஆழ்ந்து கற்றுக் கொள்ளக்கூடியதே. இப்போது உங்களிடமுள்ள திறமை செயலற்று இருக்கலாம். பயன்படுத்தப்படாமல் இருக்கலாம். இந்த இயற்கையான திறமையை வெளியே கொண்டு வந்து சக்தி வாய்ந்த கருத்துப் பதிவைச் செய்ய முடியும். உங்களுடைய தனிப்பட்ட தாக்கம் என்பது உங்களுடைய கவர்ச்சியின் விளைவு. இவை இரண்டும் இப்புத்தகம் முழுவதிலும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றவர் மீதான உங்கள் தாக்கத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். இதை நான் மட்டும் சொல்லவில்லை. இத்திறமையை வளர்த்துக் கொண்டு வெற்றி பெற்றுள்ளதை மற்றவர்களும் விவரிக்கிறார்கள். அதை எப்படி செயற்படுத்துவது என்பதைச் சற்று வேறு விதமாக அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் இவற்றை விட முக்கியம், அதிக ஈடுபாட்டுடன் செய்வது தான் தவிர இத்திறனை வளர்த்துக் கொள்ள நிச்சயமாக நிறைய நேரம் தேவைப்படும்.



உதயனின் 'சூரியகாந்தியில்' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;

சூரியகாந்தி -
உதயன் 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



- போடு போடு ஓட்டுப்போடு பச்சைப் பெட்டிக்கு ஓட்டுப்போடு.
- சிவப்புப் பெட்டிக்கு போடு ஓட்டு.
- மகாவலி கங்கை நீரை யாழ்ப்பாணம் வரச் செய்வேன் என்றார் குமாரசாமி.
- நடைபெறாத கூட்டத்தை பிரசுரித்த பிரபல நாளிதழ்
- தமிழ் பேசத் தெரியாத தமிழரசுக்கட்சி வேட்பாளர்

# தேர்தலோ தேர்தல்.....

## அந்தக் காலத் தேர்தல் நினைவுகள்

வேரற்கேணியன்



அன்றைய தேர்தல் களத்தில் இன்றுள்ளது போல் கடுமையான சட்டங்கள், நிபந்தனைகள் இருந்ததில்லை. படலைகளிலும் , மதில்களிலும் பச்சை, சிவப்பு நிற பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. மரங்களின் உயர் கொப்புக்களில் கட்சிக் கொடிகள் பறந்தன. அவற்றை அறுத்தெறிவதில் இளைஞர் குழுக்கள் சண்டையிட்டன.

வாக்காளரை சுலபத் தில் கவர்ந்திழுக்க பச்சை, சிவப்பு, நீலப் பெட்டிகள் கட்சிகளின் வேண்டு கோளுக்கிணங்க உருவாக்கப் பட்டிருக்கும். "போடு போடு ஓட்டுப் போடு.." என சத்தமிட்டபடி இளை ஞர்கள் தெருத் தெருவாய் கார்களிலும், சைக்கிள்களிலும் செல்வார்கள். தெருத் தெருவாய் சுற்றி வருவார்கள்.

' ஸ்டேட் கவுன்ஸில்' என்ற அரசவைக்கு தேர்தல் நடந்த காலம். மகாதேவா என்ற பெரியார் கோட், களிசாண், சப்பாத்து, தொப்பி அணிந்தபடி ஊர்வலமாய் அழைத்துவரப்பட்டதை பார்த்திருக்கிறேன். அதே போல் தலைப்பாகை வைத்த நடேச பிள்ளை பட்டுவேட்டி பட்டுச் சேட், சால்வை அணிந்தவராய் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தேர்தல் பரப்புரைக்கு வீதிவலம் வந்தனர். பின்னாளில் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடந்தது. சாவகச்சேரி வி.குமாரசாமி பல தடவைகள் வெற்றி பெற்றார். இரண்டு அரை மந்திரிப் பதவிகளை ஒரே நேரத்தில் பெற்றவர் தாதே தான் என்று மேடைகளில் முழங்குவார். மகா வலி கங்கை நீரை யாழ்ப்பாணத் துக்கு கொண்டு வருவேன் என்றார். மகாவலி நீரைப் போத்தலில் அடைச் சுத்தான் கொண்டு வருவர் குமார சாமி ஐயா என நகைச்சுவையாய் எதிர்க்கட்சியினர் தங்கள் பரப்புரையின் போது சொன்னார்கள்.

பிரபல குற்றவியல் வழக்குரைஞராக விளங்கிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வந்ததும் பட்டுவேட்டிக்கு மாறிவிடுவார். குழந்தைத் தமிழில் கூட்டங்களில் பேசுவார். இடையிடையே ஆங்கில வார்த்தைகள் சேரும். 'Ponnampalam speaks English in the English Way' என யாரோ ஒரு ஆங்கிலேயர் சொன்னதாக நம்மவர் அந்த நாளில் பேசிக் கொண்டனர். அவர் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது காங்கேசன்துறை சிமெந்து தொழிற் சாலை நிறுவப்பட்டது. அதற்காக ஜீ.ஜீ.யைப் பாராட்டி ஒருவர் பொது மேடையில் பேசியபின் பொன்னம்பலம் உரையாற்றுகையில் "ஈசன் கருங்கல்லை அங்கே போட்டு வைத் ததால்தான் வந்தது தொழிற்சாலை நான் கொண்டுவரவில்லை" என்று தன் எளிமையை உணர்த்தி தனது திறமையைப் பறைசாற்றினார்.

சமசமாசக் கட்சி ,கம்யூனிஸ்ட் கட்சி , தமிழ் காங்கிரஸ்கட்சி, தமிழரசுக் கட்சி என்பன அப்போது பிரபலமாயிருந்த காலம். அது இடதுசாரிக் கட்சிகளின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் சொற்பொழிவாற்ற தெற்கிலிருந்து எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கென மன், என்.எம். பெரேரா,பாலா தம்பி, பிலிப்குணவர்தன போன்ற பிரமுகர் கள் வருவார்கள். அவர்களின் பேச் சில் அர்த்தம் இருக்கும். ஏழையும், தொழிலாளியும், விவசாயியும் ஒடுக் கப்பட்டவர்களும் எழுச்சி பெற்றனர். ஆயினும் அவர்களுக்கு இங்கே பெரும் ஆதரவு இருக்கவில்லை. ஒருவர் மட்டும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பருத்தித்துறை தொகுதியில் தெரிவானார். பல முறை தோற்ற அவர் 'பாவம் ஒரு முறை போய் வரட்டுமே' என்ற அனுதாபம் அவரை அனுப்பி வைத்தது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வடகிழக்கில் செல்வாக்கு பெறும் வகையில் செயற்பட்டன. எழுச்சியூட்டும் மாநாடுகள் உணர்ச்சியூட்டும் சொற்பொழிவுகள் மக்களை விழிப்படையச் செய்தன. தமிழரசுக் கட்சியின் ஒத்துழையாமை, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்பன ஆளும் வர்க்கத்தை அசைத்தன.

இருதரப்பும் இணங்கி உரிமை ஒப்பந்தங்களும் செய்து கொண்டன. ஆயினும் அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை. பல கட்சியினரும் சேர்ந்து காலிமுகத்திடலில் , நாடாளுமன்ற கட்டடத்துக்கு எதிரில் தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டமை வரலாற்றுச் சோகம். அரசு ஏவிவிட்ட கூலிப் படையினரால் தந்தை செல்வா , கு.வன்னியசிங்கம் உட்பட பலர் தாக்கப்பட்டனர். நெற்றியில் காயமடைந்து கட்டுப் போட்டபடி நாடாளுமன்றம் சென்ற கு.வ. வைப் பார்த்து 'கேட்டீர்கள் கிடைத்தது' என்று அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா கூறியதுக்கு பதிலடியாக "இத்தகைய சம்பவம் ஒன்று உங்களுக்கு நடவாது என்பதற்கு என்ன உத்தரவாதம்" என்று கேட்டார். வன்னிய சிங்கம் தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் யாழ்.செயலகம் எதிரில், பல நாள் இடம்பெற்ற சத்தி யாக்கிரக போராட்டமும் அரச படைக ளால் அடித்து கலைக்கப்பட்டதும் உலகறிந்த சம்பவம்.

இரு கட்சிகளும் மாறிமாறி யாழ். முற்றவெளியில் கூட்டங்களை நடத்தின. ஒருமுறை தமிழ் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த 'மாபெரும்' மாநாடு மேடை நொருக்கப்பட்டது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் தன்னு டைய பேச்சை கொழும்பு நாளித ழுக்கு அனுப்பிவிட்டு கூட்டத்துகக்கு வரவில்லை. மறுநாள் பத்திரிகை 'மாபெரும்' கூட்டத்தில் ஜீ.ஜீ. பேசியதாக தலைப்புச் செய்தியில் உரையை பிரசுரித்தது. நடை பெறாத கூட்டத்தின் செய்தி அது.

தமிழரசுக்கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டமும் முற்றவெளியில் நடக்கும் மக்கள் வெள்ளம் கரை காணாது பாயும். தளபதி எனப் பெயர்பெற்ற அ.அமிர்தலிங்கம் பல பூமாலைகள் கழுத்தை அலங்கரிக்க மேடையில் ஏறுவார். தலைமை வகிப்பார். சிறந்த ஆங்கிலப் பேச்சாளர் என்று டபிள்யூ.ஆர்.டி.யினால் ஒருமுறை புகழப்பட்டவர் இந்த அமிர்தலிங்கம். இந்த மாநாட்டில் சொற்பொழிவாற்ற திருமலை இராஜவரோதயம், மல்லாகம் நடராசா, கோப்பாய் கு.வன்னியசிங்கம்,மசூர் மவுலானா, மாவை சேனாதிராசா போன்றோரின் கனல் பறக்கும் கருத்துரைகளை மக்கள் மெய்மறந்து செவிமடுத்திருப்பார். தந்தை செல்வா, தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வழிமுறையை மென்குரலில் அமைதியாக எடுத்துரைப்பார். அவர் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் அரசியல் உரிமைக்காகப் போராடும் இன்றைய தமிழ் பேசும் மக்களால் வியந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

சாவகச்சேரியில் ஒரு வேட்பாளர் அறிமுக விழா தமிழரசுக்கட்சியின் சார்பில் தென்மராட்சித் தொகுதியில் போட்டியிட சட்டக்கல்லூரியில் பட்டம் பெற்ற மட்டுவில்வாசி.வி.என். நவரத்தினம் நிறுத்தப்பட்டார். அவரு டைய கன்னிப் பேச்சைக் கேட்க பெருந்திரளான மக்கள் குவிந்திருந் தனர். தந்தை செல்வா தலைமை வகித்தார். தமிழரசுக் கட்சிக்கு வாக் களிக்கக் கோரி கொள்கை விளக்கம் கொடுத்த பேச்சாளரின் உரைக ளுக்குப் பிறகு வி.என் நவரத்தினம் பேச அழைக்கப்பட்டார். அவர் எழுந்து ஒலி பெருக்கியின் முன் வந்து நின்று "அன்பர்களே ,நண்பர்களே, சகோதர, சகோதரிகளே என விழித்தார். தொடர்ந்து பேசத் தயங்கினார். தமிழ் வார்த்தைகள் வர மறுத்தன. மக்களிடையே சலசலப்பு. கணீ ரென்று ஆங்கிலச் சொற்கள். அவர் நாவிலிருந்து வெளிவந்தன. 'I am prepared to sacrifice my health wealth and happiness for the freedom of the tamil speaking people'

மக்கள் மத்தியில் கூச்சலும் குழப்பமும். "தமிழ் பேசத் தெரியாதவரா தமிழர் உரிமைகளுக்காக போராடப் புறப்பட்டார்." இத்தகைய கேள்விகள் எழுந்தன. தலைவரோ உரத்துப் பேச இயலாதவர். மேடைக்குச் சமீபத்தில் நின்றிருந்த நான் மேடை யில் ஏறி ஒலிவாங்கியைப் பற்றி (தற்புகழ்ச்சி அல்ல உண்மை) "பெரியோர்களே! தயவு செய்து அமைதியாய் இருங்கள்" என்று இருதடவை சத்தமிட்டேன். சற்றே அமைதி நிலவியது. அதன் பின்னர் மேடையில் இருந்த மல்லாகம் நடராசா எழுந்து உரத்த குரலில் சொன்னார். "இளைஞர் நவரத்தினம் இந்த ஊரில் பிறந்தவர். சட்டக்கல்லூரியில் ஆங்கி லம் மூலம் பல இனத்தவர்கள் மாணவர்களுடன் சேர்ந்து படித்த வர். அங்கே பயில்மொழி மாத்திர மன்றி பழகும் தொடர்பு மொழியும் ஆங்கிலம் என இருந்ததால் இவ ருக்கு தமிழ் பேச வாய்ப்பிருக்க வில்லை. அவர்எங்களுடன் தமிழில் தான் பேசுகிறார். இதுவே அவருக்கு முதல் மேடை. நாளடைவில் தமிழில் பேச பழகி விடுவார். ஆதலால் நீங்கள் திறமையான ஒரு வேட்பாளரை உங்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்க ஆதரவளியுங்கள்". பின்னாளில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மேடைகளில் பேசியவர் இந்த நவரத்தினம்.

இன்றிருப்பது போல் அக்காலத்தில் அடிதடியும் அராஜகமும் அளவுக்கு மீறி இருந்ததில்லை. மக்கள் அச்சத்துடன் வாழ்ந்ததில்லை. வார்த்தை விநோதங்கள் , விவாதங்கள், சொல்லம்புகள், சாடல்கள் இருந்தன. தோல்வியை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்வதும் வெற்றி பெற்றவரை பொது மேடையில் வாழ்த்தும் பண்பாடும் நீவியது.

யாழ். செயலகத்தின் எதிரே டச்சுக் காலத்தில் 'பழையபூங்கா' எனப் பெயர் பெற்ற பெரு விருட்சங்கள் நிழல் தரும் பெருவெளியின் நுழைவாயிலுக்கு அருகில் சிறுமேடை அமைக்கப்பட்டிருக்கும். ஒலிபெருக்கி இணைக்கப்பட்டு பாடல்கள் ஒலிபரப்பாகும். மாலை ஐந்து மணிக்குப் பின் தேர்தல் வாக்களிப்பு முடிவுற்றபின் பழைய பூங்காவில் மக்கள் பல ஊர்களிலிருந்து வந்து கூடுவர். கடலை, சுண்டல், வடை போன்ற சிற்றுண்டி விற்கும் வியாபாரிகளும் வந்து சேருவர். செயலகத்தின் பின்புறம் இருக்கும் மண்டபம் வாக்குப் பெட்டிகளை வரவேற்ற தயார் நிலையில் இருக்கும். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொலிஸ் காவலுடன் வாக்குச் சீட்டுக்கள் நிறைந்த பெட்டிகள் எடுத்து வரப்பட்டு இங்கே அடுக்கப் படும். பெட்டிகளில் சீல் அகற்றி வாக்குச் சீட்டுக்களை பரந்த மேசை யில் கொட்டி எண்ணும் பணியாளர், மேசையை சுற்றி இருப்பர். இரவு ஒன்பது மணியளவில் எண்ணும் வேலை ஆரம்பிக்கும். முதலில் பத்துப் பத்தாக எண்ணி றப்பர் வளையம் போட்ட கட்டுக்கள் பின்னர் நூறு நூறாகவும் பின்னர் ஆயிரம் கொண்ட கட்டுகளுமாச் சேர்த்து கணிக்கப்படும். இவ்வாறே ஒரு தொகுதிக்குரிய மொத்த எண்ணிக்கையும் பெரும்பான்மையும் வித்தியாசமும் பெறப்படும். வேட்பாளர்கள் எண்ணும் பணியை அமைதியாக நின்று அவதானிக்க அனுமதிக்கப் படுவர். ஒரு தொகுதியின் பெறுபேறு அரச அதிபருக்கு தட்டச்சில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும். அவர் அதனை எடுத்துக் கொண்டு தனது அரச வாகனத்தில் ஏறி அமர்ந்து தெருவைக் கடந்து பழைய பூங்காவில் இருக்கும் மேடை யில் ஏறி நின்று ஒலிபெருக்கியில் விவரம் அறிவிப்பார்.வெற்றி பெற்ற வேட்பாளரை அழைத்து கைகுலுக்கி வாழ்த்தி விட்டுத் திரும்புவார். மக்கள் கூட்டம் ஆர்ப்பரிக்கும். தோல்வியடைந்தவரின் ஆதரவாளர்கள் மெல்ல மெல்ல வெளியேறுவர். அனைவருக்குமாக திரைப்பாடல்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

இவ்வாறே விடிய விடிய பழைய பூங்காவில் தேர்தல் திருவிழாகளை கட்டும். விடிந்ததும் வெளியூர்களிலிருந்து வந்தவர்கள்வீட்டுக்குத்திரும்புவர். வீடு வந்து சேரும்வரை வெற்றி! வெற்றி! என்ற வேட்டொலிக்க வீதி நீளம் பரவும். அன்றைய நாளிதழ்கள் தேர்தல் பெறுபேறுகளை கொட்டை எழுத்துக்களில் வெளியிடும். மக்கள் முண்டியடித்து பத்திரிகைகள் வாங்குவர். நேற்றுவரை வியர்வை சிந்த உழைத்த வேட்பாளர் இன்று நாடாளுமன்ற உறுப்பினர். அவர் வீட்டில் தேநீரும் சிற்றுண்டியும் அருந்தி மகிழும் ஒரு கூட்டம். நாடா ளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிர மாணம் செய்ய அவர் ஒரு நல்ல நாளில் கொழும்புக்கு செல்லப் புறப்படுவர். நெருங்கிய நண்பர்களும் ஆதரவாளர்களும் அவருடன் கூடவே ரயில் தரிப்பு நிலையம் சென்று வாழ்த்தி அனுப்புவர்.

இ.புத்திரசிகாமணி




# இறக்குமதி செய்யப்பட்ட காடையர் கூட்டத்தால் மலையகத்தில் பதற்றம்

**ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல ஒரே வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்குச் சேர்க்கும் ஆறுமுகன் தொண்டமானும் திகாம்பரமும் முன்தாடியை முறுக்கிக் கொண்டு மோதுகின்றனர்**

மாகாண சபைத் தேர்லுக்கு இன்னும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் மத்திய மாகாணத்தில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. தமது தலைவர்களுக்கு இடையிலான மோதல்களினால் மலையகத் தொழிலாளர்கள் தாம் வாக்களிக்க வேண்டுமா? என்று சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மலையகத் தொழிலாளர்கள் எப்போதுமே தாம் உண்டு தம் வேலை உண்டு என்று அமைதியாக வாழ விரும்புபவர்கள். அவசியமற்ற வம்பு தும்புகளுக்கு அஞ்சுபவர்கள். ஆனால் இன்று நிலைமை மலையகத் தலைவர்களால் தலைகீழாக மாற்றி அமைக்கப்பட்டு விட்டது.

இம்முறை மத்திய மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைக்கான தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஐக்கிய தேசியக் கட்சி, மலையக மக்கள் முன்னணி என்பன முக்கிய மானவை.

தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் பொதுவாக மாற்றுக் கட்சிகளுக்கு எதிராகவே பரப்புரைகளை மேற்கொள்வார்கள்; மோதிக் கொள்வார்கள்.

ஆனால் இன்று மத்திய மாகாணத்தில் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்குள்ளேயே பெரிய மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று பெரிய பனர்கள் கட்டப்பட்டாலும் இந்த அணியில் இருக்கும் கட்சிகள் கீரியும் பாம்புமாகவும், எலியும் பூனையுமாகவும் கடும் குரோதத்துடன் மோதிக் கொள்கின்றன. குறிப்பாக ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் இருக்கும் பிரதான மலையக கட்சிகளான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கமும் ஒரே கடுமையாக முட்டி மோதிப் போட்டியிடுகின்றன.

இந்த இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள், பரஸ்பர தாக்குதல்களுக்கும் உடைமை களைச் சேதப்படுத்தும் சண்டைகளுக்கும் கொலை அச்சுறுத்தல்களுக்கும் இட்டுச் சென்றுள்ளன. இவ்விரு தரப்பினரும் இன்று நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டும் பொலிஸாரால் தேடப்படுபவர்களாக இருப்பதுடன், தலைமறைவாகத் திரிய வேண்டிய அவல நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

தேர்தல் காலங்களில் கட்சிவிட்டு கட்சி மாறுவதும் புதிய பதவிகளை ஏற்பதும் சர்வசாதாரணமான விடயம்தான். ஆனால் இவ்விரு கட்சிகளுமே இன்று இரத்தக் களரி ஏற்படும் அளவுக்கு மோதிக் கொள்கின்றமை தான் வேதனை.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரத்தின் தனிப் பெரும் ஆதரவுடன் மத்திய மாகாண சபைக்கு தெரிவானவர் உதயா. பதவி யேற்று சில காலங்களின் பின் அவர் ஆறுமுகன் தொண்டமானின் அணியில் இணைத்து திகாம்பரத்துக்கு எதிரான பரப்புரைப் பீரங்கியாகப் பயன் ப(டு)த்தப்பட்டார். அந்த வேளையில் இது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை.

ஆனால் மத்திய மாகாணத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்ட பின் தொண்டமானின் பாசறையில் முக்கியமான பிரமுகர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் இராசதுரை அக்கட்சியை விட்டு வெளியேறி திகாம்பரத்தின் கட்சியில் இணைந்து கொண்டார் என்பதுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவராகவும் நியமிக்கப்பட்டு விட்டார்.

இது இ.தொ.க. வட்டாரத்தில் மட்டுமல்ல முழு மலையகத்திலும் ஒரு கலகலப்பை ஏற்படுத்திவிட்டது.

இராசதுரை மலையகத்தில் ஒரு பிரபல சட்டத்தரணியாகவும், பதில் நீதிவானாவும் மக்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர். பாமர மக்கள் முதல் புத்திஜீவிகள் வரையில் மதிக்கப்படுவர். இப்படியான ஒரு மனிதர் தமது அணி யில் இருந்து வெளியேறியது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலை மைக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. கட்சியின் தலைவர் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் இராசதுரையின் வெளியேற்றம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று பத்திரிகை அறிக்கை விட்டாலும் அதனால் ஏற்பட்ட தாக்கம் இப்பொ ழுது அம்பலமாகி விட்டது.

தொண்டமானின் ஆள்கள் திகாம்பரத்தின் ஆதரவாளர்களையும் திகாம்பரத்தின் ஆதரவாளர்கள், தொண்டமானின் ஆள்களையும் மாறி மாறித் தாக்குகின்றனர். அலுவலகங்களையும், வீடுகளையும் தாக்கிச் சேதப்படுத்துகின்றனர்.

இந்தத் தாக்குதல்களின் போது இனம் தெரியாத குண்டர்கள் கூட்டமும் பெருமளவில் காணப்படுவதாகப் இப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும், மாகாண சபைகளுக்கான தேர்தலும் ஏக காலத்தில் ஒரே தினத்தில் எல்லா மாகாணங்களிலும் நடைபெறும். அவ்வப் பிரதேசத்தில் உள்ள அரசியல் வாதிகள் தத்தமது பிரதே சங்களிலேயே தேர்தல் பிரசாரங் களை மேற்கொள்வார்கள். வேறு மாவட்டங்களுக்கோ அல்லது மாகா ணங்களுக்கோ செல்லும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இந்தக் கலாசாரத்தையும் மாற்றிவிட்டார். அதாவது தனக்கு சாதக மான பிரதேசங்களைத் தரம்பிரித்து கட்டம் கட்டமாகப் தேர்தலை நடத்துகின்றார். இதனால் பிற மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தமது கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவு காட்டும் போர்வையில் தமது ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் குண்டர்கள் பட்டாளத்துடன் வந்து கூடாரம் அடித்து விடுகின்றனர்.

இந்த நிலைமைதான் இப்போது மத்திய மலைநாட்டில் ஏற்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குண்டர் களும் காடையர்களும் நிறைந்து காணப்படுகின்றனர். முன்பின் தெரியாத புதுமுகங்கள் தினம் ஒரு வாகனத்தில் வலம் வருகின்றன. அந்த வாகனங்களின் இலக்கத் தகடு கள் உண்மையானவைதானா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல ஒரே வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்குச் சேர்க்கும் ஆறுமுகன் தொண்டமானும் திகாம்பரமும் முன்தாடியை முறுக்கிக் கொண்டு மோதுவதால் பெரும்பான்மை வேட்பாளர்களுக்கு அது சாதகமாகிப் போகிறது.

ஆறுமுகன் தொண்டமான் பல லட்சங்களை செலவிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் படத்துடன் தனது படத்தையும் பெரிதாக்கி பெரிய அளவிலான கட்டவுட்டை வைக்கின்றார் திகாம்பரம். நான் மட்டும் சளைத்தவனா என்று கூறிக் கொண்டு ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவின் படத் துடன் தன் படத்தையும் இணைந்து வானுயர கட்டவுட்டை வைக்கின்றார். இவற்றை எல்லாம் தூர இருந்து வேடிக்கை பார்த்துக் கொண் டிருக்கின்றனர் ஆளும் தரப்பினர்.

தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடுவது போல் ஆறுமுகத்தையும் திகாம்பரத்தையும் சீண்டிவிட்டு வெற்றிலைச்சின்ன வாக்குப் பெட்டியை நிறைத்தும் கொள்கின்றனர். யார் அடிமைப்பட்டாலும் இவர்களால் தமது வாக்குகள் வந்து குவியும் என்ற திட நம்பிக்கையுடன் இருக்கின்றது அரசு.

இந்த உண்மையை அறியாத உடன் பிறப்புக்கள் தமது சக்திகளை எல்லாம் ஒன்றுதிரட்டி அடுத்த வீட்டுக்காரனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்திவிட்டு மீண்டும் கைகட்டி யாசகம் கேட்டு நிற்கப் போகின்றன.

மலையகத்தில் பல்லின மக்களும் இணைந்து வாழ்கின்றனர். பிறப்பு. இறப்பு மற்றும் திருமண வைபவங்களிலும் இன்னும் சொல்லப் போனால் கோயில் திருவிழாக்களிலும் கூட எந்தவிதமான சாதி வேறுபாடுகளும் இன்றி ஒற்றுமையாகக் கொண்டாடுகின்றனர்.

ஆனால் மத்திய மாகாணத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் தலைவர் என்று கூறிக் கொள்ளும் ஒருவர், மற்றும் கட்சித் தலைவரையும் அந்தக்கட்சி வேட்பாளர்களையும் சாதியைக் குறிப்பிட்டு இழிவுபடுத்திப் பேச உள்ளாராம்.

அந்தத் தலைவரின் வாயிலிருந்து வெளிப் பட்ட இந்த இழிவான வார்த்தை மலையகத்தில் காட்டுத் தீ போல் பரவி உள்ளது. இதனால் ஆத்திரமுற்ற மக் கள் இவர்களுக்கு வாக்குப் போட வேண்டுமா என்று சிந்திக்கின்றனர்.

மற்றவர்களின் மனதைப் பாதிக்கும் வகையில் வார்த்தைகளை உதிர்த்து விடக் கூடாது என்பதைத் தலைவர்கள் உணர வேண்டும்.

அதேசமயம் மக்களால் மதிக்கப் படும் தலைவர் ஒருவர் சாதியைக் குறிப்பிட்டும் பேசியதால் மலையகத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படும் வாய்ப்பும் உண்டு. இது ஏனைய தலைவர்களுக்கும் ஒரு பாடமாக அமையும்.

## "எல்லாத்துக்கும் பஞ்சி"



அவரவர் வேலையை அவரவர் செய்யாவிட்டால்
அதுவே அவரவர்க்குத் தோல்வியாக அமைந்துவிடும்
நம்மவர் முன்போ நனிசிறந்து வாழ்ந்த போதிலும்
நாம் படிப்படியாகத் தோற்று வருகிறோம் காணீர்

கூட்டப்பஞ்சி; குனியப்பஞ்சி; கழுவப்பஞ்சி;
கும்பிடப்பஞ்சி; கொஞ்சநேரம் இருக்கப்பஞ்சி;
வீட்டுக்கு விளக்கு எரிக்கப் பஞ்சி; வாய்விட்டு
வாசிக்கப் பஞ்சி; வடிவாக எழுதப்பஞ்சி என்றால்;

நாம் எங்கு செல்கின்றோம்; நம் ஏட்டுப் படிப்பு
நமக்கு உதவ வேண்டும்; நாளை நமக்காகவெனில்
நமக்கான சிறுசிறு வேலைகளை நாம் செய்துவரின்
நாம் பிறருக்கு சுமையாகி விடோமல்லவா!

தேநீர் கோப்பை அப்படியே இருக்கும்; தம்பிக்கு
தூக்கிக் கொடுக்க வேண்டும்; தங்கச்சியும் அப்படி
தொட்டுக்கும்பிட வேண்டிய பேனா பாவம்
திக்கெட்டும் பறந்து காலுக்குள் தடக்குப்படும்

கடைக்குப் போய் காய்கறி வாங்க, பாண் வாங்க
கணக்குப் பார்க்க, கடிதம் எழுத, கனம்பண்ண
குடை பிடிக்க, குரக்கன் சாப்பிட, கூழ் குடிக்க
கூலி கொடுத்து வாழவா குடும்பம்! என்ன உலகம்?




# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

1979களில் கணினி புரட்சி என்று சொல்லக் கூடிய வகையில் அமெரிக்கா வெங்கிலும் மைக்ரோ கணினிகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பெருக ஆரம்பித்தன. அவற்றிற்கெல்லாம் மென் பொருள் எழுதுகின்ற வேலை மைக் ரோசொஃப்டுக்குக் கிடைத்தது.

ஆரம்பத்தில் பேஸிக் மென்பொருளை நேரடியாக மக்களிடம் விற்றபோது திருட்டு விற்பனை மைக்ரோசொஃப் டைப் பாதித்தது. இப்போது நேரடியாக கணினி நிறுவனங்களுக்கே விற்று விடுவதால் திருட்டு மென்பொருள் விற் பனை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அமெரிக்காவில் எந்த ஓர் இடத்தில் கணினி கண்காட்சி நடந்தாலும் பில் கேட்ஸ் அங்கே ஒரு கடையைத் திறந்து மைக்ரோசொஃப்டின் மென்பொருள் பற்றி விலாவாரியாகப் பேசி நோட்டீஸ் விநியோகித்துக் கொண்டிருப்பார்.

எப்படியும் இரண்டொரு நிறுவனங்கள் அவரது வலையில் விழும்! புதிய ஆர்டர் களைப் பெற்றுக் கொண்டுதான் ஊர் திரும்புவார்! இதில் இன்னொரு லாபம் என்னவென்றால் கண்காட்சிக்கு வரு கின்ற மக்களிடம் மைக்ரோசொஃப்ட் பற்றி விளம்பரம் செய்த மாதிரியும் இருக்கும்!

மைக்ரோசொஃப்டுக்குப் போட்டியாக மென்பொருள் எழுதுகிற நிறுவனங்கள் உருவானபோது பில்கேட்ஸின் உழைப்புக்கு முன்னால் அவர்களால் முன்னேற முடியவில்லை. ஒரு புதிய வேலை கிடைத்து விட்டால். அதை முடிக்கும் வரையில் மைக்ரோசொஃப்ட் ஊழியர்கள் எவருக்கும் பசி, தூக்கம் எதுவும் கிடையாது!

மற்றவர்கள் இரண்டு மாதங்கள் எடுத் துக் கொண்டு செய்கிற வேலையை இவர்கள் ஒரே மாதத்தில் முடித்துக் கொடுப்பார்கள். "அவசரமாக மென் பொருள் எழுத வேண்டுமா? மைக்ரோ சொஃப்டிடம் போங்கப்பா" என்று மற்றவர்கள் சொல்லுகின்ற அளவுக்கு வேலையை விரைந்து முடிப்பதில் முன்னணியில் நின்றது மைக்ரோசொஃப்ட் !

மென்பொருள் சிங்கம் பில்கேட்ஸின் புகழ் மெல்ல மெல்ல அமெரிக்காவையும் கடந்து வெளிநாடுகளிலும் எட்டிப் பார்க்கத் தொடங் கியது. குறிப்பாக அப்போது "எலக்ரானிக்ஸ் புரட்சி" நடத்திக் கொண்டிருந்த ஜப்பானில் பில்கேட்ஸைப் பற்றியும் அவரது மென் பொருள் பற்றியும் பத்திரிகைகள் விலா வாரியாக எழுதித் தள்ளின!

ஏறக்குறைய பில்கேட்ஸைப் போலவே கணினி பித்துப் பிடித்திருந்த 'கஜீஹிகோநிஷி' என்ற ஜப்பானிய இளைஞருக்கு பில்கேட்ஸ் மீது அளவு கடந்த பிரியமும் வியப்பும் மேலிட்டன. தொலைபேசி வழியாக கேட் ஸைப் பிடித்த நிஷி, "உங்கள் சேவை அமெரிக் காவுக்கு மட்டும்தானா? ஜப்பானுக்கெல்லாம் கிடையாதா? அப்படியே ஜப்பானுக்கு ஒரு சுற்றுப் பயணம் வந்து விட்டுச் செல்லுங்கள்" என்று அழைப்பு விடுத்தார்.

எம்.ஐ.ரி. எஸ். இல் உட்கார்ந்து கொண்டு ஈயடித்த காலத்தில் இருந்த அழைப்பு வந்திருந் தால்.உடனே பில்கேட்ஸ் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஜப்பானுக்கு ஓடியிருப்பார்! இப் போதோ அவருக்குச் சாப்பிடக் கூட நேரமில்லை. ஆனாலும் அப்படி வருகிற வாய்ப்பை நம்ம பில்கேட்ஸ் தவற விடுவாரா?

"எனக்கு ஜப்பான் வருவதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. உங்களுக்கு நேரம் கிடைத்தால் அமெரிக்காவுக்கு வந்து விடுங்கள். இருவரும் நேரில் பேசி முடிவெடுப்போம்" என்று பில்கேட்ஸ் சொன்ன இரண்டாவது நாளே அமெரிக்காவுக்குப் பறந்து வந்தார் நிஷி!

இரு கணினி ஞானிகளும் மணிக் கணக்கில் பேசித் தங்களின் வருங்காலக் கனவுக் கோட்டைகளைக் கட்டினார்கள். நிஷியின் கணினி காதலையும். அவரது செயல் திறனையும் அறிந்த கேட்ஸ், நிஷியை தூர கிழக்கு நாடுகளுக்கு மைக்ரோசொஃப்ட் டின் பிரதிநிதியாக நியமித்தார்!

மைக்ரோசொஃப்டின் தயாரிப்புகளை அள்ளிக்கொண்டு போன நிஷி, ஜப்பானில் கடை விரித்த போது அவை சக்கைப் போடு போட்டன. மைக்ரோசொஃப்ட்டின் உதவியு டன் ஜப்பானிலும் முதல் மைக்ரோ கணினி தயாரிக்கப்பட்டு அதில் மைக்ரோசொஃப் டின் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. சந்தைக்கு வந்தபோது மிகப் பெரும் வெற்றி யடைந்தது! அதைத் தயாரித்த N.E.C. நிறுவனத்துக்கு மைக்ரோசொஃப்ட்டுக்கு கொழுத்த இலாபம் கிடைத்தது!

இதன் பிறகு பில்கேட்ஸ் விற்பனைக்காக அடிக்கடி ஜப்பானுக்கும் பறக்க ஆரம்பித் தார். கேட்ஸுக்கு ஜப்பானில் பாராட்டுக்கள் குவிந்தன! பாராட்டுக்கள் மட்டுமா? டொலர் களும்தான்!

ஏறக்குறைய 15 மில்லியன் டொலர் இலா பத்தை எதிர்பார்த்த மைக்ரோசொஃப்டுக்கு 150 மில்லியன் டொலர் கிடைத்தன! லட்சக் கணக்கான வியாபாரத்தை எல்லாம் மைக் ரோசொஃப்ட் எப்போதோ கடந்து விட்டி ருந்தது! இப்போதெல்லாம் அதன் வியா பாரம் மில்லியன் கணக்கில்தான்!



## தேர்தல் வாக்கு

■ நவராஜ்

போலிகள் மேலேறிக்
கொள்வதோ நற்தலைமை
காலிகள் போவதோ
நாடாளுமன்று- தோலுரித்(து)
இங்கிவர் போலிமை
காட்டி உம் வாக்கினால்
வைப்பீர் அவர்க்கு நல்ல வேட்டு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
பின் னேன் நாளும்
தாக்குண்டு வாழுமிவ்
வாழ்க்கையென்ற-நோக்கொன்று
நெஞ்சுபுக யார்க்கிந்த வாக்கென்று
எண்ணம் வரும்
அஞ்சாதிடுவீர் அவர்க்கு
நேற்றைய துன்பம் மனமதில்
தேர்ந்(து) அதனால்
ஆற்றோமாய் நாமலைந்த
அல்லலை உன்னியே

வேற்றுமை எம்முள் இல்லை
யென்னும் வகைகாட்ட
ஒற்றுமையாய்ப் போடுவீர் ஓட்டு

முன்னே நினையாமல்
மூளையற்று ஓட்டிட்டு
பின்னே அவர் செய்யும்
எட்டப்பத்-தன்மையினால்
என்னே இவர் செய்கை
ஏமாந்தோம் எண்ணாமல்
நன்கே நினைத்திடுக வாக்கு

கட்சிகள் தம் எண்ணப்படி
பிரித்து எங்களுக்கு
மீட்சியில்லாமல்செய்யும்
மிண்டரை-நாட்டில்
இவர்க்கெந்த மாட்சியும்
சேரா வகையில்
தவறிடப் போடுவீர் வாக்கு



# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

01.09.2013 முதல் 07.09.2013 வரை

தருபவர் - வித்தியா


**மேஷம்** - தீய குணம் உள்ள சிலர் சுயலாபம் பெற உங்களைப் புகழ்ந்து பேசுவர். அவர்களிடம் அளவுடன் பேசி விலகுவதால் சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாக்கலாம். பணவரவை குடும்பத்தின் அத்தியாவசிய செலவுகளுக்கு சிக்கனமாக பயன்படுத்துவீர்கள். சிரம சூழ்நிலைகளைப் பொறுமை. சமயோசித செயலால் சரி செய்வது நல்லது. இல்லறத்துணையின் கருத்துக்களை மதித்து செயற்படுவீர்கள். தொழிலில் அளவான உற்பத்தி, பணவரவு இருக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பை மனமுவந்து ஏற்பதால், முக்கிய செலவுகளை ஈடுகட்ட பணவசதி கிடைக்கும்.


**இடபம்** - உங்கள் செயலில் வசீகரம் அதிகரிக்கும். புதியவர்களின் நட்பு கிடைத்து நன்மதிப்பு முக்கிய உதவியை பெற்றுத்தரும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி, தாராள பணவரவு கிடைக்கும். உத்தியோகத்தர் அதிக பொறுப்புணர்வுடன் செயற்பட்டு நன்மதிப்புப் பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.


**மிதுனம்** - எதிர் மனப்பாங்குடன் உங்களிடம் பேசுபவரிடம் இருந்து விலகுவதால் திட்டமிட்ட பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்ற இயலும். புதிய முயற்சியால் சமூகத்திலும் தொழில் வகையிலும் திட்டமிட்ட முன்னேற்ற இலக்கை அடைவீர்கள். இல்லறத்துணை உங்களின் நற்செயல்கள் வெற்றிபெற தேவையான ஆலோசனை, உதவி வழங்குவார். தொழிலதிபர்கள் அளவான உற்பத்தி, விற்பனை அமைந்து சீராக பணவரவைப் பெறுவர். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை மதித்து நடப்பது நற்பலன் பெற உதவும். மாணவர்கள் பிடிவாத குணம் தளர்த்தி தன் கடமை உணர்ந்து நடந்து கொள்வர்.


**கடகம்** - பணி நிறைவேற கால அவகாசம் அதிகமாகத் தேவைப்படும். இல்லறத்துணை, உங்களின் கௌரவத்துக்கு குறை எதுவும் வராத அளவில் குடும்பப் பொறுப்பை சிறப்பாக மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் கூடுதல் உழைப்பால் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைவீர்கள். பணியாளர்கள் சகபணி சார்ந்தவர்களிடம் தேவையற்ற விடயங்களை பேச வேண்டாம். மாணவர்கள் விளையாட்டுகளில் சாகசம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.


**சிங்கம்** - மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். கடந்த தினங்களில் நிறைவேற தாமதமான பணிகளை உத்வேக செயலால் பூர்த்தி செய்வீர்கள். தன்னைச் சார்ந்தவர்களுக்கு வேற்றுமை பாராமல் இயன்றளவில் உதவுவீர்கள். இல்லறத்துணை குடும்ப நலனைக் கவனத்தில் கொண்டு நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகைப் பயன்களை எளிய முயற்சியினால் பெறுவர். மாணவர்கள் ஞாபகத் திறன் வளர்ந்து படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.


**கன்னி** - சிறு பணியும் நேர்த்தியாக அமைந்து புகழையும் தாராள பணவரவையும் பெற்றுத் தரும். அன்புக்குரியவர்களிடம் பொது விடயம் பேசுவதில் நிதான குணத்தை பின்பற்ற வேண்டும். ஆடம்பர செலவுகளால், சேமிப்பு பணம் கொஞ்சம் குறைந்திடும். விவகாரங்களில் சமரச தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, கூடுதல் அக்கறை கொள்வார். பணியாளர்கள் பணியிடத்தில் உள்ள சூழ்நிலைகளை உணர்ந்து செயற்படுவது நற்பலன் பெற உதவும். மாணவர்கள் புதிய பயிற்சிமுறையைப் பின்பற்றி தேர்ச்சியை அதிகரிப்பர்.


**துலாம்** - நியாய, தர்ம செயல்களால் உறவினர், நண்பர்களின் பார்வையை உங்கள் பக்கம் கொண்டு வருவீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்க வரும், புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். எதிர்மனப்பாங்குடன் உங்களுக்கு இடையூறு செய்தவர் தன் தவறை உணர்ந்து சமரசமாக நடந்து கொள்வர். இல்லறத்துணை உங்களின் கருத்துக்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.


**விருச்சிகம்** - வாழ்வில் கிடைத்த நன்மைகளின் பலன்களைப் பயன்படுத்த தயங்குவீர்கள். எவருக்கும் உதவி வழங்குவதில் தகுதிக்கு மீறிய அளவிலான வாக்குறுதி வழங்க வேண்டாம். குடும்ப செலவை சரிக்கட்ட கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத்துணை உங்களின் நல்ல குணத்தை மதித்து தியாக உணர்வுடன் குடும்ப நலன் பேணுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க உருவாகிற வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவது அவசியமாகும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வர். மாணவர்கள் எளிய பயிற்சியால் சிறந்த தேர்ச்சி பெறுவர்.


**தனுசு** -வாழ்வில் எதிர்வரும் நிகழ்வுகள், சந்தோஷமாக அமைந்து மனதுக்கு உற்சாகம் தரும். நீண்டநாள் திட்டமிட்ட பணியை நிறைவேற்றி கூடுதல் நன்மை பெறுவீர்கள். பூர்வீக சொத்தில் சீரான அளவில் வருமானம் கிடைக்கும். இல்லறத் துணையில் நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் ஒவ்வொரு செயலிலும் நடந்து கொள்ள வேண்டும். தொழிலில் முன்னேற்றம்பெற கிடைக்கும் வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்துவது அவசியம். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டுப் பெறுவர்.


**மகரம்** - எதிரிகள் சிலர் உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்போல் பேசி மறை முகமாக சிரமத்தை உருவாக்குவர். அவர்களிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்க அனுகூலம் உண்டு. இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து மகிழ்ச்சிகர வாழ்வை உருவாக்குவார். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் இடையூறை தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் புதிய யுக்தியுடன் செயற்பட்டு பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் உடல்நல பாதுகாப்பில் அக்கறையுடன் நடந்து கொள்வர்.


**கும்பம்** - பணிகளில் உற்சாகமும் நேர்த்தியும் நிறைந்திருக்கும். மனதில் தெய்வீக சிந்தனை வளரும். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதியவர்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து சிறந்த தேர்ச்சியைப் பெறுவர்.


**மீனம்** - யதார்த்த குணங்களில் இருந்து மாறாமல் நடந்து கொள்வதால் வாழ்வில் எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். சிறு கஷ்டங்களை பெரிதுபடுத்தாமல் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். அயல் வீட்டாருடன் உங்கள் மீது இருந்த மனக்கிலேசம் விலகி நல் அன்பு உருவாகும். எதிரி இடம்மாறிப்போகிற நன்னிலை உருவாகும். தொழிலில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்ற மன உணர்வுடன் பணிபுரிவீர்கள். மாணவர்கள் சூழ்நிலைகளை சாதகமாகப் பயன்படுத்தி படிப்பில் புதிய இலக்கை அடைவர்.

# கையில் தட்டேந்தி நிற்பது அழகாமோ?

வளருமிந் நாள்களிலே
பழமைமிகு இம் மண்ணில்
மண்படங்களில் மட்டுமின்றி
வீடுகளிலும் கூடத்தான்
சிறப்புடனே நடந்தேறும்
திருமண விழாக்களிலும்
பூப்புனித நீராட்டு விழாக்களிலும்
மற்றும் பல விழாக்களிலும்
அழைப்பார்கள் என்னையும்!
அழைப்பேற்று நான் போவேன்!
விழாக்களின் நிறைவாயங்கே
வழமைபோல் நடந்தேறும்
விருந்து உபசாரத்திலும் நான்
விருப்புடனே கலந்து கொள்வேன்!
நாலைந்து கறிகளுடன்
வடை பாயாசத்துடன்
கிடைக்கின்ற சாப்பாட்டைக்
கைவிடுபவன் முழுமூடன்

அந்த நாள்களில் விருந்தினரை
அன்புடனே வரவழைத்துச்
செம்பினிலே நீர்கொடுத்துக்
கைகழுவச் செய்த பின்னர்
புற்பாயில் அமர்ந்தவர்முன்
தலைவாழை இலை பரப்பி
விருந்து படைத்தார்கள்!
விரும்பிப் படைத்தார்கள்!!
சோறு வேணுமா? என்றும்-
என்ன கறி வேண்டும்? என்றும்-
கேட்டுணவு படைத்தார்கள்!
போதுமப்பா; போதும் என்று
உண்பவர்கள் சொல்லும் வரை
உணவுகளைப் படைத்தார்கள்!
உளம் மகிழ்ந்து படைத்தார்கள்!
ஆனால் - இந்நாள்களிலே
விழா நடக்கும் மண்டபத்தின்
ஒரு பக்கத்தில் வைத்திருக்கும்
மேசைகளில் விழாக்கர்
சோறும் கறி வகையும்
அழகாக வைத்திருப்பர்!
அடுக்கி வைத்திருக்கும் தட்டில்
இதுவரையில் ஆயிரம் பேர்
ஏதேதோ உணவுகளை
உண்டு களித்திருப்பார்!
இன்னுமுண்டு களி(ழி)க்கவுள்ளார்!
சாப்பிடுவதற்கென்றங்கு
வைத்துள்ள தட்டுகளைப்
பொலித்தினால் போர்த்தி
அடுக்கி வைத்திருப்பார்-
சுத்தத்துடன் சுகாதாரத்தையும்
கருத்துடனே காப்பவர் போல்!
சிறியவச் சாப்பாட்டுத் தட்டைக்
கையில் எடுத்துக் கொண்டு
வரிசையில் காத்து நின்று-
ஆண்களுடன் பெண்களுமாய்ப்
பேதமின்றிக் காத்து நின்று-
அவரவர்க்குத் தேவையான
சோறும் கறி வகையும்
அப்பளத்துடன் வடையினையும்
அனைத்தையும் ஒரே தரத்தில்
அந்தச் சிறுதட்டினிலே
போட்டுக் கொண்டுபோயந்த
மண்டபத்தில் போட்டிருக்கும்
கதிரைகள் ஒன்றினிலே
அமர்ந்து கொண்டு
கைகளிலே தட்டேந்திச்
சாப்பிட்டு விட்டு மெதுவாகச்
சாப்பிட்ட தட்டை நாமே
த(ம)வறாது எடுத்துச் சென்று
கை கழுவும் இடத்தில் வைத்துக்
கை கழுவிச் செல்லல் வேண்டும்!
சாப்பிட்டீர்களா? என்றன்புடனே
கேட்பதற்கு அங்கே யாருமில்லை!
இரண்டாம் தடவையும் உணவு
தேவையெனின் எழுந்து சென்று
போட்டுக் கொள்ளலாம் - ஆனாலும்
யாருமே இரண்டாம் தடவையும்
போட்டுக் கொள்ளுவதில்லை!
கேட்பதற்கும் யாருமில்லை!
சோறு போடுங்கோ என்று
சொல்வதற்கும் எவருமில்லை!
வயிற்றில் பசி இருந்த போதும்
மற்றவர்கள் தம்மைப் பற்றித்
தாழ்வாக நினைப்பார்கள் எனும்
வெட்கமும்தான் காரணம்!

என் மனதில் இந்த நிகழ்வு
அகதியாக முகாம்களிலே
தங்கி இருந்த நாள்களிலே
சாப்பாட்டுத் தட்டுடனே
வரிசையில் காத்து நின்று
அவர்கள் தரும் உணவைத்
தட்டினிலே ஏற்றுக் கொண்டு
ஒதுக்கமாக ஓரிடத்தில்
அமர்ந்து கொண்டு கிடைத்ததை
மகிழ்வுடன் உண்டு பசியை
அரைகுறையாய்ப் போக்கிய
அந்த நாள்கள் என் நினைவில்
மெல்ல நிழலாடுகின்றது!
சொல்ல நா மறுக்கின்றது!
முகாம்களிலே அவர்கள்
தட்டில் உணவைப் போட்டிடுவார்!
விழாவில் உணவை நாமே
போடுகிறோம் எம் தட்டில்!!
இன்னும் உணவு வேண்டுமா
என
முகாம்களிலே கேட்பதில்லை!
இன்னும் உணவு தேவையா!
என
விழாக்களிலும் கேட்பதில்லை!
சாப்பிட்டீர்களா எனக் கேட்க
முகாம்களிலே யாருமில்லை!
சாப்பிட்டீர்களா என்று கேட்க
விழாக்களிலே எவருமில்லை!
விழாக்களிலே இந்த நாள்களில்
அளவு சாப்பாடு நடைமுறையில்!
விருந்துகளிலே இந்த நாள்களில்
உணவுச் சிக்கனம்
செயற்பாட்டில்!
ஆனாலும்- இன்று நாங்கள்
ஆரம்பித்துள்ள விருந்தளிக்கும்
முறையினிலே நன்மை மூன்று
உண்டுரைப்பேன் கேளுங்கள்!
சாபபாடு வீணாகக் கொட்டும்
பழக்கமுடன் மறைகின்றது!
சாப்பாட்டுக்காகும் செலவு
நன்றாகக் குறைகின்றதாம்!
நூறு பேருக்குத் தயார் செய்யும்
உணவில் இருநூறுபேர் நன்றாக
உண்டு மகிழ்ந்திடலாம்!
விருந்தினர்கள் சாப்பிட்டபின்
எச்சில் வாழை இலைகளினை
அகற்றும் எச்சக்கை
வேலையில்லை!
இவைதான் அந்த நன்மைகள்!
இவைகளுண்மையில்
நன்மைகளா?

என்னதான் நாகரிகமின்று
நம் மண்ணில் புகுந்தாலும்-
என்னதான் புதுமுறைகளின்று
எம்மிடையே நுழைந்தாலும்-
நிலத்தில் விரிந்திருக்கும்
புற்பாய்மேலமர்ந்திருக்கும்
விருந்தினர்கள் முன்பாகத்
தலைவாழை இலை பரப்பியதில்
படைக்கின்ற விருந்துணவை
விரும்பியுண்ணும் காட்சிக்கும்-
போதுமா? வேண்டுமா என்றும்-
இன்னும் கொஞ்சம் போடவா?
என்றும்-
கேட்டுக் கேட்டு உபசரிக்கும்
பார்த்துணவு பரிமாறும்
தமிழ்ப் பண்புக்கு இணையேது?
தமிழ் அன்புக் கீடேது?
சுத்தமானதென்பதுடன்
சுகங்களையும் தருகின்ற
வாழையிலையில்
உணவுண்ணும்
வள்சுவைக்கு நிகரேது?
வாழையடி வாழையாக
மண்ணில்
வழங்கி வளர்ந்து வருமெங்கள
வாழையிலைச் சாப்பாட்டைப்-
பண்பாடும் நலம்பலவும் மிக்க
வாழையிலையில் உண்பதனை
நாகரிகம் என்னும் மாயையிலே
முற்றாக மறந்துவிட்டு- வீட்டுக்கு
விருந்துண்ண வரும் வண்ணம்
அழைப்பேற்று வரும் எம்மை-
அதிதிகளாய் வரும் எம்மை-
அகதிகள் போல் தட்டேந்தி
உணவுக்காய் வரிசையிலே-
குளத்தில் நிற்கும் கொக்கைப்
போல்-
கால்கடுக்க நிற்க விடல் - உமக்கு
வடிவாமோ?
நொடியேனும் இது பற்றி நீர்
சிந்திக்கத் தவறியதேன்?
விருந்துக்கழைக்கும் பெரியோரே!
கருத்திதைக் கொள்ளுமையா?
உமமழைப்பை மதித்துவரும்
எம்மை அகதிகள் போல்
நடத்தாதீர் என்றும்மை
அன்போடு வேண்டுகின்றோம்!
அதிதிகளாய் வருமெம்மை
அகதிகளாய் நடத்தாதீர்
என்றும்மை வேண்டுகின்றோம்!
அன்போடு வேண்டுகின்றோம்!

முருகு

# முட்களில் நடப்பது நமக்கு புதிதல்ல

தாரணி



அன்பு சகோதரியே.......
ஊண், உடம்பு உயிர் கொண்ட
அனைத்தும் இவ்வுலகில் ஒன்றே...
அனைத்தும் இங்கு உயிரே..
நெருப்பில் போட்டால்
பிணம் கூட எழுந்து நிற்கும்,
காலமெல்லாம்,
அடிமை நெருப்பில் கனன்றும்,
விழித்துக்கொள்ள இன்னுமா தாமதம்..?
சாதனைகள் புரிய உவப்பு இருப்பினும்,
சிகரங்கள் தொடும் தெம்பு இருப்பினும்,
நமது உணர்வுகளும், கனவுகளும்
தொண்டைக் குழிக்கும், நெஞ்சுக் குழிக்குமான
இடைவெளிகளில் அமிழ்ந்து போகும்
அநியாயம் இன்னும்
எத்தனை காலங்கள் தொடரும் ?
கலாசார பதிவுகளுக்காக
நமது காலடித்தடங்கள்
அழிக்கப்படுவதை இன்னும்
எத்தனை நாள் விட்டு வைத்திருப்போம்...
கை தூக்கி விடக் காத்திருந்தால்
காலம் நமக்காய் தாமதிக்காது...
நமக்கான பாதையை நாமே வகுப்போம்..
முட்களில் நடப்பது நமக்கொன்றும்
புதிதல்ல.....

# பேசுவதால் மட்டும் வளர்ந்து விடுமா பெண்ணியம்?

அன்றில் இருந்து இன்று வரை பெண்கள் போகப்பொருளாகவும், ஆண்களுக்குக் கட்டுப் பட்டவர்களாகவுமே சமுகத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஆண்கள் மட்டு மல்ல பெண்ணியத்துக்கு எதிரியாய் சில பெண் களும் இருக்கிறார்கள் என்பதே பேருண்மை யாகும்.

பெண்ணியம் என்ற வார்த்தைக்கு என்ன அர்த் தம்?

இன்று சில பெண்கள் அடங்க மறு; அத்து மீறு என்பது போல் கற்பு நெறி, பெரியவர்களை மதித் தல், குடும்பத்தைக் கட்டிக்காத்தல், கணவனை அனுசரித்தல் போன்ற எல்லாவற்றையும் பெண் விடுதலை என்ற பெயரில் சுக்கு நூறாக்கித் திரிவதுதான் பெண்ணியமா?

பெண்களை அடிமைகளாக, ஆணுக்குக் கட்டுப் பட்டவர்களாக நடத்தாமல் ஆணும் பெண்ணும் சமமென்ற நிலை வேண்டுமென்பதுதான் பெண் ணியமாகும். ஆதிகாலத்திலிருந்து பெண்ணுக்கு மட்டுமே உரித்தானதாய் வரையறுக்கப்பட்ட சில பழமையான அடிமைத்தனங்களிலிருந்து பெண் மையை மீட்பதுதான் பெண்ணியமாகும்.

நாகரிக வளர்ச்சிகள் உச்சத்தைத் தொடப்போகும் இக்காலத்திலும் பெண்ணியம் பேசுவதன் அவசியம் மட்டும் மாறாமலிருப்பதன் மர்மம்தான் என்ன? இன்று ஆணுக்கு நிகராய் பெண்கள் கால் பதிக்காத துறைகளே இல்லை. ஆணைவிட அதிக மாய்ச் சம்பாதிக்கும் பெண்களையும் ஆண்க ளுக்கே மேலதிகாரியாய் திகழும் பெண்களையும் சர்வ சாதாரணமாய் ஒவ்வொரு அலுவலகத்திலும் பார்க்கமுடிகிறது. ஆட்சிப்பொறுப்பிலிருந்து ஆகாய விமானம் ஓட்டுவது வரை பெண்கள் சாதித்தி ருந்தாலும், இன்னும் ஏன் ஒவ்வொரு வீட்டின் சமையலறையும் பெண்ணின் சொத்தாக அவள் கால்களிலேயே கட்டப்பட்டிருக்கிறது? திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் கட்டுண்டிருக்கும் ஏதாவதொரு பெண்ணாவது நான் எந்தவொரு வகையிலும் ஆணைச் சார்ந்தோ அவனுக்குக் கட்டுப்பட்டோ இல்லாமல் சரிநிகராகத்தான் இருக்கிறேன் என்று மனசாட்சியில் கைவைத்துக் கூறமுடியுமா? அப்படியென்றால் எங்கேயிருக்கிறது பெண்ணியத்தின் எதிரி? நமது கலாசாரத்திலா? சமூகத்திலா? இல்லை நம் ஒவ்வொருவரின் மனதுக்குள்ளா?



பாமகள்

என்னதான் கல்வியறிவும் சமூக அறிவும் பெண்களிடம் உயர்ந்தாலும் இன்று சீதனம் என்ற அசிங்கமின்றி எத்தனை கல்யாணங்கள் நடக்கின்றன. பெற்ற மகனையே திருமணச் சந்தையில் விற்பது தாயென்றொரு பெண்தான். நான் அந்தக் காலத்திலேயே எவ்வளவு சீதனம் கொண்டு வந்தவள். எனக்கு அதைவிட அதிகம் கொண்டு வரும் மருமகள்தான் வேண்டும் என்ற பேராசைப் பெண்கள் இருக்கும்வரை பெண்ணியத்துக்கு எதிரியாய் பெண்ணும் ஒரு காரணமாய் இருப்பது மாறப்போவதேயில்லை.

இன்று பெண்ணியம் பேசும் எந்தவொரு ஆணாவது உண்மையான மனதுடன் பெண் விடுதலையை ஆதரிப்பதாய் நம்ப முடியுமா? 'பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்பட்டவள், என்னதானிருந்தாலும் பெண் என்பவள் ஆணுக்குக் கீழேதான். குடும்பத்தில் சமைப்பது, துவைப்பது, பிள்ளைகளை வளர்ப்பது போன்ற பெண்ணுக்காய் வரையறுக்கப்பட்ட வேலைகளை பெண்ணே செய்ய வேண்டும்'' என்பன போன்ற எண்ணங்கள் ஆண்களின் மனதில் சிலரிடம் வெளிப்படையாகவும், பெண் விடுதலை பேசும் சிலரிடம் ஆழ் மனதிலும் ஒழிக்கொண்டேதான் இருக்கின்றன. ஏழை, பணக்காரன், படித்தவன் என்று எந்தவொரு வித்தியாசமுமின்றி, எல்லா ஆண்களுமே இன்றும் தங்கள் மனைவியின் மீது தங்கள் விருப்பங்களைத் திணிப்பதுடன் ஏதோவொரு வகையில் அவர்களைக் கட்டுப்படுத்தியே வைத்திருக்கின்றனர். விருப்பப்பட்ட இடத்திற்கு, விருப்பப்பட்ட நேரத்தில், விருப்பப்பட்டவர்களுடன் போய் வரும் ஆண்கள் கூட்டம் தங்கள் மனைவியையோ இல்லை மகளையோ அவ்வாறான சுதந்திரத்துக்கு அனுமதிப்பார்களா? ஆணுக்கு ஒரு பார்வை, பெண்ணுக்கு ஒரு பார்வை என்பதே பெண்ணடிமைத்தனத்தின் ஆணி வேராக இருக்கக்கூடும். பெண்ணடிமைத்தனம் என்பது நமது பரம்பரை வழியாக நம் புத்திக்குள் புரையோடிப் போயிருக்கும் சமுதாய நோயேயன்றி வேறேதுமில்லை. வெறுமனே பேசுவதாலும், எழுதுவதாலும் மட்டுமே மாறிவிடாது இந்நிலை. பெண்விடுதலையும் பெண்ணிய வளர்ச்சியும் முழுவதுமாய் பெண்கள் கையில் மட்டுமேயில்லை. ஒவ்வொரு ஆண்மகனும் தன் தாயை, மனைவியை, மகளை எப்போது ஒரு நல்ல நண்பராய் நடத்த ஆரம்பிக்கிறானோ அப்பொழுதுதான் பெண்ணியம் மலரத் தொடங்கும். ஆண் டாண்டு காலமாய் நம் சமூகத்தில் ஆழ வேரூன்றியிருக்கும் பெண்ணடிமைத் தனத்தை ஒரே நாளில் ஒழித்து விட இய லாததுதான். பெண் என்பவள் ஆணுக்குக் குறைந்தவளே என்ற எண்ணம் இனியும் வேண்டாம். கொஞ்சம் கஷ்டம்தான் என்றாலும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் மாறினால் சமுதாயமும் தானாய் மாறும். பெண்களின் தனிமனித சுதந்திரம் காக்கப்பட்டு, ஆண் பெண் சுய ஒழுக்கமும் பேணப்படுகின்ற நிலை உருவாகும் நாளே உண்மையான பெண்விடுதலையாகும்.

# வெறும் சலுகை மட்டும் விடுதலை அல்ல

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வெகுவாக முன்னேறி விட்டார்கள்தான். பெண்களின் பங்கு என்பது உலகில் மிக முக்கியமானதாகி விட்டது. பெண்கள் இல்லாமல் ஆண்களால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியாது.

உண்மையில் ஓர் ஆணை விட ஒரு பெண்ணால்தான் ஒரு வியாபார நிலையத்தையோ , அல்லது ஒரு பெரிய நிறுவனத்தையோ கூட்டாகக் கொண்டு நடத்தி கூடுதலாக வெற்றி பெற வைக்க முடியும். ஒரு விடயத்தைச் சொன்னால் அதைக் கிரகித்து அதற்குப் பதில் சொல்லும் தன்மை ஆண்களின் மூளையில் ஒருபங்கு என்றால் அதைக் கிரகித்து பதில் சொல்லும் தன்மை பெண்களின் மூளையில் ஆறு பங்கு.

இவைகள் ஆய்வாளர்களின் கண்டு பிடிப்புகள். ஓர் ஆணின் மூளை ஒரு பெண்ணின் மூளையை விட 130 கிராம் நிறை அதிகமானது.

ஆனால் இரு மூளைகளினதும் செயற்பாடுகள் - ஆதிகாலத்திலிருந்து இன்று வரைக்குமான சூழ்நிலைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசைவாக்கம் பெற்று வெவ் வேறு வழிகளில் செயற்படுகின்றன.

இங்கு ஆண் உயர்வானவன் என்றோ பெண் உயர்வானவள் என்றோ எதுவும் இல்லை. முன்னர் பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டியதற்குக் காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை.

சிந்திக்கத் தொடங்கிய இப்பெண்களின் விழிப்பு நிலையே இன்று சில ஆண்களுக்குப் பிரச்சனையாக இருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறது.

இந்த உண்மைக் காரணங்களை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண்அடக்குமுறை, பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல்கள் என்பது நன்கு புலப்படும்.

உண்மையில் பெண்ணுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. வெறும் சலுகை மட்டும் வாழ்க்கையில்லை என்பதைப் பெண்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

கவிதா

# காற்றுக்கென்ன வேலி..?

தையிட்டி
அ.இராசதுரை

வங்காள விரிகுடாவில் பவன அமுக்கமென்று இரவிரவாக ஒப்புப் படித்துக் கொண்டிருந்த இலங்கை வானொலியின் காலநிலை அபாய அறிவிப்பு யதார்த்தமாகியே-விட்டது. வடதிசையைப் போட்டு இந்தப் பொல்லாத மூர்க்கங் கொண்ட கொடும் சூறாவளிக் காற்று பிய்த்துப் பிடுங்கிக் குதறி ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. தனது ஆசை மகளின் கல்யாணவீட்டு நாளும் நெருங்கிவிட்டதால் அவசரமும் ஆத்துப்பறப்பும் இன்னுமின்னுமாய் இந்தக் காற்றை விடவும் தான் கூடிவிட்டது போல ஆலாய்ப் பறக்கத் தொடங்கியிருந்தார் காத்த லிங்கத்தார். மகளின் கல்யாண வீட் டுக்குக் குந்தக்கம் செய்ய வரிந்து கட்டிக் கொண்டு வெளிக்கிட்டுவிட்ட இந்த இயமகண்டக் காற்றோடு சண்டை பிடிக்கவும் அவர் ரெடி. அவ-ருக்கு வந்த விசருக்கு காற்றைப் போட்டு வாய் கொள்ளாமல் சப்பித்துப்பி சபித்துத் தள்ளிக் கொண்டிருந்தார்.-காற்றும் விடுவதாக இல்லை.

"அட ஏன்ராப்பா அறிவு கெட்டுப் போன அற்ப மானிடப் பிண்டமே, உனக்கேன் என்னிலை இந்தளவு காய்ச்சல்? என்ரை கொமாண்டரின்ரை ஓடர் படி செய்யிற தொழிலே தெய்வமாய் வீசிய டிச்சு என்ரை டியூட்டியை ஒழுங்காச் செய்து கொண்டிருக்கிறன் கண்டியோ. இண்டைக்கு இந்த எத்தனையோ மனிசர் எந்த வேலிகாலியுமில்லாமல் அலையுறாங்கள்.நீ என்னடா வெண்டால் எனக்கு வேலி அடைக்கவும் வெளிக்கிட்டிட்டாய் என்ன? அடைக்க முடியுமெண்டா ஒருக்கா அடைச்சுப்-பார்." என்று அவருக்கு சவால் விட்டது சூறாவளிக்காற்று.

காற்று கண்முன்னால் செய்து காட்டும் சின்னாத்தனங்களையெல்லாம் கண்கொண்டு பார்த்துப் பார்த்து கதிகலங்கிப் போய்விட்டார் காத்தலிங்கத்தார். கடைசியில் காற்றிடமே சரண் டராகிவிட அவர் தீர்மானித்தார். என்றா லும் இந்தப் பொல்லாத காற்றுக்குள்ளும் குளிப்பதற்காக அவதி அவதியாக கிணற்றடிப் பக்கமாக ஓடினார்.

"எங்கே நீ குளிக்கிற கெட்டித்தனத்-தைப் பார்ப்போம்" என்கிற கணக்காக காற்று இன்னுமின்னுமாய் உன்மத்தம் கொண்டு வீசியது. இரண்டு மூன்று சட்டியள்ளி காகம் குளித்த மாதிரி குளித்து விட்டு காற்றோடு சிலாவுப்பட்டபடியே வீட்டுக்குள் ஒட்டமாய் ஓடிப் போனார் மாஸ்ரர்.

இந்தக் காற்றுக்குள்ளும் குளித்து-விட்டு வந்த மனிசனுக்கு சுடச்சுட ஆமான கோப்பியும் , பலகாரமும் கொடுத்துவிட்டுஅவரின் காதில் அந்தச் செய்தியை போட்டாள் காத்தலிங்கத்-தாரின் மனைவி. அதைக் கேட்டதும் காத்தலிங்கம் மறு நொடியே காற்று-லிங்கமாக உறைந்து போனார்.

"இந்தக் காத்துக்கு சயிக்கிளிலை போனா செத்துப் போவன்"-என்று மெல்லச் சொன்னார்.

"அப்ப பின்ன பிளேனிலையோ போறது..?" என்று மனைவி கேட்க கொஞ்சம் ரோஷம் வந்தவராக வாயைப்படாரென்றுமூடிக்கொண்டே சடாரென்று சைக்கிளையும் தூக்கிக் கொண்டு வீட்டு முற்றத்தை கடந்தார் மாஸ்ரர்.மகளின் வாழ்க்கை சம்பந்-தப்பட்ட விடயமல்லவா? காற்றோ மழையோ, சைக்கிளோ மழையோ போய்த்தானே ஆக வேண்டும். அவரின் மனைவிக்கு கணவர் இந்தக் காற்றுக்குள்ளும் தள்ளாடிபடியே போவது மனதைக் கரைத்திருக்க வேண்டும்.

"இஞ்சாருங்கோ கொஞ்சம் நில்லுங்கோப்பா! நாகேசன்ரை ஆட்டோக்கு கோல் பண்ணிக் கூப்பிடுவேம். அதிலை போங்கோ . " காத்தலிங்கத்தாரின் மனைவி தன்னுடைய தாலிக் கொடியும் இந்தக் காற்றோடு சேர்ந்து பறப்பது போல் கணவரைக் கலைத்துக் கலைத் துப் பின்னால் கூப்பிடத் தொடங்கினாள்.

"போகாதே போகாதே என் கணவா.." பாணியில் ஒரு மாங்கல கருமத்துக்கென்று இந்தக் காற்றுக்குள்ளும் வெளிக்கிட்டுப் போன தன்னை கொஞ்ச மும் பின் யோசனையில்லாமல் பின்னால் கூப்பிட்டு விட்ட மனைவியைச் சபிப்பது போல் ஒரு முனிவர் பார்வை பார்த்தார் காத்தலிங்கம் மாஸ்ரர்.

"உவன் நாகேசன் இந்தக் காத்துக்கை எங்கை செத்துக் கிடக்கிறானோ தெரி-யாது" என்று உரத்த குரலில் சொல் லிக் கொண்டே சைக்கிளை உன்னி உன்னி மிதிக்கத் தொடங்கினார்.

அந்தநேரம் பார்த்து 'படார், சடார்'-என்று பெரிய சத்தம். காற்றின் உலுப் பலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் காத்த லிங்கத்தாரின் வேலியில் நின்ற கறி முருங்கை மரமொன்று சாய்ந்து விழுந்து படுத்துக்கொண்டது.விழுந்த மரம் சும்மாவிழவில்லை. பக்ககத்து வீட்டு வயிற்றெரிச்சல் வள்ளியம்மையின் தலையில் அல்லவா விழுந்து விட்டது. அவ்வளவுதான். "ஐயோ" என்ற ஓலம் காற்றோடு போட்டி போட்டுக்கொண்டு எழுந்தது.

தம்முடைய மகள் அபிராமியின் கல்யாண எழுத்திலன்று இந்தப் பக்கத்து வீட்டு இதே வயிற்றெரிச்சல் வள்ளியம்மை தான் "உங்கை எல்-லாற்றை மக்களுக்கும் ஒவ்வொரு-நாளும் தான் கலியாணங்கள் நடக்க நான் பெத்த பிள்ளையளுக்கு மட்டும் கலியாணமுமில்லை. சாவு-மில்லை" என்ற கணக்காய் பரமசிவம் கடை வாசலில் நின்று புலம்பியிருந்தாள். இதெல்லாம் படமாக்கி, பாடமாக்கி வைத்திருந்தவர் காத்தலிங் கம் மாஸ் ரர். இதனால் வள்ளியம்மையின் ஓலம் அவருக்கு இனிய சங்கீதமாய் காதில் விழுந்தது.

கொஞ்ச நிமிட இடைவேளை எடுத்துக் கொண்டு மீண்டும் அருளத் தொடங்கியது காற்று. இவ்வளவு நேரமும் ஓய்ந்திருந்ததற்கான எல்லா வட்டிகுட்டிகளையும் சேர்த்து அகோரமாய் வெளுத்து வாங்கத் தொடங்கியது.

காற்றில் அலைந்து இழுபட்டு நுகைந்து போன வேட்டி சூறாவளி-யின் வேகத்தில் உரியத் தொடங்கி விட்டது. வேட்டி கழன்று விடுமோ என்ற பயத்தோடு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க சைக்கிளோடு போராடிக் கொண்டிருந்தார் காத்தலிங்கத்தார். மனைவி சொன்ன மாதிரி நாகேசனின் ஓட்டோவில் போயிருந்தால் இந்த நேரம் சம்மந்தி வீட்டாரோடு தான் கேள்விப்பட்ட விடயத்தைப்பற்றி கதைத்து முடித்திருக்கலாம். இந்தக் கவலையோடும் தன்னை மறந்து போன கணத்தில் வேட்டி அவரை விட்டு பிரிந்து வீதியில் தனிக்குடித் தனம் செய்வதற்காக காற்றோடு பயணப்பட்டுக் கொண்டிருந்தது. நடுத் தெருவில் மானம் போய்விடக் கூடா தென்ற பயத்தில் இறங்கி வேட்டியை எடுக்க முற்பட்டபோது சைக்கிளோடும் விழுந்தெழும்பி விட்டார் மாஸ்ரர். அதையும் பொருட்படுத்தாமல் உரிந்து போன வேட்டியை நடு ரோட்டில் நின்று அவர் அவசர அவசரமாக கட்டிக்கொண்டிருக்கும் போது கடந்து சென்றது ஒரு ஓட்டோ. அதற்குள்ளிருந்து எழுந்த குளறல் சத்தத்தால் ஒரு கை யால் வேட்டியைப் பிடித்துக் கொண்டு ஓட்டோவை எட்டிப்பார்த்-தார். உள்ளே ஓலம் எழுந்தாலும் இவரைக் கண்டு சிரித்தபடியே கைகாட்டியபடியே போனாள் மனைவி. முருங்கை மரம் விழுந்து காயமடைந்த வள்ளியம் மையை கொஸ்பிற்றலுக்கு கொண்டு போகிறார்கள் போலும். வள்ளியம்மை பிழைப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கப் போவதில்லை. இனி யாருடைய வயிற் றெரிச்சலும் இன்றி தன்னுடைய மகளின் திருமணம் ஒப்பேறி விடும் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டார் காத்தலிங்கத்தார்.

இந்தச் சந்தோஷத்தோடு அவர் அடைய நினைத்த துர்க்காபுரம், பஸ் தரிப்பு நிலையத்துக்கிட்ட வந்து-விட்டார். அங்கே கண்ட காட்சி அவரை நிலைகுலையச் செய்து விட்டது. மனைவி சொன்னதும் ஊரவர் சொன்னதும் சரியாகி விட்டது. அவரது வருங்கால மாப்பிள்ளை இன்னொரு இளம் பெண்ணோடு சிரித்துக் கதைத் தபடி அவளை அணைத்துக் கொண்டு ஓட்டோ ஒன்றில் ஏற தயாராகிக் கொண்டிருந்தான்.

'இந்த சிலோன் முழுக்கத் தேடி உங் களுக்கு வேறை மாப்பிள்ளை உங்க ளுக்கு கிடைக்கேல்லையோ" என்று கலியாண எழுத்து முடிந்து ஒரு கிழமை யாலை சம்மந்த வீட்டாரின் கிட்டடிச் சொந்தக் காரரான வேத விநாய கன் மாஸ்ரர் காத் லிங்கத் தாரைப் பிடித்துக் கேட்டதன் அர்த்தம் இப்போது தான் அவருக் குப் புரிந்தது.இது மட்டுமல்ல அவனுக்கு வேறு பல கெட்ட பழக்கங்களும் இருப்பதை செவி வழியாக அவர் அறிந்திருந்தார். ஆனாலும் நம்பவில்லை. சம் பந்தத் தைக் குழப்ப யாரோ இட்டுக் கட்டிய கதையென்று நினைத் திருந்தார். இன்று எல்லாவற் றையும் அவரே கண்ணெதிரே பார்த்து விட்டார். இனியென்ன செய்ய? எழுத்து முடிந்த பின்னர் கலியாணத் தைக் குழப்பி னால் தனது மகளைப் பற்றி ஊர் நாலு விதமாகக் கதைக்குமே. பேசாமல் மாப்பிள்ளை பற்றிய ரகசியத்தை மனதுக்குள் ளேயே புதைத்துக் கொண்டு அவனேயே மகளுக்கு கட்டி வைக்க முடிவு செய்தார். என்றாலும் மனதுக்குள் ஏதோ துக்கம் எழுவதைத் தடுக்க முடிய வில்லை.

தன் மக ளின் வாழ்வில் தாமே ன மண் போடுவது போல உணர்வு. அடுத்த நாள் காலை ஒரு தொலை பேசி அழைப்பு.

'ஹலோ நான் விநா யகம் மாஸ்ரர் கதைக்கிறன். நீங்கள் தேடி எடுத்த அந்த உதவாக்கரை மாப் பிள்ளையின்ர நியூஸ் தெரியுமோ? நேற்று அவ்வ ளவு காத்துக்கையும் ஆரோ ஒரு பெட்டையோட அவன் ஓட்டடோவில் போனவனாம். போகேக்கை இடைவழி யிலை காத்துக்கு லைற் போஸ்ற் முறிஞ் சுவிழுந்துஆளின்ர கதை சரி." விநாயகம் மாஸ்ரர் சொல்லச் சொல்ல காத்தலிங்கத்தாருக்கு சந் தோஷம் பிடிபடவில்லை. மகளின் வாழ்க்கையை காப்பாற்றியதற்காக நேற்று முழுதும் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்த காற்றுக்கு அவரை அறியாமலேயே நன்றி சொல்லத் தொடங்கினார்.



ஒரு ஓட்டோ. அதற்குள்ளிருந்து எழுந்த குளறல் சத்தத்தால் ஒரு கையால் வேட்டியைப் பிடித்துக் கொண்டு ஓட்டோவை எட்டிப்பார்த்தார். உள்ளே ஓலம் எழுந்தாலும் இவரைக் கண்டு சிரித்தபடியே கைகாட்டி யபடியே போனாள் மனைவி.

# சர்வாதிகார பாதையில் இலங்கை

(3 ஆம் பக்கம் தொடர்ச்சி)

டமும் கலந்துரையாடியுள்ளேன்.
எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தலை நான் வரவேற்கிறேன். அந்தத் தேர்தல் அமைதியான, நேர்மையான, நியாயமான சூழ்நிலையில் நடக்குமென நம்புகிறேன். அதிகாரப் பரவலாக்கலுக்கு இத்தேர்தல் உறுதியான களமொன்றை அமைக்குமென எதிர்ப்பார்கிறேன்.
சிவிலியன் நடவடிக்கைகளாக இருக்க வேண்டிய சில விடயங்களில் இராணுவம் தலையிடுவதை நான் கவனத்தில் கொள்கிறேன். கல்வி, விவசாயம், ஏன் சுற்றுலாத் துறை கூட இராணுவத்தின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிகின்றது. அத்துடன், தனியார் நிலங்கள் இராணுவ முகாம்கள் அமைப்பதற்காகச் சுவீகரிக்கப் படுவதாகவும் அந்த நிலங்களில் விடுமுறைவிடுதியொன்றக் கூட அமைக்கப்படவுள்ளதாகவும் அறிகிறேன்.

### இராணுவத் தலையீடு

அரசின் இந்த நடவடிக்கை மென்மேலும் சிக்கல்களை உருவாக்குவதுடன் அவற்றுக்கான தீர்வுகள் மிக மிகச் சிரமமாகப் போய்விடும். இராணுவத்துக்கு ஒரு சில முகாம்கள் தேவைப்படும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு எனக்கு அதீதமாகப் படுகின்றது.
கணிசமான அளவில் இருக்கும் இராணுவத்தினரை ஒரே நாளில் குறைத்து விட முடியாதென பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார். எனினும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த இரு மாகாணங்களிலிலும் இருந்து இராணுவத்தை அகற்றும் பணியை அரசு துரிதப்படுத்த வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகின்றேன். சிவில் சமூகத்தினரின் மத்தியில் இராணுவம் பெருமளவில் நடமாடுவதும் சிவில் நிர்வாகங்களில் தலையிடுவதும் முன்னாள் போராளிகள் என சந்தேகிக்கப்படுபவர்களின் மீதும் நாட்டுக்குத் திரும்பி வருபவர்கள் மீதும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும் அமைதியான சூழ்நிலைக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்பது எனது அபிப்பிராயம்.

### பாலியல் வன்புணர்வு

பெண்கள் மீதும் சிறுமிகள் மீதும் விசேடமாக பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களில் நடக்கும் பாலியல் வன்முறைகளுகம் துஷ்பிரயோகங்களும் என்னை அதிர்ச்சியடையச் செய்கின்றன. பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், சிரேஷ்ட இராணுவத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் நான் இவ்விடயம் பற்றி தெளிவாக எடுத்துக் கூறினேன். பாலியல் வன்முறை, துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எள்ளளவும் கருணை காட்டக் கூடாது என அந்தக் கூட்டத்தில் நான் கண்டிப்பாகக் கூறினேன்.

### பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதற்கு காலம் கனிவு

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் பற்றியும் நான் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். ஒன்றில் அவர்கள் மீதான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அன்றேல் அவர்களை விடுதலை செய்து புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத் தியிருக்கிறேன். நீண்டகாலமாகச் சர்ச்சையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு இப்போது காலம் கனிந்துள்ளது என்பதையும் அரசுக்கு நான் ஞாபகப்படுத்தியுள்ளேன்.
யுத்தம் ஏற்படுத்திய கோர வடுக்களையும், சுவடுகளையும் நீக்குவதற்கு வட பகுதியில் இதமான மனிதாபிமான அணுகுமுறைகளும் ஆலோசனைகளும் கட்டாயம் தேவை. எனினும் அரசு இப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடு விதித்துள்ளதை அறிந்து நான் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்தேன். இவ்வாறான மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.
காணாமற் போன சிவிலியன்களையும், போர் வீரர்களையும் இன்னும் நம் பிக்கையுடன் தேடிக்கொண்டிருக்கும் ஏராளமானவர்களை நான் சந்தித்தேன். காணாமல்போனவர்கள் எங்கேயாவது, எப்படியாவது இன்னும் உயிருடன் இருப்பார்கள் என்ற நூலிழை நம்பிக்கையில் இவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த விஜயத்தின்போது நான் சமுகமளித்த உருக்கமான இரண்டு கூட்டங்களில் அந்த மக்களின் வேதனையும் விரக்தியும் எனக்கு அப்பட்டமாகப் புலப்பட்டன.

### நிலைகுலைந்த நவி

பலவந்தமாகக் கடத்தப்பட்டவர் களுக்கான சர்வதேச ஞாபக தினத்தையொட்டி நடந்த இந்தக் கூட்டங்களில் காணாமற்போனவர்களின் உறவுகளின் நிலைமை என்னை நிலைகுலையச் செய்தது.
காணாமற்போனவர்கள் பற்றிய விசாரணையை மேற்கொள்வதற்காக அரசாங்கம் நியமித்துள்ள புதிய ஆணைக்குழு பற்றிய மேலதிகத் தகவல்களை நான் கோரினேன். ஏற்கனவே இந்த விசாரணைக்காக அரசு நியமித்த ஐந்து ஆணைக்குழுக்களை விட புதிய ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் ஸ்திரமாகவும் ஆக்கபூர்வமாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

### வெள்ளைவான் அதிர்ச்சி

எனினும், இந்தப் புதிய ஆணைக்குழு வடக்கிலும் கிழக்கிலும் காணாமற்போனவர்கள் பற்றிய விசாரணைகளை மட்டுமே மேற்கொள்ளு மெனவும் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் ஏராளமாக வெள்ளைவான்களால் அண்மைக்காலங்களில் கடத்தப்பட்டவர்கள் பற்றிய விசாரணை இந்த ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படாது என்றும் தெரிய வந்தபோது நான் அதிர்ச்சியுற்றேன்.
இந்தப் புதிய ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் ஸ்திரமானவையாகவும் ஆக்கபூர்வமாகவும் நடக்க வேண்டும் என்பதை அரசுக்கு வலியுறுத்தி கூறியுள்ளேன். அதன் அடிப்படையில் இலங்கை சட்டக் கோவையில் காணாமற்போகிறவர்களின் விவகாரம் பாரதூர குற்றச் செய்ல்களின் கீழ் கொண்டுவரப்படும் என்ற அரசின் தீர்மானத்தை வரவேற்கின்றேன். இது சம்பந்தமாக அரசு தனது தெளிவான நிலைப்பாட்டை காணாமற்போனாவர்களுக்கான சர்வதேச அமைப்புக்கும் துரிதமாக அறிவிக்க வேண்டுமெனவும் எனது இந்த இலங்கை விஜயம் பற்றிய அறிக்கையை மார்ச் மாதத்தில் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவதற்கு முன்பு அரசு தனது அறிவிப்பைச் செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கிறேன்.

### திருமலை, மூதூர் கொலைகள் அவதானம்

திருகோணமலை கடற்கரையில் 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்கள் பற்றிய விசாரணைகளின் முடிவில் அந்தச் சமயத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் கடமையிலிருந்த 12 பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வழக்கின் முன்னேற்றத்தை நான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பேன். அதே சமயம் அதே வருடம் தெற்கிலிருந்து ஒரு சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் படுகொலை செய்யப்பட்ட 17 அரச சார்பற்ற நிறுவனத்தின் மனிதாபிமான உதவிப் பணியாளர்களின் படுகொலை பற்றிய விசாரணை முடிவையும் எதிர்பார்க்கிறேன்.
அத்துடன், சிவிலியன் கொலைகள் சம்பந்தமாக இராணுவத்தால் அமைக்கப்பட்ட இராணுவ நீதிமன்றங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

### சர்வதேச விசாரணை

இராணுவம் இழைத்த குற்றத்துக்கு இராணுவ நீதிமன்றம் அமைக்கப் படுவது பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. அதன் மூலம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை சர்வதேச மட்டத்திலான விசார்ணையைத் தவிர்க்க முடியாது.
அண்மையில் வெலிவேரிய பகுதியில் பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க பொலிஸாருக்கு ஆதரவாக இராணுவம் களத்தில் இறங்கியதால் மூன்று அப்பாவிகள் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணைகளைப் பூர்த்தி செய்து முழுமையான அறிக்கையை உடனடியாக பாதுகாப்புச் செயலர் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.
மேலும் பல விசாரணைகள் முடிக்கப்படாமல் உள்ளன. உதாரணமாக 2012ஆம் ஆண்டு வவுனியா மற்றும் வெலிக்கடைச் சிறைகளில் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளின் இறப்புக்கள் குறித்த விசாரணை. பொலிஸ் அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்து பெற்று சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வந்திருப்பதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால், பொது அமைச்சர் ஒருவரின் கீழ் இருப்பதற்குப் பதிலாக சட்டம் ஒழுங்கு அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் ஜனாதிபதியின் கீழ் இருப்பது ஒரு பாகப் பிரிவினை மட்டுமே.

### சாட்சிகளைப் பாதுகாக்க சட்டம் வேண்டும்

சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் ஞாபகப் படுத் துகின்றேன். 2007ஆம் ஆண்டு முதல் இந்தச் சட்டங்கள் வரைவுகளாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன.
மசூதிகள் தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் சம்பவங்கள் மற்றும் வன்முறைகள் குறித்தும் அதனைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்தும் கவலையை வெளிப்படுத்தினேன். இந்த விடயம் மீது அரசு உரிய அக்கறை செலுத்தவில்லைப் போலத் தோன்றுவது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதேநேரம், இத்தகைய சம்பவங்கள் தொடர்பில் அரசு பொறுமை காக்காது என்ற உறுதியான சமிக்ஞை தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு வழங்கப் படும் என்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் (காணொலிகள் மூலம் அவர்களை இலகுவாக அடையாளம் காண முடியும்) தண்டிக்கப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.
வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு எதிரான சட்டமூலம் ஒன்றைத் தான் முன்மொழிந்துள்ளார் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் என்னிடம் தெரிவித்திருந்தார். அதுபோன்ற சட்டங்கள் குறித்து மிக அண்மையில் நாங்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தோம். எனவே இந்த விடயத்தில் அமைச்சருக்கு உதவுவதில் மகிழ்சி. சிறுபான்மையினர் விடயத்தில் சுயாதீனமான நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தாங்கள் ஆதரவளிப்பார்கள் என்று நீதி அமைச்சரும் தேசிய மொழிகள் அமைச்சரும் என்னிடம் தெரிவித்தார்கள். அது விரைவில் நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதேசமயத்தில் நாட்டில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அரசின் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

### சந்தித்தோருக்கு மிரட்டல்

எனது பயணத்தில் ஏற்பட்ட தடைகளின் பக்கம் நான் திரும்ப விரும்புகின்றேன். என்னைச் சந்தித்த அல்லது சந்திப்பதற்கு முயற்சித்த மனித உரிமைகள் பாதுகாவலர்கள் சிலர், குறைந்தது இரண்டு மதகுருமார்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் பலர் துன்புறுத்தல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். முல்லைத்தீவில் நான் பயணம் செய்த கிராமங்களுக்கு நான் செல்வதற்கு முன்னரும் சென்ற பின்னரும் பொலிஸாரும் படை அதிகாரிகளும் சென்றிருக்கிறார்கள் என்று எனக்கு அறிக்கை கிடைத்திருக்கிறது. திருகோணமலையில் நான் சந்தித்த பலரிடம் என்ன பேசப்பட்டது என்று கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.
இந்த வகையிலான துன்புறுத்தல்களும் கண்காணிப்புக்களும் இலங்கையில் மேலும் மோசமாகி வருவதாகத் தோன்றுகின்றது. இங்கு ஏற்கனவே எதிர்ப்பு - விமர்சன - குரல்கள் நிரந்தரமாக அமைதியாக்கப்பட்டிருக்கின்றன. அல்லது அடிக்கடி தாக்கப்பட்டிருக்கின்றன. இது எந்த வகையிலும் எந்த வேளையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அதிலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையில் இருக்கும் தருணத்தில் அத்தகைய நடவடிக்கைகள் மிக மோசமானவை, தீவிரமானவை. ஐ.நா. அதிகாரிகளுடன் மக்கள் பேசினார்கள் என்பதற்காக அவர்களுக்குத் தீங்கு விளைவிப்பது மிகப் பாரதூரமானது என்பதை அழுத்திக் கூற விரும்புகின்றேன். எனது இந்தப் பயணத்தின்போது இடம்பெற்ற அத்தகைய சம்பவங்கள் குறித்து மனித உரிமைகள் சபையில் நான் அறிக்கையிடவேண்டியிருக்கும்.

### பத்திரிகையாளர் துன்புறுத்தல்

மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் எதிராக இந்த வகையில் அடிக்கடி தொடரும் துன்புறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கான உடனடி உத்தரவுகளை அரசு பிறப்பிக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிட்டத்தட்ட 30 பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டுள்ளனர் என நம்பப்படுகிறது. கேலிச் சித்திர வரைஞர் பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட பலர் காணாமற் போயுள்ளனர். மேலும் பலர் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின் றனர். பல பத்திரிகைகள் தொலைக்காட்சி அலுவலகங்கள் இல்லாமல் ஆக்கப் பட்டுள்ளன அல்லது தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன.

### உதயன் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் இருந்து வரக்கூடிய உதயன் போன்ற சில பத்திரிகைகள் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளன. பயத்தினால் - அச்சத்தினால் - சுயதணிக்கை நடைமுறைக்கு வந்துள்ளது. சில கட்டுரைகளை பத்திரிகையாளர்கள் எழுதவில்லை, மற்றையவை ஆசிரியர்கள் பிரசுரிப்பதற்கு முன்வரவில்லை. கருத்துச் சுதந்திரம் இலங்கையில் தொடர்ந்தும் தாக்கப் பட்டுள்ளது. அண்டை நாடுகளான சார்க் நாடுகள் பலவற்றில் உள்ளதைப் போன்று இலங்கையிலும் கருத்துக்களை அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

### ஜனநாயகம் மதிப்பிறக்கம்

போர் முடிந்திருக்கலாம் ஆனால் ஜனநாயகம் மதிப்பிறக்கம் செய்யப் பட்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு அரித்துத் தின்னப்பட்டிருக்கிறது. தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற சுயாதீனக் குழுக்களைச் பரிந்துரைக்கும் அரசமைப்பின் திருத்தம் 18ஆவது திருத்தத்தின் மூலம் ஒழிக்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்று அதிகாரத்தை சமனப்படுத்துவதற்கும் அதற்குத் தடைபோடுவதற்குமான பொறிமுறையை பலவீனப் படுத்தியுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் நீதித்துறையில் மேற்கொள்ளப்படும் அரசியல் உதவியுடனான நியமனங்கள் என்பன நீதித்துறையின் சுயாதீனத்தை ஆட்டம்கொள்ளச் செய் துள்ளது.

### சர்வாதிகாரம் நோக்கி இலங்கை

போரின் முடிவு கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையை புதிய அதிர்வுடனான எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் நாடாகக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக சர்வாதிகாரப் போக்கை நோக்கிய திசையில் நாட்டை இட்டுச் செல்வது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது.
மிகவும் நம்பிக்கைதரும் விடயத்துடன் இதனை முடிக்கலாம். அரசின் முன்மொழிவுக்கு ஏற்ப இளைஞர் நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தேன். இது ஒரு வழக்கத்துக்கு மாறான நிறுவனம். 2010ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இருந்து பிரகாசமான ஆர்வம் கொப்புளிக்கும் மாணவர்களால் இந்த நாடாளுமன்றம் நிறைக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாணவர் பிரதிநிதிகளால் கூட்டப்படும் இந்த நாடாளுமன்றம்நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை, 13ஆவது திருத்தச் சட்டம் போன்ற முக்கிய விடயங்களை ஆராய்வதற்காக ஒவ்வொரு மாதமும் கூட்டப்படுகின்றது.
நான் இருக்கும்போது அவர்களில் மூவர் மிகச்சிறப்பாக உரையாற்றினார்கள். இளைஞர் நாடாளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களும் எதிர்கால உறுப்பினர்களும் படித்து முடித்து அரசியலுக்குள் நுழையும் போது இந்த அழகிய தீவில் புதிய தசாப்தம் ஒன்றைப் படைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு எனக்கு ஏற்பட்டுள்ளது.
இப்படி நவநீதம்பிள்ளை தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் தொடர்பிலும் அவர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை குறித்தும் கடந்த சில நாள்களாக பல்வேறு கருத்துகளை அரசியல் வாதிகளும் பல அமைப்பினரும் முன்வைத்திருந்தனர்.
நவநீதம்பிள்ளையின் பயணம் முடிவடைந்ததால் அவர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை தொடர்பிலேயே தற்போது பேசப்படுகின்றது. அது எவ்வாறு அமையும் என்பதற்கு அவரது நீண்ட உரை தற்போதே பதிலை வழங்கியுள்ளது என்றே கூறலாம். எதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

★

சூரியகாந்தி
உதயன் 01.09.2013 ஞாயிற்றுக்கிழமை

தி.ராஜ்



# நவியின் வருகை

நவிப்பிள்ளை என்ன நோக்கத்துக்காக இலங்கைக்கு வந்தாரோ அந்த நோக்கத்தை அவர ஓரளவுக்கேனும் நிறைவு செய்திருக்கின்றார். இதனால் இந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் அமர்வில் இலங்கை தொடர்பில் அவரது அறிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் மதில் மேல் பூனையாக உள்ள நாடுகள் பல, நவிப்பிள்ளையின் இலங்கை தொடர்பான அறிக்கையை வைத்தே தமது முடிவுகளை எடுக்கவுள்ளன. இதனால் இலங்கைக்கான அதுவும் வடக்கு, கிழக்குக்கான நவிப்பிள்ளையின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது.

## நவியின் வருகை

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பை வந்தடைந்தார் நவி பிள்ளை. அவர் இலங்கைக்கு வருகை தந்தவேளை ஜனாதிபதி மஹிந்த பொலாரஸ் புறப்பட்டமை நவி பிள்ளையைப் புறக்கணிக்கும் நோக்கம் கொண்டது என்ற விமர்சனம் எழுந்துள்ளது. அரச தலைவர்களுக்கு இத்தகைய தர்மசங்கடங்களைக் கொடுக்காமல் இருப்பதற்காகவே "திறந்த மனதுடனேயே செல்கின்றேன்" என்று புறப்படுவதற்கு முன்னரும் "இலங்கையை விமர்சிக்க வரவில்லை" என்று கொழும்பில் காலடி வைத்த பின்னரும் கருத்துத் தெரிவித்திருந்தார் நவி பிள்ளை.

கொழும்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் நீதிதுறை சார்ந்தவர்களைச் சந்தித்த நவி பிள்ளை, இலங்கை விமானப் படை விமானத்தின் மூலம் பலாலியை வந்தடைந்தார். யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்றதுடன் அவரது வடக்குப் பயணம் ஆரம்பித்தது.

வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை மட்டுமே அவர் பார்வையிட்டார். இது ஏன் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது தெளிவில்லை. வடக்கில் போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியின் ஒரு அங்கமாக இந்தப் புதிய கட்டடத்தை அரச அதிகாரிகள் நவிப்பிள்ளைக்குக் காட்ட முற்பட்டிருக்கலாம். ஆனால், இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கான நிதி உதவியை ஜப்பான் அரசு, புலிகள் - அரசு சமாதான உடன்படிக்கை நடைமுறையில் இருந்தபோதே வழங்கியது என்பதை யாராவது அவருக்குச் சொன்னார்களா என்பது தெரியவில்லை.

கொழும்பிலிருந்து வருகை தந்த சுகாதார அமைச்சின் மூன்று அதிகாரிகள் போதனா வைத்தியசாலையில் நவி பிள்ளையுடன் கூடவே இருந்தனர். இங்குள்ள தமிழ் அதிகாரிகள் மீது நம்பிக்கை இல்லாததால் அவ்வாறு கொழும்பில் இருந்து அதிகாரிகள் வரவழைக்கப்பட்டார்களா என்பது தெரியவில்லை.

மறுநாள் செவ்வாய்க்கிழமை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்தார் நவி. 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணமற்போகச் செய்யப்படுகையில் யாழ்ப்பாணத்திற்கான இராணுவத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி. அவரது காலப் பகுதியிலேயே ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த இரவுகளிலும் இராணுவக் காவல் பலப்படுத்தப்பட்டிருந்த பகல் வேளைகளிலும் 300க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் நீதிக்குப் புறம்பாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அரச பதிவுகள் கூறுகின்றன. இவை தொடர்பில் இதுவரையில் எந்த நீதி விசாரணைகளும் நடத்தப்படவில்லை. இந்தக் கொலைகளுக்கும் காணாமற்போதல்களுக்கும் சந்திரசிறி இதுவரையில் பொறுப்புக்கூறவுமில்லை.

இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணையாளருடனான அவரது சந்திப்பு கடும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. எனினும் இது பற்றி அந்தச் சந்திப்பில் நவி பிள்ளை எதுவும் விசாரிக்கவில்லை என்று தெரிகிறது. யாழ். குடாநாட்டில் ஊடக சுதந்திரம் பற்றி அவர் இந்தச் சந்திப்பில் குறிப்பாகப் பேசினார். அதிலும் முக்கியமாக 'உதயன்' பத்திரிகை மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்களைச் சுட்டிக்காட்டிய அவர் அவற்றைத் தடுத்து நிறுத்த அதிக அக்கறை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆளுநரிடம் வலியுறுத்தினார்.

'உதயன்' பத்திரிகை இனவாதத்துடன் பக்கச் சார்பாகச் செயற்படுவதால் தான் அது தாக்கப்படுகிறது என்றவாறான தனது வழமையான கருத்துக்களை ஆளுநர் மனித உரிமைகள் செயலாளரிடம் தெரிவித்தார். எப்படி இருப்பினும் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பது இலங்கை அரசின் கடமை என்று வலியுறுத்தினார் நவி பிள்ளை.

இந்தச் சந்திப்புக்களை முடித்து வெளயேறும்போது யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக நவி பிள்ளைக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் போராட்டத்துக்கு தென்பகுதியிலி ருந்து யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்தவர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

## இருட்டடிப்பு

யாழ். பொதுநூலகத்தில் வடமாகாண அபிவிருத்தி தொடர்பிலான விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் ஆளுநர், பிரதம செயலாளர், அரச அதிபர்கள் ஆகியோரால் வடமாகாண அபிவிருத்தி தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

குடாநாட்டில் கடந்த நான்கு வருடங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் அரச மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. மக்களின் தேவைகள் குறித்தோ மேற்கொள்ளப்படவேண்டியுள்ள மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்தோ எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக வலி. வடக்கிலும் குடாநாட்டில் ஏனைய பகுதிகளிலும் இராணுவம் தனது தேவைக்காக காணிகளைச் சுவீகரிப்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மீள்குடியமர்வு தொடர்பில் விளக்கப்பட்டபோது எவ்வளவு பேர் மீள்குடியமர்த்தப்பட்டனர் என்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனவே தவிர மீளகுடியமர வேண்டி இருப்பவர்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கூறப்படவில்லை. மீளக்குடியமர்ந்த பின்னர் இன்னமும் உதவிகள் கிடைக்காதுள்ள மக்களின் நிலை பற்றியும் எதுவும் எடுத்துக்கூறப்படவில்லை.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நவி பிள்ளை இறுதியாக உரையாற்றும் போது அபிவிருத்தி தொடர்பில் படம் போட்டுக் காட்டிய அரச அதிகாரிகளுக்கு சரியான பதிலடி கொடுத்தார். மனித உரிமைகள் தொடர்பிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளவே நான் இங்கு வந்துள்ளேன் என்று குறிப்பிட்டார். அதாவது குடாநாட்டில் மனித உரிமைகளின் நிலைமைகள் எவ்வாறு மேம்பட்டுள்ளன என்பது பற்றி அதிகாரிகளின் பேச்சுக்களில் இருந்து எதனையும் அறிந்துகொள்ள முடியவில்லை என்பதை அவர் அப்படிச் சூசகமாகச் சுட்டிக்காட்டினார். வருபவரின் தேவையையொட்டி அறிக்கைகள் தயாரிப்பதை விடுத்து ஆளுநரைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அவர் சொல்வதைச் செய்வதற்காகவும் நிர்ப்பந்திக்கப்படும் அதிகாரிகளால் இதனைவிட மேலாக எதைச் செய்யமுடியும் என்பது நியாயமான கேள்விதான்.

## போராட்டம்

நவி பிள்ளையின் சந்திப்பு யாழ். பொது நூலகத்தினுள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது வெளயே காணமற்போனோரின் உறவுகள் கவனவீர்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். நவி பிள்ளையை சந்திப்பதற்காக பொலிஸாரையும் தள்ளிவிட்டு அவர்கள் பொது நூலக வாசல் வரையில் முன்னேறிக் கொண் டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக நடத்தப்படும் ஆர்பாட்டங்களின் போது குவிக்கப்பட்டிருக்கும் கலகம் அடக்கும் பொலிஸாரோ வகை தொகை யின்றி குவிக்கப்பட்டிருக்கும் சாதாரண பொலிஸாரையோ அன்று காணமுடியில்லை. இருபதிற்கும் குறைவான பொலிஸாரே மக்களை தடுத்து வைக்க முயன்று கொண்டிருந்தனர். அந்தத் தடைகளை காணமற்போனோரின் உறவுகள் தகரத்தெறிந்த போதும் பொலிஸார் அன்றைய தினம் பேசாமலே இருந்தனர். இதுவே நவி பிள்ளை இல்லாத ஒரு சமயத்தில் நடந்திருந்தால் அனைவரும் அடித்து விரட்டப்பட்டிருப்பார்கள்.

நவி பிள்ளை தனது நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்பட்டார். மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பில், நவியின் பாதுகாப்பு அதிகாரிகள் அவருக்குத் தெரியப் படுத்தினர். முன்வாசலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதால் நூலகத்தின் பின்பக்கம் வழியாகச் செல்லும் திட்டத்தை நவநீதம்பிள்ளையிடம் தெரிவிக்க அவர்களுடன் வெளியேறினார்.



தமிழச்சி
நல்லூர் கோயிலடியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை நவி பிள்ளை சந்தித்தார். இதன்போது காணமல் போனோர் விடயங்கள், மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை எனப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இங்கு வலி. வடக்கு ஆக்கிரமிப்புத் தொடர்பில் நவி பிள்ளையிடம் முறையிட்டபோது இது தொடர்பில் தனக்கு எல்லாம் தெரியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அங்கு மக்கள் சொன்னவற்றை அவர் மிகவும் அவதானத்துடன் கேட்டறிந்துள்ளார். மேலும் சிறைச்சாலையில் கடந்த் வருடம் அடித்துக் கொல்லப்பட்ட நிமலரூபனின் தாயாரது கதையைக் கேட்ட நவநீதம்பிள்ளை, அவரைக் கட்டியணைத்து ஆறுதல் தெரிவித்தார்.

அவர் தங்களுடன் பழகிய மற்றும் பாசம் காட்டிய முறையைப் பார்க்கும் போது அவர் (நவி) தமிழச்சி என்ற உணர்வோடு நடந்து கொண்டார் என்று அந்தச் சந்திப்பில் கலந்து



கொண்ட வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அ.குணபால சிங்கம் தெரிவித்தார். நவி பிள்ளையை தமிழிச்சியாகக் காட்டியது அதுமட்டுமல்ல. யாழ்ப்பாணத்தில் அவர் பயணம் செய்த போது அவர் மிகத் தெரிவு செய்து தமிழர் பாரம்பரிய உடையை அணிந்திருந்தார். தமிழர்களுக்கு நெருக்கமானவர் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டே அவர் அந்த ஆடையைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். நெருக்கமான, பழகியவர் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்போது மக்கள் அச்சமின்றித் தம்மில் ஒருவராக அவரை நினைத்துக் கருத்துத் தெரிவிப்பதற்கு அது வசதியாக இருக்கும் என்று அவர் கருதியிருக்கலாம். யாழ்ப்பாணம், வன்னி தவிர்ந்த எந்தவொரு இடத்திலும் நவி பிள்ளை தனது உத்தியோக பூர்வ உடையைத்தான் தெரிவு செய்து அணிந்திருந்தார்.

### வெறிச்சோடிய காவலரண்கள்

நவி பிள்ளை யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் வருகை தந்திருந்தாலும் அவர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வீதி வழியாகவே சென்றார். இதனால் ஏ-9 வீதி மற்றும் ஏ-35 வீதி என்பனவற்றில் திடீரெனப் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன.

இரண்டு பிரதான வீதிகளிலும் நீண்டிருந்த பல இராணுவ முகாம்கள் மறைக்கப்பட்டிருந்தன. சில காவலரண்கள் அகற்றப்பட்டிருந்தன. முழத்துக்கு முழம் அமைக்கப்பட்ட சிறிய இராணுவக் கூண்டுகள் ஆள்அரவமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. சந்திக்குச் சந்தி, முழத்துக்கு முழம் ஆயுதம் தரிக்காத பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அரசின் சிறுப்பிள்ளைதனமான செயற்பாடாகவே இது தோன்றியது. அரசு செய்வது இதுதான் என்று நவி பிள்ளைக்குச் யாரும் சொல்லாமல் இருக்கப் போவதில்லை.

கிளிநொச்சி அறிவியல் நகரில் முன்னாள் போராளிகளைச் சந்திப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இங்கு சிவில் பாதுகாப்புப் படையில் பணியாற்றும் முன்னாள் போராளிகளே சந்திப்பதற்கு வந்திருந்தனர். இந்தச் சந்திப்பு அரசால் திட்டமிடப்பட்டிருந்தது. நவிபிள்ளை அவர்களை வெறுமனே சென்று பாரவையிட்டு விட்டுத் திரும்பினார்.

### அவலம் விளைந்த பூமி

இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு இறுதிப் போர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றார் நவி பிள்ளை. காப்பெற் வீதிகளில் பயணித்த நவியின் வாகனம் முதன் முதலாக மணல் தரையிலும், கிரவல் தரையிலும் பயணிக்க ஆரம்பித்தது. புதுமாத்தளனுக்குச் செல்லும் வழியில் மிக மோசமான பாதைகளில் பயணிப்பதன் அனுபவத்தை அவர் உணர்ந்தார். அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தி உள்ளேயும் வெளியேயும் எப்படி இருக்கின்றது என்பதையும் அவருக்கு உணர்த்துவதாக அந்தப் பயணம் இருந்திருக்கும்.

அமைச்சர்களும், அரச அதிகாரிகளும் பயணம் செய்யாத வீதிகள் பலவற்றிலும் நவி பிள்ளை பயணம் மேற்கொண்டார். அமைச்சர்களோ, அரச அதிகாரிகளோ அந்தப் பாதைகளால் பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தால் அவை எப்போதோ காப்பெற்றாக மாறியிருக்கும். நவிப் பிள்ளையின் வாகனத் தொடரணியை மக்கள் வீதியின் இரு மருங்கிலிருந்தும் ரசித்தனர். தம்மை மீட்க வந்த மீட்பராக நவநீதம்பிள்ளையை அவர்கள் நோக்கினர்.

புதுமாத்தளன் அந்தோனியார் கோவிலடிப் பகுதியில் மக்கள் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. சுமார் 50 பேர் பொதுமக்கள் திரண்டிருந்தனர். அவர்களைத் தனியாகச் சந்தித்தார். அந்தப் பகுதிகளில் இருந்த முகாம்களிலிருந்து இராணுவத்தினர் ஓரிரு நாள்களின் முன்னர்தான் வெளியேறினர் என்பதையும் மனித உரிமைகள் ஆணையாளரின் வருகைக்காகத்தான் அது நடந்தது என்றும் மக்கள் நவி பிள்ளையிடம் தெளிவாக எடுத்துக் கூறினர்.

### அடிப்படை வசதிகள் இல்லை - ஆக்கிரமிப்பு

இறுதிக் கட்டப் போரின் உச்சக்கட்ட உயிரிழப்புக்களைச் சுமந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் நவி பிள்ளை மாலை 3 மணியளவில் காலடி வைத்தார். அவலங்களைச் சுமந்து உயிர்களைப் பறிகொடுத்த தங்களுக்கு அடிப்படை வசதிகள் உரிய முறையில் இன்னமும் மீளக் கிடைக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.



அரசின் அபிவிருத்தி என்பது வீதிகளுடனும், கட்டடங்களுடனும் மட்டுமே இருப்பதையும் மக்களின் வாழ்வில் அவை எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை அங்கிருந்த மக்கள் தெரியப்படுத்தினர்.

அங்கிருந்து தொடர்ந்து பயணித்த நவி பிள்ளை, சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு சூரியபுரம் காட்டுப் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருக்கும் கேப்பாபிலவுக்குச் சென்றார். தமக்கு தமது சொந்த மண்தான் திரும்பவும் வேண்டும் என்று மக்கள் நவி பிள்ளையிடம் தெரிவித்தனர். 6 அல்லது 7 ஏக்கர் காணிகளைத் தாம் முன்னர் சொந்தமாகக் கொண்டிருந்தனர் என்றும் தற்போது கால் ஏக்கர் காணியே தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறைப்பட்டனர். அவர்களது காணிகள் அவர்களின் அனுமதியுடனேயா இராணுவத்தினரால் திரும்பப் பெறப்பட்டன என்று கேள்ளி எழுப்பினார் நவி பிள்ளை. "எம்மிடம் எதனையும் கேட்கவில்லை. மீள்குடியமரவு பூர்த்தி செய்வதற்காக அவசர அவசரமாக எம்மை இந்தக் காட்டுப் பகுதியில் கொண்டு வந்து இறக்கி விட்டார்கள்" என்று பதலிளித்தனர் மக்கள்.





### காணமல்போனவர்கள்

முல்லைத்தீவில் இடம்பெற்ற மூன்று மக்கள் சந்திப்புக்களிலும் பிரதான பேசு பொருளாக மக்களால் முன்வைக்கப்பட்டது காணமல்போனோர் விடயமே. அதிலும் இறுதிக் கட்டப் போரின் நிறைவில் தங்களால் கையளிக்கப் பட்ட உறவுகள் எங்கே என்பதே அவர்களின் கேள்வியாக இருந்தது.

"புலிகளை அழிச்சுட்டன் என்று சொல்லுறாங்கள். எங்கட பிள்ளையள் விடலாம் தானே! என்ர பிள்ளையை நான்தான் ஆமிட்ட குடுத்தனான். நான் குடுத்த பிள்ளையை இல்லை எண்டு சொல்லுறதுக்கு இவங்கள் யார்? அப்பிடி எங்கட பிள்ளையை கொன்று போட்டாங்கள் எண்டால் இவனை நீங்கள் கொலைகாரங்கள் என்றுதான் சொல்ல வேணும்" என்று ஆத்திரத்தில் கொட்டித் தீர்த்தார் தாயொருவர். நவி பிள்ளையின் மொழி பெயர்பாளர் மொழி பெயர்ப்பதற்குகூட அந்தத் தாய் சந்தர்பம் வழங்கியிருக்கவில்லை. இருப்பினும் நவி பிள்ளை அந்தத் தாய் சொன்னதை விளங்கிக் கொண்டு ஆங்கிலத்தில் பதிலளித்தார். நவி பிள்ளையால் தமிழ் மொழியில் பேச முடியாதிருந்த போதும் அவர் தமிழில் மக்கள் கூறுவதை, அந்தத் தாயின் உணர்வை விளங்கிக் கொண்டார்.

### மிரண்ட புலனாய்வாளர்கள்

நவி பிள்ளையின் சந்திப்புக்கள் மிக இரகசியமாகவே பேணப்பட்டு இறுதி நேரத்திலேயே பகிரங்கப்படுத்தப்பட்டன. இதனால் புலனாய்வாளர்கள் மக்களை மிரட்டி வைத்திருப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருந்தது. இருந்தும் நவி பிள்ளையின் ஒவ்வொரு சந்திப்புக்களிலும் புலனாய்வாளர்கள் திரண்டனர். அத்துடன் அந்தப் பகுதிகளிற்குரிய இராணுவ அதிகாரிகள் சாதாரண உடைகளில் அந்த இடங்களில் உலா வந்தபடி இருந்தனர்.

தங்களின் நடமாட்டத்தை அங்கு காட்டுவதன் ஊடாக மக்களை மன ரீதியாக அச்சுறுத்தி நவி பிள்ளையிடம் அவர்கள் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிப்பதைத் தடுப்பது அவர்களின் நோக்கமாக இருந்திருக்கக்கூடும். இது குறித்து எல்லாச் சந்திப்புக்களிலும் முதலில் சற்றுத் தயங்கிய மக்கள், ஒருவர் ஆரம்பித்ததும் மடைதிறந்த வெள்ளமாகக் தங்கள் வலிகளைக் கொட்டித் தீர்த்தனர்.

குமிழமுனையிலிருந்து முள்ளிவாயக்காலுக்கு வந்திருந்த 70 வயது நபர் ஒருவர் புலனாய்வாளர்களிடம் "நான் செத்து நாலு வருசமாய் போச்சு என்னை என்ன செய்யப் போறியள்? சுடப் போறியள்ா? வெட்டப் போறியளா? உன்னால முடிஞ்சதைச் செய்து பார்" என்றார் ஆதங்கம் தாங்காமல். அவர், நவி பிள்ளை யிடம் தனது பிள்ளை காணமல் போனதை எடுத்துக் கூறினார். மக்கள் நவி பிள்ளையிடம் முறையிட் டுக் கொண்டிருந்ததைச் சிலர் தமது கைப் பேசிகளில் இரகசியமாகப் படம் பிடித்தனர். அவர்களும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றே பொதுமக்கள் கூறினர்.

கேப்பாபிலவில் புலனாய்வாளர்கள் சிவில் உடையில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதால் மக்கள் நவநீதம்பிள்ளையிடம் பேச முதலில் தயங்கினர். ஆனாலும் நவநீதம் பிள்ளை, உங்கள் பிரச்சினைகளை சொல்லுங்கள் என்று இரண்டு மூன்று தடவைகள் வற்புறுத்திய பின்னரே துணிந்து கருத்துக்களைத் தெரிவித்தனர்.

### இறங்கிய பாரம்

நவி பிள்ளையை சந்தித்த மக்களிடம், அவரிடம் என்ன சொன்னீர்கள் என்று கேட்டால் அவர்கள் சொன்னவற்றை விளக்கிவிட்டு இறுதியில் "எங்கட மனப் பாரத்தை எல்லாம் கொட்டிட்டம். எங்களுக்கு எங்கட பிள்ளையள் கிடைபாங்கள் என்ற நம்பிக்கை இருக்கு. நல்லிணக்க ஆணைக்குழுவில இதை சொல்லேக்க எங்களுக்கு நம் பிக்கை இருக்கேல்லை. ஆனா அம்மாட்ட எங்கட குறையைச் சொன்னது மனப் பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கு. இனி நிம்மதியாய் இருக்கலாம்" என்றனர்.

### தவறவிடப்பட்ட சந்தர்ப்பம்

முல்லைத்தீவு மக்கள், தமது அன்றாடப் பிரச்சினைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதும் அவர்களின் உள்ளங்களில் வலியாகத் துடித்துக் கொண்டிருக்கின்ற காணமற் போனோர் பிரச்சினை குறித்தே மீண்டும் மீண்டும் அதிகம் பேசினர்.

தமிழ் மக்கள் நவிப்பிள்ளையிடம் நிறையவே எதிர்பாரக்கின்றனர். மக்களின் குறைகளை பொறுமையாகக் கேட்டறிந்த நவி பிள்ளை வெறுமனே அறிக்கை சமர்பிப்பதோடு நின்று விடாது, தெய்வமாக நம்பிக் குறைகளைச் சொன்ன மக்களுக்கு தீர்வையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

# இந்திய அணிக்குள் மீண்டும் வருவேன்

## சேவாக் நம்பிக்கை



34 வயதான ஷேவாக் 104 டெஸ்ட் ஆட்டங்களில் 8,586 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 23 சதங்கள் விளாசியுள்ளார். 319 ஓட்டங்கள் அவரது அதிகபட்ச ஓட்டமாகும். 251 ஒருநாள் ஆட்டத்தில் 8273 ஓட்டங்களை எடுத்துள்ளார். 15 சதங்கள். 219 ஓட்டங்கள் அவரது அதிகபட்ச ஓட்டமாகும்.



"இந்திய அணியில் எப்படியாவது இடம்பெற்றுவிட வேண்டும். அந்த வெறியோடு கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளேன். விரைவில் எனது திறமையை வெளிக்காட்டுவேன்" என்று தெரிவித்துள்ளார் வீரேந்தர் சேவாக்.

இந்திய அணியின் அதிரடி தொடக்க வீரர் வீரேந்தர் சேவாக். மோசமான ஆட்டம் காரணமாக அவர் கடந்த 6 மாதமாக இந்திய அணியில் இருந்து தூக்கப்பட்டார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2ஆவது டெஸ்ட் (மார்ச் மாதம்) ஆட்டத்தின் பின்னர் சேவாக் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டார். ஒருநாள் ஆட்டத்தைப் பொறுத்தவரை அதற்கு முன்பே அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார். ஜனவரி மாதம் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டமே அவரது கடைசி ஒருநாள் ஆட்டம். அதன் பின்னர் அவர் தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டார். இந்திய அணியின் இளம் வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் சேவாக்கின் வெற்றிடம் இந்திய அணியில் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியுள்ளது.

இந்தநிலை தொடர்ந்தால் ஓய்வெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்ட சேவாக் தனது திறமையை நிரூபிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார். மீண்டும் கடும் பயிற்சிகளில் இறங்கியுள்ளார். சென்னையில் உள்ள 'எம்.ஆர்.எப். பேஸ்பவுண்டேசனில்' தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சேவாக் இதுகுறித்துக் கூறுகையில்,

"இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பதே தற்போது எனது குறிக்கோள். அந்த வெறியோடு கடும் பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். உள்ளூர் ஆட்டங்களில் எனது திறமையை விரைவில் வெளிப்படுத்துவேன். ஆரம்பமாகவுள்ள சலஞ்சர் தொடரில் பழைய சேவாக்கைப் பார்ப்பீர்கள். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலோ அல்லது தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலோ இந்திய அணி சார்பாக ஆடுவதற்கு ஆர்வமாக உள்ளேன்" என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

# ஹைய்யோ! இதுக்கெல்லாமா தண்டனை தருவாங்க?

## கங்குலிக்கு சிரிப்புச் சிரிப்பா இருக்காம்!



"இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் மைதானத்தில் 'பிஸ்' அடித்த செய்தியைப் படித்துச் சிரித்தேன். அதைவிட அதற்கு தண்டனை வழங்கப் போகின்றார்கள் என்ற தகவலைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பை அடக்கவே முடியவில்லை" என்று விழுந்து விழுந்து சிரிக்கின்றார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரைக் கைப்பற்றிய மகிழ்ச்சியை இங்கிலாந்து வீரர்கள் லண்டன் ஓவல் மைதானத்தில் வைத்துக் கொண்டாடினர். அப்போது கொஞ்சம் 'உற்சாகம் பெருக்கெடுத்ததும்' மைதானத்தின் 'பிட்ச்' மேலேயே சிறுநீர் கழித்து அதைக் கொண்டாடியுள்ளனர். அது தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து வீரர்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும், இங்கிலாந்து வீரர்கள் முட்டாள்கள் என்று ஆளாளுக்கு அறிக்கை விடத் தொடங்கியுள்ளனர். இதுகுறித்துக் கூறிய கங்குலி,

"இங்கிலாந்து வீரர்களின் செயலைப்படித்தபோது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. அதைவிட அதற்குத் தண்டனை வழங்கப் போகிறார்களாம் என்று அறிந்தபோது எனக்குச் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. இதற்கெல்லாமா தண்டனை வழங்குவார்கள்?. அது ஒரு சிறிய விடயம். வீரர்களை எச்சரித்து விட்டுவிட வேண்டியது தானே. நான் கூட லார்ட்ஸ் மைதானத்தில் ஒருமுறை சட்டையைக் கழற்றி வெற்றியைக் கொண்டாடினேன். அதேபோல தென்னாபிரிக்க அணியை, தென்னாபிரிக்காவில் வீழ்த்திய போதும் ஓய்வறையில் எங்களது வீரர்கள் அமர்க்களப்படுத்தினார்கள். நமது வீரர்களில் சிலர் மது அருந்தினர். சிலர் பெப்சி மட்டும் குடித்தனர். சிலர் குடிக்கவே இல்லை. அதெல்லாம் ஒரு 'ஜாலி'. நல்லவேளை அது உள்ளேயே நடந்தது." என்றார் சிரித்தபடியே.

# ஆஸிக்கு இது அவமானம்

## குமுறுகின்றார் மெக்ராத்



ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலியா மிகவும் மோசமான நிலையில் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று மனம் வெதும்புகின்றார் அந்த அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத்.

நடந்து முடிந்த ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலிய அணி 0 - 3 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. அதுகுறித்துக் கூறும்போதே மெக்ராத் இவ்வாறு மனம் வெதும்பியுள்ளார்.

"சரியான துடுப்பாட்ட வரிசையைக் கண்டுபிடிக்க ஆஸ்திரேலிய அணி தவறிவிட்டது. இறுதி டெஸ்ட் ஆட்டத்திலேயே சில சரியான மாற்றங்களை அந்த அணி மேற்கொண்டிருந்தது. ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரிலேயே அந்த மாற்றங்களின் பிரதிபலன்கள் தெரியும். ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலிய அணி மிகவும் அவமானகரமான முறையில், மோசமான நிலையில் தோல்வியைச் சந்தித் துள்ளது என்பதை ஏற் றுக்கொண்டேயாக வேண்டும். இயன்பெல் இல்லாதிருந்தால் இங்கிலாந்து அணி தடுமாறியிருக்கும்" என்று அவர் கூறியுள்ளார்.

**ஆஸ்திரேலிய அணி இறுதியாக ஆஷஷ் தொடரைக் கைப்பற்றியபோது அந்த அணியில் மக்ராத் இடம் பெற்றிருந்தார்.**



# ஒலிம்பிக்கில் தங்கம் எனக்குத்தான்

## குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம்



5 முறை உலகச் சம்பியன் பட்டம் வென்றவரான மேரி கோமே ஒலிம்பிக் குத்துச்சண்டையில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை.

2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வேன் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இந்திய குத்துச் சண்டை வீராங்கனை மேரி கோம்.

இதுகுறித்து மேரி கோம் கூறுகையில்,

"பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அடுத்த 6 மாதத்தில் ஒலிம்பிக் போட்டிக்கான பயிற்சியைத் தொடங்கவுள்ளேன். இடைவிடாத பயிற்சிகள், எனக்குள்ள மனவுறுதி என்பன என்னைத் தங்கப் பதக்கத்தை நோக்கி அழைத்துச் செல்லும்" என்று தெரிவித்துள்ளார் மேரி கோம்.

# ஆண்களுடன் கிரிக்கெட் ஆடிய முதலாவது வீராங்கனை

இங்கிலாந்து கிரிக்கெட் லீக் ஆட்டத்தில் ஒரு பெண் வீராங்கனை ஆண் வீரர்களுடன் இணைந்து விளையாடிப் புதிய சாதனை படைத்துள்ளார். அவரது பெயர் கோலே வோல்வொர்க். 20 வயதான இவர் போல்டன் அசோசியேஷன் லீக் ஆட்டத்தில் கலந்து கொண்டு வோல்ஷா அணி சார்பாக விளையாடினார். வோல்ஷா அணியில் சக வீரர்கள் அனைவரும் ஆண்களே. கோலே மட்டும்தான் பெண். இதன் மூலம் முதல் தர கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் ஆண்களோடு இணைந்து ஆடிய முதல் பெண் என்ற பெருமை கோலேவுக்குக் கிடைத்தது. போல்டன் அசோசியேஷன் லீக் தொடர் 125 ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். இந்த வரலாற்றில் முதல் முறையாக பெண் ஒருவர் ஆண்களுடன் இணைந்து ஆடியது இதுவே முதல் முறை. பந்து வீச்சாளரான கோலே, இந்த ஆட்டத்தில் 11 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 4 இலக்குகளைக் கைப்பற்றியும் உள்ளார்.

"நான் மைதானத்துக்கு வந்தபோது அனைவரும் என்னைப் பார்த்துச் சிரித்தனர். ஆனால் எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன். அணியில் நான் மட்டுமே பெண்ணாக இருந்ததற்கு நான் கவலைப்படவில்லை. நான் பந்து வீச முயன்றபோது என்னை அவர்கள் கேலி கிண்டல் செய்தனர். ஆனால் அதைப் பொருட்படுத்தவில்லை. அதனால் சாதித்தேன்" என்கிறார் கோலே.

**போல்டன் அசோசியேஷன் லீக் தொடர் 125 ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும்.**




# நிறைவேறும் சபதம்

எங்கள் அழுகுரல்களில்
அடங்கியும் அடங்காத
ஓலங்களில்
பட்டினி வயிற்றில்
பற்றிய தீயில்
சுட்ட சூழையில்
சிந்திய கண்ணீரில்
சிதறிய குருதியில்
சீரழிக்கப்பட்ட
செந்தமிழ் மாந்தரில்
வந்தேறு குடிகளென்றதில்
உயிரிழந்த போதும்
முலை தழுவிய
குழந்தையில்
ஊரிழந்த போதும்
உறையாத உயிரின்
துளிர்ப்புக்கள் துடிப்புகள்
உன் சித்தத்தை
விடம் வைத்துக் கொல்லும்
வெள்ளஅலைகளாய்
விடியலுக்குள்
காவு கொள்ளும்
நீ... மௌனத்தின்
ஆக்ரோசம் புரியாமல்
மண்டியிட்டு கண் மூடுவாய்
பிணம் சூடிய
தென் தேசத்தில்
எஞ்சியோர்
நடை பிணங்களாவர்
அப்போது
நோக்கிலாரும் நோக்குவர்
நிறைவடையும் சபதம்

த.பருத்திதாசன்



## சொற்சிலம்பம் - போட்டி இல: 281

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | | 5 |
| | | 6 | | | | | |
| 7 | 8 | | | | 9 | 10 | |
| 11 | | | | 12 | | | |
| | | | 13 | | | 14 | 15 |
| 16 | | 17 | | | 18 | | |
| | | 19 | | 20 | | | |
| 21 | | | | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. இரண்டரை டசின்
4. ஒரு பாத்திரம்
6. கூட்டம்
7. புகழ்
9. உதவும் ஏற்பாடு
11. வேறுபட்டு வருவது
12. பெண்கள் சேர்ந்து ஆடும் கூத்து
13. பதில்
14. ஈரமான இடத்தில் காணலாம்
16. தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கும் செயற்பாடு
18. தங்குமிடம்
19. இப்போது கிடுகிடுவென உயர்வது
21. சூறாவளி
22. இந்த இலைக்கு சிறப்பு இடமுண்டு.

### மேலிருந்து கீழ்

1. பூரண சந்திரன்
2. பிரிப்பு
3. தென்னம்மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது
4. ஐஸ்வர்யம்/ சொத்து
5. மதி
8. விபீஷணன் புத்திரி
10. உணவுத் தொகுதியில் நடக்கும் செயற்பாடு
12. வெயிலுக்கும் உதவும்
13. குளிகை
15. அழிந்துபோன பின் மிச்சம்
16. தடி
17. தோல் வாத்தியம்
18. ஊதும் கருவி
20. பெரும் நீர்த்தேக்கம்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 279 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விவாகம் (4) பாதம் (6) வேட்டு (7) முல்லை (8) கடுக்கன் (10) வித (12) காவி (13) மாதிரி (14) பேய் (15) பாசி (16) தர (17) அணி (18) அதி (19) சம்சாரி (21) நகர (22) விசித்திரம்

**மேலிருந்து கீழ்**

(1) விவேகம் (2) வாட்டு (3) கடுக்காய் (4) பால் (5) தலைவிதி (7) முன் (9) கவி (11) தரித்திரம் (13) மாசி (14) பேரம் (15) பாணி (16) தசம் (17) அரிசி (18) அகர (20) சாவி (21) நதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 281**
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர். (11.09.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.281இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 15.09.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 279 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ச.திவாகர்,
யா/ஆவரங்கால் இராமலிங்கம் வித்தியாலயம், ஆவரங்கால்

**2 ஆம் பரிசு**
வா.பிருந்தன்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
திருமதி அ.சச்சிதானந்தன்,
இல.289, திருநாவற்குளம், தாண்டிக்குளம், வவுனியா.

**4 ஆம் பரிசு**
வி.பார்மிகா,
மின்சார சபை விடுதி, மன்னார்.

**5 ஆம் பரிசு**
பொ.சுபாஜினி,
செம்பாடு, தூதாவளை, கரணவாய், கரவெட்டி.

**பாராட்டுப் பெறுவோர்**

மூ.விஷ்ணுகோபன்,
பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி

இ.கனகரத்தினம்,
இலகடி, காரைநகர்.

சே.நவரட்னராசா,
இலக்கம் 19, 2 ஆம் குறுக்குத் தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.




# எந்த நேரத்திலும் சிரியா மீது தாக்குதல் நடத்த அமெரிக்க படைகள் தயார்

## பொது மக்கள் மீது இரசாயன குண்டு வீசியமைக்கு மேற்கு நாடுகள் பதில்

ரெங்கன்

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தி நடத்தப்பட்டுள்ள தாக்குதல்களில் கடந்த வாரம் 1,300 பேர் வரை கொல்லப்பட்டிருக்கும் சம்பவமானது மேற்கு நாடுகளை குறிப்பாக அமெரிக்காவை அதிர வைத்துள்ளது. எதிர்த் தரப்பினர் மீது சிரிய அரசு படைகளே டமாஸ்கஸ்ஸிக்கு அருகிலுள்ள பகுதிகளில் இந்த இரசாயன ஆயுதத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக தெரிகின்றது. சிரியா நடத்தியுள்ள இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு தண்டனை வழங்கவும் இம்மாதிரியான தாக்குதல்கள் இனிமேலும் நடவாமல் இருக்கவும் சிரியா மீது ராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு அதிபர் ஒபாமா ஆலோசித்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கா எடுக்கக்கூடிய ராணுவ நடவடிக்கையானது சிரியாவில் ஆழமாக ஊன்றிவிடாத விதத்தில் இருக்கும் என்றும் உள்நாட்டுப் போரில் இரசாயனக் குண்டுகள் பாவித்தமைக்கு ஒரு தண்டனையாகவும் இனி அவ்வாறு செய்யாத விதத்தில் எச்சரித்திருப்பதற்காகவும் இருக்கும் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

டமாஸ்கஸ் நகரின் சுற்று வட்டத்தில் எதிர்த்தரப்பினரின் பலமான நிலைகள் மீது அரச தரப்பினர் இரசாயன ஆயுதம் கொண்டு தாக்கியுள்ளனர் என்பது இப்போது மறுக்க முடியாத விடயமாகியுள்ளது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன். எஸ். கெரி தெரிவித்துள்ளார். இவ்வாறு தாக்குதல் நடத்தியதன் பின்னர் அதனை மூடி மறைப்பதற்கு அரசு தரப்பினர் முயற்சிகளை எடுத்து வருகின்றனர் என்று கூறியுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சர் இரசாயன குண்டுப் பாவனையை உறுதி செய்வதற்கும் ஐ.நா. பரிசோதகர்கள் வருகையைத் தாமதப்படுத்துவதற்கும் மட்டுமன்றி பாதிக்கப்பட்ட இடங்கள் மீது தொடர்ச்சியாக ஷெல் குண்டு களையும் பொழிந்து தடையங்களை அழித்து வருகின்றனர் என்றார்.

சிரியா மீதான குறுகிய அளவிலான பெரும்பாலும் இரண்டு நாள் நீடிக்கக் கூடிய ராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்கான பின்வரும் 3 அம்சங்களை அமெரிக்க நிர்வாகம் ஆராய்ந்து வருகின்றது.

1. கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட தாகக் கருதப்படும் இரசாயன தாக்குதலில் சிரிய அரசுக்குரிய பொறுப்புக் குறித்து புலனாய்வு அறிக்கைகளின் முடிவுகள். நட்பு நாடுகளோடும் காங்கிரஸ் சபையோடும் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களின் பெறுபேறுகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு நியாயப்பாட்டினை உறுதி செய்து கொள்ளுதல்.

தாக்குதல் ஒன்று நடத்தப்படுமானால் அதற்குரிய கால அளவு பெரும்பாலும் இரு தினங்களுக்கு மேல் இருக்காது. கடல் மார்க்கமாக கப்பல்களிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகள் மற்றும் தொலைதூர விமான குண்டுவீச்சுக்கள் மேற்கொள்ளப்படலாம் என்று கருதப்படுகின்றது.

இப்பொழுது இத்தாக்குதல் தொடர்பான சட்டப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறினார்கள்.

சிரியாவில் இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்பட்டு பல நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக நம்பகமான செய்திகள் வெளிவந்த மாத்திரத்திலேயே தொலைதூர ஏவுகணைகள் பொருத்தப்பட்ட அமெரிக்க போர்க் கப்பல்கள் மத்தியதரைக் கடற்பகுதிக்கு அனுப்பப்பட்டு நிலை கொள்ளச் செய்யப்பட்டுள்ளன.

- பொது மக்கள் மீது இரசாயன குண்டுகள் வீசியமைக்கு ஆதாரம் உண்டு.
- ஐ.நா.நிபுணர் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது
- பாரதூர எதிர்விளைவுகள் ஏற்படலாம் என ரஷ்யா எச்சரிக்கை
- மேற்குலகை பழிவாங்க சிம்பாப்வே அதிபரும் அறைகூவல்

சிரியாவில் இரசாயன ஆயுதம் பாவிக்கப்பட்டதற்கான ஐ.நா. நிபுணர்களின் ஆதாரம் முக்கியமாகும். அனால் ஏற்கனவே உண்மைகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் அவசியம் என்பதில்லையென்றார் கெரி.

ஐ.நா. நிபுணர்கள் புரட்சியாளர்களால் நிர்வகிக்கப்படும் மூன்று இடங்களில் ஒன்றுக்கு-இரசாயன ஆயுதத்தால் தாக்கப்பட்ட இடம் என்று கூறப்படும். இடத்துக்குச் சென்று ஆய்வு நடத்தியுள்ளார்கள். முதலில் அவர்களின் வாகனங்கள் தாக்கப்பட்டதால் பின்வாங்கிவிட்டு மீண்டும் அவ்விடத்துக்குச் சென்றுள்ளார்கள்.

நிவாரண அமைப்புக்களின் வீடியோப் படங்கள் மற்றும் சாட்சிகள் மற்றும் எல்லைகள் அற்ற டாக்டர் களின் அமைப் புக்கள் தந்துள்ள அறிக்கைகள் தாக்கு தலை நிரூபித்துள்ளதாக கெரி தெரிவித்துள்ளார்.

### ரஷ்யா தரப்பில் கடும் எதிர்ப்பு

சிரியா மீது ராணுவ நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமானால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகள் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோ அமெரிக்க ராஜாங்க அமைச்சரை எச்சரித்துள்ளார். ரஷ்ய அமைச்சர் விடுத்துள்ள செய்தியில் சிரியாவில் அமெரிக்கா ராணுவ மட்டத்தில் தலையிடுவது பற்றி வெளிவந்துள்ள செய்திகள் மாஸ்கோவை ஆழமாக கவலையடையச் செய்துள்ளது என்று கூறியுள்ளார். புதிய ராணுவ தலையீடானது முழு மத்திய கிழக்கையுமே பாதிக்கக் கூடியதான எதிர்விளைவுகளைக் கொண்டு வரும் என்று ரஷ்ய அமைச்சர் எச்சரித்தார்.

ஐ.நாவுக்கு வெளியில் அமைதி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் அந்த முயற்சியை ராணுவ நடவடிக்கை மூலம் சிதறடிக்க அமெரிக்கவுக்குள்ளேயே சில சக்திகள் சதி செய்கிறார்கள் என்று கருத வேண் டியிருக்கிறது என்று ரஷ்ய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டமஸ்கஸிற்கு எதிராக ராணுவ நெருக்குதலைப்பிரயோகிப்பதைத் தவிர்க்கும்படியும், ஆத்திரமூட்டலுக்கு இடம்தர வேண்டாம் என்றும் ரஷ்ய அமைச்சர் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கெரியிடம் கூறியுள்ளார்.

ரஷ்ய தரப்பிலான இந்த வாதத்தை கவனமாக பரிசீலிப்பதாக அமெரிக்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

### ஆட்சி மாற்றமல்ல தண்டனை வழங்கவே அமெரிக்கா விருப்பம்

சிரியாவில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்து வரும் அதேநேரம் அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதல்ல அதன் நோக்கம் என்று மேற்கு நாடுகள் கூறிவருகின்றன. பொதுமக்கள் மீது இரசாயன ஆயுதப் பிரயோகம் செய்தமைக்காக அசாத் ஆட்சியாளர்களை தண்டிப்பதே நோக்கம் என்று அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

சிரியா மீது தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் ஆச்சரியமூட்டும் செயற்பாடுகளைக் கொண்டு பதிலளிக்கப்படும் என்று சிரிய ஆட்சியாளர்களின் ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் சிரியாவின் நட்பு நாடுகளான ரஷ்யாவும் ஈரானும் கடும் எதிர் விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்துள்ளன. அதேசமயம் அமெரிக்க நிலைப்பாட்டை பிரிட்டனும் பிரான்ஸும் ஆதரித்துள்ளன. சிரியா மீது பலாத்காரம் பிரயோகிப்பதை அவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் வெள்ளை மாளிகை வெளியிட்ட ஓர் அறிக்கையில் சிரியாவில் அசாத் அரசு இராசாயன ஆயுதங்களைப் பிரயோகித்திருப்பதற்கான ஆதாரங்களை இந்த வாரம் வெளியிடவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் நேச படைகளின் கப்பல்கள், நீர் மூழ்கிகள் மற்றும் விமானங்களில் மூலம் சிரியாவுக்கு வெளியிலுள்ள இடங்களில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

பாதுகாப்பற்ற ஆண்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பிரயோகிப்பவர்கள் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகக் கருதப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

### பொது அறிவுக்கு அவமதிப்பு

தனது படையினர் இரசாயனக் குண்டுகளை பயன்படுத்தினார்கள் என்ற மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டு பொது அறிவை அவமதிக்கும் செயலாகும் என்று சிரிய அதிபர் பாஷர் அல்-அசாத் கூறியிருக்கிறார். மேற்கு நாடுகள் சிரியா மீது தாக்குதல் நடத்தினால் அது தோல்வியில் தான் முடியும் என்று ரஷ்ய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் அசாத் இதைக் கூறினார்.

அமெரிக்கா சிரியா மீது தாக்குதல் நடத்தினால் அது முன் போலவே தோல்வியாகவே முடியும். வியட்னாமிலிருந்து இன்று வரை அது தோல்வியே கண்டிருப்பதாக அவர் கூறினார்.

### சிம்பாப்வேயி அதிபரின் சீற்றம்

மேற்கு நாடுகளை பழிதீர்க்கப் போவதாக சிம்பாப்வேயின் ஜனாதிபதி றொபேர்ட் முகாபே சூள் உரைத்திருப்பது அவர் மீதான அந்த நாடுகளின் ஆத்திரத்தை அதிகரிக்கக் கூடும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

30 வருடகாலமாக தொடர்ந்து பதவியிலிருந்து வரும் முகாபே ஒவ்வொரு முறை அதிபர் தேர்தலின் போதும் ஏதாகிலும் தகிடுதத்தம் புரிந்து பதவியை தக்க வைத்துக் கொள்கிறார் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருந்து வருகின்றது.

அந்த வகையிலேயே கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலிலும் பதவியை மீண்டும் பற்றிக்கொண்டு விட்டார் என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

முகாபேயின் சர்வாதிகார ஆட்சிக்கு மேற்குநாடுகளில் கடும் எதிர்ப்பு இருந்து வருகின்றது. அதனால் அந்த நாடுகள் அவரது ஆட்சிக்கு எதிராக பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளன. இதைக் கருத்தில் கொண்டு தான் முகாபே அந்த நாடுகள் மீது பழிதீர்த்துக்கொள்ளப்படும் என்ற வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார். எங்களை அவர்கள் இம்சைப்படுத்தக் கூடாது. இங்கே பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்களை நாங்கள் நல்ல முறையில்தான் நடத்தி வருகின்றோம். நாங்கள் எமது பொறுமையை இழக்க வேண்டிய காலம் வரக்கூடும் என்று தெரிவித்தார் முகாபே.

சிம்பாப்வேயின் மீது பொருளாதார தடைகளையும் , பயணத்தடைகளையும் விதித்துள்ள பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகள் முகாபேயினதும், அவரது உள் வட்டார உறுப்பினர்களதும் சொத்துக்களையும் முடங்கச் செய்துள் ளன. 2002 ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தலின் போதும் மோசடி இடம்பெற்றதாகக் கூறி அந்த காலத்தி லிருந்தே இந்த நடவடிக்கையை அந்த நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், நம்பகத் தன்மையோடும் நடந்துள்ளன என்று அரசமைப்பு நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து கடந்தவாரம் முகாபே அதிபராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட தமது சமத்துவ கொள்கையை தொடர்ந்து செயற்படுத்தப் போவதாக அவர் வாக்குறுதி அளித்தார். வெளிநாட்டு நிறுவனங்கள் அவைகளில் பெரும்பான்மை பங்குகளை உள்ளூர் வாதிகளுக்கு வழங்க வேண்டும் என்ற தமது சர்ச்சைக்குரிய கொள்கையைத் தொடரப் போவதாகவும் தெரிவித்தார்.

1970 களில் நடந்த புரட்சியின் போது ஒரு புரட்சி வீரராக விளங்கிய மைக் கரக்காட்சியே என்பவரின் மரணச் சடங்கின் போது முகாபே உரை நிகழ்த்தினார். மேற்கு நாடுகளின் தடைகள் குறித்து அவர் பேசுகையில் அவர்களின் கம்பனிகள் பல இங்கே இருக்கின்றன. அவர்கள் மீது நாம் தடைகளை விதிக்கவில்லை. ஆனால் காலம் வரும் அப்பொழுது நாம் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்வோம். நீ என்னைத் தாக்கினால் நான் உன் னைத் தாக்குவேன். எங்கள் மீது இதை நீங்கள் திணித்தால் உங்கள் மீது அதை நாங்கள் திணிப்போம் என்ற முறையில் செயற்படப் போவதாக அவர் கூறினார்.

